தமிழ் இலக்கிய வரலாறு

சி.பாலசுப்பிரமணியன்



ARTS Society

தமிழ் இலக்கிய வரலாறு

(இந்நூல், டில்லி, கல்கத்தா, காசி, உஸ்மானியா, மைசூர், பெங்களூர், திருவேங்கடவன், கேரளா, இலங்கை பல்கலைக் கழகங்களில் பாட நூலாக வைக்கப்பெற்றுள்ளது.

இளங்கலை, இளம் அறிவியல் (B.A. & B.Sc.,) முதுகலை (தமிழ் எம்.ஏ.) வகுப்புத் தேர்வுகளுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ள பாடநூல்.)

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்

மணமலர்ப் பதிப்பகம்
சென்னை

முதற்பதிப்பு : 1959
இருபதாம் : 1991
இருபத்தொன்றாம் பதிப்பு : 1992
இருபத்திஇரண்டாம் பதிப்பு : 1994
இருபத்திமூன்றாம் பதிப்பு : 1995
இருபத்திநான்காம் பதிப்பு : 1996
இருபத்திஐந்தாம் பதிப்பு : 1997
இருபத்து ஆறாம் பதிப்பு : 1997
இருபத்தி ஏழாம் பதிப்பு : 1998

விலை ரூ. 50.00

விற்பனை உரிமை
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை – 600 108.

பிற நூல்கள்

உருவும் திருவும்
கட்டுரை வளம்
மனோன்மணீயம் (பதிப்பு)
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு.வ.
மலர்காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நெஞ்சின் நினைவுகள்
நல்லோர் நல்லுரை
சங்க கால மகளிர்
ஆண்டாள்
The Status of Women in Tamil Nadu during the Sangam Age.
A Study of the Literature of the Cera Country.
Papers of Tamil Literature

அச்சிட்டோர் பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ். சென்னை-13

மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
பெருந்தகை

அமரர் டாக்டர் மு. வரதராசனார்

அவர்கள் அன்புடன் அளித்த

அணிந்துரை

தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்புடையது; ஏறக்குறைய முப்பது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அமைந்துவருவது. ஆதலின் இலக்கியம் கற்பவர் அதன் வரலாற்றை அறிதல் இன்றியமையாததாகும். வரலாற்று அறிவு இல்லாமலும் இலக்கியம் கற்கலாம். ஆயின் எந்த நூல் முந்தியது பிந்தியது என்ற தெளிவு பெற்று இலக்கியம் கற்பதால் பெரும் பயன் உண்டு. கற்பனைச் சுவையும் உவமை முதலியனவும் எவ்வெவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை அறிவதில் இன்பம் உண்டு; புலவர் உணர்த்தும் நல்லுணர்வுகளும் அருங்கருத்துகளும் அவ்வக்காலத்தில் எவ்வெவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை அறிவதிலும் பயன் உண்டு. ஆதலின் வரலாற்று அறிவு இலக்கிய இன்பத்திற்கு உதவுவதாகும்.

திரு. சி. பாலசுப்பிரமணியம் எம்.ஏ.

எழுதிய இந்நூலில், தமிழ் இலக்கிய வரலாறு தெளிவாகவும், செம்மையாகவும், சுருக்கமாகவும் அமைந்துள்ளது

பல்வேறு காலங்களாகப் பகுத்துக்கொண்டபாகுபாடும், அவ்வக்காலங்களின் நூல்களைப் பற்றி விளக்கும் அமைப்பும், அறிஞருலகம் ஏற்றுக் கொண்ட முறைகளாகும். நூலாசிரியர் சிலர் தம் காலத்தைப் பொறுத்த வரையில் கருத்து வேறுபாடுகள் உண்டு. வேறுபடும் கருத்துக்களையும் ஆங்காங்கே இவர் குறிப்பிட்டுச் செல்வது பொருந்திய முறையே ஆகும். இலக்கியங்களின் சிறப்பியல்புகளையும் அவற்றிற்குத் தேவையான விளக்கங்களையும் மட்டுமே ஆங்காங்கே தந்துள்ளார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட சிறப்பியல்புகளும் விளக்கங்களும் கற்பவர் நெஞ்சில் எளிதில் பதிந்து இன்புறுத்துவனவாக இருத்தல் பாராட்டத் தக்கதாகும். தொடக்கம் முதல் முடிவு வரையில் நடுவு நிலையில் நின்று, தக்க வரையறை மேற்கொண்டு, அவ்வப் புலவர்க்கும் அவர்தம் படைப்புகளுக்கும் உரிய இடம் தந்து எழுதியுள்ளார். ஆதலின், இந் நூலாசிரியரின் நன்முயற்சி வரவேற்கத் தக்கதாகும்.

மு. வரதராசன்

முதற் பதிப்பின் முன்னுரை

தமிழ், இலக்கிய இலக்கண வளமும் பழமையும் சிறப்பும் கொண்டு துலங்கும் மொழியாகும். இம் மொழியில் தோன்றிய இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு, இன்றைய நிலை ஆகியவை பற்றி அறிந்துகொள்வதால் பயன் உண்டு.

'தமிழ் இலக்கிய வரலாறு' சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் மூன்றாண்டுப் பட்டப் படிப்பு (New three years Degree Course) மாணவர்க்குப் பாடமாக அமைந் துள்ளது. இப் பாடத் திட்டத்தையொட்டி யான் இந் நூலினை எழுதியுள்ளேன். பழங்காலம் தொடங்கி இற்றைநாள் வரையில் தமிழ் மொழியில் எழுந்துள்ள இலக் கியங்களைப் பல்வேறு காலப் பகுதிகளில் அடக்கி, அவ்வக்கால நூல்களின் சிறப்பியல்புகளையும் தனிப் போக்குகளையும் குறிப்பிட்டு, இலக்கிய வளர்ச்சியினையும், புலவர்களைப் பற்றிய சில குறிப்புகளையும் காலங்களையும் இலக்கியத்தின் சுவைப்பகுதிகளையும் ஒருவாறு எழுதி யுள்ளேன்.

தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இத் துறையில் கருத்து வேறுபாடுகள் எழுதல் இயற்கை. எனவே இந் நூலில் காணப்படும் கருத்துக்களுக்கு இடம் தந்து பிழை களைப் பொறுத்தருளி என்னுடைய இந்த முதன் முயற்சி யைத் தமிழுலகம் வரவேற்கும் என நம்புகின்றேன்.

தமக்கே உரிய முறையில் அழகியதோர் அணிந்துரை அருளி, அதனால் இந்நூலினை அணிபெறச் செய்திருக்கும், என்னுடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கு யான் என்றும் கடப் பாடுடையேன்.

இந் நூலினைக் குறைந்த காலத்தில் அச்சிட்ட மாருதி அச்சகத்தினர்க்கும், அழகிய முறையில் வெளியிட்டு உதவிய 'பாரி நிலையத்தினர்'க்கும் என் நன்றி உரியன.

சென்னை - 2,
21-4-'59

சி. பாலசுப்பிரமணியன்

பதினெட்டாம் பதிப்பின் முன்னுரை

இருபத்துநான்கு ஆண்டுகளுக்கு முன்னர் யான் எழுதிய இந்நூலிற்குத் தமிழ்கூறும் நல்லுலகம் அளித்த ஊக்கத்தினால், இப்பொழுது பதினெட்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. என் எளிய முதல் முயற்சியினை ஏற்றுப் போற்றி அளப்பிலா ஆதரவு நல்கிய தமிழ்ப் பேராசிரியப் பெருமக்களுக்கும், அன்புத் தமிழ் மாணவர்களுக்கும், தமிழர் அனைவருக்கும் யான் பெரிதும் நன்றி செலுத்துகின்றேன். இந்நூல் மூன்றாண்டுப் பட்டப்படிப்பு மாணவர்கட்குப் பெருமளவிற் பயன்படுவதோடு, தமிழ்நாட்டு அரசினரின் பொதுப்பணித் தேர்வு (Tamilnadu Public Service Commission Exam) எழுதுவோர்க்கும் பயன்பட்டு வருகின்றது. மேலும், டில்லி, கல்கத்தா, காசி, உஸ்மானியா, மைசூர், பெங்களூர், திருவேங்கடவன், கேரளா, இலங்கை, மலேயாப் பல்கலைக்கழகங்களிலும், பிரவீன் (Praveen) இந்தித் தேர்விற்கும் இந் நூல் பாடநூலாக வைக்கப்பட்டிருப்பதை எண்ணி, அப் பல்கலைக்கழகப் பாடநூல் குழுவினர்க்கு யான் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன். இந்நூலினை நல்ல முறையில் அச்சியற்றி உதவிய மாருதி அச்சகத்தாருக்கு என் நன்றி உரியது. முடிவாக, என் முதல் நூலினை ஏற்று என்னைத் தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்தி உதவிய பாரி நிலையத்தினருக்கு என் பணிவார்ந்த நன்றி.

இப் புதிய பதிப்பில் சங்க இலக்கிய நூல்கள், சிறு பிரபந்தங்கள், இன்றைய இயல் (கவிதை, சிறுகதை, நாவல்) இசை, நாடகத் தமிழ் வளர்ச்சி முதலியன விரிவாய் எழுதப் பட்டுள்ளன. இவ்வாறு இப்பொழுது வெளிவரும் இந்தப் பதிப்பு முழுமையும் திருத்தமும் கொண்டதாய் உள்ளது.

—சி. பா.

மேற்கோள் நூல்கள்

தமிழ்

அரசு, புலவர் —திரு. வி. க. வரலாறு

அருணாசலக்கவுண்டர், கு. —பரிபாடற் சொற் பொழிவுகள்

அருணாசலம் பிள்ளை. மு. —முக்கூடற்பள்ளு, நூல் ஆராய்ச்சி

ஆதிரோக்கியசாமி, டாக்டர் மு. —நாயக்கர் காலம், மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்

ஆலாலசுந்தரம் செட்டியார், பூ. மறுமலர்ச்சி உரைநடை மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்.

இராகவையங்கார், ரா. —தமிழ் வரலாறு

இராகவையங்கார், மு. —சாசனத் தமிழ்க்கவி சரிதம்; ஆழ்வார்கள் காலநிலை

இராசமாணிக்கனார் டாக்டர், மா. —கால ஆராய்ச்சி

இறையனார் களவியல் —

குற்றாலக் குறவஞ்சி —கழகப் பதிப்பு முன்னுரை

உ. வே. வை. கோபால கிருஷ்ணமாசார்ய சுவாமி —சரிதை

சதாசிவப் பண்டாரத்தார், தி. வை. —தமிழ் இலக்கிய வரலாறு

சண்முகம், டி. கே. —தமிழ் நாட்டில் நாடக வளர்ச்சி, மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்,

சந்பந்த முதலியார். ப. —நாடகத் தமிழ்-மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்

சாமிநாதையர். டாக்டர் உ. வே. —மணிமேகலை முன்னுரை, சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்

உ. வே. சா — குறுந்தொகை முன்னுரை

" — பரிபாடற் பதிப்பு

— புறநானூறு

டி. கே. சி. — கண்ணார்க் காண ஒரு கவிஞர்-கவிமணி நினைவு மலர்

ப்பதிகாரம் —

நிவாசப்பிள்ளை, கே. எஸ். — தமிழ் வரலாறு

ந்தரம்பிள்ளை, பேராசிரியர் — மனோன்மணீயம்

பிரமணிய முதலியார், சி. கே — சேக்கிழார்

சுப்பிரமணிய பிள்ளை, கா. — இலக்கிய வரலாறு

சுப்பிரமணிய ஐயர், ஏ, வி. — கல்வியிற் பெரியர் கம்பர் செந்தமிழ், Vol. II

சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ. — தமிழ்ப்புலவர் சரித்திரம், தமிழ் மொழி வரலாறு

செல்வநாயகம், வி. — தமிழ் இலக்கிய வரலாறு, சுருக்கம்

சேதுப்பிள்ளை டாக்டர். ரா. பி. — கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்

சோமசுந்தர தேசிகர், ச. — பதினாறாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்கள் வரலாறு

துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. — தமிழ் நாவலர் சரிதை, சைவ இலக்கிய வரலாறு

பாரதிதாசன் கவிதைகள் —

டாக்டர். கே. கே. பிள்ளை, — தென்னிந்திய வரலாறு

புகழேந்தியார் — நளவெண்பா

மறைமலையடிகள் — முற்சாலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்

மாணிக்கம், டாக்டர், வ. சுப. —இரட்டைக் காப்பியங்கள்

மாணிக்க நாயக்கர், பா. வே. —தொல்காப்பியம் ஒலியியல் ஆராய்ச்சி

மார்க்கபந்து சர்மா —சிலப்பதிகார இரசனை

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ. —தமிழா, நினைத்துப்பார்!

ராமசாமிஐயர், டாக்டர், சி.பி. —கலைக்களஞ்சியம்

வ. ரா. —மகாகவி பாரதியார்

'சோமலே' —வளரும் தமிழ்

வரதராசன், டாக்டர், மு. —கலைக்களஞ்சியம், 5ஆம் தொகுதி

,, —திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (திரு. வி. க. முன்னுரை)

,, —வாடாமலர் (கவிமணி நினைவு மலர்)

வரதராச ஐயர், E. S. —தமிழ் இலக்கிய வரலாறு

வெள்ளை வாரணன், வித்துவான், க. —தமிழ் இலக்கிய வரலாறு; தொல்காப்பியம்.

வேங்கடசாமி நாட்டார் ந. மு. —சிலப்பதிகார உரை-அடியார்க்கு நல்லார் வரலாறு

வேங்கடசாமி மயிலை, சீனி. —கிறித்தவமும் தமிழும்

வையாபுரிப்பிள்ளை, எஸ். —தமிழின் மறுமலர்ச்சி

ஆங்கிலம்

Bower, Rev. Fr. —

Caldwell, Dr. — *A Comparative Grammar of the Dravidian family of Languages.*

Chakravarthy Nainar, Prof. A— *Pre-Historic South India.*

Dikshitar, V.R.R. — *Poetry and Imagination*

Emerson

Gnanapragasar, Rev. S.	—	
G.U. Pope's	—	*Introduction to Naladiyar*
Heras, Rev. H.	—	*Studies in Proto-Indo-Mediitteranean culture*
Hudson, W.H.	—	*An introduction to the Study of Literature*
John Milton	—	*L'allegro*
Mathew Arnold	—	*Principles of Literary Criticism*
Max Muller	—	
Nilakanta Sastri, K.A.	—	*A History of South India The Cholos, Vol II-Part-I*
Otto Jespersen	—	*Language*
Percivel, Rev.	—	
Pillsbury and Meader	—	*The Psychology of Languages*
Prof. E.J. Rapson	—	*Ancient India*
Purnalingam Pillai M.S.	—	*Tamil Literature*
Reddy. C.R.	—	*Foreward to the Ancient Dravidians by T. R. Sesha Iyengar*
Rhys Davis	—	
Sargunar, S.D.	—	*Foreward to Kirithavamum Thamizhum by Mayilai Seeni Venkatasami*
"	—	*Lecture on Christianity and Tamil, Siddhanta Deepika, Vol. III*
Srinivasa Iyengar.M.		*Tamil Studies*
Srinivasa Iyengar, P.T.	—	*History of the Tamils*
Thaninayagam, Xavier. S.	—	*Tamil culture*
Vaiyaapuri, Pillai S.	—	*History of Tamil Language and Literature*
Whitney	—	*Language and the Study of Language*

பொருளடக்கம்

எண் பக்கம்

1. பழமையும் சிறப்பும் ...17

தமிழ்நாடு-தமிழினம்-வாணிகத் தொடர்பு-தமிழ் மொழி.

2. சங்க காலம் ...27

முதற்சங்கம்-இடைச் சங்கம்-கடைச் சங்கம்-பழைய இலக்கியச் சான்றுகள்-பல்லவர் கால இலக்கியச் சான்றுகள்-கல்வெட்டுச் சான்று-கடல் கோள்-தொல்காப்பியம்-அகம், புறம்-சங்க இலக்கியத்தின் பெற்றி - எட்டுத்தொகை நூல்கள் - நற்றிணை - குறுந்தொகை - ஐங்குறுநூறு-பதிற்றுப் பத்து-பரிபாடல் - கலித்தொகை-அகநானூறு - புற நானூறு - பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை - பொருநராற்றுப்படை - சிறுபாணாற்றுப்படை-பெரும் பாணாற்றுப்படை - முல்லைப்பாட்டு - மதுரைக் காஞ்சி - நெடுநல்வாடை - குறிஞ்சிப் பாட்டு - பட்டினப்பாலை - மலைபடுகடாம் - சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற் காலம்.

3. சங்கம் மருவிய காலம் ...75

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - திருக்குறள் - நாலடியார்-நான்மணிக்கடிகை-இனியவை நாற்பது இன்னா நாற்பது-கார் நாற்பது-களவழி நாற்பது-திணைமொழி ஐம்பது-திணைமாலை நூற்றைம்பது - ஐந்திணை எழுபது - திரிகடுகம் - ஆசாரக் கோவை-பழமொழி - சிறுபஞ்சமூலம் - முதுமொழிக் காஞ்சி - ஏலாதி - கைந்நிலை - சிலப்பதிகாரம்-மணிமேகலை - திருமந்திரம்

4. பல்லவர் காலம் ...110

நாயன்மார்கள் : திருஞானசம்பந்தர்-திருநாவுக்கரசர்-சுந்தரமூர்த்தி நாயனார் - மாணிக்கவாசகர் - ஆழ்வார்கள் - பொய்கையாழ்வார் - பூதத்தாழ்வார் பேயாழ்வார்-திருமழிசையாழ்வார்-பெரியாழ்வார் - ஆண்டாள் - திருமங்கையாழ்வார் - தொண்டரடிப் பொடியாழ்வார்-திருப்பாணாழ்வார் - குலசேகராழ்வார்-நம்மாழ்வார்-மதுரகவியாழ்வார் - பௌத்தர்கள் - சமணர்கள் - புறப்பொருள் வெண்பாமாலை-இறையனார் களவியலுரை - பெருங்கதை - முத்தொள்ளாயிரம்-திருக்கைலாய ஞானவுலா - நந்திக்கலம்பகம் - பாரத வெண்பா - சமணர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் - அறநிலைக் கதைகள்-நிகண்டு நூல்கள் - இலக்கண நூல்கள் - உரை நூல்கள்-பிற நூல்கள்.

5. சோழர் காலம் ...140

ஐம்பெருங் காப்பியங்கள் : சிலப்பதிகாரம் - மணிமேகலை - வளையாபதி-குண்டலகேசி - சீவகசிந்தாமணி - ஐஞ்சிறு காப்பியங்கள் - உதயண குமார காவியம்-நாககுமார காவியம்-யசோதர காவியம் - சூளாமணி - நீலகேசி - திருமுறைச் சான்றோர்கள்-நம்பியகப் பொருள்-யாப்பருங்கல விருத்தி-யாப்பருங்கலக் காரிகை-நேமி நாதம்-வச்சணந்தி மாலை - வீர சோழியம்-நன்னூல் - தண்டியலங்காரம் - நிகண்டுகள் - ஔவையார் - கலிங்கத்துப்பரணி - கம்பராமாயணம் - ஒட்டக்கூத்தர் - கந்தபுராணம்.

6. நாயக்கர் காலம் ...179

உரையாசிரியர்கள் - சைவ சித்தாந்த சாத்திரங்கள்-திருவுந்தியார் - திருக்களிற்றுப்படியார் - சிவஞான போதம் - சிவஞான சித்தியார் - இருபா இருபஃது-

உண்மை விளக்கம்-சிவப்பிரகாசம்-திருவருட்பயன்-வினா வெண்பா-போற்றிப் பஃறொடை வெண்பா-கொடிக்கவி - நெஞ்சு விடு தூது - உண்மை நெறி விளக்கம்-சங்கற்ப நிராகரணம்; பிரபந்த உரையாசிரியர்கள் - இளம்பூரணர் - பேராசிரியர்-சேனாவரையர்-நச்சினார்க்கினியர் - அடியார்க்கு நல்லார் - பரிமேலழகர்; பலதுறை நூல்கள்; அந்தகக்கவி வீரராகவ முதலியார்-அதிவீரராம பாண்டியர்-கச்சியப்ப முனிவர் - வீரகவிராயர்-பரஞ்சோதி முனிவர் - வில்லிபுத்தூரார் - அருணகிரி நாதர் - காளமேகப் புலவர் - அதிமதுரகவி - இரட்டையர்கள் - தொல் காப்பியத் தேவர் - திருக்குருகைப்பெருமாள் கவிராயர்; சைவமடங்கள் வளர்த்த தமிழ்-திருவாவடுதுறைமடம்-தருமபுர மடம்-திருப்பனந்தாள் மடம்-மதுரை மடம்-வீர சைவ மடங்கள்; திருவண்ணாமலை-சிவப்பிரகாச சுவாமிகள்-சைவ எல்லப்ப நாவலர் - பிள்ளைப் பெருமாளையங்கார் - படிக்காசுப் புலவர்-நல்லாப்பிள்ளை - தத்துவப் பிரகாசர்-தாயுமானவர் - இஸ்லாமியப் புலவர்கள்.

7. ஐரோப்பியர் காலம் ...233

தமிழில் உரைநடை வளர்ச்சி; மேனாட்டுக் கிறித்தவர்கள்-வீரமாமுனிவர்-சீகன் பால்கு ஐயர்-எல்லிஸ் துரை-இரேனியுஸ் ஐயர்-போப்பையர்-கால்டு வெல் ஐயர்-தமிழ்க் கிறித்தவர்கள்; வேதநாயகம் பிள்ளை - H.A. கிருஷ்ணப் பிள்ளை - வேதநாயக சாஸ்திரியார் - உவின்ஸ்லோ; திரிகூடராசப்பக் கவிராயர்-முக்கூடற் பள்ளு-அருணாசலக்கவி - வடமலையப்பப் பிள்ளையன்-இராமசந்திரக் கவிராயர்-மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை-இராமலிங்க அடிகள் - யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்கள்; ஆறுமுக நாவலர் - சி. வை. தாமோதரம் பிள்ளை - டாக்டர் உ. வே. சா.—பண்டிதமணி -

வையாபுரிப் பிள்ளை - விபுலானந்தர் - மறைமலை யடிகள்-திரு.வி.க.-19-20ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள்.

8. இக்காலம் ...266

இயற்றமிழ்-பாரதியார்-தேசிக விநாயகம் பிள்ளை-பாரதிதாசன் - நாமக்கல் கவிஞர் - வாழும் கவிஞர் கள் - புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - இசைத்தமிழ் - நாடகத் தமிழ் - தமிழில் சிறுகதை வளர்ச்சி-புதுமைப்பித்தன் - கு.ப.ரா-கல்கி; தமிழில் நாவல் வளர்ச்சி; கல்கி வரலாற்றுப் புதினங்கள் - சமுதாய நாவல்-டாக்டர் மு. வ.-பெண் எழுத் தாளர்கள் - மொழி பெயர்ப்பு நவீனங்கள் - இருப தாம் நூற்றாண்டின் பொருளாதார நூல்கள் - இலக்கியத் துறைப் பதிப்புகள் - இலக்கணக் கட்டுரைகள் - வழிச் செலவு நூல்கள் - மொழிநூல்-தமிழ் நாட்டு வரலாறு-திறனாய்வு நூல்கள்.

பிற்சேர்க்கை

1. ஐரோப்பியர் வருகை ...378

2. அச்சு இயந்திரத்தின் தோற்றம் ...382

3. இந்திய நாட்டின் விடுதலை இயக்கமும் தமிழ் நாட்டில் அதன் செல்வாக்கும் ...387

4. சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற தமிழ் நூல்கள் ...393

4. வினாத்தாள்கள். ...394

இந் நூலைப் பற்றி...

திரு. சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட். எழுதியுள்ள இந்நூலில், தமிழ் இலக்கிய வரலாறு தெளிவாகவும் செம்மையாகவும் சுருக்கமாகவும் அமைந்துள்ளது.

—டாக்டர் மு. வரதராசனார்

இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் மாணவர் என்பதனை இந் நூலின் நடையும் கருத்தும் விளக்குகின்றன.

—பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

...அவரது நூல் பாட திட்டத்திற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது; மாணவர் படித்துப் பயன் பெறத் தகும் முறையில் எழுதப்பட்டுள்ளது. எளிய நடையைப் பெற்றுள்ளது.

—டாக்டர் மா. இராசமாணிக்கனார்

தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகள் (trends) அனைத்தையும் மனத்துட்கொண்டு, வகை செய்து, இவ்வாசிரியர் அவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதிப் போகின்றார்.

—தமிழ்ப் பெரும் புலவர் ச. ஆறுமுக முதலியார்

தமிழ் இலக்கியம் அன்றுதொட்டு இன்றுவரை சிறந்தும் நிறைந்தும் உயர்ந்தும் தாழ்ந்தும் வளர்ந்துவந்த நிலையினை இச் சிறு நூலில் விடாது விளக்கிக்கொண்டு வரும் ஆசிரியர் திறன் பாராட்டுதற்குரியது.

—பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

தமிழ் இலக்கிய வரலாற்று அறிவு தமிழ் நாட்டில் ஐந்தாறு பேர்களுக்கே உண்டு. இந்த ஐந்தாறு பேர்களில் நம் மதிப்பிற்குரிய மெய் இலக்கியத் தொண்டர் திரு. சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒருவர்.

—தமிழ்வாணன்

தங்கள் தமிழ் இலக்கிய வரலாறு மாணவர் மேலும் மேலும் இலக்கிய அறிவு பெறுதற்கு விரும்பும் முறையில் எழுதப் பட்டுள்ளது.

—பேராசிரியர் மேரி மாசிலாமணி அம்மையார், M.A., L.T.

எழுத்துவன்மை, பேச்சுத்திறமை, ஆராய்ச்சி நலம், உழைப்புத் திரு முதலிய சிறப்பெல்லாம் நிறையப்பெற்றவர் இவ்வாசிரியர் ஆவர்.

—பேராசிரியர் தண். கி. வேங்கடாசலன்

1. பழமையும் சிறப்பும்

தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது; என்று தோன்றி வளர்ந்தது என்று இயம்பமுடியாத அளவுக்குப் பழமையானது; பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழில் காணக் கிடக்கும் பழம்பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள் வாழ்க்கைநெறியின் செம்மையும் புலப்படுகின்றன. தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடவந்த பெஸ்கி பாதிரியார், 'தமிழ்ப்புலவர் ஆற்றல்சான்ற மொழியினைக் கையாண்டனர்; தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுகள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியும் காணப்படுகின்றன' என்று கூறியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றின்ன ஆய்வதற்கு முன், நாட்டினுடைய வரலாற்றையும், மக்களுடைய வரலாற்றையும் ஓரளவு காணவேண்டும். ஓவியம் பின்னணியைத் துறந்து எவ்வாறு வாழ இயலாதோ அவ்வாறு இலக்கிய வரலாறும் நாட்டு மக்களின்றி இயங்காது. மக்கள் வாழ்க்கையினின்று

---

1. As regards Literature, that 'Unique genius' Father Beschi, writes that "The Tamil Poets use genuine language of Poetry and there are excellent works in Tamil Poetry on the subject of devine attributes and the nature of virtue."

—S. D. Sargunar B. A. 'Lecture on Christianity and Tamil'—p. 36.

முகிழ்ப்பதே இலக்கியம். எனவேதான், மொழி வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம்' என்று ஹட்சனும்[1] 'கவிதை வாழ்க்கையின் ஆய்வு' என்று மாத்யூ அர்னால்டும்[2] கூறிப்போந்தனர். நாடு, மக்கள், மொழி ஆகியவற்றினைக் காண்போம்.

'மொழியே மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி'[3] என்பர். மொழி வளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன.[4] 'உலகில் எண்ணிறந்த மொழிகள் தோன்றின; வளர்ந்தன. காலப்போக்கில் பல அழிந்தொழிந்தன. சிலவே இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன. அம் மொழிகளுள்ளும் தமிழ் சீனம் போன்ற ஒருசில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் பயின்று வருகின்றன. வடமொழி, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் முதலிய வரலாற்றுப் பழமைவாய்ந்த மொழிகள் பேச்சு வழக்கு இழந்து மொழியளவில் நின்று விட்டன. எனவேதான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

---

1. Literatue is thus fundamentally an expression of life through the medium of language.
   —W. H. Hudson, An Introduction to the study of Literature, p. 10.
2. Poetry is the bottom, the Criticism of life.
   —Mathew Arnold
3. The language is the mirror of their (People) minds —Pillsburi and Meader, The Psychology of Language, p. 290.
4. Language is enriched and impoverished along with the enrichment or impoverishment of their minds.
   —Whitney. Language and study of Language p. 139.

'ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!'

என்றார்.

தமிழ் நாடு

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஹரப்பா, மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், சுமேரிய நாகரிகத்திற்கு இணையான திராவிட நாகரிகத்தை —தமிழ் நாகரிகத்தைக்—கொண்டிலங்கியது என்று அறிஞர் துணிகின்றனர். மேலும், குமரிக்கண்டம் என்று தமிழ் இலக்கியங்களிலிருந்து அறியலாகும் தமிழ்நாட்டின் தென் பகுதியே, மனிதத் தோற்றத்தின் முதலிடமாய் இருக்க வேண்டும் என்பர்.[1] இப்பகுதியை 'லெமூரியா' என்று வழங்குவர். அறிஞர் ஸ்காட்டு எலியட்டு 'இழந்த லெமூரியா' என்னும் தம் நூலிலே, லெமூரியாக் கண்டமே 'மனித நாகரிகத்தின் தொட்டில்' (Cradle of human race) என்று கூறியுள்ளார். அந் நிலப்பகுதியே தென்னமெரிக்கா, தென்னாப்பிரிக்கா, மடகாஸ்கர் என ஒரு பக்கமும், மலேசியா ஆஸ்திரேலியா என மற்றொரு பக்கமும் பெரிய நிலப்பகுதியாய் விரிந்திருந்தது. பஃறுளியாறு பாய்ந்து வளப் படுத்திய—பல மலைகள் பீடுற நிமிர்ந்து நின்ற—அப்பகுதியே பிற்காலத்தில் கடல் கோளால் அழிந்தது என்று சிலப்பதி காரம்,[2] புறநானூறு[3], 'இறையனார் களவியலுரை'[4] என்னும் நூல்கள் அறிவிக்கின்றன. அதனால், அப்பகுதியில் வாழ்ந்த அறிவும் ஆற்றலும் சான்ற மக்கள் உலகின் பல்வேறு இடங்

---

1. V. R. R. Dikshitar, Pre-historic India, p. 70.
2. பஃறுளி யாற்றுட் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கட்கொள்ள
—சிலப்பதிகாரம்—காடுகாண் காதை, 18-20
3. முந்நீர் விழிவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' —புறம் 9; 10-11
4. இறையனார் களவி ல் உரை. ப. 6.

களுக்கும் சென்று பரவிக் குடியேறினர். எனவே தென்னிந்தியாவிலேயே அவர்கள் முதன் முதலில் தங்கி வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தெரியவருகின்றது.[1]

தமிழினம்

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி' என்று தமிழினத்தின் பழமையினைப் பாராட்டிப் பேசுகிறார் பைந்தமிழ்ப்புலவர் ஒருவர். உலகின் பிறபகுதி மக்கள் நிலையான வாழ்வின்றி அமைதியற்று வாழ்ந்த காலத்திலேயே தமிழர்கள் நல்ல அரசியல் அமைப்பினையும், சமுதாய ஒருமைப்பாட்டினையும், வாணிகச் சிறப்பினையும், இலக்கியச் செல்வத்தினையும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். கடல், ஆர்கலி, முந்நீர், பரவை, புணரி முதலிய கடலையுணர்த்தும் தூய தமிழ்ச்சொற்களும், நாவாய், ஓடம், மரக்கலம், தோணி, தெப்பம், மிதவை, கலம், கப்பல், கட்டுமரம், திமில், அம்பி முதலிய மரக்கலத்தின் வேறு பெயர்களும், தமிழர் கடல் வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகரவல்லன.

வாணிகத் தொடர்பு

கி. மு. பத்தாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாடு, சிரியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. தமிழ் நாட்டின் மணம் பரப்பும் சந்தனம், ஆங்கிலத்தில் சந்தல் (Sandal) ஆனது. மயிலை ஆகுபெயரால் உணர்த்தும் 'தோகை' என்ற சொல் 'துக்கி' (tukki) என்று ஹீப்ரு மொழியில் வழங்குகிறது.

1, Rev H. Heras—Studies in Prota - Indo - Mediterranean Culture, p. 21.

"தமிழில் அரிசி என்பது கிரேக்கத்தில் 'ஒரிசி' எனவும், கறுவாய் என்பது 'கற்பியன்' எனவும், இஞ்சிவேர் என்பது 'சிக்கி பெரோசு' எனவும் 'பப்பியிலிருந்து' 'பெப்பரி' எனவும் பெயர்ந்து சென்ற மொழிகளாகும். கிறிஸ்து அப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவுடன் நடைபெற்ற தென்னிந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் பல கிட்டியுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை உரோமை வல்லரசர் அகஸ்ற்றசின் காலத்தைச் சார்ந்த ஸ்டிராபோவின் விவரணம், சுமார் கி. பி. 60இல் தோன்றியுள்ள 'பெரிபுளூஸ்' என்னும் நூல், பிளினியின் 'இயற்கை வரலாறு[1], (சுமார். கி.பி. 77), தாலமியின் 'பூகோள விவரணம்' (சுமார் கி. பி. 170) என்னும் நூல்களாகும். இவ் வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள் சங்க நூல்கள் பலவற்றில் காணப்படும் கருத்துகளுக்கு மிகப் பொருத்தமாயிருக்கின்றன."

வேதங்களில் குறிப்பிடப்படாத யானை, கி. மு. ஏழாம் நூற்றாண்டில் அசிரிய நாட்டு மன்னனுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. நீலிச்சாயம் தோய்க்கப்பட்ட துணிகள் எகிப்துக்கும் பாரசீகத்திற்கும் அனுப்பப்பட்டன. சேர நாட்டின் தேக்குமரம் பிறநாட்டில் கட்டடங்கள் கட்டவும், கப்பல்கள் கட்டவும் உதவியது. யவனர் மிளகு கொண்டு சென்றனர்; பொன்னும் மதுவும் கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த குடியிருப்புகளும் தமிழ் நாட்டில் இருந்தன. புதுச்சேரியின் அருகே 'அரிகாமேடு' என்ற இடத்தைத் தோண்டிப் பார்த்ததில், அவ்விடத்தே அத்தகையதோர் யவனக் குடியிருப்பு இருந்தது என்பது தெரிந்தது. யவனரின் அழகிய புலிச்சங்கிலிகளும், பாவை விளக்குகளும் தமிழ் நாட்டிற்கு வந்தன. ஆர்க்கிமிடீஸ் என்பவர் சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைக் கண்டுபிடித்தார். அவையெல்லாம் 'யவனப் பொறி

1. டாக்டர் கே.கே. பிள்ளை, தென்னிந்திய வரலாறு ப. 32-33.

கள்' என்ற பெயரோடு தமிழ் நாட்டுக் கோட்டையில் இடம் பெற்று விளங்கின."[1]

தென்பாண்டிக் கடல் முத்து உலகப் புகழ் வாய்ந்தது, முத்தம் (முத்து) முதலிய தமிழ்ச் சொற்கள் வடமொழியின் பழைய வேதமான இருக்கு வேதத்திலே இடம் பெற்றுள்ளன. உரோம் நாட்டுப் பெண்டிர் தமிழ் நாட்டு முத்தைப் பெரிதும் விரும்பினர். உலோலா என்னும் உரோம் நாட்டு அரசி 30,000 தங்க நாணயத்திற்கு ஈடான முத்துக்களை அணிந் திருந்தாள். உரோம் நாட்டு மக்களின் இத்தகைய ஆடம்பர வேட்கையால், அந்நாட்டுப் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டதாகப் பெரிப்ளூஸ் (Periplus) நூல் குறிப் பிடுகின்றது.[2] 'ஆண்டொன்றுக்கு உரோம் நாடு, தான் இந்தி யாவிலிருந்து பெறும் ஆடம்பரப் பொருள்களுக்குக்காக மிலியன் பவுனுக்கு ஈடான பொன்னை வாரி வழங்கி வறுமை யுற்று விடுகிறதே' என உரோம் நாட்டு வரலாற்றாசிரியர் (Pliny) வருந்திக் கூறினர்.[3]

கி. மு. 20இல் பாண்டிய வேந்தனொருவன், அகஸ்டஸ் என்னும் கிரோக்கப் பெருவேந்தனது அவைக்குத் தூது

---

1. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்—தமிழ ரினைத்துப் பார்: ப. 21.

2. The extravagant Importation of luxuries from the east without adequate production of commodities to offer in exchange was the main cause of the successive depreciation and degradation of the Roman curreney leading finally to its total repudiation.
—P. T. Srinivasa Iyengar—History of the Tamils, p. 308

3. So that Pliny complained In 70 A. D. that India drained gold to the value of nearly a million pounds a year giving bake her own wares, which are sold among us at fully a hundred times their first cost. —ibid p. 305

அனுப்பினான். தமிழ்நாட்டின் பழைய துறைமுகப் பட்டின மாகிய முசிறியில் அகஸ்டஸின் பெயரால் ஒரு கோயில் இருந்தது. ஈராயிரம் உரோமர்கள் அடங்கிய படை ஒன்றும் அங்கு இருந்தது. யவனர் தமிழரசர்களின் வாயில் காப்பாள ராயிருந்தனர். புலித்தொடர் சங்கிலி, பாவை விளக்கு முதலிய பொருள்கள் அவர்களின் கைவண்ணத்தால் அமைக்கப்பட்டன.

அடுத்து, வடநாட்டவரும் தமிழ்நாட்டு வாணிகத்தைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். மௌரிய மன்னன் சந்திர குப்தனின் மதிபடைத்த அமைச்சர்—சாணக்கியர் என வழங்கும் கௌடில்யர்—வடநாட்டு வாணகத்தினும் தென்னாட்டு வாணிகமே சிறந்தது என்றும், வடநாடு கம்பள ஆடை, தோல், குதிரை முதலிய எளிய பொருள்களையே வாணிகப் பொருள்களாகக் கொண்டிருக்க, தென்னாடோ விலைமதிப்பு வாய்ந்த பொருள்களாகிய சங்கு, வைரம், மாணிக்கக் கற்கள், முத்து, பொன்னணிகள் முதலியன வற்றைக் கொண்டிருந்தது என்றும் வாயாரப் புகழ்கிறார்.[1] இவை எல்லாம் தமிழர் 'திரைகடலோடியும் திரவியந்தேடி' அந்நாளிலேயே நாகரிகச் சிறப்புற்றிருந்தனர் என்பதை அறிவிக்கின்றன.

தமிழ்மொழி

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றும், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்!' என்றும் பாரதியார் தமிழின் உயர் வினையும் இனிமையினையும் பாராட்டினார். மாக்ஸ்முல்லர் என்னும் மொழி நூலறிஞர், 'தமிழே மிகவும் பண்பட்ட மொழி' என்றும், 'தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி' என்றும் பாராட்டி

---

1. K. A. Nilakanta Sastri, A History of South India, p. 11.

யிருக்கிறார்.[1] "ஆற்றல் மிக்கதாகவும், சொல்லவந்த பல கருத்துகளைச் சில சொற்களால் புலப்படுத்துவதாகவும், தமிழ் மொழிபோல் வேறு எம்மொழியும் இல்லை" என்று பெர்சிவல் பாதிரியார் கூறுகின்றார்.[2]

'திரமிளம்' என்ற சொல்லிலிருந்தே தமிழ் பிறந்தது என்பர். இக்கருத்து, கால்டுவெலுக்கு உடன்பாடானது. ஆனால், தமிழ் என்னும் பழஞ்சொல்லிலிருந்தே திரமிளம், திராவிடம் போன்ற சொற்கள் தோன்றியிருக்க வேண்டு மென்பதே மொழி நூலார் பலர் கூறும் உண்மையாகும். தமிழ் எனும் சொல் இனிமை எனும் பொருள் பயப்பதை நந்தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

'தமிழ் தழீஇய சாய லவர், — சீவக சிந்தாமணி
'தமிழெனும் இனிய தீஞ்சொற் றையல்' —மணிமேகலை
'தமிழ்பாட் டிசைக்கும் தாம ரையே' — கம்ப ராமாயணம்
'இனிமையும் நீர்மையும் தமிழென லாகும்'—பிங்கலந்தை
'பாலேய் தமிழ்' — திருவாய்மொழி

'அனுமான் சீதாப்பிராட்டியிடம் தூது சென்றபோது மதுரமான மொழியில் பேசினன்' என்று வால்மீகி முனிவர் சுந்தர காண்டம் சுருக்கம் 30, சுலோகம் 43ல் எழுதியிருப்

1. Tamil is the most highly cultured language and possesses the richest stores of indigenous literature.
—Max Muller

2. No language combines greater force with equal brevity than Tamil and it may be aserted that no human speech more close and philosephic in its expression as an exponent of the mind than the same. Thus sequence of thing, of thought, action and its results is always maintained inviolate.
—Rev Percival

பதைக் கொண்டு, அம்மதுரமொழி தமிழ்மொழியென்றே கொள்ளலாம்'[1] என்று மகாவித்துவான் ரா. ராகவையங்கார் 'தமிழ் வரலாறு' என்னும் தம் நூலில் குறிப்பிடுகின்றார்.

வடமொழியின் ஆதி காவியமென எண்ணப்படுவது வால்மீகி இராமாயணம். அதிலேயே 'என்று முளதென்ற மிழை' வளர்த்து ஏற்றங்கண்ட பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்பு வருகிறது. "பின்பு பொன்னிறத்ததாயும், அழகுடைத்ததாயும், முத்து மணி இவற்றால் அணிசெய்யப் பட்டதாயும், நகரத்து அரணொடு இணைக்கப்பட்டதாயு முள்ள பாண்டியர் வாயிற்கதவை, வானரர்காள்! போய்க் காண்பீர்!" என வால்மீகி முனிவர் கூறுகின்றமையாலும், வியாச முனிவரும் மகாபாரதத்தின்கண்ணே தமிழ்நாட்டின் சிறப்பையும் பாண்டிய அரசையும் பற்றிச் சிறப்பித்துக் கூறுகின்றமையானும், பாண்டியர் ஆண்ட நாட்டின் தொன்மையும், அவர் பேசிய தமிழ்மொழியின் தொன்மையும் ஓராற்றான் தெளியப்படுமாறு காண்க"[2]

தமிழ்மொழி பழைமையிலும், சொல் வளத்திலும் இலக்கண வரம்புடைமையிலும், செய்யுள் வகையிலும், பண்பாட்டுச் சிறப்பிலும் தலைசிறந்தது என்பது வெள்ளிடை மலை. வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று உலக இலக்கிய மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன என்று டேவிஸ் (Rhys Davis) என்பார் கூறுகிறார். உலகப் பழைய நாகரிகத்தில் ஒன்று சுமேரிய நாகரிகம்.

---

1. திரு. ரா. ராகவையங்கார், தமிழ் வாலாறு, ப. 7-8
2. திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழி வரலாறு, ப 64.

3. The three classic languages of the world namely Sanskrit, Hebrew and Greek contain Tamil words in their vocabulary—Rhys Davis.

சுமேரிய மொழி சொல்வளம் உடையது. ஆயினும், தமிழை நோக்க அம்மொழி இளமையான பிற்பட்ட மொழியாகவே கருதப்படும் என்கிறார் அறிஞர் ஒருவர்.[1] 'வட இந்தியாவில் வாழ்ந்த மொகஞ்சதரோ மக்கள் திராவிட மொழியையே பேசினார்கள். அவர்கள் பேசிய சொற்களில் பலவற்றைத் தமிழில் காணலாம். ஆதலின், இப்பொழுது வழங்கும் எல்லா மொழிகளிலும் தமிழே மிகப்பழமையானது என்ற கொள்கையை இக்கூற்று மேலும் வலியுறுத்தி நிற்கின்றது''[2] என்று ஹீராஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். எனவே, எவ்வகையில் பார்த்தாலும், தமிழின் பழமையும் சிறப்பும் நன்கு புலனாகின்றன.

---

1. The Sumerian speech old as it is, appears comparatively young, when viewed in the light of earliest World terms which Tamil displays and of which Sumerian forms are a later developement.

—Rev. S. Gnanapragasar

2. Being Dravidians the inhabitants of Mohenjodaro in Northern India naturally spoke a Dravidian language in which the earliast proportion of the word used are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages. —Rev. Heras

2. சங்க காலம்

கி.மு. 500—கி.பி. 100

முதற் சங்கம்

'பாண்டி நன்னாடுடைத்து நல்ல தமிழ்' என்று பாடினார் ஔவையார். பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துப் புலவர்களுக்கு ஊக்கம் ஊட்டிப் புதிய நூல்களின் ஆக்கத்திற் கான தொண்டினைச் செய்தார்கள். முதல் இடை கடை என்ற மூன்று சங்கங்கள் நிலவின என்ற செய்தி இறையனா ரகப்பொருள் உரையால் தெரியவருகின்றது. முதற்சங்கம் குமரிக்குத் தென்பால் - கடல்கோளுக்கு முன் பரந்திருந்த நிலப்பகுதியில் இருந்த தென்மதுரையில் நிலவியிருந்த தென்றும், அச் சங்கத்தில் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாக ராயர் முதலிய ஐந்நூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தனர் என்றும், அவர்களால் பாடப்பட்டவை பரி பாடல், முதுநாரை, முதுகுருகு முதலான நூல்களென்றும், அச்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகள் நிலவிற்று என்றும், அகத்தியமே இலக்கண நூலாகப் பின் பற்றப்பட்டது என்றும் களவியலுரை கூறுகின்றது.

இடைச் சங்கம்

இடைச் சங்கத்தில் தொல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியன். சிறுபாண்டரங்கனார் உள்ளிட்ட ஐம்பத்தொன் பதின்மர் புலவர்களாய் வீற்றிருந்தனர் என்றும், அவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலிய நூல்களை இயற்றினார்கள் என்றும், அவர்களுக்கு அகத்திய மும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாய் அமைந்தன என்றும், அச்சங்கம் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகள்

நிலைத் திருந்ததென்றும், புலவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரமென்றும் அந்நூல் கூறுகின்றது.

கடைச் சங்கம்

கடைச் சங்கப் புலவர்கள் சிறுமேதாவியார், சேந்தம் பூதனார், பெருங்குன்றூர்கிழார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிள நாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலாய நாற்பத்தொன்பது புலவர்கள் என்றும், அவர்களால் பாடப்பெற்றவை நெடுந்தொகை நானூறு ஐங்குறுநூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல் என்றும், அவர்களுக்கு நூலாய் விளங்கியவை அகத்தியமும் தொல்காப்பியமும் என்றும், அச்சங்கம் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகள் உத்தர மதுரையில் நிலவியிருந்த தென்றும் இறையனார் களவியலுரை கூறுகின்றது.

ஆனால் களவியலுரை கூறும் இக் கூற்றை முழுவதும் உண்மையென்று கொள்வதற்கில்லை; இற்றைக்கு ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்த தமிழார்வம் மிக்கிருந்த புலவர்களின் உள்ளம், தமிழின் சிறப்பினை இப்படிக் கற்பனையாக எண்ணிப் பார்த்தது என்பர். 'சங்கம் என்ற ஓர் அமைப்பு நிலவியது என்பதே பொய்' என்பர் அறிஞர் சிவராசப்பிள்ளை. ஆனால் புலவர் கூட்டம் ஒன்று தமிழ் நாட்டில் நிலவியது என்பதற்கு இலக்கியத்தில் பல்வேறு சான்றுகளைக் காணலாம். அவை வருமாறு :

பழைய இலக்கியச் சான்றுகள் :

1. இமிழ்குரல் முரசம் மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே'

—புறம். 78:13-16

2. 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை

—புறம். 72:13-16

3. 'நிலவினாற் றிரிதரு உ நீண்டமாடக் கூடலார்
புலவினாற் பிறந்தசொற் பதிதுண்ணும் பொழுதன்ரே

—கலி. 85:17-18

4. 'மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீதத செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர

—கலி. 68:2-5

5. தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன்'.

—மதுரைக் காஞ்சி 61-63

6. 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர்மதுரை'

—சிலம்பு 10,58

7. 'தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்'

—மணிமேகலை 15,139

பல்லவர் கால இலக்கியச் சான்றுகள் :

1. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்'

—திருநாவுக்கரசர் தேவாரம் 6:76-3

2. 'சங்கத் தமிழ்' —திருப்பாவை — 30

3. 'சங்க முகத்தமிழ்' — பெரிய திருமொழி 3:4-10

4. 'உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்த வொண்
தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்
சூழல்புக்கோ!

—திருகோவை-20

கல்வெட்டுச் சான்று

'மஹாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்று சென்னை அரசாங்கக் காட்சிச் சாலையி லுள்ள சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிக்கின்றன.

கடல்கோள்

சங்க நூல்களில் பல, தமிழர்களின் கவனக்குறைவாலும் கடல்கோளாலும் அழிந்துபட்டன. குமரிக்கு அப்பாலும் பரந்திருந்த தமிழ்நாட்டின் எல்லை, தொல்காப்பியனார் காலத்தில் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' ஆனது.

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'

என்ற சிலப்பதிகார அடிகளும்,

'மலிதிரை மூர்ந்துதன் மண்கடல் வௌவலின்

என்ற முல்லைக்கலித் தொடரும்,

'முந்நீர் விழவி நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'

என்ற புறப்பாட்டின் பழைய உரைகாரர் குடுப்புரையும், கடல்கோள் நிகழ்ந்ததென்பதைத் தெரிவிக்கின்றன.

தொல்காப்பியம்

இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமை யான நூல் தொல்காப்பியமாகும். இதன் ஆசிரியர் தொல் காப்பினார். தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி என்பதனால், அவர் குலப்பெயரே தன் பெயராகப் பெற்றார் என்பர். இவரை அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் ஒருவர் என்பர்.

முப்பிரிவுகள்

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்கள் கொண்டது. எழுத்ததிகாரம் எழுத்துகளைப் பற்றிய இலக்கணங்களை எடுத்தியம்புகிறது; சொல்லதிகாரம் எழுத்துகளால் ஆகிய சொற்களைப் பற்றிச் சொல்கிறது; பொருளதிகாரம், அச் சொற்களில் அமைந்துள்ள பொருள்களைப் பொருத்தமுறக் கூறுகின்றது.

எழுத்தும் சொல்லும் தமிழ்மொழியின் அமைதியை விளக்கி நிற்பன. பொருள், அம் மொழி பேசும் தமிழரின் உயர்ந்த ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் காட்டுவதாகும். உலகத்தின் எல்லா மொழிகளிலும் எழுத்துக்கும் சொல்லுக்குமே இலக்கணம் அமைந்திருக்க, தமிழ்மொழியிலோ பொருளுக்கும் இலக்கணம் அமைந்துள்ளது தமிழுக்கே தனிச் சிறப்பாய் அமைந்த ஒன்றாகும்.

அகம், புறம்

பழந்தமிழ் இலக்கியத்தினை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்தனர். ஒத்த தலைமகனும் தலைமகளும் உள்ளம் ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையைக் கூறும் பாடல்கள் அகமெனப்பட்டன. போர், கொடை, வென்றிச் சிறப்பு முதலியவற்றைக் கூறும் பகுதிகள் புறமெனப்பட்டன. அகவாழ்வு வீட்டு இன்பத்திற்கும், புறவாழ்வு நாட்டுச் சிறப்புக்கும் உரமூட்டின. காதல் பற்றிப் பாடப்படுகின்ற பாடல்களிலே நுண்மையான ஒரு வரையறை-கட்டுப்பாடு கையாளப்பட்டது. காதல் பாட்டுகளில் காதலர் பெயரைக் கூறும் வழக்கம் இல்லை இதனை,

‘மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்’

என்று தொல்காப்பியம் கூறுகிறது. எனவே காதலைப் பற்றிப் பிறந்த கவிதைகள் எல்லாம் சமுதாயம் முழுவதற்குமே பொதுவாய் எழுந்தன. அகப்பாடல்கள்

அனைத்தும் குற்றமற்ற குறிக்கோள் இலக்கியங்களாய் முகிழ்த்தன.

முதற் பொருள்

மக்கள் வாழ்க்கையில் ஒழுகிய பல்வேறு நெறிகட்கும் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகட்கும் தொடர்புகண்டு புதிய ஓர் இலக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் தொல்காப்பியனாராவர். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை எனவும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் எனவும் கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் எனவும், முல்லையும் குறிஞ்சியும் திரிந்த வளம் குறைந்த இடம் பாலை எனவும் வழங்கப்பட்டன. இந்த ஐவகை நிலத்திலும்,

> 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
> பாலை என்பதோர் படிவங் கொள்ளும்'

என்னும் சிலப்பதிகார அடிகளால் பாலை நிலத்தின் தன்மையினை அறிகிறோம்.

கரு உரிப் பொருள்கள்

ஐவகை நிலமும் அறுவகைப் பெரும்பொழுதும் சிறு பொழுதும் முதற்பொருள் என்றும், தெய்வம் முதல் யாழ் ஈறான பதினான்கும் கருப்பொருள் என்றும், குறிஞ்சிக்குக் கூடலும் கூடல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் உரிப்பொருள்கள் என்றும் கொள்ளப்பட்டன. இதனால்தான் பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கையை வருணித்தாலும் மக்களுடைய வாழ்வே அதன் உட்பொருளாக-உரிப்பொருளாக விளங்குவதைக் காணலாம். எனவேதான் இயற்கையோடியைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தனர் தமிழர் என்கிறோம்.

புறத்திணை[1] வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் பகுதிகளாகக் கூறப்படும். பசு மந்தையைக் கவர்தல் வெட்சி என்றும், அதனை மீட்டல் கரந்தை என்றும், பகைவர்மேல் படை யெடுத்துச் செல்வது வஞ்சி என்றும், அப் படையினை எதிர்த்து நிற்றல் காஞ்சி என்றும், எயிலைக் காத்து நிற்பது நொச்சி என்றும், மதிலை வளைத்து நிற்பது உழிஞை என்றும், இருதரப்பினரும் களங்குறித்துப் போர்செய்வது தும்பை என்றும், போர்க்களத்தில் வெற்றி பெற்றவர்கள் சூடுவது வாகை என்றும் ஒரு பழைய தமிழ்ப் பாட்டுக் குறிக்கிறது. ஆனால், தொல்காப்பியம் இதனின்றும் சிறிது மாறுபட்டுள்ளது. இனி, தொல்காப்பியம் பற்றிக் காண்போம்.

தொல்காப்பியத்தின் பழமை

'எள்ளினின்று எண்ணெய் எடுபடு வதுபோல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்.'

ஆதலான், தொல்காப்பியனாருக்கு முன்னர், பல இலக்கியங்கள் நிலவியிருக்க வேண்டும்; அவற்றிற்கே தொல்காப்பியனார் இலக்கணம் வகுத்தார் என்பது தேற்றம். தொல்காப்பியனார் தம் நூலின் பலவிடங்களிலும் 'என்ப', 'என்மனார் புலவர்', 'மொழிப', 'யாப்பறி புலவர்', 'நூல் நவில் புலவர்' என்று கூறுவதனால், அவருக்கு முன்னர் இலக்கணங்கள் இருந்திருக்க வேண்டுமெனத் துணியலாம்.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்'

---

1. 'வெட்சி நிறைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் உட்கா
தெதிருன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை—அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்.

என்று தொல்காப்பியனார் பொருளதிகாரத்தில் தமக்கு முற்பட்ட இலக்கிய மரபினைக் குறிக்கிறார். புறநானூற்றின் 2-ஆம் பாட்டு, மற்றும் சில பாட்டுகள், தொல்காப்பியத்துக்கு முன்னர் எழுந்திருக்க வேண்டும் என்பர்.

தொல்காப்பியனார் இலக்கணம் கூறும் முறை

முதலில் பொதுவிதி கூறிய பின்னர், சிறப்பு விதியைக் கூறி, அதில் விடுபட்ட இலக்கணங்களைப் புறனடை விதி என்று அடக்கிக் கூறுதல் இவர் மரபு. பிற்கால இலக்கணங்கள் எல்லாம் இவர் கூறும் முறையையே பின்பற்றிச் செல்கின்றன.

தொல்காப்பியத்தின் சிறப்பு

தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தில் கூறும் பிறப்பியல் தமிழ்மொழிக்கே சிறப்பாக அமைந்ததோடன்றிப் பிறமொழி ஒலிகளையும் எழுதிக்காட்டும் ஆற்றல் பெற்றது. பல்வேறு ஒலிகளையும் நன்காராய்ந்து இன்ன வின்ன ஒலிகள் சொற்களைத் தொடங்குவன, இன்னின்ன ஒலிகள் சொற்களை முடிப்பன, இன்னின்ன ஒலிக்குப் பின் தான் இன்னின்ன ஒலிகள் வரும் என்றெல்லாம் ஆராய்ந்த பெருமை தொல்காப்பியனாரின் சிறப்பாகும்.[1] 'இலக்கண உலகின் ஏகசக்கரவர்த்தி' என்று கூறப்படும் பாணினி என்ற வடமொழி ஆசிரியரும் இவ்வளவு விரிவாக ஆராய்ந்திலை என்பர்.[2]

தொல்கப்பியனார் சமயம்

தொல்காப்பியனார் சமணர் என்பர் திரு. வையாபுரிப் பிள்ளை. டாக்டர் பர்னர் என்பவர், 'ஐந்திரம் நிறைந்த

---

1. திரு. பா. வே. மாணிக்க நாயகர், தொல்காப்பியம் ஒலியியல் ஆராய்ச்சி.
2. திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி, ப. 72.

தொல்காப்பியன்' என்ற தொடரைக்கொண்டு, தொல் காப்பியனார் பௌத்தர் அல்லது சமணர் என்பர். மகாவித்துவான் ரா. ராகவையங்கார், வேத வழக்கொடு பட்ட நெறியினர்'[1] என்பர். எனவே தொல்காப்பியனார் சமயத்தை வரையறுக்க இயலவில்லை.

தொல்காப்பியனார் காலம்

வடமொழியில் பாணினியின் காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டு என்பர். தொல்காப்பியனார் பதஞ்சலி முனிவருக்கு முற்பட்டவர் எனத் திரு. சீனிவாசப் பிள்ளை யும்,[2] வேதகாலத்திற்கு முற்பட்டவர் என மறைமலையடி களாரும், தொல்காப்பியம் வியாசர் வேதத்தைப் பகுத்த தற்குமுன் எழுந்தது[3] என்று டாக்டர் உ. வே. சாமிநாதய் யரும், தொல்காப்பியனார் கி.மு. 4ஆம் நூற்றாண்டினர் என்று சீனிவாச அய்யங்காரும் கூறுவர்.[4] எனவே, தொல் காப்பியனார் கிறித்து பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்று கொள்வது பொருந்தும். இதனையே டாக்டர் கால்டுவெலும், 'இலக்கியப் பண்பாடு நிறைந்த பல நூற்றாண்டுகளுக்கு முன் தொல்காப்பியனார் தோன்றியிருக்க வேண்டும்.' என்பர்.[5] தொல்காப்பியனார்

---

1. மகாவித்துவான் ரா. ராகவையங்கார், தமிழ் வரலாறு. ப. 283.
2. திரு. கே. என். ஸ்ரீநிவாசப்பிள்ளை, தமிழ் வரலாறு, ப. 26.
3. டாக்டர் உ. வே. சா. 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும். பக்கம். 14-18.
4. M. Srinivasa Iyengar, M. A. Tamil Studies, p. 8,
5. Whatever antiquity may be attributed to the Tolkappiam, it must have been preceded by many centuries of literary culture. It lays down rules for different kinds of poetical compositions which must have been deduced from the examples furnished by the best authors whose works were then in existence.

—Dr. Caldwell

கி. மு. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்ட வராதல் இயலாதென்பது சிலருடைய கொள்கையாகும்.[1]

சங்க இலக்கியத்தின் பெற்றி

சங்கப் பாடல் தமிழ் இலக்கியப் பேழை; அழியாத கற்பனைக் கருவூலம்; கருத்து வளமும் கற்பனைச் சிறப்பும் பொருந்திய அழகான பாடல்கள் பலவற்றைப் பெற்று மிளிர்வன; ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் வாழ்ந்த வாழ்க்கையின் பெற்றியினை விளக்கி நிற்பன; வாழையடி வாழையாகத் தமிழ் மக்கள் பலமுறை பயின்று பயின்று படித்துப் பயன்பெறும் வற்றாத செல்வம் அது. புறத்தே தோன்றும் காட்சிகளையும் அகத்தே தோன்றும் கருத்துகளையும் புனைந்து நிற்கும் அழியாத அழகு ஓவியங்கள் அவை; நவில்தொறும் இன்பம் பயப்பன. அக்காலத் தமிழர் காதலையும் போரையும் தம்மிரு கண்களெனப் போற்றினர். 'காதலும் போரும் பழைய இலக்கியங்களின் கருத்தாகவும், சமயமும் தத்துவமும் இடைக்கால இலக்கியங் களின் சாரமாகவும், விஞ்ஞானமும் மனிதவியலும் இக்கால இலக்கியங்களின் பிரிவாகவும் அமைந்துள்ளன' என்று திரு. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் தம் நூலில் குறிப்பிடு கின்றார்.[2]

இவ்வாறு சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் அகத்தையும் புறத்தையும் பாடுவன.

---

1. வித்துவான் சு. வெள்ளைவாரணன், தமிழிலக்கிய வரலாறு தொல்காப்பியம். ப. 127.

2. Love and war formed the themes of the ancient classics, and religion and philosophy of the medieval poems, as science and humanity predominate the modern writings.
—M. S. Purnalingam Pillai,
Tamil Literature, Introduction. p. 2.

ஆயின. சங்க காலத்திலேயே பல்வேறு புலவர்கள் வாழ்ந்து பாடல்களை இயற்றினர். அவர்கள் பாடல்களை எல்லாம் துய்த்துணர்ந்த சான்றோர், 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சிறந்த குறிக்கோளின் அடிப்படையிலே கடல்கோளுக்கும், கறையானுக்கும், கால வெள்ளத்திற்கும் எஞ்சி நின்ற பாடல்களில் சிறந்த சிலவற்றைப் பொருள் நோக்கியும், செய்யுள் அமைப்பின் திறம் நோக்கியும், அடிவரை அமைந்துகிடக்கும் பான்மை நோக்கியும் தொகுப் பாராயினர். இம் முயற்சி கி.பி. 3, 4ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்தது என்பர். இவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களாம் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் இரண்டாயிரத்து முந்நூற்றெண்பது பாடல்களைக் கொண்டுள்ளன. மூன்றடிச் சிற்றெல்லையாகவுடைய ஐங்குறுநூற்றுப் பாடல்கள் முதல் எழுநூற்றெண்பத்திரண்டடிப் பேரெல்லை கொண்ட மதுரைக் காஞ்சி வரையில் பலதிறத்தனவாகிய பாடல்கள் பொதிந்துள்ளன. புலவர் சிலருடைய பெயர்கள் ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை. சங்ககாலப் புலவர் பலர் இயற்பெயரால் வழங்கப்பெற, சிலர் தமக்கு இயற்பெயர் இருந்தோ அல்லது இருந்து மறைந்தோ தாமியற்றிய பாடல் களின் சிறப்பான தொடரினால் வழங்கப்படுகின்றனர். இவ்வாறு பெயர் காணப்படாத புலவர்களை விடுத்து, இயற்பெயராலும் காரணப்பெயராலும் அறியப்படும் புலவர் நானூற்றெழுபத்து மூவர் ஆவர். இவருள்ளும் அக்காலத் திலேயே முப்பதின்மர் பெண்பாற் புலவராய் இருந்தனர் என்பது பண்டைத் தமிழ்மகளிரின் புலமைச் சிறப்பினையும், வேறு எந்நாட்டு இலக்கியத்திற்கும் இல்லாத தனிப்பெருமை யினையும் புலப்படுத்துகின்றது. நூற்றிரண்டு பாடல்களுக்கு அவற்றினை இயற்றியவர் இன்னார் என்பது தெரியவில்லை. நாடாளும் காவலராயும் நல்ல தமிழ்ப் பாவலராயும் ஒருசேர விளங்கிய மன்னர் இருபத்தைவராவர். எனவே, சங்க காலம் தமிழ் இலக்கியத்தின் சிறந்த பொற்காலம் என்று கொள்ள இயல்கிறது.

எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகை நூல்கள் இவை என்பதைக் கூறும் பழம் பாடல் ஒன்று தமிழில் வழங்குகிறது.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புற மென்று
இத்திறத்த எட்டுத் தொகை."

எட்டுத் தொகையின் ஒவ்வொரு நூலும், பாட்டும் பல புலவர்களால் இயற்றப்பட்டுத் தொழில், அளவு, பாட்டு, பொருள் என்பவற்றுள் ஒவ்வொன்றாய்த் தொகுக்கப் பெற்றமையின், அவை தொகை எனப் பெயர்பெற்றன. அவற்றுள் அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன ஐந்து நூல்கள். அவை நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகும். மற்ற மூன்று நூல்களாகிய பதிற்றுப்பத்து, பரிபாடல். புறநானூறு என்பன புறப்பொருள் பற்றி அமைந்தன. அகப்பொருளைக் கூறும் ஐந்து நூல்களும் சிறிதும் சிதை வில்லாமல் முழுமையாய் இன்றும் காணப்படுகின்றன. ஆனால், புறப்பொருள் பற்றிய நூல்களில் சில பாடல்கள் அழிந்தும், சில சிதைந்தும், பாட பேதங்கள் மிகுந்தும் காணப்படுகின்றன.

நற்றிணை

எட்டுத்தொகை நூல்களைக் குறிப்பிடும் வெண்பாவில் இதனை முதற்கண் நிறுத்தியுள்ளனர். 9 அடி முதல் 12 அடி வரையிலும் இப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. இந் நூலைத் தொகுத்தவர் இன்னார் என்பது தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியார். 'திணை' என்ற சொல் அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த பெயராகும். திணை என்ற பெயரோடு இந்நூலுக்கு 'நல்' என்னும் அடையும் சேர்ந்து வழங்குகிறது. முதன்முதல் நூலைத் தொகுத்தவரே

'நற்றிணை' என்ற பெயர் தந்திருக்கிறார். நற்றிணையின் அகச்சுவை கெழுமிய பாடல்களில் மக்கள் அறவாழ்வு, மன்னர் கொடை, ஆட்சித் திறம், ஒருமைப்பாடு, பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், உவமைத் திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருள்களின் அமைப்பு முதலியவற்றினைக் காண்கிறோம். நற்றிணையைப் பாடிய புலவர் இருநூற்றெழுபத்து ஐவர். அவர்களில் தாங்கள் பாடிய பாடல்களின் பாவடித் தொடர் களாலே பெயர் பெற்ற புலவர்கள் வண்ணப்புறக் கந்தரத் தனார், மலையனார், தனிமகனார், விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர்கீரனார், தேய்புரிப்பழங்கயிற் றினார், மடல் பாடிய மாதங்கீரனார் என்பவராவர்.

நீர் எவ்வாறு உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ அவ்வாறே தலைவி உயிருடன் இயங்குவதற்குத் தலைவனது அருள் தோய்ந்த காதல் நெஞ்சம் இன்றியமையாத தாகும்.

'நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்தயங் தருளி.'' —1:6-7

மேலும், இரவில் விருந்தினர்வந்தாலும் மனைவி கணவனுடன் மன மகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்து படைக்கும் செய்தி,

'அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்? —142:9-10

என்னும் பகுதியால் அறியலாகும்.

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்னும் குறட்பாவின் கருத்து.

'முன்னை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'

என்ற பாடலில் புலப்படுகிறது. புன்னை மரத்தைதீ தன் தமக்கையாக எண்ணி, அதனெதிரில் தன் காதலனொடு பேசுவதற்கு நாணிய தலைவியை நாம் நற்றிணையில் காண்கின்றோம். தலைவன் பிரிவால் தலைவி உயிர் துறத்தற்கு அஞ்சவில்லை; ஆனால், 'மறுபிறப்பில் மறந்து விடுவேனோ!' என்று கலங்குகின்றாள்.

'சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்
பிறப்புப்பிறி தாகுவது ஆயின்
மறக்குவேன் கொல்என் காதலன் எனவே.'

தலைவன் பிரிந்த நாளைத் தலைவி சுவரிலே கோடிட்டு எண்ணுவதும், பல்லி காதலர் வரவைக் கூறுவதாக நம்புவதும், காற்பந்து விளையாடுவதும் மகளிர் வாழ்விலே காண்கிறோம். இரும்பு காய்ச்சிய உலையிலே கொல்லன் பனை மடலில் உள்ள நீர் தெளித்து நெருப்பை அணைப்பது முதலான செய்திகளையும் அறிகிறோம்.

குறுந்தொகை

இது 'நல்ல குறுந்தொகை' எனப் பாராட்டப்படும் சிறப்பினைப் பெற்றது. தொகை நூல்களிலேயே முதன் முதலில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுவது. நான்கடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடைய அகவற்பாக்களைக் கொண்டது. அகப்பொருளாலும் அடியளவாலும் நோக்கப்பட்டு, இது பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. பாடிய புலவர்கள் இருநூற்றைவர். பிற்கால இலக்கிய இலக்கண உரையாசிரியர்கள், குறுந் தொகைப் பாடல்களையே மற்றத் தொகைநூற் பாடல் களைவிடப் பெரிதும் எடுத்தாண்டிருக்கிறார்கள். முதல் 380 பாட்டுகளுக்குப் பேராசிரியரும், இறுதி இருபது பாட்டு களுக்கு நச்சினார்க்கினியரும் உரை கண்டமை தெரிய

வருகிறது. இப்பொழுது அப் பழைய உரைகள் கிட்டவில்லை. "புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களிற் புனைந்து காட்டும் ஆற்றலினும், அகத்தே தோன்றும் காட்சிகளை உணர்ச்சியும் மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் மிகவும் சிறந்தது.[1] இச் சிறப்புக்குச் சான்று பகர்வனவாய்க் குறுந்தொகைப் பாடல்கள் இனிமையும் எளிமையும் கொண்டு இலங்குகின்றன. இச் செய்யுள்களிற் காணப்படுவனவாகிய தலைவன் தலைவியரிடையே வளரும் அன்பு நிலை, அவர் இல்லறம் நடத்தும் முறை முதலியன உலகியலைச் செம்மைப் படுத்தும் தன்மையன."[2]

குறுந்தொகைப் பாடல்களில் இயற்பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கே அமைந்த புலவர்களான ஐந்து புலவர்களும், தங்கள் பாடலிற் கூறிய உவமைநயத்தால் பெயர் பெற்றவராய்ப் பதினெண்மரும் காணப்படுகின்றனர். பரணர் பாடும் பாடல்கள் பெரும்பாலானவற்றில் அரிய வரலாற்றுக் குறிப்புகளைக் காண்கிறோம்.

எங்கேயோ வெவ்வேறிடத்திற் பிறந்த தலைவனும் தலைவியும் காதலிற்றோய்ந்து கருத்தொருமித்து ஒன்றுபடுகின்றனர். இருவருடைய தாயும் தந்தையரும் ஒருவரையொருவர் அறியமாட்டார். ஆயினும், முன்பின் தொடர்பில்லாத இவர் இன்று காதலில் ஒன்றுபட்ட நிலையில் செம்மண் நிலத்தில் மழைநீர் எவ்வாறு அந்நிலத்து மண்ணோடு கலந்து மண்ணின் நிறத்தினைப் பெறுகின்றதோ அதுபோன்று, அன்பால் பிணைந்த நெஞ்சமிரண்டும் ஒன்று கலந்தன என்பது உரைக்கப்பட்டுள்ளது;

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

---

1. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், குறுந்தொகை, முன்னுரை. ப. 32.
2. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், குறுந்தொகை, முன்னுரை. ப. 25.

யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.''
'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'

என்ற அடிகள், ஆண், பெண் இருபாலர் வாழ்வினையும் குறிக்கின்றன.

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே

என்று கூறும் உயர்ந்த தலைவியையும் அங்கு நாம் காண்கின்றோம். பல்வேறு பாடல்களிலே நீதிகள் பொதிந்து கிடக்கும் மாண்பினைக் காண்கிறோம். உவமையும் இறைச்சியும் பல பாடல்களில் காணக்கிடக்கின்றன. இதுவே முதன் முதல் தொகுக்கப்பட்ட தொகை நூல் என்று கூறும் பல ருடைய கருத்தை அரண்செய்வதற்கு ஏற்ற சான்றுகளும் இந்நூலில் உள.

ஐங்குறுநூறு

இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் சிவ பெருமானைப் பற்றியது. இதனைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந் நூற்பாக்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடையன. மற்றத் தொகை நூல்களின் பாக்களைக் காட்டிலும் அடிவரையிற் குறைந்த நூறு நூறு பாக்களால் இது ஐந்திணை ஒழுக்கங் களைச் செப்பமுறத் தனித்தனியே சிறப்பிக்கின்றமையின், ஐங்குறு நூறு என்ற பெயர் பெற்றது. அகவற் பாக்களால் ஆனது; குறுகிய அடி உடைய பாட்டுகளில் சொற்சுவை பொருட்சுவை சிறந்து, இயற்கையின் இனிமையும் தமிழ் அருமையும் புலப்பட விளங்குவதைக் காணலாம்; ஆதன் அவினி போன்ற மலைநாட்டு வேந்தர் வரலாற்றை

விளக்குவது; ஐந்து திணைகளையும் பாடியவர் இன்னார் என்பதை விளக்க ஒரு பழைய வெண்பாவைக் காட்டுவர்:

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன்—கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு."

இத் தொகைநூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்பதும், தொகுப்பித்தவர் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்பதும் அறியக் கிடக்கின்றன.

உள்ளுறை, உவமை, இறைச்சி முதலிய நயங்கள் புலப்பட மருதத்திணையை ஓரம்போகியார் பாடுகிறார். நெய்தல் திணையைப் பாடவல்ல அம்மூவனார், நெய்தல் திணையில் கிழவற்குரைத்த பத்தில், தலைவியின் இனிமை விளங்க, அவளுடைய பேதைப் பருவத்து விளையாடல்களைச் சுவை படக் கூறுகிறார். 'பொய்யா நாவிற் கபிலர்' குறிஞ்சி நில இயற்கைக் காட்சிகளைத் திறம்பட வருணிக்கிறார். தம் மனத்தில் அன்பாகவும் உயர்வாகவும் எண்ணுவோளின் இனிய பண்புகளை உள்ளுந்தோறும், பாலை வழியிற் செல்லும் கொடிய துன்பம் குறைந்து தோன்றும் என்பது பட, பல பாடல்களைப் பாலைத் திணையில் ஓதலாந்தை யார் பாடியுள்ளார். இறுதியில் முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார்.

ஐங்குறுநூற்றில் வாழ்வியலுக்கும் உலகியலுக்கும் இயைந்த பல நல்ல கருத்துகளைச் செய்விதின் காணலாம்.

"நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
விளைக வயலே வருக இரவலர்.
பால்பல ஊறுக பகடுபல சிறக்க,

பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
பசியில் லாகுக பிணிசேண் நீங்குக.
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக.
அறம்நனி சிறக்க அல்லது கெடுக."

பதிற்றுப்பத்து

பத்துச் சேர அரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப்பாடல்களே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். முதற்பத்தும் இறுதிப்பத்தும் இன்று கிட்ட வில்லை. அகவற் பாவாலான புறப்பொருள் நூல் இது. அக் கால அரசர்களைப் பற்றிய வரலாற்றிற்கும் ஆராய்ச்சிக்கும் உறுதுணையாய் இருக்கிறது. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம் தூக்கு (இசை), பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாட்டிலும், பொருளால் சிறப்புடைத் தொடரொன்று, அவ்வப்பாட்டின் பெயராய் அமைந்துள்ளது. பிற்காலத்தில் அந்தாதித் தொடையிற் பாடல்கள் இயற்ற வந்தவர்களுக்கு இஃது ஓர் வழிகாட்டியாகும். ஒவ்வொரு பத்தின் இறுதியி லும் அப் பத்தினைக் கூறும் வரலாற்றைக் கொண்ட பதிகம் காணப்படுகிறது. அப் பதிகம், பாடினார் தம் பெயர். பத்துச் செய்யுள்களின் பெயர், பாடினார் பெற்ற பரிசிலின் அளவு, அவ்வரசர் ஆண்ட காலஅளவு ஆகியவற்றைப் புலப்படுத்து கிறது. பிற்காலக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணப்படும் மெய்க்கீர்த்திகள் போல இப் பதிகங்கள் அமைந் துள்ளன.

இரண்டாம் பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது. மூன்றாம் பத்து, பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதம னார் பாடியது. நான்காம் பத்து, களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. ஐம்தாம் பத்து, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப்

பரணர் பாடியது. ஆறாம் பத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் பாடியது. ஏழாம் பத்து, செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. எட்டாம் பத்து, தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடியது. ஒன்பதாம் பத்து, இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

நாட்டின் வளத்தினை வருணிக்கும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார் :

"தொறுத்த வயலில் ஆரல் பிறழ்நவும்
ஏறு பொருதசெறு உழாதுவித் துநவும்
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமை நிரைதடுக் குநவும்
கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்
ஒலிதெங்கின் இமிழ் மருதின்
புனல்வாயில் பூம்பொய்கை
பாடல் சான்ற பயங்கெழு வைப்பு."

மேலும், 'காலமன்றியுங் கரும்பறுத் தொழியாது' என்ற தொடர், சேரநாட்டு வளனைச் சிறப்புறக் கிளத்தும்.

"கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழுவுஇமிழ் மூதூர்"

என்ற பகுதியும் நாட்டு வளத்தினையே விளக்கி நிற்கின்றது.

அரசமாதேவியின் பண்பு நலன்களை,

'ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்னகை
அமிர்துபொதி துவர்வாய் அமர்ந்த நோக்கின்
சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியள்'

என்ற பகுதியில் குமட்டூர்க் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கருத்து,

'சினனே காமம் கழிகண் ணேட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழிநடை யாகும்'

என்ற பகுதியில் அழகுறச் சுட்டப்படுகின்றது.

சேரநாட்டு வீரர்களின் வீர மேம்பாடும், வெற்றிச் சிறப்பும்,

'மண்புனை யிஞ்சி மதில்கடந் தல்லது
உண்குவ மல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்'

என்ற பகுதியாலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் கொடைவளம்,

வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்

என்ற பகுதியாலும் அறியப்படுகின்றன.

பரிபாடல்

பரிபாடல் என்னும் ஒருவகைப் பாவினால் இயன்ற தாதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

'பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா வென்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.'

பொருட்சிறப்பானும் நுண்மாண் நுழைபுலச் செம்மை யானும் 'ஓங்கு பரிபாடல்' என்றே இந்நூல் சிறப்பாகக் கூறப்பட்டது.

"இதன்கண் திருமால், செவ்வேள் ஆகிய தெய்வ வழி பாட்டுப் பாடல்களும், வையை, மதுரை ஆகிய இயற்கைக் காட்சிப் பாடல்களும் அமைந்துள்ளன. அவைகளில் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களும், அறம், பொருள் இன்ப வீடு பேற்றுக் கூறுபாடுகளும், இயற்கைக் காட்சியின் இயல் நலங்களும், காதற்காமச் சிறப்பும், வீரர்மேம்பாடும், அன்பும் பண்பும் ஆடலும் பாடலும் பிறவும் நெஞ்சை அள்ளும் நீர்மையவாய்ப்புலமைச் சான்றோர்களால் பொருள்பொதிய எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன."[1]

'பல வகைப் பாவடிகளையும் ஏற்று வரும் என்பதும், இலக்கணத்தால் பரிபாடல் இசை நலம் வாய்ந்தது' என்பதும் அறிகின்றோம். இது 'இன்பம் நுதலி வரும்' என்பதால், பொருட்பொலிவுடைய தென்பதும் அறிகின்றோம். 25 அடி முதல் 400 அடி வரையும் இப்பாடல் நிமிர்ந்து நடைபெறும். தரவு, எருத்தம், அராகம், கொச்சகம், அடக்கியல், வாரம் என்ற உறுப்புகளுடன், எண்ணும் கலந்து இது இயங்கும்."[2]

எழுபது பாடல்களில் இன்று கிட்டுபவை இருபத் திரண்டே. அவற்றுள் திருமாலுக்கு உரியவை ஆறு; முருகனுக்கு உரியவை எட்டு; வையைக்கு உரியவை எட்டு. இவையே யன்றிப் பழையவுரைகளிலே மேற்கோளாய்ப் பயிலும் இரண்டு பரிபாடல்களும் உண்டு.

"சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து, பொருள் களின் இயற்கை அழகுகளை நன்கு தெரிவிப்பது. மதுரை. வை யை யா று, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ்சோலைமலை என்பவற்றின் பண்டைக்கால நிலைமைகளையும், அக்கால நாகரிக முறையையும், வைதிக ஒழுக்கங்களையும், தெய்வ வழிபாட்டு முறையையும், பிற

1. 2. டாக்டர் உ. வே. சா. பரிபாட்டுப் பதிப்பு. முன்னுரை. ப. 4

வழக்கங்களையும் தமிழ்நாட்டின் வரலாறுகள் சிலவற்றையும் செவ்வனே தெரிந்து கொள்வதற்குக் கருவியாய் உள்ளது.''

இந்நூலுள்,

'யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பி னொலிதா ரோயே!'

—பரி. 5:78-81

என்று முருகனைப் பரவுவது முதலான அடிகள் அரிய கருத்துகளுடன் பொலிகின்றன.

இந்நூலுக்கு உரை கண்டவர் பரிமேலழகர் ஆவர்.

கலித்தொகை

'கற்றறிந்தார் ஏத்தும் கலி', 'கல்விவலார் கண்ட கலி' என்னும் தொடர்கள் கலித்தொகையின் மாட்சியினை நன்கு விளக்குவனவாகும். இந்நூல் ஐந்து திணைகளாகப் பகுக்கப் பட்டு மொத்தம் நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இன்பப் பொருளைச் சொல்வதற்கு இயன்ற கலிப்பாவால் ஆனதொரு நூல். பாவகையால் பெயர்பெற்றுத் துள்ளல் ஓசை மிகுந்து வருவது. ஐந்திணைக்கும் உரிய உரிப் பொருள்களை—ஒழுகலாறுகளை—இந்நூல் செவ்வனே எடுத்தியம்புகிறது.

'போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணிமருதம்—நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை இரங்கியபோக் கேர்நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு'.

பாலைத் திணையைப்பற்றிய முப்பத்தைந்து பாடல்களைப் பாடியவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ. குறிஞ்சி பற்றிய

இருபத்தொன்பது பாடல்களைப் பாடியவர் கபிலர். மருதத்திணை பற்றிய முப்பத்தைந்து பாடல்களைப் பாடியவர் மருதனிள நாகனார். முல்லைத்திணை பற்றிய பதினேழு பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன். கடவுள் வாழ்த்துடன், நெய்தல் திணைக்குரிய முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார். இவ்வாறு ஒரு பழைய வெண்பா கூறுகின்றது.

இலக்கண நூல்களிற் கூறும் அகப்பொருட்பகுதிகட்கு இந்நூல் இலக்கியமாய்த் திகழ்கிறது. கலிப்பா வகையுட் சிறந்த ஒத்தாழிசையாலியன்ற நூல் கலித்தொகையாகும். மக்களின் நல்வாழ்விற்கான நெறிகள் ஆங்காங்கே விளக்கப் பட்டுள்ளன. இந்நூலுக்கு நச்சினார்க்கினியார் உரை உளது.

சங்கத்தைப் பற்றிய சிறப்பான செய்தியைப் பாலைக் கலிப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது. அப்பாடல் வருமாறு:

'நிலனாவிற் றிருதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை.

உதவுதல், போற்றுதல், பண்பு, அன்பு, செறிவு, முறை, பொறை குறித்துக் கலித்தொகை குறிப்பிடும் கருத்து மணியானதாகும்.

'ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வவ்வல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.'

'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு'

என்ற தொடர் இசையின் ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கின்றது.

'அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை'

என்று பாலைநிலத்தின் கொடுமை கூறப்படுகிறது.

.....நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு?'

'பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே'

முதலான அரிய கருத்துகள் பொதிந்த பாடல்கள் உள்ளன. இதிகாசக் கருத்துகளும், குறட்கருத்துகளும் இந்நூலில் இடம் பெறுகின்றன. கலித்தொகையில் நீராடலைப் பற்றிய செய்தியும் கூறப்படுகின்றது. நகைச்சுவை கெழுமிய பாடல்களும் சில உள்ளன.

அகநானூறு

'அகம்' என்ற பெயரமைந்த பழைய இலக்கிய நூல் இஃது ஒன்றேயாகும். இது பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது. மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திரசன்மனார் இப் பாடல்களைத் தொகுத்தார். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். சிவபெருமானைப் பற்றிய பாடல் இது. அகநானூறு, அகம் பற்றிய எட்டுத்தொகை நூல்களில் நீட்சி உடையதாகையால் 'நெடுந்தொகை' எனவும் வழங்குகிறது. அகநானூறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியான களிற்றியானை

நிரை. முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்டது. அடுத்த பகுதியான மணிமிடை பவளம், அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்டது. இறுதிப் பகுதியான நித்திலக்கோவை, இறுதி நூறு பாடல்களைக் கொண்டது. பாடிய புலவர் நூற்று நாற்பத்தைவர். சிற்றெல்லையாக 13 அடிகளையும், பேரெல்லையாக 31 அடிகளையும் இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலைத் தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி அகநானூற்றுப் பாடல்கள் ஓர் ஒழுங்கு முறையினை அடிப்படையாகக் கொண்டே கோக்கப்பட்டுள்ளன.

1, 3, 5, 7, 9 முதலான ஒற்றை எண்பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2, 8, 12 முதலான (இரண்டும் எட்டுமான) எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 14 என நான்கை ஓட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6, 16 முதனான ஆறு எண் பெற்றவை மருதத் திணையாகவும், 10, 20 எனப் பத்துகளாலாய எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் கோக்கப்பட்டுள்ளன.

பல அழகிய அகப் பாடல்களைக் கொண்டது அகநானூறு.

குழந்தையின் அழகினை வருணனைமுகத்தான் சங்க காலப் புலவர் பின் வருமாறு இனிதுற வடித்திருக்கக் காணலாம்.

'நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன்' —அகம் 9

'செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் தீறத்து எனை

இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை.....' —அகம் 34

போன்ற பகுதிகள் இலக்கிய வானில் இணையற்று எஞ் ஞான்றும் ஒளிவீசித் திகழ்கின்றன.

தித்தன், நன்னன், பிட்டன், பண்ணன், கோசர், மோரியர், பாரி, காரி, கொடித்தேர்ச் செழியன், அத்தி, கங்கன், கட்டி, புல்லி முதலியவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை நாம் அகநானூற்றில் காண்கிறோம். மக்கட் பேற்றின் சிறப்பினைச் சில பாடல்கள் எடுத்தியம்புகின்றன. ஐந்து நிலங்களின் வருணனை பொருத்தமுற, அழகுற, படிப்பவர் மனத்திரையில் காட்சிகளை விரிகின்ற அளவுக்குப் படம் தீட்டிக் காட்டப்படுகின்றன. நல்ல உவமைகளும், உள்ளுறைப் பொருள்களும் ஆங்காங்கே விரவி வரக் காண்கிறோம். புலவர்கள் ஒருவர்பால் மற்றொருவர் கொண்ட மதிப்பினைக் கண்டு வியக்கிறோம்! குடவோலை மூலம் நாட்டுக்கு வேண்டிய நல்லவர்களைத் தேர்ந்தெடுக் கும் முறையை ஓர் அகப்பாடல் விளக்குகிறது. ஆதிமந்தியார் என்னும் பெண்பாற்புலவர் பேதுற்று அலைந்த காட்சியை ஒரு புலவர் குறிப்பிடுகிறார். திருமணம் அக் காலத்தில் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை நாம் அறிய வேண்டுமானால், அகநானூற்றில் அமைந்துள்ள நல்லாவூர் கிழாரின் பாடலையே நாட வேண்டியுள்ளது. இவ்வாறு பலவகைச் சிறப்புகளையும் கொண்டு அகநானூறு விளங்குகிறது.

புறநானூறு

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துச் செய்யுளுடன், முரஞ்சியூர் முடிநாகராயர் தொடங்கிக் கோவூர்கிழார் இறுதியாகப் பல்வேறு புலவர்

கள் பாடியுள்ள 400 பாடல்களின் தொகுப்பே புறநானூறு ஆகும். அகவற்பாக்களால் அமைந்த நூல் இது. இந்நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தோர் பெயரும் தெரிய வில்லை. பாக்களில் அமைந்துள்ள அடிகளின் சிறுமை பெருமை எல்லைகளும் தெரியவில்லை. இதற்குப் புறம், புறப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந் திணை என்ற புறப்பொருட் கருத்துகளைத் தழுவி அமைந்த செய்யுள்கள் கொண்ட நூல் இது. பண்டைத் தமிழ் நிலமாண்ட சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வேளிர்கள், வீரர்கள் கடை யெழு வள்ளல்கள், புலவர்கள், கொடை, மக்கள் வாழ்க்கை முறை, உணவு, உடை, நடை முதலிய இன்னோரன்ன பல செய்திகளையும் நவிலும் வரலாற்றுப் பெரு நூலாகப் புறநானூறு திகழ்கின்றது. இந்நூலைத் தமிழர் வாழ்வின் பெற்றியைக் காட்டும் கண்ணாடி எனலாம். டாக்டர் போப்பு அவர்கள் தமிழ் இலக்கியத்தின்பால் ஈடுபட்டமைக்கு இந்நூல் ஒரு காரணமாகும். சில பாடல்களை அவர் ஆங்கிலத் தில் மொழி பெயர்த்துள்ளார்.

பாரதப் போரில் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் போரிட்ட இரு கட்சிக்கும் சோறிட்டதாக, முரஞ்சியூர் முடிநாகராயர் புறம் இரண்டாம் பாடலில் பாடுகிறார். போரிலும் அறநெறியினைத் தமிழர் கடைப்பிடித்ததை நெட்டிமையார் என்னும் பெண்பாற் புலவர் பாடுகிறார் :

‘ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்

எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்'. —புறம் : 9

அரசன் தவறிய காலத்திலும் அஞ்சாது இடித்துரைத்து அவனைத் திருத்திய புலவர் பெருமக்களை நாம் காண்கிறோம். எனவேதான் திணை, நுறை வகுத்தவர்கள் அரசனைக் குறிப்பிடும்பொழுது 'அவன்' என்றும், புலவர்களைக் குறிப்பிடும்பொழுது 'அவர்' என்றும் குறிப்பிட்டார்கள். அரசர்களே பாடிய சில பாடல்களும் புறநானூற்றில் காணப்படுகின்றன. அப் பாடல்கள் அவர்தம் வீரத்தினையும் ஒழுக்கத்தினையும் புலவர்மாட்டுக் கொண்ட மதிப்பினையும் புலப்படுத்துகின்றன. ஔவையார் பாடல்களிலே அதியமானின் சிறப்பும், நயம்பொருந்திய கபிலர் பாடல்களிலே பாரியின் சிறப்பும் நமக்குப் புலனாகின்றன. வானநூல் கருத்துகள் சில புலவர்கள் பாடல்களில் இடம் பெற்றிருப்பது நம் முந்தையோரின் அறிவினை வியக்கத் தூண்டுகிறது. "செல்வத்துப் பயனே ஈதல்" என்று அரசர்களும்,

'பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றுஎம் சிறுசெந் நாவே'

என்று புலவர்களும்,

'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்று மக்களும் வாழ்ந்த வாழ்வு புலனாகின்றது.

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'

என்பதற்கு இலக்கியமாகப் பழந்தமிழர் வாழ்ந்தனர் என அறிகிறோம்.

பத்துப்பாட்டு

'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ் சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.'

ஏன்ற பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல்கள் இன்னின்னவை என்று தெரிவிக்கிறது. பத்துப்பாட்டின் சிறப்பு, 'ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டும்' என்ற நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால் தெரியவருகிறது. 'பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கும்' என்பதில், பாட்டு எனும் பத்துப் பாட்டே உரையாசிரியர்களால் முன் கூறப்படுவதாலும் அதன் சிறப்பு நன்கு புலனாகின்றது.

பத்துப் பாட்டினுள் அகப்பொருள் பற்றியன முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன. மற்ற ஏழு பாட்டுகள் புறப்பொருளைத் தழுவியன. அவற்றுள்ளும் ஐந்து பாட்டுகள் ஆற்றுப் படையினைச் சார்ந்தனவாகும்.

பரிசு பெற்றுத் திரும்புகின்ற பாணன், கூத்தன் முதலியோர், தாம் எதிர்ப்படுகின்ற தம் இனத்தைச் சார்ந்த இரவலனைத் தாம் பரிசில் பெற்ற வள்ளலிடம் வழிப்படுத்து தலே ஆற்றுப் படையாகும் (ஆறு = வழி; படை = படுத்துதல்). இதனை,

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்'

என்பதால் அறியலாம். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடு கடாம், என்ற ஐந்து பாட்டுகளும் ஆற்றுப்படைகளாகும். ஆற்றுப்படை என்ற

இலக்கிய மரபினை நாம் வேறு எம்மொழியினும் காண இயலாது. அது தமிழுக்கே தனிச்சிறப்பாய் அமைந்த தாகும். ஆற்றுப்படை நூல்களின் தோற்றமே பிற்காலக் கலம்பகங்கள், தனிப்பாடல்கள், புலவராற்றுப்படை, திருத் தணிகையாற்றுப் படை, திருப்பாணாற்றுப்படை முதலியன வற்றில் வளர்ச்சி பெற்றிருக்கக் காண்கிறோம்.

திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இரண்டினையும் இயற்றியவர் நக்கீரர். பெரும்பாணாற்றுப் படை, பட்டினப்பாலை ஆகிய இரண்டு நூல்களும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியன. மதுரைக் காஞ்சியை மாங்குடி மருதனாரும், சிறுபாணாற்றுப்படையை நல்லூர் நத்தத்தனாரும், குறிஞ்சிப் பாட்டைக் கபிலரும், மலைபடு கடாம் என்னும் நூலைப் பெருங்கௌசிகனாரும், முல்லைப் பாட்டினை நம்பூதனாரும் பாடியுள்ளனர்.

'தீயின் அன்ன ஒண்செங் காந்தள்' என்று மலைபடு கடாத்துள் வருகின்ற அடிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால், சங்கப் புலவர்களே இந்நூலைத் தொகுத்தவர் கள் என்பது தெரியவருகிறது. நூல் முழுமைக்கும் நச்சினார்க் கினியரின் அரிய உரை உளது. அவ்வுரையைப் படிக்கும் பொழுது அவருக்கு முன்னும் ஒருவர் இதற்கு உரை வகுத்திருக்கலாம் என்பதை ஊகிக்கலாம்.

கற்பனை வளமும், கருத்துச்செறிவும், உணர்வூட்டும் திறமும், அறிவூட்டும் ஆற்றலும், சுவைபடச் சொல்லும் நயமும் பெற்ற பண்டைத்தமிழர் வாழ்க்கை நிலையினைப் பத்துப்பாட்டு, 'ஆடியின் நிழல் போல' விளக்கி நிற்கிறது. இலக்கணத்தோடு இயைந்த கற்பனையை இந்நூலில் பரக்கக் காணலாம்.

திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதலாவதாகக் கூறப்படும் நூல் இது; புலவராற்றுப்படை என்றும் வழங்கப்படும். 317 அடிகளை

யுடைய ஆசிரியப்பாவால் அமைந்த நூல் ஆகும்; சைவர்கள் முருகன் திருவருள் வேண்டி, நாள் தோறும் பாராயணம் செய்யும் நூல். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையில் இஃது இடம் பெற்றுள்ளது. பிற்காலப் புலவர் பலரும் இதன் பெருமையினைப் பலபடப் பாராட்டிப் பேசுகின்றனர்.[1]

முருகாற்றுப்படை என்னும் தொடருக்கு 'வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றா னொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது' என்று பொருள் கூறியிருக்கிறார் நச்சினார்க்கினியர். எனவே, இஃது மற்ற ஆற்றுப்படைகளின் அமைப்பினின்றும், இலக்கணத்தி னின்றும் மாறுபட்டிருக்கின்றது. மற்ற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப் படுபவர்களது பெயரோடு சார்த்தி வழங்கப் படுகிறது. ஆனால், திருமுருகாற்றுப்படை பாட்டுடைத் தலைவனின் பெயரோடு சார்த்தி வழங்கப்படுகிறது. பிற ஆற்றுப் படைகளின் விளக்கமான துறைகள் இதில் அமையா மல், அவை எல்லாம் உய்த்துணரும் வகையில் அமைந் திருக்கின்றன.

முருகப்பெருமான் கோயில் கொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளை இஃது இனிமையுற விளக்கி நிற்கின்றது. திருப்பரங் குன்றத்திலே முருகனின் தோற்றப் பொலிவு விளக்கமுறு கிறது. திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரிலே ஆறுமுகமும் பன்னிருகையுமாய் அடியவர்க்கு அருள் வழங்கு வான்வேண்டி யானைமீது எழுந்தருளுகின்றான் திருமுருகன். திருவாவினன்குடியில் தேவர்களும் முனிவர்களும் முருகனைப் பரவுகிறார்கள். திருவேரகம் என்னும் சுவாமி மலையில் அந்தணர் பற்றிய செய்திகளும், அவர் வழிபாட்டு முறைமை

1. ''பத்துப்பாட் டோதிமனம் பற்றினார் பற்றுவரோ எத்துணையும்
பொருட்கியையும் இலக்கணமில் கற்பனையே''
—பேராசிரியர் சுந்த ரம்பிள்ளை

யும் கூறப்படுகின்றன. குன்றுதோறாடலில் குன்றிலே வாழும் குறவர்களின் வாழ்வு உணர்த்தப்படுகிறது. ஆறாவது படைவீடாகிய பழமுதிர்சோலையில் அடியவர்கள் மேற்கொள்ளவேண்டிய தவநெறியினையும், அவர்க்கு ஆறுமுகன் அருள் சுரக்கும் தன்மையினையும் ஆசிரியர் புலப் படுத்துகிறார்.

'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு'

என்று உவமையோடு தொடங்கி,

'இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே'

என்று அருவி பாயும் பழமுதிர்சோலையில் எழுந்தருளி யிருக்கும் முருகனைச் சொல்லி முடிகிறது. இறுதியடிகளில் தமிழின் தனிச் சிறப்பெழுத்தாம் 'ழகரம்' இசை இனிமையை ஊட்டி நிற்கிறது.

திருமுருகாற்றுப்படையினை இயற்றியவர் நக்கீரர். இதற்கும் நெடுநல்வாடைக்கு இடையே சில தொடர்களில் ஒற்றுமை காணப்படுகின்றன.

பொருநராற்றுப்படை

இது, கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணி யார் பாடியது; பரிசில் பெற்ற பொருநன் பரிசில் பெற விழையும் பொருநனை ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது இந்நூல். வஞ்சியடிகள் இடையிடையே வந்த ஆசிரியத்தான் இயன்ற 384 அடிகளை உடையது. பொருநர் எனும் சொல்லுக்கு வீரர் அல்லது மற்றொருவர் போல வேடம் கொள்வோர் என்று இரண்டு பொருள் கொள்ளலாம். ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி

பாடுவோர். எனப் பொருநர் பல வகைப்படுவர். இப் பாட்டில் பேசப்படும் பொருநன் போர்க்களம் பாடுவோன்.

இது திருவிழாவிலே பொருநர்கள் கூடித் தங்கள் கலைத் திறனைக் காட்டிப் பின்னர் விழவு முடிந்ததும் வேற்றூர் நாடிச் செல்வதாகத் தொடங்குகிறது. ஆசிரியர் யாழை மணமக்களுக்கு ஒப்புமை காட்டுகிறார். பாட்டுடைத் தலைவனின் பெருமையினையும், கொடை வழங்கும் சிறப்பினையும், பொருநர் பொற்றாமரையைப் பரிசிலாகப் பெறுவதனையும் ஆசிரியர் சுவைபடக் கூறுகிறார். விறலியர் பொன்னரி மாலையைப் பெறுதலும் கூறப்படுகிறது. வற்றாது வளம் சுரந்து பாயும் பொன்னி நதியின் புதுப்புனல் வெள்ளமும் சுவைபயக்க வருணிக்கப்படுகிறது. செல்வத்தின் செருக்கினையும் வறுமையின் வாட்டத்தினையும் ஆற்றுப் படை அழகுற எடுத்தியம்புகிறது.

'ஆறலை கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை'

என்ற தொடர், இசையின் ஆற்றலைப் புலப்படுத்துகிறது. கரிகால் வளவன் பெயரும் வென்றியும்,

'வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்'

என்னும் அடியால் சிறப்பிக்கப்படுகின்றன.

சிறுபாணாற்றுப்படை

இஃது ஓய்மாநாட்டு நல்லியக் கோடனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது; 269 அடிகள் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்தது. பாணர்களில் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் எனப் பல பிரிவுகளுண்டு. யாழ் கொண்டு பாடும் யாழ்ப்பாணனே இந் நூலில் குறிக்கப்படுகிறான். யாழ்ப்பாணரில் சிறு பாணரை ஆற்றுப்படுத்தியமையால் சிறுபாணாற்றுப்படை என்றும்

பெரும்பாணரை ஆற்றுப்படுத்தியமையால் பெரும் பாணாற்றுப்படை என்றும் வழங்கப்பெறுகின்றன. மற்றும் பெரும்பாணாற்றுப் படையோடு ஒத்த சிறிய அளவினை உடையதால் இதனைச் சிறுபாணாற்றுப்படை என்பர். சிறுபாணாற்றுப்படையின் 35வது அடியில் 'இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ' என்றும், பெரும்பாண்ாற்றுப்படையின் 462 ஆம் அடியில், 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' என்றும் வருகின்ற தொடர்களால், யாழால் வந்த வேறு பாடே இவ்விரு பாணர்க்கும் இடையில் அமைந்தது எனலாம்.

இந் நூலில் வளமாக ஓடிப் பின் வற்றிய ஒரு காட்டாறு காட்டப்பட்டுள்ளது. ஊற்றற்ற கானாற்றை அடுத்து வெயிலின் கொடுமை கூறப்படுகிறது. அவ்வழியில் பாணர் கள் வரிசையறிந்து பரிசைத் தரும் வள்ளல்களை நாடிச் செல்கிறார்கள். அக்கூட்டத்தில் ஒரு விறலியும் உள்ளாள். அவர்கள் இலைகள் தீய்ந்த மரத்தடியில் தங்குகின்றார்கள். பாலைப் பண்ணை எழுப்புகிறான் பாணன்.

வறுமையின் எல்லையை ஒரு நாயின் குடும்பம் வாயிலாக ஆசிரியர் பின்வரும் அடிகளால் உணரவைக்கிறார்.

'திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோன்னாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த.....
—சிறுபாண் : 130-133

இதனைச் 'சிறப்புடைத்தான சிறுபாணாற்றுப்படை' எனப் புகழ்கிறார் தக்கயாகப் பரணி உரையாசிரியர்.

பெரும்பாணாற்றுப்படை

500 அடிகளைக் கொண்ட பெரிய பாட்டாதலானும் பேரியாழை வாசிக்கும் பாணர்கள் கூறப்படுவதனாலும், இந்நூல் இப்பெயர் பெற்றது எனலாம். இது தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. வெண்வேற்கிள்ளி என்னும் சோழ மன்னனுக்கும் பீலிவளை என்னும் நாகக்கன்னிக்கும் பிறந்தவனே இவ்விளந்திரையன் என்று மணிமேகலை முழங்குகிறது. இப் பாட்டு, பரிசில் பெற்ற பெரும்பாணன் ஒருவன் தன் வழியில் எதிர்ப்பட்ட மற்றோர் இரவலனான பாணனைக் காஞ்சி மாநகரைக் கோநகராகக் கொண்டு செங்கோலோச்சிய இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. 'பாணாறு' என்ற பெயரும் இந்நூலுக்கு உண்டு.

எதிர்ப்படுகின்ற இரவலனாகிய பாணனைப் பரிசில் பெற்ற பாணன்,

'பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரம் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!'

என்று விளித்து,

'அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையற் படர்குவி ராயின்'

என்று இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துகிறான்.

பாட்டின் தொடக்கத்திலேயே யாழின் வருணனை சிறப்பாக அமைந்துள்ளது. ஐவகை நிலங்களில் வாழும் மக்களின் ஒழுகலாறுகள் திறம்பட வருணிக்கப்படுகின்றன. அந்தணர்கள் தங்கள் அருங்கடன் இறுக்கும் முறை சிறப்புற அமைந்துள்ளது. கொற்றவைக்குப் பேய்க் கூட்டங்கள் தங்களை அழுத்தும் பசிப்பிணியைக் கூறுதல், விலங்குகள்

முனிவர் மொழிவழி ஏவல் கேட்டல், உப்பு வாணிகர்களின் மகளிர் உப்பு ஏற்றிய பாரவண்டியினை ஓட்டிச் செல்லுதல், வணிகர்கள் மிளகுப் பொதியினைக் கழுதைமேல் ஏற்றிச் செல்லுதல் (சாத்தொடு வழங்கும் உல்குடைப் பெருவழி), குறிஞ்சிநிலப் பெண்கள் அச்சமற்ற மனவுறுதியோடு வாழும் வாழ்வு, கலங்கரை விளக்கத்தின் சிறப்பு முதலிய பல செய்திகளைப் பெரும்பாணாற்றுப்படையில் காணலாம்.

முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டிலே மிகச் சிறிய அடியளவை உடைய பாடல் இது; 103 அடிகளையுடையது; ஆசிரியப்பாவால் இயன்றது. ஆசிரியர் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவர். இது முல்லைத் திணைக்கு உரிய இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. போர்மேற் சென்ற தலைவன் திரும்பி வருமளவும் அவன் கூறியசொல் திறம்பாது ஆற்றியிருந்த தலைவியின் செயலைக் கூறுகிறது. இடையே அகத்திணையான முல்லைக்குத் தொடர்பான புறவொழுக்கமாகிய வஞ்சியினையும் கூறுகிறது. முல்லைத் திணையை வருணிக்கும் மற்றப் பாடல்கள் எல்லாவற்றினும் இம் முல்லைப்பாட்டு நுட்ப மிகவுடையதாய்க் காணப்படுகிறது.

பாட்டின் தொடக்கத்தில் கார்கால வருணனையும், இறுதியில் முல்லை நிலத்தின் இயல்பும், இடையில் அரசனின் பாசறை அமைப்பும் நுவலப்படுகின்றன. 'கானம் நந்திய செந்நிலப் பெருவழி'யின் அழகு சுவைபடக் கூறப்படுகிறது.

மன்னன் பாசறையில், இடையில் வாளேந்திக் கையில் விளக்கேந்தி, அணையும் விளக்கை அணையாது காக்கும் மங்கையர் உள்ளனர். கண்ணைக் காக்கும் இமை போல அரசனுக்குப் பாதுகாவலராய்ப் பெருமூதாளர் உள்ளனர். நாழிகை வட்டில் கொண்டு நாழிகை அறியும் நாழிகைக் கணக்கர் உள்ளனர். அடுத்து யவனர்களும் உள்ளார்கள்.

'மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்'

—முல்லை : 59-61

இயற்றிய புலித்தொடர் சங்கிலியும், பாவை விளக்கும் முல்லைப்பாட்டில் இடம் பெறுகின்றன.

'உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர்'

என மிலேச்சர்கள் வருணிக்கப்படுகிறார்கள்.

இப் பாட்டு கருத்தாழம் மிகுந்து, முல்லையின் முதல், கரு, உரிப்பொருள்களைத் திறம்பட வருணிக்கிறது. முல்லைப் பாட்டின் தலைவி, நெஞ்சை ஆற்றி நிற்பதால், 'நெஞ் சாற்றுப்படை' என்றும் பிறிதொரு பெயர் கூறுவர் சிலர்.

மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு அடியளவில் சிறியதாய் இருப்பதுபோல, மதுரைக்காஞ்சி அடியளவில் பெரியதாய் 782 அடிகள் கொண்டு விளங்குகிறது. இடையிடையே வஞ்சியடிகள் பெற்று ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. இப் பாட்டு இந்த உலகின் நிலையாமையை அறிவுறுத்தித் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை உயர்நெறிக்கண் செலுத்துவதாய் அமைந் திருக்கிறது. இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார். இப் பாட்டு, 'பெருகு வளமதுரைக் காஞ்சி' எனப் புகழப்படு கிறது. 'கூடற்றமிழ்' என்ற பெயரும் இம் மதுரைக் காஞ்சிக்கு உண்டு என்பர்.

'கொன்னொன்று கிளக்குவல், அடுபோர் அண்ணல்!
கேட்டிசின் வாழி! கெடுகநின் அவலம்!' —207-8

என்னும் அடிகளில் வீடுபேற்றின் நிமித்தத்தினை உணர்த்தி,

'அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலக மாண்டுகழிந் தோரே'

என்னும் அடிகளில் பல்வேறு நிலையாமையினை வற்புறுத்தி,

'அரிய தந்து குடி அகற்றி
பெரிய கற்று இசை விளக்கி
.....
பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி, பெரும!'

என்று செந்நெறியாம் நன்னெறியினை இனிதுற எடுத்தியம்பு கிறார் புலவர் மாங்குடி மருதனார்.

சிற்சில இடங்களில் வானநூற் குறிப்புகள் வருகின்றன. நெடுஞ்செழியனின் வீரத்திருவையும், வெற்றித்திறலையும் விளக்கமாகக் கூறுகிறார் ஆசிரியர். நாட்டு வளம், நல்ல போர் முறை, வேளாண்மை, வாணிக வளம் முதலிய வற்றினைச் சிறப்பாகக் குறிக்கிறார் ஆசிரியர்.

மதுரை மாநகர வருணனை சிறப்புற்று விளங்குகிறது. 'ஆறு கிடந்தன்ன அகன்நெடுந் தெரு' விழாக்கோலம் பூண்டு விளங்குகிறது. எங்கும் இசையின் முழக்கம் எழுகின்றது. அந்தணர் பள்ளி, சைனப் பள்ளி, பௌத்தப் பள்ளி முதலி யனவும் ஆண்டு உள்ளன.

இவ்வாறு மதுரை மாநகரத்தின் சிறப்பும், நில்லாமையை வற்புறுத்தும் காஞ்சித் திணையும் பெற்று மதுரைக் காஞ்சி சிறந்து விளங்குகிறது.

நெடுநல்வாடை

இது 188 அடிகள் கொண்ட அகவற்பாவால் அமைந்த நூலாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்

நெடுஞ்செழியனை நக்கீரர் பாடிய பாட்டு இது. அகத் திணைக்குரிய செய்திகளே இப்பாட்டில் பெரிதும் இடம் பெறுகின்றன. ஆயினும் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என்று பாண்டியனுடைய அடையாள மாலையாகிய வேப்பமாலையைக் குறிப்பிடும் தொடர் வருவதால், இஃது அகப்பாட்டு ஆகாமல் புறப்பாட்டு ஆயிற்று. இதனால், நுட்பமான வேறுபாட்டினையும் நுண்ணிதின் உணர்ந்து பிரித்து எண்ணும் உயர்ந்த தூய தமிழிலக்கிய நெறியினை நாம் வியந்து போற்றாமலிருக்க இயலவில்லை.

வடக்கேயிருந்து வீசும் வாடைக் காற்று, தலைவனைப் பிரிந்து தனிமைத் துன்பத்தால் வருத்தமுறும் தலைவிக்கு நெடுவாடையாகவும், படையெடுத்துப் பாசறையில் தங்கிப் போகத்தில் மனம் செல்லாமல் தான் மேற்கொண்ட வினை முடிக்க வாய்ப்பாய் இருப்பதனால் அரசனுக்கு 'நல்வாடை' யாகவும் ஆயிற்று. எனவே, பாட்டின் தலைப்பு 'நெடுநல் வாடை' எனப் பொருத்தமுற அமைந்தது. இதில் கூறப்படும் பாசறை, கூதிர்ப் பாசறை யாகும்.

முதலில் வாடைக்காற்று, ஆயர்கள், ஆநிரைகள், புறவை கள், விலங்குகள், மக்கள் முதலியவர்களுக்கு வாட்டம் தந்து நடுக்கமுறச் செய்கிறது. இடையில் தலைவனைப் பிரிந்து துயருறும் தலைவியின் செய்தி கூறப்படுகின்றது. அரண்மனை, அந்தப்புரம், கட்டில் முதலியன பாங்குற வருணிக்கப்படுகின்றன. புனையா ஓவியம்போல் கிடக் கிறாள் அரசமாதேவி. அவள் உறையும் அந்தப்புரம் கலை மேம்பாட்டுடனும், அவள் வாழ்வு கற்பு மேம்பாட்டுடனும் சிறந்து விளங்குகின்றன. இறுதியில் அரசன் பாசறையில் படுக்கையில் உறக்கம் கொள்ளாது, நள்ளிரவில் தேவட்டி உடன்வரச் சென்று போரில் புண்பட்ட வீரர்களுக்கு இனிய ஆறுதல் மொழிகளைக் கூறி வருகிறான். இவ்விரு காட்சி களையும் ஆசிரியர்.

'புலம்பொடு வதியும் நலம்கிளர் அரிவைக்கு
இன்னா அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில் அம்ம.....'

'நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே!'

என்ற அடிகளில் திறம்பட விளக்குகிறார். இப் பாட்டில் யவனர் இயற்றிய பாவை விளக்கும், உடல்வலி மிக்க மிலேச்சர் நகரினைக் காவல் காப்பதும் கூறப்படுகின்றன.

குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சித் திணையைப் பாட வல்ல கபிலர், ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையினையும், தமிழின் அகப் பொருள் மரபினையும் உணர்த்துவான் வேண்டி, 261 அடிகள் கொண்ட இந்நூலை இயற்றினார். நச்சினார்க்கினியர் இதனைப் "பெருங்குறிஞ்சி" என்று பாராட்டுகின்றார்; அகவற்பாவால் அமையப்பட்ட இந்நூல், தோழி செவிலிக் குத் தலைவியின் பொருட்டு அறத்தொடு நிற்பதாக அழகுறக் கூறிச் செல்கிறது.

வரையாது வந்து ஒழுகிய தலைமகன் வரவு, ஒருநாள் தடைப்பட்டது. அது தலைவியின் மேனியினை வாடச் செய்து வனப்பினை அழித்தது. இது கண்ட செவிலி துன்புற்றாள்; இருவர்க்கும் இடையில் தோழி அறத்தொடு நின்றாள். திறமையாகச் சொல்லாடி, சொல்லவந்த கருத்தைப் புலப்படுத்தினாள். இதுவே குறிஞ்சிப்பாட்டு ஆகும்.

தலைவி ஆயத்துடன் புனலாடியதும் பூக்கொய்ததும் நெஞ்சையள்ளும் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளன. செங் காந்தட்பூ முதல், மலைஎருக்கம்பூ ஈறாக 99 பூக்களும் வண்ணமும் வனப்பும் புலப்பட வருணிக்கப்பட்டுள்ளன.

இப் பாட்டில், தமிழர்தம் தூய களவொழுக்கம் புலனாகின்றது. முப்பதுக்கும் மேற்பட்ட உவமைகள் பாட்டின் அழகுக்கு அழகு செய்கின்றன.

பட்டினப்பாலை

'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே!' —218-220

.....

'அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க்கு ஒக்கிய
வேலினும் வெய்ய கானம்; அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே!' —298-301

என்னும் அடிகள் பட்டினப்பாலையின் சிறப்பான—உயிரான—பொருளை உணர்த்தி நிற்கின்றன.

301 அடிகளைக் கொண்ட இப்பாட்டு, பெரும்பாலும் வஞ்சியடியும், இறுதியில் ஆசிரியப்பாவும் அமைந்த நூலாகும். எனவே, இது 'வஞ்சி நெடும்பாட்டு' எனவும் வழங்கப்படும். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத் திணையாகலின் இப்பெயர் இதற்கு அமைந்தது. இப்பாட்டு, சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியதாகும். அதற்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாகப் பெற்றார் என்று பிற்காலத்து நூல்களான கலிங்கத்துப்பரணியும், சங்கரசோழனுலாவும் கூறுகின்றன. சோறுடைத்தான சோழவளநாடும், காவிரி கடலொடு கலக்கும் இடமாம் காவிரிப்பூம்பட்டினமும், கரிகாற் பெருவளத்தானது நெஞ்சப்பாங்கும் இப்பாட்டில் இனிமையுற விளக்கப்படுகின்றன.

பட்டினப்பாலையிலும் சில வானநூற் கருத்துகள் காணப்படுகின்றன. நெய்தல் நில மக்களாகிய பரதவர்களின்

வாழ்வு சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சுறாக் கொம்பை மணலில் நட்டு வழிபடும் தெய்வ வழிபாடும் கூறப் படுகிறது. துறைமுகத்திலே இறக்குமதியாகும் பொருள் களுக்குச் சுங்கம் வசூலிக்கப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களில் (அடிகள் 185—193) சோழரது புலிச்சின்னம் பொறிக்கப்பட்டது. வணிகர்கள்,

'தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங்
குறைகொடாது'

வாணிகம் செய்கின்றனர்.

'சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி'

என்று நாட்டு வளப்பம் நயம்பட வருணிக்கப்படுகிறது.

மலைபடுகடாம்

இப்பாட்டு, ஆற்றுப்படைகளிலே அடியளவில் பெரிய பாட்டாய், 583 அடிகளுடைய ஆசிரிப்பாவான் அமைந்து காணப்படுகிறது. இதற்குக் 'கூத்தராற்றுப் படை' என்ற பெயரும் உண்டு. பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன், எதிர்ப் பட்ட இரவலனாம் மற்றொரு கூத்தனைப் 'பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்ன னிடத்து ஆற்றுப்படுத்தியதாக இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது. மலைக்கு யானையை உவமித்து. அதன்கண் பிறந்த ஓசையைக் 'கடாம்' எனச் சிறப்பித்ததனால், 'மலைப்டு கடாம்' எனப் பெயர் பெற்றது.

'அலகைத் தவிர்த்த வெண்ணருந் திறத்த
மலைபடு கடாம் மாதிரத் தியம்ப' —347-48

என்னும் அடிகள் பாட்டின் பெயர்க் காரணத்தைப் புலப் படுத்துகின்றன.

இந்த ஆற்றுப்படையில் நன்னன் நாட்டிற்குச் செல்லும் வழியின் தன்மை, இடைவழியில் உண்ணக்கிடைக்கும் உணவுப்பொருள்கள், மன்னன் கொடை, நாட்டின் பெருமை, மலையின் வளம், சோலையின் அழகு முதலியன சிறப்புறக் கூறப்படுகின்றன. நன்னன் முன்னோர் பெருமை, சிவன் அருள், நன்னனின் நவிரமலை, சேயாறு, அவனது நாளோலக்கப் பொலிவு முதலியனவும் விளக்கமாக இப் பாட்டில் கூறப்பட்டுள்ளன. இசை, வாச்சியம் பற்றிய குறிப்புகளையும் காண்கிறோம்.

ஆற்றிடைக் காட்சிகளைத் தொகுத்துச் சொல்லிப் பின்னர் ஒவ்வொன்றாக விரித்துக் கூறும் திறம் இவ்வாற்றுப் படைகளுக்கே உரிய அரிய செய்தியாகப் புலப்படுகிறது; சொல்லாட்சிச் சிறப்பிலும் சிறந்து விளங்குகிறது.

முடிவாக, உடல் வருணனை அவ்வளவாக இல்லாத அளவான கற்பனை, இயற்கையோடு இயைந்த வாழ்வு, வாணிக வளம், அரசர் கொடைச்சிறப்பு, தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாட்டு நிலை, பொருளியல் நிலை, இசையும் கலையும் இனிமையுற வாழ்க்கையோடு இயைந்து நின்ற மாட்சி முதலிய இன்னோரன்ன அரிய செய்திகளையெல்லாம் விளக்கமுறக்காட்டி நிற்கும் ஒளி விளக்குகளாக, சங்க இலக்கியப் பாடல்கள் அழகுற அமைந்துள்ளன.

சங்க காலம்
தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலம்

அகமும் புறமும் சங்க இலக்கியங்களில் உட்பிழிவான கருத்துகளாகும். எட்டுத் தொகை நூல்களில் ஐந்து நூல்கள் அகத்திணை பற்றியவை; இரண்டு புறத்திணை பற்றியவை. அகமும் புறமும் கலந்து வருவது மற்றொன்றாகும். பத்துப் பாட்டிலும் செம்பாகமான பகுதி ஆற்றுப்படைகளாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய

மூன்றும் அகத்திணைக் கருத்துக்கள் தாங்கி மிளிர்வன. மதுரைக் காஞ்சியும் மலைபடுகடாமும் புறத்திணை பற்றியவை.

சங்க இலக்கியத்தில் பகுத்தறிவினுக்குப் புறம்பான கற்பனையினைக் காண இயலாது. 'எத்துணையும் பொருட் கிசையும் இலக்கணமில் கற்பனையைச்' சங்க இலக்கியத்தில் காணல் இயலாது. உள்ளதை உள்ளவாறே கூறுதல் சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு. உள்ளதை உணர்ந்தவாறு கூறுவதில் சங்கக் கவிஞர்கள் தனித்திறம் படைத்தவர் களாகக் காணப்படுகிறார்கள்.

இயற்கையின் இனிய பின்னணியில் எழுந்தவை சங்க காலக் கவிதைகள், இயற்கையின் பின்னணியில் மக்கள் வாழ்வு செம்மையுறச் சித்திரிக்கப்படுகிறது. (Life is Portrayed in the background of Nature) சங்க இலக்கியத்தில் இயற்கை பெரும்பங்கு கொண்டிருந்தாலும், மனித வாழ்வுக்கே முதலிடம் தரப்படுகின்றது. எனவே, முதற் பொருள் கருப்பொருள்களைக் காட்டிலும் உரிப்பொருள் களுக்கே பெருமதிப்பு உள்ளது. தொல்காப்பியனாரும் 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்றார்.

'அடுத்து, சங்க காலத்துப் புலவர் ஓரினத்தவர் அல்லர்; ஓரிடத்தவரல்லர்; ஒரு காலத்தவரும் அல்லர்.' எனவே, சங்க இலக்கியத்தினை நாம் 'தேசிய இலக்கியம்' எனலாம். சங்க காலத்தில் மன்னர்களுக்கிடையே அருமையான ஒருமைப் பாடு நிலவியிருந்தது எனக் கூறலாம்.

சங்க காலத்தில் பெண்பாற்புலவர் பலர் வாழ்ந்து சிறந்த கவிதைகளை இயற்றியிருப்பது அக்காலக் கல்வி யின் முதிர்ச்சியினையும், பெண்ணின் பெருமையினையும் காட்டுகின்றது. ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், கச்சிப் பேட்டு நன்னாகையார், குறமகள் இளவெயினியார், வெறி

பாடிய காமக்கண்ணியார், கீரன் எயிற்றியார், ஒக்கூர் மாசாத்தியார், அள்ளூர் நன்முல்லையார், காவற்பெண்டு, நக்கண்ணையார், நப்பசலையார், நல்வெள்ளியார், பாரி மகளிர், பொன்முடியார், பூங்கணுத்திரையார், பூதப் பாண்டியன் தேவியார் என்போர் எடுத்துக்காட்டாகக் கூறத் தக்கவர் ஆவர்.

பாவலரேயன்றிக் காவலரும் கவிதை யாத்தனர் என் பதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ, சோழன் நல்லுருத் திரன், ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் முதலானோர் பாடல்களால் அறியலாம். மேலும் கவிதை பாடிய அரசியர் களையும் சங்காலத்தில் நாம் காண்கின்றோம். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் மனைவி, பாரி மகளிர் என்பவர் களைக் குறிக்கலாம்.

அகத்திணையினைப் பாடிய புலவர்கள் உளவியல் தத்துவத்தை நன்கு உணர்ந்தவர்களாகக் காணப்படுகிறார் கள். ஆண்பாற் புலவர்கள் பெண்களின் மன உணர்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்கள். அதுபோலவே பெண்பாற் புலவர்களும் ஆண்களின் மனவுணர்ச்சியினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்கள். மேலும், புலவர்கள் வறுமை யிலும் செம்மையான வாழ்வு வாழ்ந்து உள்ளனர். "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்பது ஔவையார் வாக்கு. 'இன்புற விடுத்தியாயின், குன்றியும் கொள்வல் கூர்வேற்குமண!' என்கிறார் பெருஞ்சித்திரனார் எனும் புலவர். மன்னர்கள் அறநெறி பிறழ்ந்தபோது அஞ்சாது அவர்களை இடித்துரைத்த கோவூர்கிழார் போன்ற பெரும் புலவர்களைக் காண்கிறோம்.

'யாதும் ஊரே: யாவரும் கேளிர்' என்னும் பரந்து பட்ட மனப்பான்மை சங்ககாலத்தே நிலவியது. சமயப் பொறை நிறைந்த காலம் சங்ககாலம். உலோச்சனார் போன்ற சமணப்புலவர்களும், இளம்போதியார் போன்ற

பௌத்த சமயப் புலவர்களும், தாமோதரனார் போன்ற வைணவ சமயப் புலவர்களும், நக்கீரனார் போன்ற சைவ சமயப் புலவர்களும் அக் காலத்தே வாழ்ந்துள்ளார்கள்.

தமிழ் மக்கள் திரைகடல் ஓடியும் திரவியம் தேடிப் பொருள் வளத்தினைப் பெருக்கினார்கள். காலிற் பிரிவதோடன்றிக் (வண்டி) கலத்தினும் (கப்பல்) பிரிந்தனர். யவனர்கள் தமிழ்நாட்டோடு கொண்டிருந்த தொடர்பு சங்க இலக்கியங்களில் பலவிடங்களிற் பேசப்படுகின்றது. யவனர் பொன்னும் மதுவும் தந்து, முத்தும் மிளகும் கொண்டு சென்றனர்.

சங்க இலக்கியத்தில் நீதிக் கருத்துகள் பலவற்றினைக் காணலாம். இக் கருத்துகள் தமிழர்தம் நீதிபிறழாத நல்ல நெறியான வாழ்வினைக் காட்டுகின்றன.

அவல ஓவியங்களை வடித்து நம் நெஞ்சைப் பிழிவதில் சங்கக் கவிஞர்கள் கைதேர்ந்தவர்கள். ஒன்பான் சுவையும் சங்க இலக்கியப் பேராற்றில் சுழியிட்டுக் கொப்புளித் தோடுவதைக் காணலாம்.

'வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே!'

என்னும் புறநானூற்று அடிகளில் அவலச் சுவையின் ஆழத் தினைக் காணலாம்.

சங்கக் கவிதைகள் கற்பனைவளம் செறிந்த கவிதைகள் என்பதைக் கண்டோம். பொருள்வயிற் பிரிந்தான் தலைவன். தலைவியிடம் அவன் திரும்பி வருவதாகச் சொன்ன கார்காலமோ வந்துவிட்டது. முல்லை அரும்புகள் தலைவி யைப் பார்த்து நகைப்பது, கார்காலமே நகைப்பதுபோல் உள்ளது. அவ்வழகிய பாடலைக் காண்போம்.

'இளமை பாராார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாராார் எவண ரோவெனப்

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே!' —குறுந்-125

சங்கப் பாடல்களில் ஓசையினிமையினைக் காணலாம். சான்றாகத் திருமுருகாற்றுப்படையின் இறுதி அடிகள்,

'இழுமென இழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!'

என முடிந்துள்ளன. தமிழ் மொழிக்கே உரிய சிறப்பான 'ழகரம்' ஈரடிகளில் நான்கிடங்களில் வந்து நல்ல ஓசை யினைத் தருகின்றது.

தமிழ் மக்களின் வாழ்வு புகழ் நிறைந்த பெருவாழ் வாய்த் துலங்கியது.

'புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்!' —புறம். 182

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே.' —புறம். 165

என்ற புறப்பாக்கள் அவர்தம் புகழ் வாழ்வினை வெளிப் படுத்துவன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளம் பட்டினப்பாலை யில் பின்வருமாறு பேசப்படுகின்றது.

'நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின்றி உருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்.' —பட். 22-25

தமிழகத்தின் ஏற்றுமதி, இறக்குமதி காவிரிப்பூம் பட்டினத் துறைமுகத்தில் வளமுற நிகழ்ந்தன. இதனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு'—பட். 185-194

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியப் பாடல்களைப் படிப்போர், சங்க இலக்கியப் பாடல்களில் வரும் தலைவியின் அரிய மாண்பினை வியக்க நேரிடும். மகளிர் மனவளம் மாண்புற விளங்கியதனைக் காணலாம். தலைவனோடு தான் கொண்ட ஆழ்ந்த காதலினைத் தலைவி,

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே'— —குறுந். 3

என்று குறிப்பிடுகின்றாள். தலைவன் தனியே பொருள்வயிற் பிரியக் கருதியபோது,

'துன்பம் துணையாக நாடின், அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு' — கலி. 134

என்று கூறித் தலைவனின் துன்பத்திற்கும் துணை நிற்கும் பண்பினை எடுத்துரைத்தாள்.

முடிவாக, சங்கப் பாடல்கள் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் துலங்குகின்றன. 'சங்ககாலம் தமிழிலக்கியத்தின் பொற் காலம்' என உறுதியாகக் கூறலாம்.

3. சங்கம் மருவிய காலம்

(கி. பி. 100—600)

மதுரை மாநகரிலே நிலவியிருந்த கடைச்சங்கத்தின் இறுதிக்காலத்திற்குப் பின்னரும், ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும், சிறப்பாக ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றிய பல்லவர்கள் ஆட்சிக் காலத்திற்கு முன்னரும், இடைப்பட்ட ஒருகாலப் பகுதியினைச் சங்கம் மருவிய காலம் என்பர். சங்க காலத்தில் முடியுடைய மூவேந்தராலும், வேளிர் முதலான சிற்றரசர்களாலும் ஆளப்பட்டுவந்த தமிழ் கூறும் நல்லுலகம், கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் அயலார் ஆட்சிக்குட்பட்டது. சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்களும், நடுநாட்டையும் தொண்டை நாட்டையும் பல்லவர்களும் கைப்பற்றி ஆண்டார்கள். இவர்கள் தாய்மொழி தமிழாய் அமைந்திருக்கவில்லை. களப்பிரர்கள் பாலிமொழியினையும், பல்லவர்கள் பிராகிருத மொழியினையும் ஆதரித்தனர். ஆதலால், தமிழர்தம் மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றிற் சில கூறுகளை இழக்கும்படி நேரிட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட அயலாரின் ஆட்சியிலே தமிழ்மொழி ஆதரிக்கப்படாமல் தாழ்த்தப்பட்டு வளர்ச்சிகுன்றிப் போற்றுவாரற்று விளங்கியதால், தமிழ்மொழியில் பெருமளவிலும் சிறப்பான முறையிலும் நூல்கள் தோன்றுவதற்கு இயலாமற் போய்விட்டது. எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக் காலப்பகுதியினை 'இருண்ட காலம்' என்று குறிப்பர்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

இந்த இருண்ட காலத்திலும் சில தமிழ் நூல்கள் இயற்றப்பட்டன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்,

சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன இச் சங்கம் மருவிய காலத்தில் எழுந்தன என்பர். இவற்றுள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைச் சங்ககால இலக்கியம் என்றும் சிலர் கூறுவர். ஆனால், அவ்வாறு கொள்வதற்குச் சில இடர்ப் பாடுகளையும் காட்டுவர். இந்நூல்கள் சங்ககால நூல்களி னின்றும், கூறும் பொருளாலும், அமைந்திருக்கும் நடையா லும் வேறுபட்டிருக்கின்றன என்பர். எனவே, இப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களென்று கொள்வர். "அந்நூல்களெல்லாம் எவ் வாண்டில் எழுதப்பெற்றன என்பதை அறிந்து கோடற்கு ஆதாரங்கள் கிட்டவில்லை. அன்றியும், அவை எந்த நூற்றாண்டில் தோன்றியிருத்தல் கூடும் என்பதும் உய்த் துணர்ந்து கூற வேண்டிய நிலையில்தான் உள்ளது."[1]

'அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொரு ளின்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்'.
—பன்னிரு பாட்டியல், மேற்கோள், 133

இதற்கு ஏற்ப, குறைந்த அடிகளையுடைய செய்யுள் களால், வெண்பா யாப்பிற்றாய், அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உறுதிப்பொருள்களையும் கூறுவதனைக் கீழ்க் கணக்கு நூல்கள் எனலாம். 'கணக்கு' என்ற சொல் முதலில் இலக்கியத்திற்கு வழங்கியது. அக் காலத்தில் கணக்காயர் என்ற சொல்லே இலக்கிய ஆசிரியர் என்ற பொருளைத் தந்ததை நாம் அறிகிறோம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைக் குறிக்கும் வெண்பா ஒன்று உளது :

---

1. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார். தமிழ் இலக்கிய வரலாறு 1,, ப. 28.

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலை காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு.'

இந்த வெண்பாவின் பின் இரண்டு அடிகள் பாட பேதம் கொண்டு விளங்குவதால் நூல்களின் பெயரைப் பற்றிய கருத்து வேறுபாடுகளும் கொள்வர். இன்னிலை என்பது பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்று என்று திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த 'இன்னிலை' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்; அதற்கு மாறாக, டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் 'இன்னிலை' என்னும் சொல்லைக் காஞ்சியென்ற நூலின் பெயருக்கு அடைமொழியின் பகுதியாகக் கொண்டு, வெண்பாவின் ஈற்றடியில் காணப்படும் கைந்நிலை என்பதனையே பதினெண்கீழ்க்கணக்கு நூலாகக் கூறுவர்.

சங்க காலத்தில் அகவற்பாக்கள் பெருமளவில் நூல்களிற் புகுந்தன; பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலும் வெண்பா விரவிவரக் காண்கிறோம். அறநெறியினைத் தெளிவுறுத்துவதற்கு ஏனைய பாவகையினும் வெண்பாவே சிறப்புடைத்து என்பது கொள்ளக் கிடைக்கின்றது. எனவே சங்கம் மருவிய காலத்தில் வெண்பா பெருவழக்கிற்றாயும், அகவற்பா சிறு வழக்கிற்றாயும் விளங்கின.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே பதினொன்று நீதி நூல்களாயுள்ளன. சில அகத்தைப் பற்றியும், சில புறத்தைப் பற்றியும் கூறுகின்றன. இவற்றில் எல்லாம் காலத்தாலும், பொருட்சிறப்பாலும். ஆகிய பல்வகை மாட்சிகளாலும் சிறப் புற்று விளங்குவது திருக்குறள். எனவே, திருக்குறளைப் பற்றி முதலிற் காண்போம்.

திருக்குறள்

'வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.'

என்று பாரதியாரும்,

'பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?'

என்று மற்றொரு புலவரும் பாடினர். தமிழ்நாடு செய்த தவத்தின் பயனாய்த் தோன்றியவர் திருவள்ளுவர். 'திருவள்ளுவர் பிறப்பு வளர்ப்பு முதலியவற்றைப் பற்றிய உண்மை வரலாறு நமக்குக் கிட்டவில்லை. அவரது வரலாறு பலவாறு பகரப்படுகிறது. இந்நாளில் வழங்கிவரும் அவர்தம் வரலாறுகளெல்லாம் புனைந்துரைகளே திருவள்ளுவர் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தவர் என்பதும், அறவோர் என்பதும் அவர் அருளிய நூலால் இனிது விளங்குகின்றன''[1] என்று, மறைந்த தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

புலவர் தம் வாழ்நாளிலேயே புகழ் பெறுதல் என்பது அரிது: அதிலும் தம்மோடு ஒத்துத் தம் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இடையில் ஒருசேரப் புகழ் பெறுதல் என்பது அரிதினும் அரிது. அக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்கள் இவரைப் பாராட்டிய பாடல்களே திருவள்ளுவமாலையில் அமைந்துள்ள செய்யுள்கள் என்பர்.

திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர் வந்த புலவர்களும் அவர் கூறிய கருத்துகளையும், தொடர்களையும் பொன்னே போலப் போற்றித் தங்கள் நூல்களில் கையாண்டுள்ளார்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாய்மொழி, சிந்தாமணி,

---

1. திரு. வி. க. அவர்கள், டாக்டர் மு. வ. அவர்களின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை னிளக்கம், அணிந்துரை, ப. 8.

கம்பராமாயணம் முதலிய நூல்களில் எல்லாம் குறட் கருத்துகள் விரவிவரக் காண்கிறோம். மேலும், திருவள்ளுவர் வாழ்க்கையில் பல்வேறு பகுதிகளையும் நுணுகிப் பார்த்தவர். உலக வாழ்க்கையில் தாம் கண்டு தெளிந்த உண்மைகளைச் சிக்கலின்றித் தெள்ளத் தெளிவாக மக்கள் மனத்தில் பசுமரத்து ஆணிபோலப் பதியும் வண்ணம், திருக்குறளை இவர் இயற்றியுள்ளார்.

திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நன்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் வேறு பெயர்களும் வழங்குகின்றன.

"திருக்குறள் பலர்க்குப் பல வகையாகப் பயன்படும் சிறப்பு வாய்ந்த தனி நூலாகும். இலக்கிய ஆராய்ச்சியாளர், அதைச் சிறந்த இலக்கியமாகக் கற்றுக் கலைநயம் காணலாம். அறிவோர், சமய நூலெனப் போற்றி ஒழுக்க முறைகளைக் காணலாம். இவ்வாறே ஒவ்வொரு சாராரும் தம் தம் துறைக்கு ஏற்ற கருத்துகளைக் காணலாம். பொதுவாக வாழ்க்கையை ஆராய்ந்து விளக்கியுள்ள எல்லா நூல்களும் இவ்வாறு பலர்க்குப் பல்வேறு வகையாகப் பயன்படுவனவே ஆகும்"[1] என்கிறார், டாக்டர் மு. வ. அவர்கள்.

திருக்றகுளின் பெருமை

'அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்று திருவள்ளுவமாலையில் ஔவையார் பாடியதாக ஒரு செய்யுள் காணப்படுகிறது. எல்லாப் பொருளையும் தன்

---

1. டாக்டர் மு. வரதராசனார், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், முன்னுரை: ப. 52

னகத்தே தாங்கி நிற்பது குறள் என்னும் கருத்தில் மதுரைத் தமிழ் நாகனார் என்னும் புலவர்,

'எல்லாப் பொருளும் இதன்பா லுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்'

என்று சிறப்பாகக் கூறுகிறார். இவை போன்று திருவள்ளுவ மாலையில் காணப்படும் பல்வேறு புலவர்கள் பாடிய பாடல் கள் திருக்குறளின் பெருமையினை உரைப்பனவாய் உள்ளன.

திருக்குறள் நான்மறையின் மெய்ப்பொருளை உணர்த்து கிறது என்றும், சுருங்கிய சொற்களால் பொருத்தமுறப் பொருள் விளங்கச் சொல்லுகிறது என்றும், எளிய சொற் களால் அரிய பொருள்களைப் புலப்படுத்துகிறது என்றும், உலக மக்களின் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் இருளை அகற் றும் ஒளிவிளக்கு என்றும் புலவர்கள் பலபடப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டியுள்ளனர்.

முதற்கண் திருக்குறள் சமயப் பொதுநூலாகக் காட்சி யளிக்கிறது. இந் நூலைச் சைவர்கள், வைணவர்கள், பௌத் தர்கள், சமணர்கள், கிறித்தவர்கள் ஆகிய அனைவரும் தத்தம் சமயக் கருத்துகள் குறட்பாக்களில் காணப்படுவதால் தத்தம் சமயத்திற்குரிய நூலே குறள் என்று கூறுவர். எனவே தான் கல்லாடர் என்னும் கவின்தமிழ்ப் புலவர்,

'ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி'

என்று பாடியுள்ளனர்.

அடுத்து, திருக்குறள் காலத்திற்குப் பொது நூலாய் வழங்கி வருவதைக் காண்கிறோம். கால வெள்ளத்திற்கு

இரையாகாமல் இன்றளவும் நிலைபெற்று வாழும் பேற்றினைத் திருக்குறள் பெற்றுள்ளது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த நூல், அக்கால மக்களின் வாழ்க்கை நெறிக்கும் பொருந்தி, இன்றும் மாறாமல் அரும்பயன் விளைப்பதாய், உறுதிப்பொருள்களைப் பயப்பதாய் விளங்கும் மாட்சி வியக்கத்தக்கதாய் உள்ளது. அறிதொறும் அறிதொறும் அறியாமையைப் புலப்படுத்துவதாய், நவில் தொறும் நவில்தோறும் நயம் பயப்பதாய்த் திருக்குறள் விளங்குகிறது.

மூன்றாவதாக, எல்லாச் சாதியினர்க்கும் பொது நூலாய்த் திருக்குறள் திகழ்கிறது. இதனால்தான் திருவள்ளுவர்,

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

என்றார். சான்றாக, மனோன்மணீயம் என்னும் நாடக நூலின் ஆசிரியர் திரு. சுந்தரம்பிள்ளையவர்கள்,

'வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்
தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொரு நீதி?'

என்று குறிப்பிட்டார்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சில மொழிகளில் நூல் முழுது மல்லாவிடினும், சில பாக்களாவது மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மேலைநாட்டு மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. திராவிடமொழிகளில் தெலுங்கு, மலையாளத்திலும், வடமொழி, இந்தி ஆகிய மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில்

டாக்டர் போப்பு (Dr. G.U. Pope) அவர்களும், வ.வே.சு. ஐயர் அவர்களும், தீட்சிதர் அவர்களும், ராஜாஜி அவர்களும் மொழி பெயர்த்துள்ளார்கள். தமிழ் இலக்கியத்தின்பால் டாக்டர் போப்பு போன்றவர்களை ஈடுபடுத்தியமைக்குத் திருக்குறள் ஒரு பெரிய காரணம் எனலாம்; ஆல்பர்ட் சுவிட்சர் என்ற பெரியாரும் திருக்குறளின் பெருமையினைப் பாராட்டியுள்ளார். இத்தகைய சிறப்பு வேறெந்தத் தமிழ் நூலுக்கும் இல்லை எனலாம்.

முப்பானூல், உத்தரவேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது முறை முதலிய பெயர்கள் திருக்குறளின் வேறுபெயர்களாய் வழங்குகின்றன.

'ஒருவன், செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ!'

என்ற புறப்பாட்டின் தொடர்கொண்டு, 'அறம்' என்ற பெயரும் வழங்கியிருக்கும் என்பர்.

திருக்குறளின் அமைப்பும் பகுப்பும்

திருக்குறள் ஈரடியான் இயன்ற குறள் வெண்பாவினால் ஆன ஒரு நூலாகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்கள் இந்நூலில் உள்ளன. பத்துக் குறள் வெண்பாக்கள் அடங்கியது ஓர் அதிகாரம். எனவே, திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாய்ப் பகுக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களாய்—பகுதிகளாய்—பிரிக்கப் படடுள்ளது. அதில் அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரத் தினையும், பொருட்பால் எழுபது அதிகாரத்தினையும், காமதத்துப்பால் இருபத்தைந்து அதிகாரத்தினையும் பெற்றிருகின்றன.

இல்லறமாவது, ஒருவன் மனைத்தக்க மாண்புடை யாளை வாழ்க்கைத் துணையாகக்கொண்டு, நல்லறமாம் இல்லறத்திற்கியைந்த செயல்களை நாள்தோறும் செய்து மக்கட்பேற்றுடன் மகிழ்ந்து வாழ்தலாகும்.

துறவறமாவது, இல்வுலகில் நில்லாமையே நிலையானது என்று தெளிந்து, பிறப்பால் வருவது துன்பமே என்றும், பிறவிப் பெரும்பிணியை அகற்றுவதே பேரின்பம் என்றும் கொண்டு பற்றற்று மறுமை நோக்கி—வீட்டின்பம் நோக்கி—தவஞ்செய்யும் அரிய நெறியாகும்.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்?'

என்று இல்லறத்தைப் பாராட்டிய திருவள்ளுவர்,

'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்!'

என்று துறவறத்தின் பெற்றியினையும் புலப்படுத்துகிறார்.

அரசன் என்ன குணங்களோடு விளங்கி எவ்வண்ணம் நாட்டை ஆளவேண்டும் என்பதை அரசியல் கூறுகின்றது. அரசனுக்கு அங்கமாய் அமையும் அமைச்சர், தூதுவர் முதலியவர் இலக்கணங்களை அங்கவியல் அறிவிக்கின்றது. ஒழிந்த, வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புடைமை, நாணுடைமை முதலியவற்றினை ஒழிபியல் உணர்த்துகின்றது.

திருவள்ளுவரின் காமத்துப்பாலில்தான் உண்மையான இலக்கியத்தின் சிறப்பையெல்லாம் நாம் நுகர்கிறோம். அவருடைய கற்பனை சிறகடித்துப் பறப்பதை இங்கேதான் நாம் காண இயல்கிறது. முதன்முதல் தமிழகத்தில் கள்ளுண்ணலைக் கண்டித்த சான்றோர் திருவள்ளுவர் ஆவது

போலப் பரத்தைமை யொழுக்கத்தைக் கண்டித்தவரும் அவரே ஆகிறார். எனவேதான், அவருடைய காமத்துப் பாலில் மருதத்திணைப் பாடல்கள் இடம் பெறவில்லை.

திருக்குறளில் பல உவமைகள் சிறப்புற அமைந்திருக் கின்றன. அரியவற்றை எல்லாம் எளிதில் விளக்க அவை துணையாகின்றன.

திருவள்ளுவர் சில இடங்களில் வடமொழிக் கருத்துகளை மறுத்தும், தமிழ் வழக்கத்திற்கியைந்த தனிப்பட்ட நெறி யிலே பாக்களை அமைத்தும் உள்ளார் என்ற செய்தியை நாம் பரிமேலழகரின் உரையினாலே காண்கிறோம்.

திருக்குறளுக்கு உரை எழுதியவர் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மர் என்பது தெரிய வருகின்றது. இவ்வாறு பதின்மர், தமிழில் திருக்குறள் தவிர வேறு எந்நூலுக்கும் இதுவரை உரை கண்டிலர். இதுவும் திருக்குறளின் பெருமையை விளக்கும் சான்றாய் உள்ளது.

இப் பதின்மர் உரையிலும் மணக்குவர், பரிதி, பரிமேலழகர், காளிங்கர் ஆகிய நால்வர் உரையே இன்று கிட்டுகின்றன. அவற்றுள்ளும் பரிமேலழகர் உரையே சிறப்பாய் அமைந்திருக்கிறது. பல்வேறு நூல்களுக்குத் தமிழில் பல்வேறு உரையாசிரியர்கள் உரை வகுத்திருப்பினும், திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியதற்கு ஒப்பான ஓர் உரை காணல் அரிது. அதனாற்றான் உரைச்சிறப்புப் பாயிரம்,

.....நூலில்
'பரித்த உரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரை யாமோ தெளி'

என்று பாராட்டிப் பேசுகிறது.

திருக்குறளின் காலம்

திருக்குறள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுந்த நூல் என்று திரு. மறைமலையடிகளும்,[1] கி.மு. முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டில் எழுந்த நூல் என்று திரு. இராமச்சந்திர தீட்சிதரும், கி. பி. ஆறாம் நூற்றாண்டில் எழுந்த நூலென்று திரு. வையாபுரிப் பிள்ளையவர்களும் ஆராய்ந்து கூறுகின்றனர். திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று என்று அகச்சான்றுகள் சில வற்றைக் காட்டி, 'இதனால் கி. பி. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த நூலே திருக்குறள்' என்பர், திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள். ஆனால் தீட்சிதர் ஏலேலசிங்கன் அல்லது எல்லோரா என்று மகாவமிசத்தில் காணப்பெறுபவன் திருவள்ளுவர் காலத்தவன் என்றும், திருவள்ளுவமாலை ஆசிரியர் காலம் சிலம்பு, மணிமேகலை ஆசிரியர் காலம் இவற்றைக் கொண்டு ஆய்ந்து, திருவள்ளுவர் காலம் கி. மு. ஒன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர். சமண பௌத்தக் கருத்துகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளதென்றும், அச் சமயங்கள் தமிழ்நாட்டில் அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில்—அதாவது—கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பரவியிருக்கலாம் என்றும் கொண்டு திருவள்ளுவர் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்பர். "தெளிந்த வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் திருவள்ளுவர் காலம் ஏறத்தாழ கி. மு. 1 முதல் 300க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்..."[2] ஆயின் உண்மை உணர இயலவில்லை. கி-மு-31 திருவள்ளுவர் காலம் என இன்று தமிழக அரசு கொண்டுள்ளது.

---

1. பண்டைத் தமிழ்ச் சான்றோரது மெய் வழக்குத் தழீஇத் தொடர்பாக இயற்றப்பட்டு வந்த தனிச்செந்தமிழ் நூல்களில் ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் இயற்றிய தெய்வத் திருக்குறள் நூலே இறுதியாவது,—மறைமலையடிகள் - முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப. 102.

2. டாக்டர் மா. இராசமாணிக்கனார் - கால ஆராய்ச்சி. பக். 32.

நாலடியார்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாக எண்ணப் படும் நூல் இது.[1] 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்றும், 'பழகு தமிழ்ச் சொல் லருமை நாலிரண்டில்' என்றும் வழங்கும் பழமொழிகள் திருக்குறளோடு நாலடியாரின் சிறப்பையும் புலப்படுத்துவன வாகும். நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகிய நூல் ஆனமையால் 'நாலடி' என்றும், சிறப்பு விகுதியாகிய 'ஆர்' சேர்ந்து 'நாலடியார்' என்று ஆனது என்றும் பெயர்க் காரணம் கூறுவர். நாலடிகள் கொண்ட பாட்டால் அமைந்த நூல்கள் தமிழில் மிகப்பல உளவேனும், சிறப்புப் பற்றி இதனை நாலடியார் என ஓதுவாராயினர். 'நாலடி நானூறு' என்ற பிறிதொரு பெயரும் இந் நூலுக்கு வழங்கு கிறது.

இந்நூல் சமண முனிவர் நக்கீரர் பாடியது என்பது யாப்பருங்கல உரையாசிரியர் கருத்து.[2] இந்நூல் சொல் நயம், பொருள் நயம் முதலியன பெற்றுச் சிறந்து விளங்குவது. சங்க நூல்கள் சிலவற்றிற்கு உரையாசிரியர்களான பரிமே லழகர், நச்சினார்க்கினியர் முதலியோரும், சிலப்பதிகாரத் திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் இந் நூலி னின்றும் சில பாக்களை மேற்கோள் காட்டுகின்றனர். திருக்குறட் கருத்துகள் சில இடங்களில் இந்நூலில் காணப் படுகின்றன.

---

1. These two (kural and Naladiar) great works serving as mutual commentaries, and together throwing a flood of light upon the whole etnical and social Philoshphy of the Tamil People.

—G. U Pope's Introduction to Naladiar. p. 11.

2. மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை: தமிழ்—அன்றும் இன்றும்.

இந் நூல் 'செல்வம் சகடக்கால் போல வரும்' என்று செல்வ நிலையாமையை வற்புறுத்துகிறது. 'கல்வி கரையில கற்பவர் நாள்சில' என்றும், 'கல்லாரே யாயினுங் கற்ற வரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளுந் தலைப்படுவர்' என்றும் கல்வியின் சிறப்பினையும் அழகினையும் கவின் பெறக் கூறுகிறது.

காமத்துப்பாலில் கற்புடைப் பெண்டிரைக் கூற வந்த விடத்து,

'கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி
இடனறிந்(து) ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்'

என்று குறிப்பிடுகிறார். இந் நூல் இவ்வாறு உலகம் உணர்ந்து ஒதுவதற்குரிய நல்ல நீதிகளை விளக்கி நிற்கிறது.

நாலடியாரில் அமைந்துள்ள இரு வெண்பாக்களில்[1] பெருமுத்தரையர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இப் பெருமுத்தரையர்கள், முதல் பரமேசுவரவர்ம பல்லவனின் பின்வந்தவர்கள் என்றும். அவர்கள் ஆட்சி சிறந்து விளங்கியது கி. பி. ஏழாம் நூற்றாண்டு என்றும் கொண்டு, இந்நூலில் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின்

---

1. பெருமுத்தரையர் பெரிது வ்வந்(து) ஈயும்
கருணைச் சோ(று) ஆர்வர் கயவர் கருணையைப்
பேரும் அறியார் தனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். —நாலடியர், 200

மல்லல்மா ஞாலத்து வாழ்பவருள் எல்லாம்
செல்வர் எனினும் கொட்டாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்று இரவா தார். —நாலடியார், 290

இடைப்பகுதி என்பர் திரு. வையாபுரிப்பிள்ளை.[1] இக் கருத்தைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை.

நான்மணிக்கடிகை

இது வெண்பாவால் இயன்ற நூற்றுநான்கு பாடல் களைக் கொண்ட நீதி நூலாகும். நான்கு மணி போன்ற உண்மைகளைக் கூறும் பாட்டுகளை உடைத்தானதால் இந் நூலுக்கு இப்பெயர் அமைந்தது. இந்நூல் தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்புகளில் ஒன்றாகிய 'அம்மை' என்னும் வனப்பில் அடங்கும் என்பது உரையாசிரியர்கள் கருத்தால் தெரியவருகின்றது.

நான்மணிக்கடிகை, விளம்பி நாகனாரால் இயற்றப் பெற்றது. சிறந்த உவமைகளும் அறிவுரைகளும் புலமை நயங்களும் பெற்று மிளிரும்வண்ணம் இந்நூலை இவர் இயற்றியிருப்பது இவருடைய நுண்மாண் நுழைபுலத்தினை நுவலும். எக்குடியிலும் நல்ல மக்கள் உதித்தல் கூடுமென்றும், மக்கள் 'இம்மையில் புகழ் வாழ்வு வாழ்ந்து மறுமையில் வீட்டுப் பேற்றினை எய்துவதையே தம் உயர்ந்த குறிக் கோளாகக் கொள்ளவேண்டும்' என்றும், 'கொல்லாமையும், புலாலுண்ணாமையும் சிறந்த அறங்கள்' என்றும் இந் நூலாசிரியர் வற்புறுத்திக் கூறுகின்றார். இவர் கடவுள் வணக்கத்தில் திருமாலைப் பரவுவதால் வைணவரோ என்று ஐயப்படத் தோன்றுகிறது என்பர்.

இந்நூலின் ஏழாவது பாட்டையும், நூறாவது பாட்டை யும் டாக்டர் போப்பு அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

---

1. Prof. S.Vaiyapuri Pillai's History of Tamil Language and Literature, p. 89.

இனியவை நாற்பது

இந்நூலாசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் ஆவர். இந்நூல் கடவுள் வாழ்த்துச் செய்யுள் உட்பட நாற்பத்தொரு வெண்பாவால் இயன்று, நீதிகளைப் புகட்டுவதாகும். ஒவ்வொரு பாடலிலும் இன்னது இன்னது இனியவை என்று இந்நூலாசிரியர் கூறுவதால் இந்நூல் இப் பெயர் பெற்றது.

எல்லாரும் மனத்துள் கொள்ளத்தகும் சிறந்த அறிவுரைகள் இந்நூலுள் காணப்படுகின்றன.

'ஒப்ப முடிந்தால் மனைவாழ்க்கை முன்னினிது.'

—3

'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிது'.

—14

'குழவி தளர்நடை காண்டல் இனிது'.

—15

'அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிதே'.

—22

'வருவாய் அறிந்து வழங்கல் இனிதே'.

—23

இன்னா நாற்பது

இனியவை நாற்பதைப் போலவே கடவுள் வாழ்த்து உட்பட நாற்பத்தொரு வெண்பாக்களையுடைய நீதி நூலாய் இந்நூல் திகழ்கின்றது. இதன் ஒவ்வொரு பாடலும் இன்னது இன்னது துன்பம் தரும் என்று அறிவுறுத்துவதால், இந் நூலுக்கு இப்பெயர் வந்தது எனலாம். இந்நூலாசிரியர் கபிலர் என்று கூறப்படுகின்றார். 'கொழுந்துவை னன் சோறு' உண்டவர் சங்ககாலக் கபிலர். இவரோ, இக்

கபிலரின் வேறான—புலாலுண்ணுதலையும் கள்ளுண்ணுதலையும் கண்டிக்கும்—பிற்காலப் புலவர். இந்நூலாசிரியர் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் பல கடவுளர்களையும் பரவுவதால் சமயப் பொது நோக்குடையவர் என்பது தேற்றம்.

சில அரிய கருத்துகளை இந்நூலில் காணலாம்:

'உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா.'
—17

'ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன்னின்னா.'
—23

'தீமை யுடையார் அயலிருத்தல் இன்னா.'
—26

கார் நாற்பது

இது மதுரைக் கண்ணங் கூத்தனார் பாடிய நூலாகும். கார் காலத்தின் அழகிய இயற்கை வருணனைகள் கொண்ட அகப்பொருள் நூல் இது. வினைமேற் சென்ற தலைவன் கார் காலத்தில் திரும்பி வருவதாகத் தலைவியிடம் கூறிச் சென்றான். அவன் குறிப்பிட்ட கார்காலம் வந்ததும், அவன் திரும்பி வராமை கண்டு தலைவி கவன்றாள். தோழி தேற்றினாள். தலைவனும் தலைவியை நினைந்து, தேர்ப் பாகனோடு பேசி, விரைந்து மீள்வதனை அழகுறக் கார் நாற்பது எடுத்து விளக்குகிறது. முல்லை நிலத்தின் முதல், கரு, உரிப்பொருள்கள் அழகுறப் புனையப் பெற்றிருக்கின்றன. கார் காலத்தைப்பற்றிய செய்திகளே இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ளதால், இந்நூல் 'இயம்பும் காலத்தாற்' பெயர் பெற்றுள்ளது.

களவழி நாற்பது

தம் நண்பன் சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு கழுமலம் என்னுமிடத்தில் பொருது தோற்றகாலையில், அவனைச் சிறை மீட்கப் பொய்கையார் என்னும் புலவரால் இந்நூல் பாடப்பட்ட தாகும். செங்கணான் போரில் பெற்ற வெற்றியை எடுத் தியம்புவது இந்நூல். இப் பொய்கையார் முதலாழ்வார் களுள் ஒருவரான 'பொய்கை யாழ்வார்' என்று ஒருசிலரும், அவரின் வேறானவர் என்று மற்றும் சிலரும் புகல்கின்றனர். இதன் உண்மை துணிவதற்கில்லை. புறப்பொருள் அமைந்த நூலாகும் இது.

திணைமொழி ஐம்பது

இஃது ஐந்திணை ஒழுக்கங்களை முறையே பத்துப் பத்து வெண்பாக்களால் கூறும் ஐம்பது பாடல்கள் கொண்ட நூலாகும். இந்நூலின் ஆசிரியர் கண்ணன் சேந்தனார் எனும் புலவராவர். இந்நூலில் குறிஞ்சி நிலத்தில் பாயும் அருவியின் அழகை ஆசிரியர் அழகுறப் புனைந்திருக்கிறார்.

'யாழும் குழலும் முழவும் இயைந்தென
வீழும் அருவி விறன்மலை நன்னாட'

என்னும் அடிகள் மேற்கூறிய கருத்தை உணர்த்தும்.

தலைவன் திரும்பி வரும் செய்தியினைத் தன் உடற் பூரிப்பாலே அறிந்தேன் என்று தோழிக்குத் தலைவி கூறும் செய்தி நயமானதாகும்.

'தவழ்சிறைச் சேர்ப்பன் வருவான்கொல் தோழி!
திகழும் திருவமர் மார்பு'

திணைமாலை நூற்றைம்பது

இதனைப் பாடியவர் கணியன் மேதாவியார் என்னும் புலவராவர். இவர் சமண சமயத்தினர் என்பர். ஒவ்வொரு திணைக்கும் முப்பது பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. அகத்திணை அமைந்த இப் பாடல்களிலே வடசொற்களும் சில விரவி வருவதனைக் காண்கிறோம். இவர் பாண்டியன் வேந்தன் ஒருவனால் ஆதரிக்கப்பட்டவர் என்பது நூலிற் காணக்கிடக்கும் அகச்சான்று ஒன்றால் தெரியவருகின்றது.

'இம்மையிற் செய்த வினை இம்மையிலேயே பலன் அளிக்கும்' என்றோர் அரிய செய்தியினை இவ்வாசிரியர் குறிக்கின்றார்.

'இம்மையாற் செய்ததை யிம்மையே ஆம்போலும்!
உம்மையே ஆமென்பர் ஓரார்கண்'.

இந்நூலின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

ஐந்திணை ஐம்பது

இஃது ஐந்திணைகள் ஒவ்வொன்றிலும் பத்துப்பாட்டுகளாக மொத்தம் ஐம்பது பாடல்களைக் கொண்டிலங்குவதால், ஐந்திணை ஐம்பது என்னும் பெயரினைப் பெற்றது. பல நேரிசை வெண்பாக்களும், சில இன்னிசை வெண்பாக்களும் அமைந்து ஐந்திணையின் உரிப்பொருள்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றன. இதன் ஆசிரியர் மாறன் பொறையன் என்பர். மாறன் என்பது பாண்டியனையும், பொறையன் என்பது சேரனையும் குறிக்கும் பெயர்களாகும். இவர் தென் பாண்டி நாட்டினரோ என்னும் ஐயப்பாடு சிலர்க்கு உண்டு.

வறண்ட பாலை நிலத்திலே ஓர் வற்றாத அன்புக்காட்சியைக் காட்டுகிறார் இப் புலவர்:

'சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டி—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.' —38

ஐந்திணை எழுபது

இஃது ஒவ்வொரு திணைக்கும் பதினான்கு பாடல் களாக, எழுபது பாடல்கள் கொண்டது; அகப்பொருள் துறைக்கு இலக்கியமாய்க் காட்டப்படும் நல்ல நூல். இந்நூலின் காப்புச் செய்யுள், பிள்ளையார் வணக்கத்தைக் கொண்டிருக்கிறது. அறிஞர் சிலர் பிள்ளையார் வழிபாடு கி.பி.ஏழாம் நூற்றாண்டில்தான் சாளுக்கிய நாட்டினின்றும் இங்கு வந்தது என்று துணிகின்றனர்.

இந்நூலின் ஆசிரியர் மூவாதியார் என்பவர். இவர் சமண சமயத்தினைச் சார்ந்தவர் என்று சிலர் கூறினும், போதிய அகச்சான்றுகள் இல்லாத காரணத்தால் அதை உண்மை என்று கொள்வதற்கில்லை என்பர். இந்நூலின் முப்பத்தாறாம் பாடலில் காணப்படும் பின்னிரண்டு அடி களும் ஐந்திணை ஐம்பதின் முப்பத்தெட்டாம் பாடலின் பின்னிரண்டடிகளோடு ஒத்துள்ளன. காதலர்ப் பிரிந்த வரிடம் மாலைக்காலம் 'கொலைக்களத்து ஏதிலர் போல' வரும் என்ற குறட்கருத்து,

'புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்'

என்ற இந்நூலில் ஆளப் பட்டிருக்கிறது.

திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று பொருள்களும் திரிகடுகம் என்று வழங்கப்படும். இம் மூன்று பொருள்களால்

இயன்ற மருந்து உடல் நோயைப் போக்கும் தன்மையைப் பெற்றிருப்பதுபோல, இந் நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் மூன்று அரிய கருத்துகளும் உளநோயைப் போக்கி உரமூட்டும் தன்மையவாம் என்பர். இந்நூலில் திருமாலைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடலுடன் நூற்றொரு பாடல்கள் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் நல்லாதனார் என்னும் புலவர் ஆவர். இவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர் என்பர்.

'அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்-சொல்லின்
அரிதகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றுங்
திரிகடுகம் போலு மருந்து'

என்ற பாட்டும்,

'தோள்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை.' —2

'வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்.' —21

'நெஞ்சம் அடங்குதல் வீடாகும்.' —43

என்னும் தொடர்களும், இந்நூலின் பெருமையை விளக்கப் போதியனவாகும்.

ஆசாரக் கோவை

பல்வேறு வெண்பா வகைகளும் விரவி, கடவுள் வாழ்த்துத் தவிர்த்து நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டதாய் இந்நூல் விளங்குகிறது. இந்நூல் மக்கள் அன்றாட வாழ்வில் கொள்ளவேண்டுவன இவை, தள்ள வேண்டுவன இவை என்பதைக் கூறுகிறது. எனவே, இதனை வடமொழிக் கருத்துகள் வழங்குவது போன்றதொரு நூல் என்பர். இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்

என்பவர். இவர், வடமொழியில் இருடிகள் சொல்லிய ஆசார சீலங்களைத் தொகுத்து ஆசாரக் கோவை என்னும் இந்நூலில் கூறுவதாகச் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்று செப்புகிறது. இவர் காலமும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாய் இருக்கலாம் என்பர்.

கடவுள் வணக்கம், உண்ணல், உறங்கல், உபசாரம், ஒழுகும் முறை முதலிய செய்திகளை இந்நூலில் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

பழமொழி

இந்நூலின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்திருக்கின்ற காரணத்தால், இதற்கு இப் பெயர் அமைந்தது. கடவுள் வாழ்த்துடன் நானூறு வெண்பாக்களைக் கொண்ட நீதிநூலாய் இந்நூல் திகழ்கிறது. பழமொழிகளுக்குப் பெயர்போன நாடு நம் தமிழ்நாடு. எனவே, அக்காலத்தில் வழங்கிய பழமொழி களில் சிலவற்றை ஈற்றடியாகக் கொண்டு இந்நூல் அரிய நீதிகளையும் உண்மைகளையும் புலப்படுத்துகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலே திருக்குறள் நாலடி யாரை அடுத்து, இந் நூலுக்குச் சிறப்பினைத் தரலாம். அரிய வரலாற்றுச் செய்திகள் சில இந்நூலில் அமைந்திருக்கின்றன. முடியுடைய மூவேந்தரைப் பற்றிய செய்திகளும், கடையெழு வள்ளல்களுள் சிலரைப் பற்றிய செய்திகளும், இதிகாசப் புராணக் கதைகளும் இந்நூலில் காணப்படுகின்றன. மேலும், முப்பத்தொன்றாம் பாடலில் பல்யானைச் செல்கெழு குட்டு வனைப் பற்றிய குறிப்பும், இருபத்தொன்றாம் பாடலிலே கரிகாலன் நரைமுடித்து முறைசெய்த செய்தியும், நாற்பத் தொன்பதாம் பாடலிலே தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனைப் பற்றிய செய்தியும், தொண்ணூற்று மூன்றாவது பாடலில் மனுநீதி கண்ட சோழனைப்பற்றிய செய்தியும், நூற்றிரண்டாவது பாடலிலே பொற்கைப்

பாண்டியனைப் பற்றிய செய்தியும், முந்நூற்று அறுபத் தொன்றாவது பாடலில் பாரி முல்லைக்குத் தேரீந்த செய்தி யும், பேகன் மயிலுக்குப் போர்வை தந்த செய்தியும், கூறப் பட்டிருக்கின்றன. சொற்சுருக்கமும் பொருள் ஆழமுடைத்தா தலுமான சிறப்புகள் இந் நூலில் காணப்படுகின்றன.

இதன் ஆசிரியர் முன்றுறையரையர் என்பவர். இவரை முன்றுறை என்று ஊரையாண்ட ஒரு குறுநில மன்னர் எனக் கொள்வர் சிலர். இவர் சமயம் சமண சமயமாகும். இவரது காலம் மதுரையில் வச்சிரநந்தி சங்கம் நிலவிய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

சிறுபஞ்ச மூலம்

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களும் மருந்துக்குப் பயன்படும். அம் மருந்து சிறு பஞ்சமூல மெனப்படும். அதுபோல இந் நூலின் ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிடப்படும் ஐயைந்து அரிய பொருள்கள் வாழ்க்கையின் உயர்விற்குப் பயன்படும் எனலாம். எனவே இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது. சிறப்புப் பாயிரத்தில் காணப்படும் இரண்டு செய்யுள்களைத் தவிர்த்து, இந்நூலில் நூற்றிரண்டு பாட்டுகள் உள்ளன.

இந்நூலின் ஆசிரியர் காரியாசான் என்பவர். இவரைச் சமணர் என்று கூறினும், இவர் தம் நூலில் சமண சமயக் கருத்துகளைச் சிலவாகவும், சமயப் பொதுக் கருத்துகளை மிகுதியாகவும் கூறியுள்ளார். இந்நூலின் முப்பத்து மூன்றாம் பாடலில் உண்மைக் கவிஞனது பெற்றியினை விளக்குகிறார். 'மெய்யுணர்வு ஒன்றால்தான் வீட்டுப் பேற்றினை .ஒருவன் எய்த இயலும்' என்று கூறுகிறார்.

'தானத்தால் போகம் தவத்தால் சுகம்சுகமா
ஞானத்தால் வீடாகும் நாட்டு'

என்பது காண்க.

முதுமொழிக் காஞ்சி

இந்நூலைப் பாடியவர் கூடலூர்கிழார் என்பவர். ஐங்குறு நூற்றினைத் தொகுத்த புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரே இவர் என்பர் ஒரு சிலர். குறட்டாழிசையால் இயற்றப்பெற்ற நூல் இது. பப்பத்துச் செய்யுள்கள் அடங்கிய பத்துப் பகுதிகளைக் கொண்டு இந்நூல் விளங்குகிறது. இவர் 'கல்வியிலும் ஒழுக்கமே மேற்பட்டது' என்று குறிப்பிடு கின்றார்.

'ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலின் சிறந்தன் றொழுக்க முடைமை,' —17

'நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.' —1:6

'நசையிற் பெரியதோர் நல்குர வில்லை,' 6:7

'இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்,' 10:9

இவ்வாறான சிறந்த கருத்துகளை இந்நூலில் நாம் கண்டு இன்புறலாம்.

ஏலாதி

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய அறுவகைப் பொருளும் மருத்துவ அளவில் சேர்த்துச் செய்யப்பட்ட மருந்து ஏலாதி என்பர். அது உடலுக்கு வன்மை செய்வதுபோல, இந் நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்படும் ஆறு பொருள்களும் உள்ளத்திற்கு உரமூட்டுவன என்பர். கடவுள் வாழ்த்துப் பாடலுடன் எண்பத்தொரு செய்யுள்கள் கொண்ட நூல் இது.

இந்நூலாசிரியர் கணிமேதாவியார் என்பவர்.

இன்னிலை

பொய்கையார் இந்நூலைப் பாடினார் என்பர். இது அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்துவது. நாற்பத்தைந்து வெண்பாக்களால் ஆன நூல் இது. இந்நூலில் சிவபெருமானைப் பற்றிய குறிப்பு வருகிறது:

'ஆக்கி யளித்தழிக்குங் கந்தழியின் பேருருவே!' —30

இந்நூலில் நடையழகு பொருந்திய நயம் கெழுமிய பாடல்களையும் காண்கிறோம்.

ஒத்த வுரிமையளா வூடற் கினியளாக்
குற்றம் ஒரூஉம் குணத்தளாக்—கற்றறிஞர்ப்
பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து
பேணும் தகையினாள் பெண்.'

கைந்நிலை

திணைக்குப் பன்னிரண்டு பாடல்களாக ஐந்திணைக்கும் அறுபது பாடல்கள் கொண்ட நூலாகும் இது. இவ் வெண்பாக்களில் பல சிதைந்து போயின. இந்நூலின் ஆசிரியர் புல்லங்காடனார் என்பவர். இவர் காலமும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாய் இருக்கவேண்டும் என்பர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூலைச் சார்ந்த நூல் இன்னிலையா, கைந்நிலையா என்பதில் அறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

பொதுவாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பலவும் அரிய கருத்துகளை—நீதிக் கொள்கைகளை—உணர்த்தி நிற்கின்றன.

சிலப்பதிகாரம்

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு' என்று, சிலப்பதிகாரம் தமிழ் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட பான்மையினைப் பாடினார் பாரதியார். தமிழில் வழங்கும் காப்பியங்களில் தலையாயது சிலப்பதிகாரமே. உலகக் காப்பியங்களோடு ஒப்பவைத்து எண்ணப்படும் தகுதி பெற்றது சிலப்பதிகாரமே. இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப்பெற்றதால், முத்தமிழ்க் காப்பியம் என்றும், உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் வேறு பெயர் களாலும் வழங்கப்படும்.

சிலப்பதிகாரம் எழுந்த காரணம்

செங்குட்டுவன் தன் பரிவாரங்களுடன் மலைவளம் காணச் சென்றனன். குன்றக் குறவர், கண்ணகி தம் கண்முன் விண்புலம் ஏகிய வியத்தகு காட்சியினைக் கூறினர். அருகில் அமர்ந்திருந்த சாத்தனார் எனும் புலவர் நிகழ்ந்த கதை அனைத்தையும் அறிவித்தார். இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றினை எழுதத் துணிந்தார். இதனை,

'அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்.' — 55-60

என்று பதிகம் கூறுகிறது. இப் பதிகம் இளங்கோவடிகள் எழுதியதா அன்றிப் பிற்காலத்துப் புலவர் யாரேனும் எழுதிச் சேர்த்ததா என்பதில் ஐயப்பாடு உண்டு.

நூலின் அமைப்பு

இது தண்டமிழ் நிலமாண்ட வண்தமிழ் வேந்தர் மூவரையும் கிளத்திக் கூறுகிறது. அதற்கேற்பவே சோழன் சிறப்புப் புகார்க் கண்ணாடத்திலும், பாண்டியனைப் பற்றிய செய்திகள் மதுரைக் காண்டத்திலும். சேரன் செங்குட்டுவனின் வீரமேம்பாடும் வென்றிச்சிறப்பும் வஞ்சிக் காண்டத்திலும் புலனாகின்றன. இதனை ஓர் ஒற்றுமைக் காப்பியமாக இளங்கோவடிகள் படைத்துள்ளார் எனலாம்.

அரசியல் நெறியினின்றும் வழுவியவர்க்கு அறக் கடவுளே தண்டனை தரும் என்பது, மதுரைக் காண்டத்தில் நீதி தவறிய பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறத்தலினால் உணர்த்தப்படுகிறது. கற்பு மேம்பாட்டில் சிறந்த பத்தினியைத் தேவரும் தொழுவர் என்ற செய்தி வஞ்சிக் காண்டத்தில் சிறப்பாகப் பேசப்படுகிறது. ஊழ்வினை இம்மையில் வந்து இடர் பயக்கும் என்பது காப்பியத்தின் பலவிடங்களிலும், சிறப்பாகப் புகார்க் காண்டதில் கானல் வரியிலும் உணர்த்தப்படுகிறது.

நூலின் சிறப்பு

அரங்கேற்று காதையில் வரும் செய்திகளால், ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன் என்போர் இயல்புகளை அறிகிறோம். இந்திர விழவூரெடுத்த காதையில் காவிப் பூம்பட்டினத்தின் சிறப்பையெல்லாம் அறிகிறோம். கானல் வரியில் தமிழின் விழுமிய பெற்றியினை எடுத்து விளக்கும் பல அழகிய பாடல்களைக் காண்கிறோம்.

'தம்முடைய தண்ணளியும் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்!'

என்று தலைவியின் கூற்றாய் அமைந்த பாடல் சிறந்த பாடலாக வைத்து எண்ணத் தகுந்தது.

இந்திரவிழவூரெடுத்த காதை, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்பவற்றில் முறையே மருதம், நெய்தல், பாலை, முல்லை குறிஞ்சி ஆகிய திணைகளும், கூத்து, பாட்டு, விழா முதலிய செய்திகளும் விரவி வந்துள்ளன. வஞ்சிக்காண்டம் தமிழர்தம் புறத் திணைக்குரிய செய்திகளாம் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் முதலியவற்றினைப் புலப்படுத்தி நிற்கிறது.

உலகக் காப்பியங்களெல்லாம் உயர்ந்த மக்கள், தேவர்கள், அரசர்கள் இவர்களைப் பற்றியே எழுந்திருக்க, இளங்கோவடிகள் தமிழின் முதற்காப்பியமாம் சிலப்பதிகாரத்தைக் கோவலன், கண்ணகி போன்ற எளிய மக்களையே தம் காப்பியத் தலைவர்களாகக் கொண்டு 'குடிமக்கள் காப்பியமாகப்' படைத்துள்ளார். சங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்களே அகம் புறமாக மலர்ந்திருக்க, முதன்முதல் சமுதாயப் பாடல்களை—ஒருவரைப் பற்றியு தொடர்ந்த முழுக்கதையினையும் ஊரும், பேரும், நாடும் கிளத்திக் கூறும் பாடல்களை இந்நூலிற் காண்கிறோம். பெண்மைக்கு முதலிடம் தந்து அதற்கு உரிய சிறப்பினை வைத்துப் பெண்மையினை வாழ்த்திப் போற்றுவதனையும் இக் காப்பியத்தால் அறியலாம்.

"நம் சிலப்பதிகாரம், உலகத்துச் சிறந்த காவியங்களாகக் கருதப்படுபவைகளைக்காட்டிலும், இசைவு சிறந்து விளங்குகின்றது" என்றும், 'உலகத்துச் சிறந்த நாடகங்களுள் செகப்பிரியரின் 'மாக்பெத்து' ஒன்றே இதைப்போல் சிறப்புடையது' என்றும் அறிகிறோம். அடிகள் தமிழுக்களித்த இக் காவியம் உலகத்துச் சிறந்த நூல்களில் ஒன்றாயமையும் தகுதி சிறக்கப் பெற்றிருப்பதோடு அவற்றுள் ஒளிமிக்கதா

யும் இருக்கிறது.'[1] இந்நூலினைத் தமிழில் படிக்க இயலாமல் ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்து உள்ளத்தைப் பறி கொடுத்த ஆந்திர அறிஞர் திரு. சி. ஆர். ரெட்டி அவர்கள், இத்தகைய இலக்கியம் தம் மொழியில் அமைந்திருக்க வில்லை யாதலின், தமிழ் மொழிபால் பொறாமை கொள் வதாக வியந்து பாராட்டுகின்றார்.[2]

இதன் ஆசிரியர் இளங்கோவடிகள். 'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த' என்ற பதிகத்தின் முதல் தொடர் இவரைச் சமணத்துறவி எனக் கூறுகிறது. மேலும் கதையின் இறுதிக் காதையான வரந்தரு காதையில்,

'யானும் சென்றேன் என்னெதி ரெழுந்து
தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி'

என்னவரும் அடிகளில், ஆசிரியர், கதையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார். இதனால் இவர் செங்குட்டுவன் தம்பியார் என்பதும், தம் தமையனாரது அல்லல் நீங்க அரச பவியைத் துறந்த செம்மல் என்பதும் தெரியவருகின்றன. செங்குட்டு வன் சிறந்த சைவன், இளங்கோவடிகள் சமயமும் சைவமே என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் கூறுவர். தம் சமயக் கருத்துகளைக் கூறக் கவுந்தியடிகளைப் படைத்திருப்ப தால் இவரைச் சமணர் என்பர் சிலர். இவர் சமயம் எப்படி யாயினும் ஆகுக, சமய ஒருமைப்பாட்டினையும் அமைதி யினையும் கூற வந்தவர் இவர்.

1. திரு. மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகார இரசனை ப. 195.

2. As an Andhra I envy Tamil its possession of two such poems as Silappadhikaram and Manimekhalai for which I can find no equivalents in Telugu literature. Even in translation they dominate the Soul like charm, what they be like In the original—C. R. Reddy, Forward to the Ancient Dravidians—by T. R. Sesha Iyengar.

—p. xx

சொற்சுவை பொருட்சுவை கெழுமிய இந்நூல் அக்கால அரசியல், மக்கள் வாழ்வு, சமயநிலை, சமுதாய ஒருமைப்பாடு, தொழில்வளம், திணைவளம், இயல், இசை, நாடக வளம் முதலிய இன்னோரன்ன பல செய்திகளைப் புலப்படுத்தி நிற்கும் சிறப்பு வாய்ந்தது.

நூலின் காலம்

இந்நூலில் கயவாகு என்னும் இலங்கை நாட்டின் வேந்தன் குறிப்பிடப்பட்டிருக்கிறான். இவன் இலங்கையில் அரசாண்ட காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர். எனவே, சிலப்பதிகாரத்தின் காலம் அக்காலமே என்பர். மாறாக, கட்டுரை காதையில் வரும்,

'ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடு அரசுகே டுறுமெனும்'

—134-136

என்ற அடிகளை ஆய்ந்த திரு. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள், இந்நூலின் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டென்பர். திரு. வையாபுரிப் பிள்ளையும் இக் கருத்தினையுடையவர். சிலப்பதிகாரம் ஆசிரியப்பா யாப்பினையே பெரும்பாலும் கொண்டுள்ளதாலும், சமயப் பூசலை உட்கொண்டிராததாலும், செங்குட்டுவன் கதையினைக் கூறுவதாலும், நூற்றுவர் கன்னர் என வரும் சதகர்ணிகள் என்று வடநாட்டு வேந்தர் கூறப்படுதலாலும், இன்னோரன்ன காரணங்களால், இதனைக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல் என்றே அறிஞர் பலர் துணிகின்றனர்.

இந்நூலுக்கு அரும்பதவுரையாசிரியர் எழுதிய பழைய உரையும், பிற்காலத்தில் அடியார்க்கு நல்லார் எழுதிய

சிறந்த உரையும் உள்ளன. அடியார்க்கு நல்லார் உரையால் தான் அக் காலத்தின் இசை, கூத்துப் பற்றிய செய்திகளை நாம் அறிகிறோம்.

மணிமேகலை

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'இரட்டைக் காப்பியங்கள்' எனப்படும். இரண்டும் ஒரே காலத்தில் எழுந்தன என்பது சிலப்பதிகாரம் நமக்கு உணர்த்தும் செய்தி. ஐம்பெருங் காப்பியங்களில் இவையிரண்டும் வைத்தெண்ணப் படுகின்றன. இந் நூற்கதை சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புடையது. எனவே, சிலப்பதிகாரத்தின் உரைபெறு கட்டுரையில்,

'மணிமே கலையோடு உரைப்பொருள் முற்றிய
சிலப்பதி காரம் முற்றும்'

என்னும் தொடர் காணப்படுகிறது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை. அவளே இக் கதையின் தலைவி. கண்ணகி வீரச்செல்வியாகவும் மாதவி அன்புச் செல்வியாகவும் காட்டியளிக்கும் நேரத்தில், மணி மேகலை அறச்செல்வியாக—தவச்செல்வியாக—காட்சியளிக் கிறாள். கதைத் தலைவியின் பெயரே காவியத் தலைப்பாய் அமைந்துள்ளதனை நாம் இங்குக் காண்கிறோம். "மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்திருத்தக் காவியம் மணிமேகலை. இலக்கிய உலகில் இந் நூலின் தனிச்சிறப்பு இது. இல்லறக் குடியிற் பிறந்த வணிகப்பெண் நாடறிய ஆற்றல் காட்டிச் சிலப்பதிகாரத் தின் தலைவியாகின்றாள். இஃது ஓர் இலக்கியப் புரட்சி. பரத்தைத் தொழிலிற் கன்றிய சித்திராபதியின் பேர்த்தி மணிமேகலை காவியத் தலைவியாகின்றாள். இது முன்னை யினும் பெரும் புரட்சியன்றோ?.....பரத்தை யொழிப்

போடு மதுவொழிப்பு, சிறையொழிப்பு என்றினைய சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியம், இக்காவியம்."[1]

இந்நூலை இயற்றியவர் சாத்தனார் என்பவர். இவர் சமயம் பௌத்தம். புத்த சமயக் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே, அவர் இந் நூலை இயற்றினார் என்பது தெரிகிறது. ஒரே காலத்தில் எழுந்த தாகக் கூறப்படும் சிலப்பதிகாரம், சமய ஒற்றுமையைக் கூற மணிமேகலை சமயப்பூசல்களை வளர்த்து நிற்கிறது. எனவே, இவையிரண்டும் ஒரே காலத்தில் எழுந்த நூலென்று கொள்வதில் இடர்ப்பாடுகள் உண்டு என்பர். இதனால்தான் சங்க இலக்கியங்களில் காணப்படும் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரினின்றும் வேறுபட்ட புலவர் இவர் என்று துணிகின்றனர். சமயக் கருத்துக்களையே பரப்ப எழுந்த நூலாதலால், காவியச் சுவை குறைந்தும் சிலப்பதி காரத்தின் பிற இலக்கியக் கூறுகள் இதில் அமையாமலும் காணப்படுகின்றன. தமிழ் மொழியில் முதன்முதல் தோன்றிய சமயக் காப்பியம் இது எனலாம். வடநாட்டில் பிறந்து வளர்ந்த சமயக் கருத்தினைத் தமிழில் எழுதப் புகுந்ததால் சாத்தனார் பல பாலிச் சொற்களையும் வட சொற்களையும் புகுத்தியுள்ளார். சங்க காலத்தில் சில வட சொற்களே இலக்கியத்தில் வழங்கியிருக்க, நூற்றுக்குப் பத்துப் பதினைந்து அளவில் வடசொற்கள் மணிமேகலை யில் வழங்குவதாயிற்று. ஓரோவழி, சில இடங்களில் தமிழ் மரபுச் சொற்களையும் ஆண்டுள்ளார். "சமய சம்பந்தமான சில சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இடத்திற்கேற்ப இவர் மொழிபெயர்த்து அமைத்திருத்தல் மிகப் பாராட்டிற்கு உரிய தொன்றாகும்" என்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தம் மணிமேகலைப் பதிப்பில் கூறி

---

1. டாக்டர் வ. சுப. மாணிக்கம் - இரட்டைக் காப்பியங்கள், பதிப்புரை ப. 6 - 263.

யுள்ளார்.[1] 'மணிமேகலை துறவு' என்றும் இந் நூல் வழங்கப் படுகிறது. சில கிளைக்கதைகளும் இந்நூலில் இடம் பெறு கின்றன.

இந்நூல் விழாவறை காதை தொடங்கி, பவத்திற மறு கெனப் பாவை நோற்ற காதை வரை முப்பது காதைகளைக் கொண்டுள்ளது. சில இடங்கள், சொல், தொடர், உவமை கள் சிலப்பதிகாரத்தோடு ஒப்புமை பெற்று வருகின்றன.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்'

என்னும் அடிகளில் குறளை அப்படியே பெயர்த்துக் கொடுத்தும், திருவள்ளுவர்க்கு ஏற்றம் தந்தும், ஆசிரியர் குறித்துச் செல்கிறார். பிற சமயத்தவர் கருத்துக்களை,

'சிந்தை யின்றியும் செய்வினை யுறுமெனும்
வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்
எய்தா தென்போர்க் கேது வாகவும்'

என்று கண்டிக்கிறார்.

'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது'

என்னும் அடிகளில், நிலையாமையினை வற்புறுத்தி, அறத் தின் மாட்சியினை வலியுறுத்துகிறார்.

---

1. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், மணிமேகலை முன்னுரை. ப. XXV.

இவ்வாறு பௌத்தக் கோட்பாடுகளைப் பலபடக்கூறும் இந்நூல் சங்க காலத்திற்குப் பின்னரே தோன்றியிருத்தல் கூடும். மேலும், இந்நூலின் பதினெட்டாவது காதையான உதயகுமரன் அம்பலம் புக்க காதையில், 'குச்சரக் குடிகை' (குசல குண்டிகை) குறிப்பிடப்பட்டுள்ளது. இது கி. பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியதென்பர். சிலப்பதிகாரத் திற்குப் பின்னரே மணிமேகலை நூல் எழுந்திருக்க வேண்டு மென்பதே அறிஞர் பலரின் கருத்தாகும்.

இந்த இருண்ட காலப் பகுதியிலேயே சைவ வைணவப் பெரியோர் சிலரும் சமய வாழ்வு நடாத்தினர்.

காரைக்காலம்மையார்

இக்காலத்தே வாழ்ந்தவர், சைவ சமயத்தைச் சார்ந்த பெண்பாற்புலவர் காரைக்கால் அம்மையார் ஆவர். இவர் வரலாறு பெரியபுராணத்தில் அறுபத்தாறு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இவர் இயற்றிய நூல்கள் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும், திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டுமாகும். சிவபெரு மானின் ஒப்பற்ற உயர்நிலையினை விளக்கும் பாடல்கள் இவை. அந்தாதித் தொடையமைந்த வெண்பாவும் கட்டளைக் கலித்துறையுமாயமைந்த பாடல்கள் இவை. பக்தி நலங்கெழுமிய இப்பாடல்கள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இறைவனே எல்லாம் என்னும் கருத்தில்,

'அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்.'

என்று அற்புதத் திருவந்தாதியில் ஒரு பாடல் அமைந் துள்ளது. இவர் சிவபெருமானிடத்தில் வைத்திருந்த

அளவற்ற அன்பினை, அற்புதத் திருவந்தாதியில் அமைந் துள்ள பாடலொன்று தெரிவிக்கின்றது.

'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறி பணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு.''

சம்பந்தர் இவரைப் பற்றித் தேவாரத்தில் குறிப்பிடுவ தால், இவர் காலம் சம்பந்தர் காலமான கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னது என்பர்.

திருமந்திரம்

வாழ்க்கையின் பல்வேறு நிலையாமையினையும் கண்டு தெளிந்த சான்றோர் இந்நூலாசிரியர். இவர் திருமூல நாயனார் என்று வழங்கப்படுகிறார். இவரைச் சிவயோகத் தில் அமர்ந்த யோகி என்பர். திருமந்திரம், மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒன்பது தந்திரங்களில் இரு நூற்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் உள்ளன. சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையில் இந்நூல் அடங்கும் சிறப்புடைத்து. இந்நூல் "ஐந்து கரத்தனை ஆனை முகத் தனை" என்ற விநாயக வணக்கத்துடன் தொடங்குகிறது. இக்கடவுள் வணக்கச் செய்யுளைப் பிற்காலப் புலவர் ஒருவர் எழுதிச் சேர்த்திருக்கலாம் என்பர்.

இவர் அரிய கருத்துகளை-தெளிந்த அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

'நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்.'

—பா. 85

'ஆர்க்கும் இடுமின்: அவரிவர் என்னன்மின்,'

—பா. 250

'உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம் பாலயம்'

—பா. 1328

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்' —பா. 2104

'அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்'

பா. 2944

இந்த இருண்ட காலத்திலேயே முதலாழ்வார்கள் எனப் படும் பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் வாழ்ந்தார்கள்;[1] இக்கால இலக்கியங் களில் பெரும்பாலன நீதி நூல்களாயும் எஞ்சியவை சமய நூல்களாயும் முகிழ்த்தன எனலாம்.

---

1. இவர்களைப் பற்றிய செய்திகளை 'ஆழ்வார்கள்' என்ற தலைப்பில் காண்க.

4. பல்லவர் காலம்

(கி. பி. 600—850)

சங்கம் மருவிய காலத்தில் தமிழ் நாட்டின் ஆட்சி களப்பிரர் என்பார் கையில் சிக்கித் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தடை ஏற்பட்டது என்பதைக் கண்டோம். புறச்சமயத்தினரான களப்பிரர்கள், இந்நாட்டின் பழஞ்சமயங்களான சைவ வைணவ சமயங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களைத் தோண்டிப் பார்த்த பொழுது சிவவழிபாடும், லிங்கவழிபாடும், இங்கு வாழ்ந்த மக்களுக்கு இருந்திருக்க வேண்டும் என்ற உண்மை புலனாகின்றதென்று ஸர். ஜான் மார்ஷல் (Sir John Marshall) என்பார் எழுதியுள்ளார். "இருக்கு வேத காலத்திற்கும் முற்பட்ட சமயம், சைவ சமயமாகும்,'[1] என்பர் சிலர். அது போன்று திருமாலைப் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் 'மாயோன்' என்றும், 'பூவைநிலை' என்றும் கூறப்படுகின்ற சொற்களால் தெரிய வருகின்றன. மேலும் 'பாணினி சூத்திரப் பாடியத்தில் பதஞ்சலியார் வாசுதேவனைப் பரதெய்வமாகக் கூறுவர்; எனவே, வாசுதேவ வணக்கம் பாணினி காலத்திலேயே இருந்திருக்கிறது என்று கொள்ளலாம்.' இப்படிப்பட்ட பழம் பெருஞ் சமயங்களுக்கு அரசாங்க ஆதரவு அற்றுப் போய்விட்ட காரணத்தினால் இவை போற்றுவாரற்றுக் கிடந்தன. பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கே களப்பிரர்கள் காலத்தில் மிகுந்திருந்தது. ஆனால், இக்களப்பிரர்கள் ஆறாம் நூற்றாண்டின்

---

1. திரு. E. S. வரதராச ஐயர், தமிழ் இலக்கிய வரலாறு (கி. பி.. 1 முதல் 1100 வரை) ப. 114

இறுதியில் தம் அரசியல் செல்வாக்கினை இழந்தார்கள். தெற்கே, நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய அரசன், களப்பிரர்களை வென்று நாட்டைக் கைப்பற்றினான். வடக்கே, பல்லவர்கள் ஆட்சி செல்வாக்குப் பெற்றுத் தொண்டை மண்டலம் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் 'கல்வியிற் கரையிலாக் காஞ்சி மாநகரை'த் தலைநகராகக் கொண்டு, நல்லதோர் ஆட்சியை நிலை நாட்டினர். இவர்கள் காலத்தில் சைவ வைணவ சமயங்கள் புத்துயிர் பெற்றுப் பொலிந்தன; வியத்தகு முறையில் வேகமான வளர்ச்சியினை யும் பெற்றன. இதனால் இக்காலத்தைச் 'சமய காலம்' என்றும் கூறலாம். சைவப் பெரியார் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் இக் காலத்தே தோன்றிச் சமய உணர்வு ஊட்டும் பக்திப் பாடல்களைப் பாடினார்கள். இதனால் சமய எழுச்சி ஏற்பட்டது. மன்னரையும் மக்களையும் பாடுவதுபோல், இறைவனையும் இறைவன் அடியார்களை யும் பாடும் இலக்கிய மரபு எழுந்தது. 'தமிழோடு இசை பாடல் மறந்தறியாத'வர்களான சமய குரவர் நால்வரும் பிறந்திலரேல், சைவ சமயம் தாழ்ச்சியுற்றிருக்கும் என்னும் கருத்தில்,

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரா னஞ்செழுத்தெங் கே!'

என்னும் பாடல் வழங்குகிறது. 'காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பேன்' என்றபடி, ஆழ்வார்கள் வாழ்வு அமைந்தது. இறைவனைக் 'காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கிப்' பாட விருத்தப்பா பயன்பட்டது.

'அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல், பிற இலக்கியங்களில் இல்லை. எனவே மொழி நூல் முறையில் எத்துணை வழுவுடையதாய் இருப்பினும், ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத் தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும்,

ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின், தமிழ் இரக்கத்தின் மொழி எனலுமாம்.'[1] இவ்வாறு, சமயமும் தமிழும் இரண்டறப் பொருந்தி நிற்கும் பான்மையினை மறைத்திரு. தனிநாயக அடிகள் குறிப்பிடுகின்றார்கள்.

நாயன்மார்கள்

திருஞானசம்பந்தர்

இவர், சீகாழியிலே அந்தணர் மரபில் சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும் மகவாய்த் தோன்றினார். இவர் 'ஆளுடைய பிள்ளை' என்றும், 'காழிவள்ளல்' என்றும் வழங்கப்படுவர். இளமையிலேயே இறைவன் அருள்பெற்று, 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரானார்.' தமிழ்நாட்டின் பல தலங்களுக்கும் சென்ற இவர், இறுதியில் திருப்பெருமண நல்லூரில் தம் பதினாறாவது வயதில் மணக்கோலத்துடன் இறைவனோடு கலந்தார்.

சைவ சமயம் இந்நாட்டில் மீண்டும் தழைக்கப் பாடுபட்டவர் இவர். 'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' வந்த இவர், 'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்பவர்'களை வாதில் வென்றார். பெரிய புராணம் 'பிள்ளை பாதி; புராணம் பாதி' என்று இவருடைய வரலாற்றிற்கே சீரிய இடம் தருகிறது. இவர் நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டியனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குக் கொணர்ந்தார். கூன் பாண்டியன் என்று வழங்கப்படும் அப் பாண்டியன் மனைவி மங்கையர்க் கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சிறந்த சிவபக்தர்

---

1. சோமலெ. வளரும் தமிழ் ப. 317.

இந்நிகழ்ச்சியால் அரசியல் செல்வாக்குச் சைவ சமயத்திற்குக் கிட்டிற்று: சைவ சமயம் வளர்ந்தது. ஆதிசங்கரர் இவரைத் 'திராவிட சிசு' என்பர்.

இவர் இயற்றியவை 384 பதிகங்கள். அவற்றில் இயற்கை வருணனையும், தத்துவக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

'வாவிதொறும் வண்கமலம் முகங்காட்ட
செங்குமுதம் வாய்காட்ட
காவியிருங் கருங்குவளைக் கருநெய்தற்
கண்காட்டுங் கழுமலமே'

என்னும் பாட்டில், இயற்கையின் இனிய பெற்றியினைக் காணலாம். தலைவி தன்னைக் காதலியாகவும் இறைவனைக் காதலனாகவும் எண்ணிக் கிளியைத் தூதனுப்பும் அகத்துறை அமைதியும் இவர் பாடலில் உண்டு :

'சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.''

தூது என்பது ஒருவர் தம் கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்க இடையே பிறரொருவரை அனுப்புவதாகும். (A kind of poem in kalivenpa which purports to be a message of love sent through a companion, bird etc, to effect a reconciliation.)

இவர்தம் பாடலில் சிறுத்தொண்டரைச் சிறப்பிப்பதால், இவரது காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டாகும்.

திருநாவுக்கரசர்

இவர் திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில், புகழனார்க்கும் மாதினியாருக்கும் மைந்தராய் உதித்தார்:

இளமையில் பெற்றோரை இழந்து, தமக்கையார் திலகவதியாரை மறந்து, சமண சமயம் புகுந்து, தருமசேனர் எனும் பட்டம் பெற்றுச் சூலை நோயால் வருந்தி, மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தார். இவர் இயற்பெயர் மருணீக்கியார். சம்பந்தர் இட்ட பெயர் 'அப்பர்' என்பதாகும். 'பாவுற்றலர் செந்தமிழ்ப் பதிகத் தொடை பாடிய பான்மையினால்' 'நாவுக்கரசர்' என்ற பெயரை இறைவர் வழங்கினார்.

இவர் எண்பத்தோர் ஆண்டுகள் வாழ்ந்து, வாழ்க்கையில் பல துன்பங்கள் பட்டு, அனுபவ முதிர்ச்சி பெற்ற அடியார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பரந்து பட்ட கொள்கையில், 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்' என்ற வீர வாழ்வு—தவ வாழ்வு—வாழ்ந்தவர். 'இவர், 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்' எனத் திருப்புத்தூர்த் தேவாரத்தில் பாடியிருப்பது, சங்கம் இருந்ததை வலியுறுத்தும். இவரைப் பல்லவன் நீற்றறையில் இட்டபொழுது, பின்வருமாறு பாடினார் :

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.'

இவர்தம் 311 திருப்பதிகங்களிலும் அவ்வளவாக இயற்கை வருணனை இடம்பெறவில்லை எனலாம். பாட்டினைப் படிப்பவர் மனக்கண் முன்னே இறைவனின் முழு வடிவத்தினையும் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றலை இவர் பாடலில் காணலாம் :

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீரும்

இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே.'

அகப்பொருள் தழுவி அமைந்தது போன்ற அழகிய தொரு பாடல், இவர் பாடல்களில் ஒரு முடிமணியாய்த் திகழ்கின்றது :

'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத் தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே!'

இவர் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குக் கொணர்ந்ததாகத் திருச்சிராப்பள்ளிச் சிவன் கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது. எனவே, இவரது காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே அந்தணர் மரபில் பிறந்து, பிறந்த இடத்தின் வைதிகத்திருவும் வளர்ந்த இடத்தின் மன்னவர் திருவும் பொருந்த வளர்ந்து, திருவாரூரில் பரவை நாச்சியாரைக் காதலித்து மணந்து, பின்னர் வேளாளர் குலத்துதித்த சங்கிலி நாச்சியாரையும் கடிமணம் புரிந்து, இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் இவர்.

இவருடைய வாழ்வில் துன்பங்கள் குறுக்கிடவில்லை. தம்பிரான் தோழர், நாவலூரர், வன்தொண்டர் முதலான

பெயர்களும் இவருக்குண்டு. இவருடைய பாடல்களில் இயற்கை வனப்பின் நயமெல்லாம் காணலாம் :

'அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.'

இவருடைய 'பித்தா பிறைசூடி', 'பொன்னார் மேனியனே', 'பண்ணிடைத் தமிழொப்பாய்' முதலிய பாடல்கள் ஓதுவார்களால் அடிக்கடி பாடப்படும். இவர், 'ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் கிடனாகி' என்று இறைவனைப் பாடுகிறார். 'கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரில்லை' என்று சங்க காலப் பாரியின் வண்மையைச் சிறப்பிக்கிறார். சைவ அடியார்களைப் பற்றிய குறிப்புகள், நாட்டுப் பிரிவுகள், ஆறுகள், கோயிற் பண்டாரங்கள், இசை நடனக் கலைகளின் வளர்ச்சி முதலியன பற்றிய குறிப்புகள் இவர் பாடல்களில் விரவி வருகின்றன. இவருடைய திருத்தொண்டத் தொகையே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் சேகிழாரின் திருத்தொண்டர் புராணத்திற்கும் வித்தாய் அமைந்தது. நம்பியாரூரர், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டிலும் தமிழ்நாட்டில் வாழ்ந்தார் என்பது முடிவாம்'.[1]

மாணிக்க வாசகர்

இவர் ஒருவாத புகழுடைய திருவாதவூரிலே பிறந்தார். அரிமர்த்தன பாண்டியனிடம் 'தென்னவன் பிரமராயன்' என்ற விருதுப் பெயர் பெற்று அமைச்சராய் விளங்கினார்.

---

1. திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 208.

அரசன் பொருட்டுக் குதிரை வாங்கச் சென்றபொழுது திருப்பெருந்துறையில் சிவனன்பு மீதூரப் பெற்று, வந்த வேலையினை மறந்து, அரசத் தொல்லைகளுக்கு உள்ளாகி, இறுதியில் இறைவன் இணையடி நீழலை அடைந்தார்.

இவரது வரலாறு, பிற்காலத்தில் எழுந்த புராணங்கள் பலவற்றால் புலனாகின்றது. இவர் இயற்றிய அரிய நூல் திருவாசகம். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத் திற்கும் உருகார்' என்பது மூதுரை. வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகள்,

'வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செங்கனித்தீஞ் சுவைகலந்து என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

என்று, தம் ஆழ்ந்த அனுபவத்தை உரைக்கின்றார். திருவாசகத்தைச் சிவப்பிரகாசரும் புகழ்ந்து பாடியுள்ளார்.

பிறநாட்டுப் பெரியோர்களையும் திருவாசகம் கவர்ந் துள்ளது. டாக்டர் போப்பு அவர்கள் இதனைப் பலபடப் பாராட்டி, ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

மணிவாசகப் பெருமான் இயற்றிய மற்றொரு நூல் திருக்கோவையார். கோவை நூல்களிலேயே சிறந்த நூல் இதுவேயாம் இது கட்டளைக் கலித்துறையான் அமைந்த நானூறு பாடல்களைக் கொண்டது.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நாட்டு மக்களின் உள்ளங்கவர்ந்த சமுதாயப் பாடல்களையும் பாடியுள்ளார் திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, உந்தி, திருத்தெள் ளேணம், திருப்பொற்சுண்ணம் ஆகிய பாடல்களை இவர் பாடியிருப்பது மக்கள் மனத்தைப் பிணிக்கும் நாட்டுப் பாடல் களுக்கு இவர் தந்த மதிப்பினைப் புலப்படுத்துகிறது. இவர்

பாடிய திருவெம்பாவை இன்றும் மார்கழித் திங்களில் வைகறையில் பக்தியோடும் சுவையோடும் பாடப்படுகிறது.

"உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ"' என்று மாணிக்கவாசகர் இறைவனைப் பாடியுள்ளார். மறைமலையடிகள், இவர் வாழ்ந்த காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்பர். ஆயின் அறிஞர் பலர் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் இவர் வாழ்ந்திருந்தார் என்பர்.

ஆழ்வார்கள்

ஆழ்வார் பன்னிருவருள், முதலாழ்வார் என்று குறிக்கப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவர், மற்ற ஆழ்வார்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் ஆவர்.

பொய்கை ஆழ்வார்

இவர் காஞ்சிபுரத்திலேயே பிறந்து, 'மாயவனைமல்லால் இறையேனு மேத்தா தெம்நா,' என்று பத்தி வாழ்வு வாழ்ந்தவர். இதனால் சங்ககாலப் பொய்கையாரினும் வேறுபட்டவர் இவர் என்பர். ஆயின் இவரே அப் பொய்கையாழ்வார் என்று திரு. மு. இராகவையங்கார் குறிப்பிடுகின்றார்.[1] கதிரவனை விளக்காக வைத்து இவர் பாடியுள்ள பாடல் வருமாறு :

'வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யக் கதிரோன் விளக்காச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.'

---

1. திரு. மு. இராகவையங்கார், ஆழ்வார்கள் கால நிலை, ப. 27.

பூதத்தாழ்வார்

இவர் மாமல்லபுரத்தினர் என்று குருபரம்பரைகள் சொல்கின்றன -

'மா மல்லை கோவல் மதிற்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக் கிடம்'

என்று இவர் பாடியுள்ளது மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும். இவர் அன்பே தம் விளக்காக எண்ணிப் பாடியுள்ளார்:

'அன்பே தகளியா யார்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய்—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.'

பேயாழ்வார்

இவர், திருமயிலாப்பூரில் பிறந்து, திருமாலின் திருக்கோலம் கண்டு பாடிய பாடலைக் காண்க:

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமுங் கண்டேன் —செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று.'

திருமழிசையாழ்வார்

திருமழிசையிலே பிறந்த இவர், திருவல்லிக்கேணியிலே நெடுங்காலம் யோகத்தில் ஆழ்ந்திருந்தார் என்பர். இவருடைய சீடன் கணிகண்ணன் பாடிய வெண்பா அழகுடையது.

'கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.'

திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகிய நூல்களைத் திருமழிசையாழ்வர் பாடியுள்ளார். இவர் பிற சமயக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறார். 'காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பேன்' என்ற பாடலில் இவர் குணபரனைக் குறிப்பதால், மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தார் என்பர்.

பெரியாழ்வார்

தென்பாண்டி நாட்டிலே ஸ்ரீ வில்லிபுத்தூரிலே அந்தணர் மரபிலே தோன்றிய இப் பெரியார், விஷ்ணு சித்தர் என்ற இயற்பெயருடன், நந்தவனம் அமைத்து, நாடோறும் திருமாலுக்குத் திருத்துழாய்மாலைத் தொண்டு புரிந்து வந்தார். இவருடைய பாடல்களில் மணிவண்ணனின் தோற்றமும், பாலசரிதமும், யசோதை கோபியர்களின் உரையாடல்களும் அமைந்துள்ளன. இவர் பாடியன பெரியாழ்வார் திருமொழியும். திருப்பல்லாண்டுமாகும். பிள்ளைத் தமிழ் என்று பிற்காலத்தில் பெருவழக்குப்பெற்ற சிறுபிரபந்த வகையினைத் தோற்றுவித்தவர் இவரே. கண்ணனைக் குழந்தையாக எண்ணித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார் இவர்.

ஆண்டாள்

பெரியாழ்வாரின் திருமகளார் இவர். நந்தவனத்தில் துளசிச் செடிகளுக்கிடையில் கிடைக்கப்பெற்றார் என்பர். ஆண்டாள் ஒரு கற்பனைப் பாத்திரம் என்றும், அவர் பாடிய பாடல்கள் பெரியாழ்வாரே பாடியவை என்றும் திரு.

ராஜாஜி கூறியிருக்கிறார். ஆயினும் பாடல்கள் முழுவதிலும் பெண்ணின் மன இயல்புக்கு ஒத்த உணர்ச்சிகளின் ஊற்றாக வடித்தெடுக்கப்பெற்ற இனிய எளிய இசைப் பகுதிகளைக் காணலாம்.

'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொ சித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.''

இந்தப் பாடல் வைணவர்கள் நாவிலே பயின்று வழங்குகிறது. 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று வாழ்ந்த இவர், 'சூடிக்கொடுத்த நாச்சியாராய்த்' திருமாலையே மணந்தார் என்பர்.

'வாரண மாயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்'

என்ற நாச்சியார் திருமொழிப் பாடல் இன்றி, வைணவர் களின் திருமணம் இன்றும் நிகழாது. இவர் பாடிய திருப் பாவை முப்பது பாடல்களும் மார்கழித்திங்களில் பாவை நோன்பு நோற்கும் பெண்கள் பாடிப் பரவசப்படுவதற்கும், தூய மனத்துடன் மாயவனைப் பரவுவதற்கும் பாடப் படுகின்றன. 'வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று' என்ற இவரது பாடலின் தொடரைக் கொண்டு இவரை எட்டாம் நூற்றாண்டினர் என்பர் ஆராய்ச்சியாளர்.

திருமங்கையாழ்வார்

இவர், திருக்குறையலூரில் கள்ளர் குடியிலே தோன்றிக் குமுதவல்லி என்னும் மங்கையை மணந்து, திருமாலடியார் திருத்தொண்டாற்றுவதில் தம் கைப்பொருளெல்லாம்

செலவிட்டார் என்பர். பொருளுக்காக வழிப்பறி செய்யும் பொழுது திருமாலால் ஆட்கொள்ளப்பட்டார். இவர் பாடிய பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திரு நெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை ஆகிய ஆறு பாடல்களும் திருவாய் மொழியின் ஆறங்கங்களெனப் பாராட்டப்படுன்றன. ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களில் இவர் பாடிய 1523 பாசுரங்களே சிறப்புடையவை யென்பர் மறைமலையடிகளார்.

'பனிசேர் முல்லை பல்லரும்பப் பானல் ஒருகால்
கண்காட்ட
நனிசேர் கமலம் முகம்காட்டும் நறையூர் நின்ற நம்பியே'

என்னும் பாடலில் இயற்கையழகு காணப்படுகிறது. இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு.

திருமங்கை மன்னரின் பாடல்கள் உருக்கமும் நயமும் பத்தியனுபவமும் கொண்டிலங்குவன் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்று பகரும்:

'வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெரும்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணாளன்னும் நாமம்.'

தொண்டரடிப்பொடியாழ்வார்

பொன்னியாறு வளம் சுரக்கும் சோழ நாட்டிலே திருமண்டங் குடியிலே விப்பிரநாராயணர் என்ற இயற்

பெயருடையவராய்த் திகழ்ந்த இவர், திருவரங்கத்து அம்மானுக்குத் தொண்டு செய்துவந்தார். திருமாலை, திருப் பள்ளியெழுச்சி முதலிய நூல்கள் இவர் இயற்றியன வாகும்.

'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே.

என்று இவர் பத்திச் சுவையில் ஈடுபட்டுப் பாடுகிறார்.

தொண்டரடிப் பொடியாழ்வாரை நினைவு கூர்ந்து, 'இவர் பாததூளி படுதல் கங்கை நீராடுதலினும் சிறப் புடைத்து' என்று, 'கொல்லி காவலர் கூடல் நாயகர் கோழிக் கோன் கொடைக்' குலசேகராழ்வார், தம் 'பெருமாள் திரு மொழி'யிற் குறிப்பிட்டுள்ளமையின் இவர்தம் சிறப்பு விளங்கக் காணலாம். பின்வரும் இவருடைய பாடல் உருக்கம் நிறைந்ததாகும்:

'ஊரிலேன் காணி இல்லை உறவுமற் றொருவர் இல்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனேயென் கண்ணனே!
கதறுகின்றேன்!
ஆருளர் களைகண் அம்மா அரங்கமா நகரு ளானே!'

திருப்பாணாழ்வார்

உறையூரிலே பாணர் மரபிலே தோன்றிய இவர், இசைப் பாடல்களைப் பாடி, இறைவன் தொண்டு செய்து வந்தார். அழகிய மணவாளன் திருமேனியழகு கண்டு, 'அமலனாதிபிரான்' என்று தொடங்கும் பத்துப் பாசுரங் களை இவர் பாடியுள்ளார்.

'கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன் என் னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணி யரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே''

குலசேகராழ்வார்

சேர நாட்டைச் சிறப்புற ஆண்ட செந்தமிழ் மன்னர் இவர். இவர் தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் வல்லவர். முதலில் வடமொழியில் முகுந்தமாலை பாடிப் பின் தமிழில் பெருமாள் திருமொழி பாடினர் என்பர். அறிஞர் சிலர் முகுந்தமாலை இவரியற்றியதன்று என்றும் கருதுகின்றனர்.

இவர் பாடிய 'பெருமாள் திருமொழி' நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் முதற் பகுதியான 'இயற்பா'வில் அடங்கும். பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டதாகும். முதன் மூன்று திருமொழிகளில் அரங்கத் தில் அரவணைமேல் பள்ளிகொண்டிருக்கும் அரங்கநாதனை யும், அவர் அடியார் திறத்துக் தாம் கொண்ட அன்பின் பாட்சியினையும் புலப்படுத்தியுள்ளார்.

திருவேங்கடத்தம்மான்மீது இவர் பாடி இருக்கும் திருமொழி, கவிதைச் சிறப்பும் பத்தி நலமும் கெழுமிய பனுவல் எனலாம். திருவேங்கடமலையில் ஒரு படியாய்க் கிடந்து திருமாலின் பவளவாய் கண்டு மகிழும் பேறு தமக்கு வாய்க்க வேண்டுமென்று இவ்வாழ்வார் பாடுகின்றார்:

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவள வாய் காண்பேனே!'

இன்றும், 'குளிர்தண்சாரல் வேங்கடமலையில்' எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவறைக்கு அண்மையில் உள்ளபடி, 'குலசேகரப் படி' என வழங்கும்.

திருவித்துவக்கோட்டம்மான்மீது பாடிய திருமொழியில் அமைந்துள்ள பாடல்கள் அனைத்தும் உவமை நலமும் கவிதைப் பெற்றியும் கவினுற அமைந்திலங்கக் காணலாம். பெண்ணின் கற்புநெறி போற்றி நாயகன் நாயகி பாவத்தை விளக்கும் போக்கின் ஓர் உயரிய வாழ்வியல் உண்மையினை —மேற்கோளினைக் குலசேகரர் பின்வரும் பாடலில் விளக்கியிருக்கக் காணலாம் :

'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா நீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே.'

இராமாவதாரக் காதையில் பெரிதும் ஈடுபட்டவர் குலசேகரர். இவர் வரலாறாகக் கூறப்படும் செய்திகள் இதனை உணர்த்தும். இவர் திருக்கண்ணபுரத்தம்மானாம் இராகவனுக்குத் தாலாட்டுப் பாட்டுப் பாடுகின்றார்.

'மன்னுபுகழ்க் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ.'

கிருஷ்ணாவதார நிகழ்ச்சிகளையும் இவர்தம் பாடல்களில் அழகுறப் பொதிந்துள்ளார். தேவகி, தசரதர் புலம்பலாக இவர் பாடியுள்ள பாடல்கள் நெஞ்சினை நெக்குருகச் செய்வனவாகும்.

இவருடைய காலம். கி. பி. 9 ஆம் நூற்றாண்டாகும்.

நம்மாழ்வார்

இவர் திருக்குருகூரிலே வேளாளர் குலத்திலே காரிமாறனுக்கும், உடைய நங்கைக்கும் திருமகனாராய் அவதரித்து, சடகோபன், பராங்குசன், குருகைக் காவலன், காரிமாறன், தமிழ் மாறன் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டு வந்தார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரே சிறந்தவர்

என்பதை, இவர் 'அவயவி' என்றும், மற்ற ஆழ்வார்கள் 'அவயவம்' என்றும் வழங்கப்படுவது கொண்டு தெளியலாம். இவர் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவை முறையே இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதக் கருத்துகளைப் புலப்படுத்தும் என்பர். இவர் இயற்றிய திருவாய் மொழியே, 'திராவிட வேதம்' என்றும் புகழப்படு கிறது.

தலைவி சிறு பூவை (நாகணவாய்ப்புள்) ஒன்றை வளர்க் கிறாள். அவள் காதல் நோயை அப் பறவை திருமாலிடம் சென்று உணர்த்தவில்லை. இதனால் அவள் மெலிந்து வாடி வண்ணம் வேறுபட்டாள். இனிமேல் அப் பூவைக்கு இன்னடிசில் ஊட்டும் சிறுய சக்தியினையும் இழந்துவிட்டா ளாம். ஆகவே, அப் பூவையினைப் புதுச்சோறு கிடைக்கு மிடம் நாடிச் செல்லச் சொல்கிறாள். சொற்கள் பாடலின் சிறப்பான அழகினைப் புலப்படுத்துகின்றன.

'நீ அலையே சிறுபூவாய் நெடுமா லார்க்கு என் தூதாய்
நோய்எனது நுவலென்ன நுவலாதே இருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனிவுனது
வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே.'

'செங்கணும் கரியகோல மேனியுங்கொண்டு பொலியும் திருமாலை, வாடா மாலையாம் பாமாலை புனைந்து ஏத்தி வணங்கின், அரிய செயலாக அவனியிற் கொள்வதற்கு ஒன்றுமில்லை', என்று இவர்கொண்ட உள்ள உறுதி.

'கரிய மேனிமிசை வெளியநீறு
சிறிதே யிடும்
பெரிய கோலத் தடங்கண வின்ணோர்
பெருமான் தன்னை
உரிய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி
உள்ளப் பெற்றேற்கு
அரியதுண்டோ எனக்கு இன்று
தொட்டும் இனி யென்றுமே.'

இத் திருவாய்மொழிக்கே ஆயிரப்படி, மூவாயிரப்படி, ஒன்பதாயிரப்படி, பன்னீராயிப்படி, இருபத்து நாலாயிரப் படி, முப்பத்தாறாயிரப்படி என்னும் வியாக்கியானங்கள் ஓதப்படுகின்றன. இவருடைய காலத்தைப் பற்றிக் கருத்து வேற்றுமைகள் பல நிலவுகின்றன. எட்டாம் நூற்றாண்டு என்னும் கருத்துக்குச் சான்றுகள் பலவுள.

மதுரகவியாழ்வார்

இவர், பாண்டி நாட்டுத் திருக்கோளூரினர்; வடக்கே அயோத்திவரை சென்று பல வைணவக் கோயில்களைத் தரிசித்தவர். நாடு திரும்பி நம்மாழ்வாருக்கு அடியவராய் இருந்தார் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. இவர் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற பிரபந்தத்தை அருளியிருக் கிறார். முதற்பாடல் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' எனத் தொடங்குவதால், இவர் பாடிய பாடல்கள் இப் பெயர் பெற்றன. நம்மாழ்வாரின் புகழினையும் இவர் போற்றிப் பாடுகிறார்.

பௌத்தர்கள்

சைவ சமயமும், வைணவ சமயமும் நாயன்மார்க ளாலும் ஆழ்வார்களாலும் புதுப்பிக்கப்பட்டு வளர்ச்சி பெறுவதன் முன்னர்த் தமிழ்நாட்டில் பௌத்த, சமண சமயங்கள் நல்ல செல்வாக்குற்ற நிலையில் இருந்தன. பௌத்த சமயம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வட நாட்டை ஆண்ட பெருவேந்தனான அசோகசக்கரவர்த்தி யின் காலத்தில் தமிழ்நாட்டில் குடியேறியது என்பர். இங்கு வந்து குடியேறிய பௌத்தர்கள் தங்கள் கொள்கை களை மக்களிடையே பரப்பித் தமிழர் பலரைப் பௌத்தர் களாக மாற்றினார்கள். தமிழ் நாடெங்கும் பல விகாரை களையும் பள்ளிகளையும் ஆசிரமங்களையும் ஏற்படுத்தித்

தங்கள் சமயத் தொண்டினைச் செய்துவந்தார்கள். பூதமங்கலம், போதி மங்கை, பொன்பற்றி, காவிரிப் பூம்பட்டினம், நாகைப்பட்டினம் முதலிய இடங்களில் பௌத்தர்கள் ஏராளமாய்க் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். இளம்போதியார், அறவண அடிகள், மணிமேகலை இயற்றிய சீத்தலைச்சாத்தனார், சங்கமித்திரர், புத்தமித்திரர், தருமபாலர், திண்ணாகரர், புத்ததேவர் முதலானோர் தமிழிலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர். இவருள் திண்ணாகரரும் தருமபாலரும் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாக வீற்றிருந்ததாக நாம் அறிகிறோம். இவர்களுடைய சொந்த ஊர் காஞ்சிபுரமாய் இருந்தது. பௌத்தர்களின் சமயப்பிரசாரம் காரணமாகச் சில கொள்கைகள் இந்து சமயத்திலும் இடம் பெற்றன. வேள்வியில் உயிர்க் கொலையை இந்துக்கள் நீக்கியமை பௌத்தர்களுடைய தொடர்பாலேயே எனலாம். புத்தர் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் அரசமரத்தை இங்கு வாழ்ந்த மக்களும் வணங்கத் தொடங்கினார்கள். இக் காலத்தில் புத்த தத்தர் என்னும் பௌத்த பெரியார் தம் மாணவி சுமதியின் வேண்டுகோட்படி அபிதருமாவதாரம் என்னும் நூலை இயற்றினார். ஐம்பெருங் காப்பியங்களில் மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி மூன்றும் பௌத்தக் காப்பியங்களே. ஆனால், வளையாபதியைச் சிலர் சமணக் காப்பியம் என்பர். இதன் உண்மையறிய இன்று நூல் முழுதும் கிடைத்திலது. நீ கேசி உரையால், குண்டலகேசி பௌத்த நூல் என்பது தெரியவருகிறது.

சமணர்கள்

பௌத்தர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலேயே சமணரும் இங்கு வந்தனரென்பர். மௌரியப் பேரரசின் சந்திரகுப்தன் அரியணை துறந்து, துறவியாக—சந்திரகுப்த முனீந்திரனாக—பத்ரபாகு என்னும் குருவுடன் மைசூருக்கு

அருகில் இருக்கும் சிரவணபெல்கோலா என்னும் இடத்திற்கு வந்து உயிர் துறந்ததாக வரலாற்றாசிரியர் கூறுகின்றனர். அவனுக்குப் பின்னர்ச் சமணசமயம் இந் நாட்டில் தழைத்தது சங்ககாலத்தில் இவர்களுடைய செய்திகள் பற்றி யாதொன்றும் அறிவதற்கு ஏதுக்கள் இல்லை. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் பல, சமணர்கள் இயற்றின என்பது தெளிவாகின்றது. தேவார காலத்திற்கு முன்னர் வாழ்ந்த சமணர் அறம் முதலிய நீதிப்பொருள்களை மக்களுக்கு உரைப்பதிலேயே நாட்டம் செலுத்தினர். இவர்கள், மதுரையில் வச்சிர நந்தி சங்கத்தை நிறுவித் தமிழ்த்தொண்டு செய்துவந்தார்கள் என்பது தெரியவருகிறது. தேவார காலத்திற்கு முன்னர் இவர்களுடைய செல்வாக்கே மிகுந்திருந்தது. ஆனைமலை இவர்களுடைய முக்கிய இடமாய் விளங்கியது. அரசர்களையும் இவர்கள் வயப்படுத்தினர். மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசு நாயனாரால் சமய மாற்றம் செய்யப்படுவதற்குமுன் சமணனாய் இருந்தான். எனவே, சமணர்களுக்கு அரசியல் செல்வாக்குக் கிட்டிற்று. அதனால் அவர்கள் தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்புதல் எளிதாயிற்று. 'சைவ சமயம் சைய்த புண்ணியத்தின் இரு கண்களாகத் தோன்றிய அப்பர், சம்பந்தர் காலத்தில் சமணர் செல்வாக்குக் குறைந்தது. அதன் பின்னர் உலக வாழ்வில் வெறுப்பும் துறவு நிலையில் விருப்பும் கொண்டு இவர்கள் வாழ்வை நடத்தினார்கள். ஐம்பெரும் காப்பியங்களில் சீவகசிந்தாமணியும் வளையாபதியும் இவர்களின் சமயத் தொடர்பான நூல்கள் என்பர். தமிழிலக்கணத் துறையிலும் நிகண்டுத் துறையிலும் இவர்கள் செய்த தொண்டுபோல வேறு எவருமே செய்யவில்லை எனலாம். இவர்கள் இசை நாடகம்பற்றிய நூல்களை இழிந்தன எனத் தள்ளினார்கள். இவர்கள் காலத்தில் தமிழிலக்கியம் வடமொழிச் சாயல் பெற்றது. தமிழையும் வடமொழியையும் சரிபாதியாகக் கலந்து எழுதும் மணிப்பிரவாளநடை வழக்கிற்கு வந்தது. வடமொழிக் கருத்துகளும், புராணங்களும் தமிழில் மொழி

பெயர்க்கப்பட்டன. அக் காலத்தில் ஆண்ட பல்லவர்களும் வடமொழி வளர்ச்சியில் ஊக்கம் காட்டியதால், இவர் களுக்கு அரசியல் ஆதரவும் கிட்டியது. மேருமந்திர புராணம், சாந்தி புராணம், ஸ்ரீபுராணம் எனும் புராணங் கள் தமிழ் மொழியில் இவர்களால் இயற்றப்பட்டன. சமண முனிவர் தென்னிந்திய நாகரிகத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தொண்டாற்றியிருக்கின்றனர் என்றும், கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக் குத் துணை கோலியிருக்கின்றனர் என்றும் பேராசிரியர் இராப்சன் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.[1]

இலக்கண நூல்கள்

புறப்பொருள் வெண்பாமாலை

இந்நூல், பன்னிரு படலத்தைத் தழுவி வெட்சி முதலாகப் பெருந்திணை ஈறாகச் சொல்லப்பட்ட படலங்களை முறையே கொண்டு, ஐயனாரிதனார் என்னும் சேரர் மரபினரால் செய்யப்பட்டது. இது பழந்தமிழ் நாட்டுப் போர், வீரம், கொடை, மக்கள் வாழ்வு முதலான செய்தி களைக் கூறுகிறது; தொல்காப்பியம் புறத்திணையியலில் கூறப்பட்டிருக்கும் செய்திகளோடு சிற்சில இடங்களில் மாறுபடுகிறது. இந் நூலின்கண் அமைந்துள்ள வெண்பாக் கள் ஒட்டமும், நயமும், பொருளாழமும் கொண்டவை; பிற்கால உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப் பட்டவை. 'நூலாசிரியர் காலம் எட்டாம் நூற்றாண்டின் இறுதி' என்பர்.[2]

---

1. They (The Jains) have also played a notable part in the civilization of Southern India where the early literary development of the Kanarese and Tamil languages were due in a great measure to the labours of Jain monks. —Prof. E. J. Rapson's, Ancient India p. 66

2. திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, இலக்கிய வரலாறு, ப. 311.

இறையனார் களவியலுரை

இந்நூலில் களவு ஒழுக்கம் பற்றிய செய்திகளே விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இதன்கண் அமைந்திருக்கும் அறுபது நூற்பாக்களுக்கும் சிறந்த உரை உள்ளது; ஒவ்வொரு துறைக்கும் திருக்கோவையார்ப் பாடல்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இந் நூலுரையாசிரியர் நக்கீரர் ஒன்பதாம் நூற்றாண்டினர். முதன் முதலிலே தொடர்ந்து கருத்துச் செறிவான அழகிய உரைநடையினை இந்நூலில்தான் நாம் காண்கிறோம். சான்றாக, தலைவி "சந்தனமும் சண்பகமும், தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோகமும், கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து, நாகமும், திலகமும், நறவும், நந்தியும், மாதவியும், மல்லிகையும், மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையோடு பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டிரைந்து, தேனார்ந்து, வரிக் குயில்கள் இசை பாட, தண்தென்றல் தவழ்ந்துலவும் தண்ணறும் பொழிலின் நடுவே விசும்பு துடைத்துப் பசும் பொன் பூத்த வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்" என்ற பகுதியினைக் காண்க.

இலக்கிய நூல்கள்

பெருங்கதை

குணாட்டியர் என்பார் பைசாச மொழியிலே இயற்றிய 'பிருகத்கதா' என்ற நூலினைத் தழுவி, அதிலுள்ள பிற கதைகளையெல்லாம் நீக்கிவிட்டு, நரவாண தத்தன் வரலாற்றை மட்டும் முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்ட மணைக்கோட்பாடுகள் நிறைந்த நூல் என்று டாக்டர் உ. வே. சா. கூறுகிறார். இந்நூல் ஆசிரியர் பெயர்

கொங்குவேள் என்பதாகும், எனவே, நூலுக்கும் 'கொங்கு வேளிர் மாக்கதை' என்ற பெயர் வழங்குகிறது. ஆசிரியர் விசயமங்கலத்தினர்; வேளாண் மரபிலே வந்த சிற்றரசர். பல நல்ல கருத்தினை இவர் தம் நூலில் அமைத்துள்ளார். சான்றாக ஒன்று காணலாம்:

'அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை.'

இந்நூலின் காலம் ஏழாம் நூற்றாண்டென்பர்.

முத்தொள்ளாயிரம்

மூவேந்தர்களைப் பற்றி எழுந்த நூலாகும் இது. இன்று புறத்திரட்டில் நூற்றெட்டுச் செய்யுள்களே முத்தொள்ளாயிரப் பாடல்கள் என்று நமக்குக் கிட்டுகின்றன. இந்நூல் இனிய அழகிய பாடல்களைக் கொண்டு, புகழ், நாடு, நகர், திறை, எயில் கோடல், குதிரை மறம், யானை மறம், களம், பகைப்புலம் அழித்தல், வென்றி, கொடை, கைக்கிளை முதலியன பற்றிப் பரக்கக் கூறுகின்றது. அகப்பொருள் சுவையமைந்த பாக்களையும் இதிற் காணலாம். இந்நூலாசிரியர் பெயரும் வரலாறும் தெரியவில்லை. இந்நூல் சங்க மருவிய காலத்தில் எழுந்தது என்பர் சிலர். ஆனால், திரு. வையாபுரிப்பிள்ளை பல காரணங்களைக் காட்டி, இந்நூல் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்தது என்பர்.

திருக்கைலாய ஞானவுலா

சுந்தர மூர்த்தி சுவாமிகளின் சம காலத்தவரான சேரமான் பெருமாள் நாயனார், இவ்வுலா நூலை இயற்றினார். இந்நூல் 'ஆதியுலா' எனப்படும். தமிழில் தோன்றிய முதல் உலா இதுவே; பிற்காலத்து உலா நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாயும் அமைந்தது இந்நூல். தவிர, சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் மும்மணிக் கோவை, பொன்வண்ணத்தந்தாதி முதலியனவும் பாடி

யுள்ளார். இவர் காலம் கி. பி. 825-ல் முடிவதாக ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். அதுவே கொல்லம் ஆண்டின் தொடக்க காலமாகும்.[1]

நந்திக் கலம்பகம்

காலத்தால் முற்பட்ட கலம்பகம் இதுவேயாகும். இது மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் எழுந்த நூலாகும். நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இக் கலம்பகம் பிற்காலக் கலம்பகங்களின் அமைப்பினின்றும் முற்றிலும் மாறுபட்டுள்ளது. நந்திவர்மனுடைய போர்ச் செய்திகள் சில இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பெயர்க் காரணம்

"பல்பூ மிடைந்த படலைக் கண்ணி" எனவரும் பெரும் பாணாற்றுப்படைத் தொடருக்குப் 'பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை" என்று நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். 'கலம்பகம்' என்ற சொல் கலவை என்ற பொருளில் வந்துள்ளதால், பாக்களாலும் பொருளா லும் உறுப்பாலும் கலவை நிலைபெற்று விளங்கும் இலக்கிய வகையினைக் கலம்பகம் என்று கொண்டனர் எனலாம்.

'களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்'

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் தம் திருப்பள்ளி யெழுச்சியில் கலம்பகம் என்ற சொல்லைக் 'கலவை' என்னும் பொருளில் ஆண்டிருக்கக் காணலாம்.

அமைப்பு

பல்வேறு வகைச் செய்யுள்களும், அகம் புறமாகிய தமிழிலக்கணப் பொருட்கூறுபாடுகளும் அமைந்து, நகை

---

1. திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை, இலக்கிய வரலாறு. 258

முதலான பல்வகைச் சுவைகளும் பாங்குற நிறைந்து, தெய்வங்களையோ, மக்களுட் சிறந்தாரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, பல்வகை உறுப்புக்களைப் பெற்று வருவதைக் கலம்பகம் என்பர். A Kind of poem Composed of different kinds of stanza's என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகிறது.

கலம்பகத்தின் இலக்கணம்

'சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அமமனை ஊசல் யமகம் களிமறம்
சிந்து காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதியாக வருமென மொழிப'

என்ற பன்னிரு பாட்டியல் நூற்பாவின்படி ஒருபோகு, வெண்பா, கலித்துறை ஆகிய இவற்றை முதலுறுப்பாகக் கொண்டு, புறம் முதலாகத் தவம் ஈறாக உள்ள பதினான்கு உறுப்புக்கள் வேண்டுறை, வஞ்சித்துறை, இன்னிசை வெண்பா, அகவற்பா, விருத்தம் ஆகிய இவற்றில் விரவிவர அந்தாதியாய் அமைவது கலம்பகம் என்பது விளங்குகிறது.

நயம்

சொல்லும் பொருளும் இயைந்த இனிய கற்பனையினை நந்திக் கலம்பகத்தில் காணலாம். கார்காலத்தில் தலைவன் திரும்பவில்லை; தலைவி பிரிவாற்றாமையால் துன்புறுகிறாள். எவ்வாறு?

'மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியுங் காலம்
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்கும் காலம்
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகைமுல்லை முகைநகைக்கும் காலம்
செங்கைமுகில் அனையகொடைச் செம்பொன்செய் ஏகத்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆனகொடுங் காலம்!'

அடுத்து, அவள் நிலவைப் பார்த்துப் பழிக்கிறாள்:

'பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே!'

அவள் துயரம் எல்லை கடந்துபோகிறது. 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் சந்தனமென்றாரோ தடவினார்!' என்று அரற்றுகின்றாள். இந்நேரத்தில் பாணன் ஒருவன் பரத்தை வீட்டிலிருக்கும் தலைவனுக்காகத் தூது வருகிறான். அதுபொழுது தலைவி, "பாணனே! நீ என் தங்கையர் வீட்டிலிருந்து விடியுமட்டும் பாடினாய்; என் தாய் காட்டுப்பேய் இவ்வாறு அழுகின்றது என்றாள்; மற்று அங்கிருந்தவர்களோ, நரி என்றார்; தோழியோ நாய் என்றாள்; ஆனால், நான் மட்டும் உன் குரலை அறிந்து கொண்டு நீதான் என்றேன்" என்று கூறி, அவனை எள்ளி நகையாடுகின்றாள். அந்த இனிய பாடலைப் பாருங்கள்:

'ஈட்டுபுகழ் நந்திபாண! நீஎங் கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—காட்டிலழும்
பேயென்றாள் அன்னை; பிறர்நரியென் றார்;தோழி
நாயென்றாள்; நீயென்றேன் நான்.'

பாரத வெண்பா

மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்த பெருந் தேவனார் இதனைப் பாடியவர். இந்நூல் முழுதும் கிட்ட

வில்லை. இராமாயண வெண்பாவும் இதுபோன்றே இன்று காணவில்லை கம்பராமாயணமும் வில்லிபுத்தூரார் பாரத முந்தோன்றிச் செல்வாக்குப் பெற்ற பின்னர், இவை அழிந்து பட்டிருக்கலாம்!

உரைநடை நூல்கள்

சமணப் புலவர்கள், தமிழும் வடமொழியும் சரிபாதி யாகக் கலந்து மணிப்பிரவாள நடையில் நூல் எழுதினர். ஸ்ரீ புராணமும், சுத்திய சிந்தாமணியும் இத்தகைய நூல் களே. இக் கால உரைநடையின் போக்கினை இந்நூலில் நாம் காணலாம்.

சமணர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள அருந்தொண்டுகள்

சமணர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார்கள். சமண சமயத்தினர் பலரும், தம் சமயத்திற்குத் தொண்டு ஆற்றியதோடு நில்லாமல், இலக்கிய இலக்கணத் தொண்டினையும் செய்துள்ளனர். இவர்தம் இலக்கணத் தொண்டு பெரிதும் பாராட்டப்பட வேண்டுவதாகும்.

இல்லற நெறியில் ஈடுபட்ட சமணர், துறவற நெறியில் ஈடுபட்ட சமணர் ஆகிய இருதிறத்தாருமே தமிழ் மொழிக் குச் சிறக்கத் தொண்டாற்றினர். முன்னவர் 'சிராவகர்' என்றும், பின்னவர் 'சமணர்' என்றும் வழங்கப்பட்டனர். சிலப்பதிகாரத்தில் 'சாவக நோன்பினர் அடிகள்' என்று கோவலன் குறிக்கப்படுகிறான்.

'பல்புகழ் நிறுத்த படிமை யோனே'

என்ற தொடரைக் கொண்டு தொல்காப்பியனாரைச் சமணர் என்பர் காலஞ்சென்ற பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், 'தமிழ்ச்சுடர் மணிகள்'

என்ற தம் நூலில். தொல்காப்பியனார் சமணரே என்று இவர் துணிந்து தம் கருத்தினை வலியுறுத்தப் பல சான்று களும் காட்டியுள்ளார். இக் கருத்தினைப் பலர் உடன்படுவ தில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை முன்னாள் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள், தம் 'தொல்காப்பியம்— இலக்கிய வரலாறு' எனும் நூலில், பிள்ளையவர்கள் கருத்தைத் தக்க சான்றுகள் காட்டி மறுத்துரைத்துள்ளார் கள்.

சங்க காலத்தில் உலோச்சனார், நிகண்டனார் என்ற புலவர்கள் வாழ்ந்திருந்தார்கள். உலோச்சனார் பாடியன வாக முப்பத்தைந்து செய்யுள்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. நெய்தல்திணைப் பாடல்கள் பலவற்றை யும் இவர் பாடியுள்ளார்.

நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் எனும் சங்கப் புலவர் பாடிய பாடலும், நற்றிணையில் நெய்தல் திணைப் பாடலாகவே வந்துள்ளது. இப்பாடல் உள்ளத்தினை உருக்குவதாய் அமைந்துள்ளது.

அடுத்து, திருக்குறளில் சமண சமயக் கருத்துகள் பல உள்ளன என்பர்.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'

என்ற குறள் வைதிக மார்க்கத்தினையும்,

'தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைபொருட்டா லூன்தருவா ரில்'

என்ற குறள் பௌத்த தருமத்தினையும் மறுத்துரைக் கின்றது என்று கொள்வர். மேலும், இன்னா செய்யாமை, கள்ளுண்ணாமை முதலிய அறக்கருத்துகளும், மற்றும் திருவள்ளுவர் கூறும் பொருள் இன்பக் கருத்துகளும் சமண சமயக் கருத்துகளின் விளைவே (effect) என்பர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பலவும் சமணர்கள் எழுதியனவே. (சங்கம் மருவிய காலத்தில் 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்' என்னும் தலைப்பிற் காண்க.)

அடுத்துக் கி. பி. 470-இல் வச்சிர நந்தி சங்கத்தினை மதுரையில் சமணர் நிறுவித் தமிழ்த்தொண்டும் சமயத் தொண்டும் செய்தனர். 'அருங்கலச் செப்பு' எனும் நூல் குறட்பாக்களாலாயது. 'அருங்கலான் வயம்' எனும் அறிஞர் கூட்டத்தினைச் சேர்ந்த சமணர் ஒருவரால் இந் நூல் இயற்றப்பட்டது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்குக் காலத்தாற் பிற்பட்டதாகும்.

'அறநெறிச் சாரம்' என்ற நூலினை முனைப்பாடியார் எனும் சமணசமயப் புலவர் இயற்றினார். வெண்பா யாப்பில் அமைந்த நூல் இது.

'மறவுரையும் காமத் துரையும் மயங்கிப்
பிறவுரையும் மல்கிய ஞாலத்து அறவுரை
கேட்கும் திருவுடையாரே பிறவியை
நீக்கும் திருவுடை யார்.,

என்ற அடிப்படையில் இந்நூல் எழுந்ததாகும். இந் நூலின் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டெனலாம்.

அறநிலைக் கதைகள்

திருத்தக்க தேவர் பாடிய நரிவிருத்தம் சிறப்புடைய தாகும். குழந்தைகளுக்கேற்ற அற நூல்களாகக் காணப் படும் கிளி விருத்தம், எலி விருத்தம், நரி விருத்தம் முதலியன சமணர்கள் எழுதிய நூல்கள் என்பது தேவாரத்தால் தெரிய வருகின்றது.

சமணர் இயற்றிய காப்பியங்கள்

(1) சிலப்பதிகாரம். (2). சிந்தாமணி, (3) வளையாபதி, (4)பெருங்கதை, (5) சூளாமணி, (6) நீலகேசி, (7) உதய ணன் கதை, (8) தாக குமார காவியம், (9) மேரு மந்திர

புராணம், (10) யசோதர காவியம் என்பவை. (இந்நூல்களைப் பற்றிய செய்தியினைச் சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம் என்னும் தலைப்புகளிற் காண்க.)

உரைநடை நூல்கள்

ஸ்ரீ புராணமும் கத்திய சிந்தாமணியும் மணிப்பிரவாள நடையில் அமைந்த நூல்கள்.

நிகண்டு நூல்கள்

சூடாமணி நிகண்டு சமண சமயத்தவர் செய்ததே.

இலக்கண நூல்கள்

(1) யாப்பதிகாரம், (2) அவிநயம், (3) யாப்பருங்கலம், (4) நன்னூல், (5) நம்பியகப் பொருள், (6) வீர சோழியம், (இந்நூல்கள் பற்றிய விளக்கத்தினைப் பின்வரும் சோழர் காலம், நாயக்கர் காலம் என்ற தலைப்புகளிற் காண்க.)

உரை நூல்கள்

(1) இளம்பூரணர் உரை, (2) நேமிநாதம் (3) அடியார்க்கு நல்லார் உரை.

பிற நூல்கள்

நெல் இலக்க வாய்பாடு, சிறுகுழி வாய்பாடு (கணித நூல்கள்), சினேந்திர மாலை (சோதிட நூல்), வான நூல் முதலியன.

இவ்வாறு சமண சமயப் புலவர் பல துறைகளிலும் நூல்கள் பலவற்றை எழுதித் தமிழ் மொழிக்குச் சிறந்த நாண்டாற்றியுள்ளனர்.

5. சோழர் காலம்

(கி.பி. 850—1350)

ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தஞ்சையை ஆண்ட முத்தரையர்களிடமிருந்து விசயாலய சோழன் தஞ்சாவூரைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கைப்பற்றிச் சோழர் ஆட்சியை நிறுவினான். முதலாம் இராசராசசோழன் காலத்தில் சோழப்பேரரசின் எல்லை விரிவடைந்தது. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் காவிரிக் கரையில் அமைந்திருந்த சோழப்பேரரசு கங்கைக் கரையையும் எட்டியது. இந்த வடநாட்டு வெற்றியே அவனுக்குக் 'கங்கை கொண்ட சோழன்' என்ற பெயரினைத் தந்தது. குலோத்துங்க சோழன் காலத்திலும் சிறப்புற்றுத் திகழ்ந்த இப் பேரரசு, மூன்றாம் இராசராசன் காலத்தில் சீரழியத் தொடங்கியது. பின்னர்ப் பாண்டியர் தலையெடுக்கத் தொடங்கினர்.

"சோழப் பேரரசர் ஆண்ட காலம் தமிழ்ப் பண்பாட்டின் பொற்காலமாகும். இவர்கள் காலத்தில் இலக்கியங்கள் நன்முறையில் ஆதரிக்கப்பட்டு யாண்டும் பரவின"[1]. நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய உணர்வு கொண்டு பாடிய, கல்நெஞ்சத்தையும் கனிவிக்கும் இசைப்பனுவல்கள் சோழர் காலத்திலேயே தொகுக்கப்பட்டன. சைவத் திருமுறைகளை

---

1. The age of Imperial Cholas (850—1200) was the golden age of Tamil culture and it was naturally marked by the widespread practice and patronage of literature.

—K.A. Nilakanta Sastri's A. History of Souty India P. 357

நம்பியாண்டார் நம்பியும், வைணவப் பிரபந்தங்களை நாத முனிகளும் திரட்டித் தந்தனர். சோழர்கள் வழிவழிச் சைவர் களாய் வாழ்ந்து வந்த போதிலும், பிற மதத்தினரை வெறுத்து ஒதுக்கும் பண்பினைப் பெற்றிருக்கவில்லை. எனவே, பௌத்த சமணப் பெரியாரும் இலக்கிய இலக்கணத் தொண்டினைத் தொடர்ந்து செய்வாராயினர். இராசராச சோழன் நாகைப்பட்டினம் சூடாமணி விகாரத்தைப் புதுப் பித்துக் கட்டித்தர ஆதரவு நல்கியதையும் நாம் வரலாற் றிலே காண்கிறோம்.

"சமய எழுச்சியின் பயனாய்த் தமிழரிடம் சமுதாய உணர்ச்சி ஓங்கியது; ஆட்சி முறைகளும் திட்டங்களும் அபிவிருத்தி அடைந்தன; சமுதாய வாழ்வு சுதந்தரத்துடன் இயங்கியது; சத்திரங்கள் சாவடிகள் எழுந்தன; கோயில்கள் தோன்றின; நம் கோயில்களைக் 'கல்லிலே செதுக்கிய காவியம்' என்பர். பழங்கால நாகரிகத்தைச் சங்க நூல் களிலே காண்பது போல, இடைக்காலக் கலைவளத்தைக் கோயில்களிலே காணலாம். இவைகளைப் போன்ற மகத் தான கல் கட்டடங்கள் உலகிலே வேறு எந்த நாட்டிலும் இல்லை. சிற்ப நூலின் அற்புதமாய் இவை திகழ்கின்றன. இவைகளை எளிதில் ஆக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்த மூதாதையரது சமயப் பற்றைப் போற்றாமல் இருக்க இயலாது" என்று தமிழ்ப் பெரியார் ஒருவர் கூறுகிறார். உண்மையில் இந் நூற்றாண்டுகளிலே தஞ்சைப் பெரிய கோயில் இராசராசனால் கி.பி. 1012-இல் கட்டப்பட்டது. பழைய கோயில்களில் சைவத் திருமுறைகள் ஓதப்பட்டன. அதற்குச் சோழ அரசர் மானியங்கள் வழங்கினர்; நிவந்தங் களை ஏற்படுத்தினர். இச் செய்திகளை எல்லாம் நாம் கல்வெட்டுகள் கொண்டு தெளியலாம்.

இலக்கியத்துறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பெருங்கவிஞர்களான கம்பரும் சேக்கிழாரும் இக்காலத்தே வாழ்ந்தனர். சிற்றிலக்கியங்கள் பல தோன்றின. இராசராச

நாடகம் முதலிய நாடகங்கள் பெருங் கோயில்களிலே நடிக்கப் பட்டன. நடனம், நாடகம், இசை ஆகிய கலைகள் எல்லாம் பெருவாழ்வு எய்தின. ஆழ்ந்த தத்துவக் கருத்துகள் கொண்ட நூல்கள் எல்லாம் சமயக் கருத்துகளின் சாரமாய் எழுந்தன. இவ்வாறு மனித சமுதாயத்திற்கு அமைதியை அளிக்கும் சமயம், சோழப் பேரரசர் காலத்தில் வளர்ந்தோங்கியிருந்தது. சோழர்கள் ஆண்ட நானூறு ஆண்டுகளில் தமிழகம் அரசியல் பொருளாதாரக் கலைவளங்கள் கொழித்துச் சிறந்தது.

ஐம்பெருங் காப்பியங்கள்

"காப்பியமென்பது காவியமெனும் வடசொல்லின் திரிபு. ஐம்பெருங் காப்பியமென்னும் வழக்குப் பிற்காலத்ததென்பது விளங்கும். அதன் வைப்பு முறைக்குப் போதிய காரணம் இல்லையென்பதும் தேற்றம். அன்றியும் இவ்வைந்தும் பெருங் காப்பியங்கள்தாமா என்பதைப்பற்றி ஆராய்ந்தால் இவற்றுட் சில அல்ல என்னும் முடிவுதான் பெறப்படும்" என்று தமிழ்க் காப்பியங்கள் என்னும் நூலில் திரு.கி.வா. ஜகந்நாதன் குறிப்பிடுகின்றார். வட மொழியில் ஐம்பெருங் காப்பியங்கள் என்று குறிப்பிடப்படுவன ஹர்ஷகவி இயற்றிய நைஷதமும், காளிதாசன் இயற்றிய இரகுவமிசமும், குமார சம்பவமும், பாரவி இயற்றிய கிராதார்ஜுனீயமும், மாககவி இயற்றிய சிசுபால வதமும் ஆகும். அம்முறையில் அவ்வழக்கையொட்டியதோ என்னும் முறையில் ஐம்பெருங் காப்பியங்களாய் அமைந்திருப்பன, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பனவாகும். பெருங்காப்பியத்தின் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது.

இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்து நூல்கள் என்பதை முன்னர்க் கண்டோம்.

வளையாபதி

புறத்திரட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் அறுபத்தாறு பாடல்கள் தவிர, இந்நூல் முழுமையும் இன்று நமக்குக் கிட்டவில்லை. உரையாசிரியர்கள் உரையிலும் மேற்கோளாகச் சில பாடல்கள் கிட்டுகின்றன. அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய பாடலொன்றில்,

'துக்கந் துடைக்கும் துகளறு காட்சியர்
நிக்கந்த வேடத்து இருடி கணங்களை'

என வருவது கண்டு, இஃது ஒரு சமண நூல் என்பர். குறட் கருத்துகள் பல இந்நூலில் காணப்படுகின்றன. குழந்தைச் செல்வத்தின் சிறப்பை,

'பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்
துறையிலா வனச வாவித் துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வ மன்றே'

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. நூலாசிரியரைப் பற்றிய குறிப்புத் தெரியவில்லை. வளையாபதி கதை வைசிய புராணத்தின் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் காணப்படுகிறது.

குண்டலகேசி

இந் நூலின் வரலாறு பௌத்தக் கதையாகிய தேரிகாதையின் 46 ஆம் காதையாய் அமைந்துள்ளது; வைசிக புராணத்தின் 34 ஆம் அத்தியாயம், கதைத் தலைவியின் வரலாற்றினைக் கூறுகிறது : இந் நூலை இயற்றியவர் நாதகுத்தனார் என்பவர். 'குண்டலகேசி விருத்தம்' என்றும் இந்நூலுக்குப் பெயருண்டு தர்க்க நூலாயும் இந்நூல் திகழ்வதோடு, பிற சமயக் கருத்துகளையும் தாக்குகிறது.

வாழ்க்கையின் தன்மையினை ஒரு பாடல் உணர்த்து கின்றது :

'பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேவரு மூப்பு மாகி
நாளுநாள் சாகின்றாமால் நமக்குநாம் அழாத தென்னே!'

சீவக சிந்தாமணி

இது ஐம்பெருங் காப்பியங்களுள் தலையாயதாய் வைத் தெண்ணப்படுவது: "நிலவுந் தமிழ் இலக்கியச் சின்னங்களுள் மிகச் சிறந்தது. தமிழ்மொழியின் இலியதும் ஒடிசியுமென இலங்கும் இப்பெரு நவீன காவியம் உலகப் பெருங்காப்பியங் களுள் ஒன்று."[1] இது "தத்தை குணமாலையொடு தாவில் புகழ்ப்பதுமை ஒத்த புகழ்க் கேமசரி" முதலாய மங்கையர் எண்மரைச் சீவகமன்னன் திருமணம் செய்து கொண்டு வாழ் வினை முற்றத் துய்த்து இறுதியில் வீட்டுப்பேற்றினை நோக்கித் துறவு பூண்டதைக் கூறுகிறது. இதற்கு 'மணநூல்' என்ற பெயரும் உண்டு. இவ்வாறு இம்மண நூலில் துறவுள்ளத் தினையும் காண்கிறோம்.

விருத்தப் பாவினைச் சிலப்பதிகாரம் கானல் வரியில் கண்டாலும், அது நல்ல வடிவம் பெற்றது சிந்தாமணியி லேயே எனலாம். விருத்தப்பாவிற்குத் தமிழ் இலக்கியத்தில் தனிச்சிறப்பு இந் நூலாற் கிடைத்தது. இயற்றமிழின் இனிய பெற்றியினையும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரியும் ஆற்றலினையும் சிந்தாமணி பெற்றுள்ளது. இந்நூலின் விருத்தப்பா வழக்கினையே பிற்காலத்தில் பெரும்

---

1. Dr. G. U. Pope speaks of this work as the greatest existing Tamil Literature monument. The great romantic epic which is at once the Iliad and Odyssey of the world.

—Prof. A. Chakravarthy Nainar, M.A., I.E.S. (Retd)

புலவர்களான கம்பர், சேக்கிழார், கச்சியப்பர் என்பவர்கள் கையாண்டுள்ளார்கள். சிந்தாமணியின் விருத்தப்பாக்கள் எளிய இனிய நடையில் அமைந்து, கற்பனை வளமும், காவிய நயமும், பொருட்செறியும், உவமை அழகும், உருவகச் சிறப்பும் பெற்று மிளிர்கின்றன. மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட இந் நூலில், 'சிருங்காரரசம்' என வடநூலார் குடுப்பிடும் காதற்சுவை பெரிதளவு தலை தூக்கி நிற்கிறது. இந்நூல் பதின்மூன்று கலம்பகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிய நூலைச் செய்தவர் திருத்தக்க தேவர் என்னும் சமண சமயத் துறவியார். இவரை வீரமா முனிவர் 'தமிழ்க் கவிஞருள் அரசர்' (He is a prince among the Tamil poets) என்று கூறுகிறார். தீபங்குடியில் திரமிள சங்கத்தைச் சார்ந்த பெரியார் பலர் வாழ்ந்து சமயத் தொண்டும் மொழித் தொண்டும் ஆற்றினர்; சிந்தாமணி யாசிரியர் திருத்தக்க தேவர் மேற்கூறிய பிரிவைச் சேர்ந்தவர்.

ஏமாங்கத நாட்டின் வளத்தை ஆசிரியர் வருணிக்கும் திறம் படித்து மகிழ்தற்குரியது!

'காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் ருடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே.'

சீவகன் பிறந்த இடத்தினையும். நிலையையும் ஆசிரியர் அவலந் தோன்றக் கூறுகிறார் :

'வெவ்வாய் ஓரி முழுவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப்
பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா ருகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்
கியல்வேந்தே!

சமண சமயக் கொள்கையினைப் பின்வரும் பாடல் தெரிவிக்கிறது :

'மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள்
தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சி; ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம்
மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும்
என்ருன்'

இந்நூலுக்கு நச்சினார்க்கினியரின் அரிய உரை உள்ளது. இந்நூலின் கதை, வடமொழியில் அமைந்துள்ள சக்ர சூளாமணியையும், கத்திய சிந்தாமணியையும் தழுவியது. வடமொழி ஆசிரியர் வாதீப சிம்மன் காலம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

'வண்பெரு வஞ்சிப் பொய்யா மொழிபுகழ்
மையறு சீர்த்தி திருத்தகு முனிவன்'

என்னுந் தொடரால் அறியலாகும் 'பொய்யாமொழி' எனும் சத்திய வாக்கியன், கங்க ராஜ்யத்தைக் கி. பி. 908 முதல் 950 வரை ஆண்டவன். எனவே, திருத்தக்க தேவர் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர்.

நரிவிருத்தம் என்ற நூலினையும் திருத்தக்க தேவர் தம் குருநாதர் கட்டளைப்படி இயற்றியுள்ளார். இந்நூல் இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையினைக் கூறுகிறது; கொலை, களவு, கோபம், ஈயாத்தன்மை, பொய் புகறல், புலால் உண்ணல் முதலிய புன்மைச் செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுரை கூறுகிறது.

சிந்தாணியினைப் பற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. க, பின்வருமாறு கூறியுள்ளார். "ஜைனத்திற்கு நாட்டில்

விளைந்த தொல்லைகள் பல. அவற்றால் சிந்தாமணிக்குக் கேடு நேரவில்லை. எந்தக் காலத்திலும் சிந்தாமணியைக் காத்த பெருமை தமிழ் மக்களுக்கு உண்டு. இதைச் சிந்தாமணித் தமிழ்ப்பெற்றி என்று கூறாது, வேறென்ன கூறுவது?''

ஐஞ்சிறு காப்பியங்கள்

உதயண குமார காவியம்

இந்நூல் 'உதயணன் கதை' என்றும் வழங்குகிறது. இது வத்சதேசத்து அரசன் உதயணன் கதையினை விருத்தப்பாவில் கூறுகிறது. ஆறு காண்டங்களும் 367 செய்யுள்களும் இந் நூலில் உள்ளன. காப்பிய அமைதி இந்நூலில் இல்லை.

நாக குமார காவியம்

ஐஞ்சிறு காப்பியங்களில் இந்நூல் ஒன்றென்றும், நூலாசிரியர் சமண சமயத்தைச் சார்ந்த துறவியர் என்பதையும் தவிரப் பிற செய்தி ஏதும தெரியவில்லை.

யசோதர காவியம்

உதயண குமார காவியத்தைப் பார்க்கிலும் இந்நூல் செய்யுள்கள் நயமுடையன. அணிநலன்கள் மிகுதியாய் இந் நூலில் இல்லை; தூய எளிய நடையில் விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. ஐந்து சருக்கங்களும் 330 பாக்களும் கொண்ட இந்நூலில் காணப்படும் 'சோழன் மாரித்தாள்' வரலாறு வேறு எந்தத் தமிழ் நூலிலும் காணப்படவில்லை.

சூளாமணி

இதன் மூலக் கதை ஆருகத மகாபுராணத்தைத் தழுவியது. பாகவத்தில் வரும் பலராமன் கண்ணன்

போன்று, திவிட்டன் விசயன் என்ற இரு வடநாட்டு வேந்தர் களின் வரலாற்றினையும், இந்நூல் பன்னிரண்டு சருக்கங் களில் 2331 செய்யுள்களில் கூறுகிறது. பாகவதமும் சூளாமணியும் கதை நிகழ்ச்சிகளிலும் ஓரளவு ஒத்துள்ளன. ஐஞ்சிறு காப்பியங்களில் சுவையான நூல் இதுவேயாம். தோலா மொழித்தேவர் இதன் ஆசிரியர். இவரை விசயன் என்பான் ஆதரித்தான். இந்நூலைப் பற்றிய குறிப்பு, சிரவண பெல்கோலக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இந் நூலாசிரியர் காலம் பத்தாம் நூற்றாண்டாகும்.

'ஆனை துரப்ப அரவுறை ஆழ்குழி
நானவிற் பற்றுபு நாலும் ஒருவன்ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடர் இன்பம்; மதித்தனை கொள்நீ.'

என்ற பாடல் உலக வாழ்வின் தன்மையை உணர்த்து கின்றது.

நீலகேசி

குண்டலகேசி என்னும் பௌத்தக் காப்பியத்திற்கு எதிராக எழுந்த சமண நூல் இது; 'நீலகேசித்தெருட்டு' என்றும் வழங்கப்படும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலுக்குச் சமய திவாகர வாமன முனிவர், 'சமயதிவாகர விருத்தி' என்னும் உரை எழுதியுள்ளார்.

சமணக் காப்பியம்

மேருமந்தர புராணம் என்ற நூல், மேரு, மந்தரா என்னும் இரு சகோதரர்களின் வரலாற்றினைக் கூறுகிறது. 1406 செய்யுள் கொண்ட இந்நூல் பன்னிரண்டு சருக்கங் களாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. சமணர்கள் அக்காலத்தே கொண்டிருந்த நம்பிக்கையினையும் கோட்பாட்டினையும் இந் நூலில் காணலாம். வாமனாசாரியார் இதனை இயற்றினார்.

பௌத்தக் காப்பியம்

விம்பசார ஈதை என்னும் நூல் மறைந்துபோன நூல் களில் ஒன்று. புத்த சீடனாம் மகதநாட்டு மன்னன் விம்ப சாரன் வரலாற்றினை இந்நூல் கூறுகிறது. நீலகேசி உரை யாசிரியர் இந்நூலின் நான்கு அடிகளை மேற்கோள் காட்டி யுள்ளார்.

திருமுறைச் சான்றோர்கள்

செப்பறை என்னும் ஊரிலே பிறந்தவர் என்று கருதப் படும் சேந்தனார், திருவிசைப்பாவில் மூன்று திருப்பதிகங் களும் திருப்பல்லாண்டும் பாடியுள்ளவராய் விளங்குகிறார். இவரும் ஒன்பதாம் திருமுறையில் சில பாடல்கள் பாடிய சான்றோரான திருமாளிகைத் தேவரும் ஒருவரே எனத் திரு அ. கோபி நாதராயரும்,[1] இருவரும் வேறு வேறு அடியார் கள் எனத் திரு. நீலகண்ட சாஸ்திரிகளும் கூறுவர். ஒன்ப தாம் நூற்றாண்டின் இடையில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மற்றொரு சான்றோர் பட்டினத்தடிகள் ஆவர். வணிகர் குடியில் பிறந்து வளமான வாழ்வு வாழ்ந்த இவர் இவ்வுலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து துறவு பூண்டார். இவர் 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத் தடிகள்போல் யாரும் துறக்கை அரிது' என்று 'பாராட்டப் படுகின்றார். இவர் இயற்றியனவான திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது, திருக்கழுமல மும்மணிக்கோவை, திரு விடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, கோயில் நான்மணிமாலை ஆகிய ஐந்து நூல் களும் பதினோராந் திருமுறையில் காணப்படுகின்றன.

---

2. The Colas, val II, Part I, P. 537.

1. செந்தமிழ் vol II, p. 358 362

முதலாம் பராந்தக சோழன் மைந்தராகிய கண்டராதித்தர் சிறந்த சிவபக்தர். இவருடைய மனைவியார் செம்பியன் மாதேவியாரும் சிவபக்தியில் சிறந்தவராய், கோயில் திருப்பணிகள் பல செய்துள்ளார். 'மேற் கெழுந்தருளின தேவர்' 'சிவஞான கண்டராதித்தர்' முதலான இவருக்கு வழங்கும் பெயர்கள், இவர் சிவன்பால் சிந்தை செலுத்திய பான்மையினை விளக்கும். இவர் தில்லை நடராசப் பெருமான்மீது ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார். அது ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

'தமிழ் வியாசர்' என வழங்கப்படும் நம்பியாண்டார் நம்பிகள் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சான்றோர் ஆவர் அவர் மூவர் பாடிய தேவார இன்னிசைப் பாக்களையும் பின் வந்தவர்கள் பாடிய திருப்பாடல்களையும் தொகுத்துத் திருமுறைகளாக வகுத்துள்ளார். அவர் ஞானசம்பந்தப் பெருமான்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். திருஞான சம்பந்தர் இயற்றிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகள் என்றும், திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் அதனையடுத்த மூன்று திருமுறைகள் என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடியது ஏழாம் திருமுறை என்றும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை என்றும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறை என்றும், திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை என்றும், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், நம்பியாண்டார் நம்பி முதலியோர் பாடல்கள் பதினோராந் திருமுறை என்றும், சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என வழங்கும் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை என்றும் சைவ சமய உலகிலே கருதப்படுகின்றன. நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி பிற்காலத்தில் எழுந்த பெரிய புராணத்திற்குக் கருவாய் அமைந்தது. இத் திருமுறைகள் பகுப்பானது இராசராச

சோழன் காலத்தில் ஏற்பட்டது என அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

சைவ சமயத்தின் முதற்கடவுளாம் சிவபெருமானின் திருவருட் செயல்களைச் சிறப்பித்துக் கூறும் கல்லாடம் என்னும் நூல் கல்லாடர் என்பவரால் இயற்றப்பட்டது. அக் கல்லாடர் எக்காலத்தில் வாழ்ந்தவர் என்பதை அறிய இயலவில்லை. பல்வேறு காலங்களிலும் இப் பெயருடையோர் சிலர் வாழ்ந்திருந்ததை நாம் வரலாற்றிற் காணலாம். 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என்னும் நூலை இயற்றியவரும் கல்லாட தேவநாயனார் என வழங்கப்படுகிறார். ஆசிரியப் பாவில் அமைந்திருக்கும் கல்லாடம் ஆலவாய் அண்ணலின் அருட்பெருக்கையும், புராணக் கருத்துகளையும், திருவிளையாடற் கதைகளையும், அடியவர் வரலாறுகளையும், இசை நாட்டியம் முதலிய நுண்கலைச் செய்திகளையும் கொண்டு பொருள், யாப்பு, அணி முதலியன மிளிர்ந்து திகழ்கிறது.

இலக்கண நூல்கள்

இக்காலத்திலே இலக்கண நூல்கள் பல எழுந்தன. எளிய மக்கள் இயன்ற அளவு புரிந்துகொள்ளும் வகையில் இவை இயற்றப்பட்டன.

நம்பியகப் பொருள்

இந்நூல் நாற்கவிராச நம்பி என்னும் சமணரால் இயற்றப்பட்டது. நூலின் சிறப்புப் பாயிரத்தினால், இவர் புளிங்குடி என்னும் ஊரினர் என்பதும், நம்பிநாயனார் என்பது இவர் இயற்பெயர் என்பதும் தெரியவருகின்றன. தொல் காப்பியத்தில் காணப்படும் அகப்பொருட் கருத்துக்களைக் காலத்திற்குப் பொருந்திய வகையில் எளிய இனிய முறையில் இந்நூல் விளக்குகிறது. இந்நூலுக்கு உதாரணச் செய்யுள்களாகப் பொய்யாமொழிப் புலவர் இயற்றிய

தஞ்சைவாணன் கோவையில் அமைந்திருக்கும் நானூறு பாடல்களும் காட்டப்படுகின்றன. இது பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த நூல் என்பர்.

யாப்பருங்கலக் காரிகை

தீபங்குடியில் வாழ்ந்த அமித சாகரர் என்ற சமணப் பெரியார் இந்நூலை இயற்றினார். குணசாகரர் இந்நூலின் உரையாசிரியர். ஐந்திலக்கணங்களில் ஒன்றாகிய யாப்புப் பற்றி எழுந்த நூல் இது. இவர் (நூலாசிரியர்) பத்தாம் நூற்றாண்டிலோ, பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ இருந்திருத்தல் வேண்டும்.[1]

யாப்பருங்கல விருத்தி

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் செய்யுளியல் பாக்களைப் பற்றியும் பாக்களின் அமைப்புப் பற்றியும் விரிவாகக் கூறினாலும், பிற்காலத்தில் தோன்றிய சில புதிய பாவினங்களுக்கும், காலத்தால் வழக்கொழிந்து போனவற்றிற்கும் காரணமாகப் புதியதோர் இலக்கணம் எழ வேண்டிய அவசியம் நேரிட்டது. யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையையும் பிற்காலத்தில் யாப்பு இலக்கணப் பயிற்சிக்காகப் பயிலப்பட்டன. இந்நூல் காக்கைப் பாடினியத்தைப் பின்பற்றியது என்பர். காரிகையைப் பற்றிக்

'காரிகை கற்றுக் கவிபா டுவதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று'

என்னும் நூற்பா வழங்குகிறது.

நேமிநாதம்

சமண சமயத்தினரான குணவீர பண்டிதர் இதன் ஆசிரியர். இவர் சான்றோருடைத் தொண்டை நாட்டிலே

---

1. திரு. K. S. ஸ்ரீனிவாச பிள்ளை—தமிழ் வரலாறு, ப 341.

களத்தூரிலே பிறந்தார். இந்நூல் எழுத்து, சொல் என்னும் இரண்டு இலக்கணங்களையும் தொண்ணூற்றாறு நூற்பாக் களிற் சுருங்கக் கூறுகிறது எனவே இந்நூலுக்குச் 'சின்னூல்' என்னும் பெயரும் உண்டு.

வச்சணந்திமாலை

இந்நூலும் குணவீர பண்டிதராலே இயற்றப்பட்ட தாகும். 'வச்சணந்தி' என்பது குணவீர பண்டிதரின் ஆசிரியர் பெயர். வெண்பாப் பாட்டியல் என்னும் பெயரும் இந்நூலுக்கு வழங்குகிறது. பாட்டியல் மரபை—இலக்கணத் தை—வெண்பாக்களில் அமைத்துக் கூறுவதனால் இந்நூலு க்கு இப்பெயர் ஏற்பட்டது. மூன்றாம் குலோத்துங்க மன்னன் காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் இந்நூல், இந்திர காளியத்தைப் பின்பற்றியது என்பர்.

வீரசோழியம்

பௌத்த சமயச் சார்பினரான புத்திமித்தரர் இந்நூலின் ஆசிரியர். புத்தபிரானிடம் பத்தி கொண்ட இவர், பொன் பற்றி என்னும் ஊரினர் என்பதை நூற்பாயிரத்தால் அறிகிறோம். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்னும் தமிழின் ஐந்திலக்கணத்தையும் சுருக்கமாக உணர்த்தும் இலக்கண நூலாகும். முன்னோர் நூல்களிற் கண்ட செய்திகளைச் சுருக்கி, வடநூன் மரபைச் சிறிது ஒட்டி இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் தம்மை ஆதரித்த வீர சோழ மன்னன் பெயரையே நூலுக்கு இட்டுள்ளது இவருடைய நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்தும். இம் மன்னன் ஆட்சிக்காலம் 1078 முதல் 1088 வரை என்று வரலாற்றால் அறிகிறோம்.

நன்னூல்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என்ற முறையில் இந்நூல் இடைக்காலத்தில் எழுந்தது. பழங்காலத்தில் இலக்கணத் துறையில் தொல்காப்பியம் பெற்ற இடத்தினை இடைக்காலத்தில் இந்நூல் பெற்றது எனலாம். தொல்காப்பியனார் காலத்திற்குப் பின்னர் வழக்காறு அற்றுப் போன இலக்கணங்களை விடுத்து, இடைக்காலத் தமிழின் இயைந்த பெற்றிற்கு இணைந்த முறையிலேயே இந்நூலை இயற்றினார் பவணந்தி முனிவர்.

'முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்
நன்னூ லாருக் கெந்நூ லாரும்
இணையோ வென்னுந் துணிபே மன்னுக'

என்ற இந்நூல் புகழப்படுகிறது. தன்மையாற் பெயர் பெற்ற நூலுக்கு இந்நூலே உதாரணமாகக் காட்டப் பட்டுள்ளது. அந்நூலாசிரியர் சனகாபுரத்தில் சன்மதி முனிவரின் மைந்தராய்ப் பிறந்தார்; துறவற நெறியில் நின்ற தூயவராய்த் துலங்கினார்.

'திருத்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை வினோதன் அமரா பரணன்'

என்னும் சிறப்புப் பாயிரத் தொடர்கொண்டு, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவனாய் மைசூரில் கோலார்ப் பகுதியை ஆண்ட சீயகங்கன் என்னும் மன்னனே இந்நூல் தோன்றக் காரணமாயிருந்தான் என்பது தெரிய வருகிறது. எனவே, இந்நூலின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

தண்டியலங்காரம்

இது வடமொழியாசிரியர் தண்டி என்பார் இயற்றிய 'காவியாதர்ஸம்' (ஆதர்ஸம்—கண்ணாடி) என்னும் வடநூலின் மொழிபெயர்ப்பாகும். அலங்காரம் என வடநூலார்

வழங்கும் அணிகளைப்பற்றி இந்நூல் கூறுகிறது. நூற்றிருபத்தைந்து சூத்திரங்களைக் கொண்ட இந்நூல், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்று மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்றும், இந்நூலின் உதாரணச் செய்யுள்களையும் இவரே இயற்றினார் என்றும் கூறுவர். சொற்சிறப்பும் பொருட் செறிவும் பொருந்திய வெண்பாக்கள் பல இந்நூலில் பொதிந்துள்ளன.

'ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத் திநளகற்றும் ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்'

என்னும் உதாரண வெண்பா தமிழின் தனிப்பெருமையினை உணர்த்தி நிற்கிறது.

காவிரி நாட்டு அண்ணல் அநபாயனைச் சிறப்பித்துப் பாடல்களிலே சில தொடர்கள் வருவதனால், குலோத்துங்க சோழன் காலமான பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவர் வாழ்ந்தவராயிருத்தல் கூடும்.

நிகண்டுகள்

சொற்களின் பொருள்களை விளக்கும் நூல்களுக்கு நிகண்டு என்பது பெயர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் உரியியல் இத் தன்மையதே. நிகண்டுகள் செய்யுள் வடிவிலும் நூற்பா வடிவிலும் யாவரும் எளிதில் மனப்பாடஞ் செய்யும்வண்ணம் இயற்றப்பட்டனவாகும். அக்காலத்தே அவை தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணை புரிந்தன. ஆங்கிலேயரின் சார்பால் தமிழில் பல அகராதிகள் வெளிவரத் தொடங்கிய பின்னர், நிகண்டின் பயிற்சி

மறைந்தது. நிகண்டுகள் மொழி ஆராய்ச்சிக்கும் சிறிது துணை புரிய வல்லவை.

திவாகரம்

காலத்தில் முற்பட்ட நிகண்டான இதில் சங்கச் சான்றோரின் வழக்குகள் மிகுதியாகக் கையாளப்பட்டு உள்ளன. பிற்கால வழக்குகள் அவ்வளவாக இந்நூலில் இல்லை. இதன் முதல் நூல் ஆதி திவாகாரம் என்றும் சிலர் கூறுவர். சிலர் சேந்தன் என்னும் மன்னன் வேண்டுகோளுக் கிணங்கத் திவாகர முனிவரால் இந்நூல் இயற்றப்பட்ட தென்பர். சேந்தன் திவாகரம் என்ற பெயரும் இதற் குண்டு.

பிங்கல நிகண்டு

இதனை இயற்றிய ஆசிரியரின் பெயரோடு சார்த்தி இந்நூல் பிங்கல நிவண்டு என வழங்கப்படுகிறது. திவாகர முனிவரின் குமாரர் இதன் ஆசிரியர் என்பர். பல்லவர்கள் இந்நூலில் தாழ்த்திப் பேசப்பட்டிருப்பதை நோக்க, இந்நூல் காலத்தாற் பிற்பட்டது என்பது சிலர் கருத்து. இந்நூலின் காலம் பத்தாம் நூற்றாண்டு என்பர்.

சூடாமணி நிகண்டு

மாபுராணம் செய்த குணபத்திர முனிவரின் மாணவ ராகிய மண்டலபுருடர் இந்நூலின் ஆசிரியர். வீரமண்டல புருடர் என்னும் பெயரும் இவருக்குண்டு இந்நூலாசிரியர் கிருட்டிணதேவராயர் காலத்தவர் என்பர். மாறாக, "சூடா மணி பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும்" என்பர் திரு. கே. எஸ். சீநிவாசப் பிள்ளை.[1]

---

1. திரு. K. S. ஸ்ரீநிவாச பிள்ளை, தமிழ் வரலாறு ப. 251.

உரிச்சொல் நிகண்டு

வெண்பாவால் அமைந்துள்ள இந்நூலை இயற்றியவர் காங்கேயர் என்பவர். 'சலாம்' என்று இந் நிகண்டில் இடம் பெற்றுள்ள சொற்கொண்டு, இந்நூல் அருணகிரி நாதர் காலத்திற்குப் பிற்பட்டது எனலாம்.

கயாதர நிகண்டு

கயாதர முனிவரால் இயற்றப்பட்ட இந்நூல் இனிய கட்டளைக் கலித்துறையான் இயன்றது. இந்நூல் இதற்கு முன் எழுந்த நிகண்டுகளின் செய்திகளையே கொண்டு விளங்குகிறது.

ஔவையார்

கி. பி. 1594 இல் சிதம்பரம் இரேவண சித்தர் இந்நூலை இயற்றியதாகக் கூறுவர். இந்நூலாசிரியர் பல சைவப் புராணங்களையும் இயற்றியுள்ளார்.

ஆசிரிய நிகண்டு

காலத்தால் பிற்பட்ட இந்நிகண்டினை இயற்றியவர் செஞ்சியை அடுத்த ஊற்றங்காலிற் பிறந்த பாவாடை வதேத்தியார் குமாரர் ஆண்டிப்புலவர் என்பர். நன்னூலுக்கு இவர் உரை இயற்றியதாகத் தெரிகிறது. ஆனால், அவ்வுரை கிடைக்கவில்லை.

பெரும்புலவர்கள்

ஔவையார்

அறிவிற் சிறந்த ஔவை பிராட்டியார் பெயர் நாடறிந்த தொன்று. பல கதைகள் இவரைக் குறித்து வழங்குகின்றன. பல்வேறு காலங்களில் பல்வேறு ஔவையார்கள் வாழ்ந்தார்

கள் என்பதை இலக்கியம் வாயிலாக அறிகிறோம். சங்க காலத்தில் காணும் ஔவையார் வேறு; இடைக் காலத்தில் வாழ்ந்த ஔவையார் வேறு என்று கொள்வதே பொருந்தும். சிறுவர்களுக்கென்று நல்வழி பாடிய ஔவையார் நாயன்மார் களையும் நம்மாழ்வாரையும் குறிப்பிடுகின்றார்; எனவே, அவர்கள் வாழ்ந்த காலத்திற்கும் பிற்பட்டு ஓர் ஔவையார் வாழ்ந்தார் என்ற முடிவுக்கு வருகிறோம். அவர் பத்துப் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம். நல்லிசைப் புலமை மெல்லியராகிய இவரைச் சோழநாட்டில் பாணர் குடியில் பிறந்தவர் என்று குறிப்பர். தமிழ் நாவலர் சரிதை யும் இவரைக் குறித்துப் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கூறு கின்றது.

ஔவையார் பாடிய நூல்கள்

ஆத்திசூடி என்னும் நூலை இளைஞர்கள் எளிதில் கற்று மனத்தில் இருந்தும்வண்ணம் இவர் எளிய முறையில் சிறு சிறு சொற்றொடர்கள் கொண்டு அமைத்துள்ளார். காப்புச் செய்யுளைத் தவிர்த்து, 109 பாக்கள் உள்ள இந் நூலில், கடவுள் வாழ்த்தில் 'ஆத்தி சூடி' என்னும் முதற் குறிப்பு உள்ளது. எனவே நூலின் பெயரும் அதுவாக அமைந்தது. ஆத்தி சூடியை நோக்கச் சிறிது நீண்ட சொற்றொடரால் ஆன நூல் 'கொன்றை வேந்தன்' என்பது படிப்படியாக மனவளர்ச்சி பெற்று மாணவர்கள் கற்கும் முறையில் இந் நூல் அமைந்திருப்பது, ஆசிரியர் மற்றவர் உள்ளம் உணரும் பான்மையினைப் புலப்படுத்தும். 'மூதுரை' என்னும் நூலுக்கு 'வாக்குண்டாம்' என்னும் பெயரும் உண்டு. 'வாக்குண்டாம்' என்று கடவுள் வணக்கப் பாடல் தொடங்கு வதால் இப்பெயர் ஏற்பட்டது. இதில் காணும் செய்யுள்கள் எளிமையும் இனிமையும் உடையன. நூலின் முப்பது செய்யுள்களிலும் பழைய இலக்கியங்களில் காணும் அரிய கருத்துகளையும் நீதிகளையும் காணலாம். மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல வழிகளைக் கூறும் 'நல்வழி' எனும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். சமயக் கருத்து

களும் நிறைந்த நூல் இது. சிவபெருமானின் ஐந்தெழுத்தும் திருநீறும் இந்நூலில் சிறப்பிக்கப்பட்டிருப்பதால், ஈசனிடம் இடையறாத அன்பு பூண்டவர் ஔவையார் என்பது புலனாகின்றது. இந் நூலில்,

'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா'

என்று விநாயகப் பெருமானின் துதி, கடவுள் வாழ்த்துச் செய்யுளாய் அமைந்துள்ளது. இச் செய்யுள் தவிர மேலும் நாற்பது செய்யுள்கள் இந்நூலில் உள. இவை தவிர, இவர் விநாயகரகவல், ஞானக்குறள், அசதிக்கோவை என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். 'ஔவையின் வாக்கு அமுதமாகும்' என்ற பழமொழிக்கு விளக்கமாய் இவருடைய நூல்கள் எல்லாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய அரிய நீதிகள் நிரம்பிக் காணப்படுகின்றன.

கலிங்கத்துப் பரணி

பரணி—பெயர்க் காரணம்

தினைப்புனத்தில் காவல் செய்வோர் ஒரு பரண் அமைத்து அதன்மீதமர்ந்து, தினைக்கதிர்களைக் கொத்தித் தின்ன வரும் பறவைக்கூட்டங்களைத் துரத்துவதுபோன்று, போர்க்களத்தில் வீரன் ஒருவன் யானைமீதிருந்து எதிரிகளைத் துரத்துவதால் இச்செய்தி பற்றிக் கிளத்தும் நூல் பரணியாகும் என்பர். தினைப்புனம் காவல் செய்வோர் பரண்மீதிருந்து பறவையினங்களைத் துரத்துதல்போன்று, அரசனின் வில், வேல், வாள் ஆகிய படைக்கலங்களால் அமைக்கப்பட்ட போர்ப்பரண் மீதிருந்து புலவர் இந்நூலைப்

பாடுதலால், இந்நூல் பரணி என வழங்கப்பட்டது என்றும் சிலர் கூறுவர். அணி, மணி முதலிய அரிய பொருள்களை வைத்துக் காக்கும் பரணி செப்புப்பரணி என அழைக்கப் படுதல் போல, பல்வகைக் கற்பனை நயமும் பல்வகைச் சுவைகளும் விரவி வருவதனால் இந்நூல் பரணியென வழங்கப்பட்டது என்பர் சிலர். ஆயினும், பரணி நட்சத் திரத்திற் பிறந்தானைப் பாடுவது காரணமாக இந்நூல் பரணி என வழங்கப்படுகிறது என்னும் கருத்துப் பொருத்த முடைத்தாகும். பரணி நாளில் வெற்றி நல்கும் காடுகெழு செல்வியான கொற்றவைக்குக் கூழாக்கிச் சமைத்து இட்டு, கூத்தியற்றி, நின்று ஆடி வழிபாடு நிகழ்த்துவது காரண மாகப் பரணி என்று பெயர் வந்தது என்பர் அறிஞர் பலர்.

பரணியின் இலக்கணம்

'வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை
வெம்புசின மாற்றான் தானைவெங் களத்தில்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்து
ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே'

என்று பன்னிரு பாட்டியலும்,

'மூண்ட அமர்க்களத்து மூரிக் களிறட்ட
ஆண்டகை யைப்பாணி யாய்ந்துரைக்க—ஈண்டிய
நேரடியா யாதியா நீண்டகலித் தாழிசை
ஈரடிகொண் டாதியுட னீறு'

என்று வெண்பாப் பாட்டியலும்,

'ஆனை யாயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி'

என்று இலக்கணவிளக்கப் பாட்டியலும் கூறுவதனைக் காணலாம். மேலும், காலத்தால் முற்பட்ட பன்னிரு பாட்டியலில்,

'ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டாற் பாடுதல் கடனே'

என்று குறிப்பிடுவதால், போர்க்களத்தில் எழுநூறு யானைகளைக் கொன்றவனுக்குப் பரணி பாடப்படும் என்ற கருத்து விளங்குகிறது. பிற்காலத்தில் மன்னன் ஒருவன் பரணிப் பாடலைப் புலவர் வாய்வழிப் பெறுதற்கு ஆயிரம் யானைகளை அமர்க்களத்தில் கொன்றிருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதெனலாம்.

அமைப்பு

கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, பாலைகூறல், கோயிற் சிறப்பு, காளியைப் போற்றல், இந்திர சாலம், மன்னன் மரபுரைத்தல், போர்ச் சிறப்புரைத்தல், போர்க்களம் காணல், கூழ் சமைத்து வார்த்தல், மன்னனை வாழ்த்தல் முதலான உறுப்புகள் பரணி இலக்கியத்தில் இடம்பெறும். சிருங்காரச் சுவையினைக் 'கடை திறப்பு'ப் பகுதியில் கண்டு மகிழலாம். பிரிந்திருக்கும்போது தம் கேள்வர் பிழைகளை நினைத்தலும், பின் கண்டபோது மறத்தலும் ஆகிய பண்பில் மேம்பட்ட கற்பின் செல்வியரை,

'பேணுங் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்த பொழுது நினைந்தவரை
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனபொற் கபாடந் திறமினோ.'

என்று இப் பரணி குறிப்பிடுகிறது.

பரணி பற்றிய ஒரு சிறப்பான செய்தி என்னவெனில், இந்நூலானது வெற்றியடைந்த வேந்தன் பெயரால் வழங்கப்படாமல், தோல்வி பெற்ற மன்னன் பெயரைச் சார்ந்தே வழங்கப்படும் என்பதாம்.

கலிங்கத்துப்பரணி எளிய இனிய நடையும், பொருட் சிறப்பும், கற்பனை நயமும், காவியச் சுவையும், ஓசைச் சிறப்பும் பெற்று மிளிர்கிறது.

கலிங்கத்துப்பரணியின் கடை திறப்புப் பகுதி, வட நூலார் சிருங்காரச்சுவை என வழங்கும் இன்பச் சுவையை இனிது எடுத்துரைப்பதாகும்.

வீரச்சுவையினை,

'குருதியின் நதிவெளி பரக்கவே
குடையினம் நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுடல் அடுக்கியே
கரையென இருபுடை கிடக்கவே'

என்னும் தாழிசையில் காணலாம்.

காளிதேவியை வழிபடுவோர் செயலை,

'அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்த சிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ!'

என்னும் தாழிசை உணர்த்தி நிற்கிறது; விழுமிய ஓசைச் சிறப்பினையும் இது கொண்டு இலங்குகிறது.

இக் கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் சயங் கொண்டார் என்னும் புலவர் பெருமான் ஆவர். பிற்காலப்

புலவரால் இவர், 'பரணிக்கோர் செயங்கொண்டான்' என்று புகழப்பெற்றவர். இவருடைய பரணியைக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர், 'தென்றமிழ்த் தெய்வப் பரணி' என்று போற்றிப் புகழ்கின்றார். "சயங்கொண்டான் பாக்களனைத்தும் சுருங்கச் சொல்லலாதிய பத்தழகு முள்ளனவாய் விளங்குகின்றன. சொன்னயமும் பொருணயமும் பாடறொறுங் காணலாம். இவன்றன் பாக்கள் சந்தவின்பம் பெரிதும் பயக்கும். இழுமெனு மோசையி னொழுகுறு மருவி போல இவன்றன் செய்யுள்களெல்லாஞ் செல்லுகின்றன. குறிப்புப் பொருளும் இறைச்சிப் பொருளும் உள்ளுறை யுவமங்களும் ஆங்காங்குப் பாடல்களிற் காணப்படும். சமயோசிதமாகச் சொற்களைப் பெய்தலும், கற்பனை செய்தலும், வீரம் வெகுளி, அவலம், அச்சம், காமம் முதலிய சுவைகளும், அச் சுவைகட்கேற்ற ஓசையுடைமையும், எதுகை மோனை நியமம் பிழையாமையும், இடர்ப்பட்ட சொன்முடிவு பொருள் முடிவுகளில்லாமையும், இன்னமிவை போல்வன பிற சிறப்புகளும் அந்நூலின்கண் மிகவுமுள்ளன" என்கிறார் திரு.வி.கோ.சூ. அவர்கள்.[1]

கடவுள் வாழ்த்துச் செய்யுள்களைக் கொண்டு சயங் கொண்டார் சைவர் என்பர். முதலாம் குலோத்துங்கனது கலிங்க வெற்றியைக் கூறும் இந்நூலின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இந்நூல் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுவதாகும்.

பெரிய புராணம்

தேவாரம் பாடிய மூவர் உள்ளிட்ட அறுபத்து மூன்று அடியார்களுடைய வரலாற்றினை இந்நூல் கூறுகிறது. அவ்வடியார்கள் இயல்பினை ஆசிரியர்,

---

1. திரு. வி. கோ சூரியநாரயண சாஸ்திரியார் தமிழ்ப்புலவர் சரித்திரம்: ப. 19 20,

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

என்று குறிப்பார். இந்நூலுக்கு இதனை இயற்றிய சேக்கிழார் பெருமான் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். 'அளவில்லாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ் பாடியதால், 'தொண்டர் சீர் பரவுவார்' என்று இவர் வழங்கப்படுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இணையிலாப் புலவரான திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், தம் நூலில், 'பத்திச் சுவைநனி சொட்டச்சொட்டப் பாடிய கவிவலவ' என்று இவரைச் சிறப்பிக்கின்றார். மேலும், 'சேக்கிழார் பிள்ளைத் தமிழ்' என்னும் நூலையும் இயற்றியிருக்கின்றார்.

சேக்கிழார் பெரிய புராணம் இயற்றியது, சீவக சிந்தாமணி அக்காலத்தில் அரசனையும் மக்களையும் தன்வயப்படுததியிருந்ததை அகற்றுவதற்கே என்பர். ஆனால், தமிழ்த் தென்றல் திரு.வி.க. இககருத்தினை ஏற்கவில்லை. சேக்கிழார் பதினோராந் திருமுறையிலும் பிற நூல்களிலும் காணப்பெறாத செய்திகளைப் பெரிய புராணத்தில் கூறுகிறார். திருநீலகண்டர் இளமையில் துறந்த வரலாறும், சாக்கியர் காஞ்சியில் சிவனைப் பூசித்து முத்தி பெற்றமையும், சுந்தரர் சங்கிலியாரை மணந்த செய்தியும் இந்நூலிலன்றிப் பிற நூல்களில் காணப்படாத செய்திகளாகும்.

பெரிய புராணம் பெருங் காப்பியமா?

பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்கள் இந்நூலில் அமையவில்லை என்பர். ஆனால், இது பெருங்காப்பியமே என்று அறிஞர் பலர் துணிகின்றனர். சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்தில், 'சைவ முதல் திருத்தொண்டர்

தம்பிரான் தோழனார் நம்பி' என்ற தொடரில், திருத் தொண்டர் என்ற பெயர் சுந்தரர்க்குரிய பெயராகக் கூறுகிறார். எனவே, பெரிய புராணத்தைச் சுந்தரர் வரலாற்றைக் கூறும் ஒரு நூலாகவே எடுத்துக் கொண்டால். பெருங்காப்பியத்திற்குரிய எல்லா இலக்கணங்களும் நிரம்பி யுள்ளன எனலாம். சுந்தரரே இக் காப்பியத்தின் தன்னிகரில் லாத் தலைவர் ஆவர். "சுந்தரமூர்த்தி நாயனாரது முந்திய வரலாற்றைத் திருமலைச் சருக்கம் முதலிற் கூறுகின்றது. அப்பால், நாட்டுச் சிறப்பைக் கூறியபின், திருவாரூர் நகரச் சிறப்பினைக் கூறுகிறது. அதற்குச் சிறப்புக் கூறும் நோக்கத் தால் மனுச்சோழன் சரிதையை விளக்குகின்றார். இங்ஙனம் காப்பியத்திற்குரிய இரண்டும் (நாட்டுச் சிறப்பும், நகரச் சிறப்பும்) அமைகின்றன" என்பர்.[1] சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், "பெரிய புராணத்தைத் தனித்தனி பற்பல சரிதங்கள் கோத்த கோவை என்று சிலர் கருதுகிறார்கள். அது தவறு. பெரிய புராணமானது தொடர் நிலைச் செய்யுளாய் ஒரு பழஞ்சரிதத்தைச் சொல்வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக்காட்டுவதா யுள்ள ஒரு பெருங்காவியமேயாகும்" என்று நிறுவுகிறார் கள்.[2]

சேக்கிழார் புலமை

இவர் சங்கநூற் பயிற்சியுடையவர் என்பது பெரிய புராணத்தால் தெரிய வருகின்றது. 'புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி', 'புலிப்பல் தாலிப் புதல்வர்ப் புல்லி' என்ற அகநானூற்றுத் தொடரையும், குறுந்தொகைத் தொடரை யும், 'இரும்புலி யெயிற்றுத் தாலி' என்று கண்ணப்ப நாயனார் புராணத்தில் கையாளுகிறார். 'அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே' என்ற கலித்தொகைத்

---

1. திரு. கி. வா. ஜகந்நாதன், தமிழ்க் காப்பியங்கள், ப. 35.
2. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ. சேக்கிழார், ப. 34

தொடரை "மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி" என்று மானக்கஞ்சார நாயனார் புராணத்தில் எடுத் தாண்டுள்ளார்.

நூல் நுவலும் செய்திகள்

இதில் கூறப்படுகின்ற அடியார்கள் பல்வேறு நாடும் ஊரும் சாதியும் தொழிலும் கொண்டவர்கள். இவர் களுடைய வாழ்க்கையை விவரிக்கும் முறையில் அக்காலச் சமுதாய வரலாறு கூறப்படுகிறது. மக்கள் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், கல்விமுறை, அரசு, ஆறுகள், மலைகள், காடு கள், வாவிகள், சோலைகள், கோயில்கள், இசை, நடனம் முதலிய இன்னோரன்ன பல செய்திகள் புராணத்தில் பெரிய புலப் படுத்தப்படுகின்றன.

சேக்கிழார் தொண்டு

இரண்டாம் குலோத்துங்கனுக்கு அமைச்சராய் விளங்கிய தால், அடியார்கள் வரலாற்றினையும் வாழ்க்கை நிகழ்ச்சி களையும் கண்டறிய அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கும், சென்ற ஊர்களுக்கும், பாடல்கள் பாடிய கோயில்களுக்கும் சென்று வேண்டிய குறிப்புகளைத் திரட்டினார். இவர் நேர்மைமார்வம் நெஞ்சிலே நிரம்பப் பெற்றவர். (Man of principle and sincerity) கல்வெட்டுகளையும் ஊன்றிக் கவனித்திருக்கிறார். 'தத்தா, நமரேகாண்' என்ற தொடர், முதலாம் இராசேந்திர சோழனின் தஞ்சாவூர்க் கல்வெட்டில் காணப்படுகிறது. இத் தொடரை அப்படியே மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் கையாளுகிறார்.

இவருடைய இயற்பெயர் 'அருண்மொழித் தேவர்' என்பர் பலர்; கல்வெட்டு, "இராமதேவர்" என்று கூறும். இவர் புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூரினர்; வேளாள மரபினர். கல்வெட்டுகள் இவரை 'மாதேவடிகள்' என்று சிறப்பிக்கின்றன.

இயற்கை வருணனை இவர் பாடலில் இடம் பெறுகின்றது; தென்பெண்ணை பாயும் நடுநாட்டினைப் பின் வருமாறு சிறப்பிக்கின்றார் :

'காலெல்லாந் தகட்டுவரால் கரும்பெல்லாங்
கண்பொழிதேன்
பாலெல்லாங் கதிர்ச்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாந் தரளநிறை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லா மகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை.

இவர் தேவார அடிகளை ஏற்ற இடத்தில் அமைத்துப் பாடுகிறார். 'மாசில் வீணையும்' என்ற அப்பர் பெருமானின் பாடல், பெரிய புராணத்தில்,

'வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவந்
தைவருதண் டென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று
மெய்யொளிவெண் ணிலவலர்ந்து முரன்றயா ழொலியின
தாய்
ஐயர்திரு வடிநீழ லருளாகிக் குளிர்ந்ததே'

என்னும் பாடலாய் வடிவெடுத்துள்ளது.

இவருடைய பாடல்களில் இயற்கை வருணனையும் இறை மணமும் சைவமணமும் கமழுவதைக் காணலாம். பரவை நாச்சியாரைத் திருவாரூர்க் கோயிலில் கண்ட சுந்தரர், பின்வருமாறு எண்ணுகிறார் :

'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவள மலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென்று அதிசயித்தார்'

தஞ்சை மாவட்டத்துக் கோட்டூர் சாசனம் கொண்டும், பிற காரணங்களாலும் சேக்கிழார் பெருமானின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்று துணியப் படுகிறது.

கம்பராமாயணம்

தமிழ்க் காவிய உலகிலே தனக்கெனத் தனித்ததொரு சிறப்பினைப் பெற்ற நூலாய் இந்நூல் திகழ்கிறது. மேலை நாட்டு இலியது (Iliad) என்னும் காவியத்திற்கு ஒப்பான சிறந்த காப்பியமாய்—தமிழின் தலைசிறந்த காப்பியமாய்—இது விளங்குகிறது. உலக மகா காவியங்களின் முன்வரிசையில் நிற்கும் கீர்த்தியினைப் பெற்றுள்ளது. வால்மீகி ராமாயணம் இந்திய மொழிகள் பலவற்றிலும் இராமகாதையாய் மலர்ந்துள்ளது. அம்முறையில் கம்பரால் தமிழில் செய்யப்பட்ட நூல் கம்பராமாயணமாகும். முதன் நூலாம் வால்மீகி ராமாயணத்தைக்காட்டிலும் கம்பராமாயணம் பலவகையில் சிறப்புடையது என வ.வே.சு. ஐயர் குறிப்பிடுகிறார்.[1] மறைத்திரு.பவர் அவர்கள், வால்மீகி, கம்பர் ஆகிய இருவர்தம் இராமாயணத்தையும் தாம் படித்திருப்பதாகவும், இருவரில் யாருக்குச் சிறப்பிடம் தருவது என்ற முறையில் தம்மால் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை என்றும் கூறுகின்றார். கம்பராமாயணம் காவியக் கட்டுக்கோப்பிலே சிறந்து விளங்குகிறது. பாத்திரப் படைப்பிலும், நாடக அமைப்பிலும், உரையாடல் திறனிலும் தனக்கே உரிய தனித்தன்மை பெற்று இந்நூல் விளங்குவதால், 'கம்ப நாடகம்' என்னும் பெயரும் பெற்றுள்ளது. கம்பராமாயணத்தின் கதை, பட்டிதொட்டிகளில் எளிய பாமரர்களும் அறிந்ததொன்றாகும். கம்பராமாயணப் பிரசங்கிகள் என்றே தமிழ்நாட்டில் பலர் இராமகாதையைப் பரப்பினர். 'இராமாவதாரம்' என்றே கம்பர் தம் நூலிற்குப் பெயர்

---

1. "In the Ramayana of Kamban the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad and the Aeneid, the Paradise Lost and the Mahabarata, but wifth its orginal itself, namely the Ramayana of Valmiki." —V. V. S. Aivar

வைத்தார் என்பர். பிற்காலத்தில் காப்பியத்தைச் செய்த சும்பருக்குப் பொதுமக்கள் பெருமையினை ஏற்றி, அவர் பெயரோடு சார்த்திக் கம்பராமாயணம் என்று வழங்கத் தலைப்பட்டு, அப் பெயரே இன்றும் நின்று நிலவும் பெருமை பெறுவ தாயிற்று. இப் பெரிய காவியத்தில் அமைந்துள்ள பாடல்கள், ஆறு காண்டங்களாயும், 113 படலங் 10,500களாயும் பகுக்கப்பட்டுள்ளன.

கம்பரின் பெருமை

'கல்வியிற் பெரியர் கம்பர்', 'கம்பனாரிடைப் பெருமை யுள்ளது', 'கம்பன் வீட்டுள் ஒரு சிறுபுன் கட்டுத்தறியும் கவி செய்யும்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்' என்ற தொடர்கள் எல்லாம் கம்பர்தம் பெருமையினை உணர்த்துவனவாகும்.

'இம்பர் நாட்டின் செல்வமெலாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதை யிற்போற்
கற்றோர்க்கு இதயம் களியாதே!'

என்ற பாட்டொன்று கம்பரின் கவியமுதத்தினை விளக்க வல்லதாகும். "மேலும் பாத்திரங்களின் உரையாடல்களி லும், விசேஷமாக அவர்கள் விம்மும் உணர்ச்சியுடன் பேசும் பாவங்களிலும் கதை வளர்ந்துகொண்டு போவதில் ஆங்காங்கே நிகழும் நாடகபாவம் நிறைந்த சம்பவங்களை யும் கட்டங்களையும் சித்திரிப்பதில்தான் கம்பரின் கவிதை ஈடும் எடுப்பும் இல்லாமல் பூரண சக்தியுடனும் விளங்கு கிறது."[1] திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர் கள்" தமிழிற்குக் கதியாவார் இருவர். ககரத்தைக் கம்பராக

---

1. திரு ஏ. வி. சுப்ரமணிய ஐயர், கல்வியிற் பெரியவர் கம்பர்.

வும், திகரத்தைத் திருவள்ளுவராகவும் கொள்ளுக" என்று எழுதியுள்ளார். எனவேதான் இந்நூற்றாண்டுக் கவிஞரான மகாகவி பாரதியாக, 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு', 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' என்று கூறிய தோடு அமையாது.

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங் கணுமே பிறந்ததிலை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை'

என்றும் பாடினார். 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்ற பாராட்டுச் சொல்லும் எழுந்தது.

இவர் தம் நூலின் பல இடங்களிலும் சிந்தாமணித் தொடரினையும், குறட்கருத்தினையும் கையாளுகிறார் நன்றி மறவாத நன்னெஞ்சம் வாய்ந்த இவர், தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைக் கம்பராமாயணத்தில் உரிய இடத்தில் ஏற்றிப் பெருமைப்படுத்துகிறார். சடகோபரந்தாதி, சரசுவதி யந்தாதி, இலக்குமியந்தாதி, ஏரெழுபது முதலிய நூல்களை யும் இவர் இயற்றியுள்ளார். இவர் மகன் அம்பிகாபதி, 'அம்பிகாபதிக் கோவை' என்னும் நூலை இயற்றியதாகக் கூறுவர்.

கம்பராமாயணத்தில் காணப்படும் சிறப்பியல்புகளிற் சில

தமிழ்நாட்டு மரபு

வடநாட்டுக் கதையைத் தமிழ் மரபிற்கு இயைந்த முறையிலே மாற்றி அமைந்துள்ளார் கம்பர். சான்றாக, திருமணத்திற்கு முன் சீதையும் இராமனும் ஒருவரை யொருவர் கண்டு தம் உள்ளங்களைப் பரிமாறிக் கொண்டனர் எனக் கூறுவார்,

'பருகிய நோக்குளனும் பாசத் தால்பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்.'

கவிதையின் பெற்றி

சிறந்த கவிதை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் கம்பர் கோதாவரி ஆற்றுக்கு உவமை கூறுமுகத்தான் குறிப் பிடுகின்றார்.

'புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.'

இயற்கை வருணனை

கம்பர் இயற்கையின் பேரழகிலே ஈடுபட்டவர்; கற்பனை வளம் மிக்கவர்; மருத நிலத்தைப் பின்வருமாறு சுவைபட வருணிக்கின்றார் :

'தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.'

கம்பர் கனவு

கவிஞர்கள் கனவு காண்பவர்கள்; இவர்களை' மக்கள் ஆக்கா மனுவேந்தர்கள் கவிஞர்கள்' (Poets are the unacknowledged legislators of the world) என்றார் கவிஞர்

ஷெல்லி. கனவு காணும் உரிமையும் அவர்களுக்குண்டு; அக் கனவு பலிப்பதும் உண்டு; கம்பர் கண்ட கோசல நாட்டைக் காண்போம் : கோசல நாட்டில்,

'வண்மை யில்லைஓர் வறுமைஇன் மையால்;
திண்மை யில்லைநேர் செறுநர் இன்மையால்;
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்;
ஒண்மை யில்லைபல் கேள்வி ஒங்கலால்'

என்று குறிப்பிடுகிறார்.

ஓசை நயம்

அறுபதுக்கும் மேற்பட்ட பல ஓசைகளை—சந்த நயங் களை—கம்பர் இடத்திற்கேற்பக் கையாளுகிறார். கதைப் போக்கிற்கும் பாத்திரங்களுக்கும் இயைந்த முறையில் ஒலிநயம் கெழுமிக் கவிதை அமைவது கம்பருடைய பாட்டின் சிறப்பியல்பாகும். சூர்ப்பணகை இராமன் உள்ளத்தைக் கவர வேண்டுமென்று வருகின்றாள். அவள் நடையோடு போட்டி இடுகிறது கவிஞரின் பாட்டில் இழையும் ஓசை.

'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.'

'எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல்' என்ற தொடரையும், 'ஆவின் கொடைச் சகரர் ஆயிரத்து நூறொழித்து' என்ற தொடரையும் கொண்டு, சிலர் கம்பன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும், சிலர் பன்னிரண் டாம் நூற்றாண்டென்றும் கூறுவர். ஆனால் கம்பர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்—மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தார் என்றே அறிஞர் பலர் கருதுகின்றனர்.

ஒட்டக்கூத்தர்

செய்யுள் இயற்றும் ஆற்றலில் அக் காலத்துள்ள கவி களுட் சிறந்து விளங்கினமையால், 'கவிராக்ஷஸ'னென்றும், 'கவிச் சக்கரவர்த்தி'களென்றும், அரசனாற் காளம் என்னும் விருது பெற்றமையால் 'காளக்கவி'யென்றும், இருமொழி நூல்களுள்ளும் இன்றியமையாதனவற்றைச் செவ்வனே அறிந்து அவற்றை நன்கு புலப்படுத்திச் செய்யுள் செய்யும் திறமை வாய்ந்தமையால் 'சருவஞ்ஞ கவி' என்றும் இவர் வழங்கப்படுவர்.

இவருடைய ஊர் மலரி என்பர். 'மலரி வருங்கூத்தன்' என்ற தண்டியலங்கார மேற்கோள் செய்யுளைக் கொண்டு இவ்வாறு துணிகின்றனர். இவருடைய இயற்பெயர் கூத்த ராகும். 'கூத்த முதலியார்' என்றும் வழங்குவதுண்டு. இவர் கைக்கோளர் என்னும் மரபினைச் சார்ந்தவர். இவர் பிறந்த மரபின் சிறப்பினை இவர் இயற்றிய 'ஈட்டியெழுபது' என்னும் நூலில் புகழ்ந்துரைக்கின்றார்.

இவர் விக்கிரம சோழன் மீது ஓர் உலாவும், அவன் மகனாகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது ஓர் உலாவும், அவன் மகனான இரண்டாம் இராசராச சோழன் மீது ஓர் உலாவும் பாடியுள்ளார். இவ்வுலாக்கள் 'மூவருலா' என்று வழங்கப்படும்.

உலா—பெயர்க் காரணம்

இறைவனோ, அரசனோ, ஞானகுருவோ உலா வருவ தாகப் பாடப்படும் பிரபந்தமாதலின், உலாவெனப்படும்.

உலாவின் இலக்கணம்

'ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான'

என்ற தொல்காப்பிய நூற்பா, பிற்கால உலாப் பிரபந்தங் களுக்குத் தோற்றுவாய் செய்தது என்பர்.

உலாவின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் விளங்க உரைக்கப்பட்டுள்ளது.

'பாட்டுத் தலைவன் உலாப்புற இயற்கையும்
ஒத்த காமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி நடப்பது கவிவெண் பாட்டே'

எனப் பன்னிரு பாட்டியலும்,

'திறந்தெரிந்த பேதைதமுத லெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்று—அறைந்தகலி
வெண்பா வுலாவாம்'

என வெண்பாப் பாட்டியலும்,

'குழமகனை அடையாளம் கலிவெண் பாவால்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பைபதின் மூன்று
இயன்மங்கை பத்தொன்பான் மடந்தை யையைந்
தழகரிவை முப்பஃதோர் தெரிவை நாற்பா
னாம்வயது பேரிளம்பெண் முதலா யுள்ளோர்
தொழவுலாப் போந்ததுலாத் தலைவன் போக்குத்
தொடை யெதுகை யொன்றி லின்ப மடலாய்ச்
சொல்லே'

எனச் சிதம்பரப் பாட்டியலும் உலாவின் இலக்கணம் கூறுகின்றன

இறைவன் திருவுருவோ, நாடாளும் மன்னனோ. ஞானசிரியரோ, யானை, குதிரை, தேர் முதலியவற்றுள் யாதானும் ஓர் ஊர்தியில் அமர்ந்து, உடன் வருவோர் சூழ, மங்கல இசைக் கருவிகள் ஒலிக்க, வீதிகளில் உலாவருவதாகவும், அப்பொழுது, பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ மகளிரும் உலா வரும் தலைவனைக் கண்டு, அவரவர் மன

நிலைக்கும் பருவ வளர்ச்சிக்கும் ஏற்பக் காதல் கொண்டு வருந்துவதாகவும் புலவர் பெருமக்களால் கவிதைப் பெற்றி யும் கற்பனைச் சிறப்பும் சுவை நலமும் அமையப் பாடப்படும் ஒரு சிற்றிலக்கிய வகை, உலா என்று வழங்கப்படும்.

தமிழ்ப் பேரகராதி,

''Poem in Kali Venpa metre which describes how women of the seven magalir paruvam are love-stricken at the sight of a hero as they see him coming along in Procession'' என்று விளக்கந் தந்துள்ளது.

உலா அமைப்பு

உலாவின் அமைப்பினைப் பாட்டியல் நூலார், முன்னெழு நிலை; பின்னெழு நிலை என இரு பிரிவாகப் பகுப்பர். தலை வனது சிறப்பு, பெருமை, தலைவன் நீராடல், அணிகலன் புனைதல், உடன் வருவோர் கூற்று, ஊர்தியில் அமர்தல் முதலியவற்றைக் குறிப்பிடும் பகுதி முன்னெழு நிலை என்றும்,. ஏழு பருவ மகளிர் வருணனை, அவர்தம் விளை யாடல்கள், தலைவனைக் கண்டவழி ஏற்படும் காதல் மெய்ப் பாடுகள், காதல் நோய்த் துன்பங்கள் முதலியன பின்னெழு நிலை என்றும் கூறப்படும்.

பாட்டுடைத் தலைவனொடு தொடர்புடைய ஊரின் பெயரால் சில உலாக்களும், பாட்டுடைத் தலைவன் இயற் பெயரோடு சார்த்திச் சில உலாக்களும், பாட்டுடைத் தலைவன் ஊர்ப்பெயர் இயற்பெயர் ஆக இரண்டொடும் சார்த்திச் சில உலாக்களும் பெயர் பெற்றிருக்கக் காணலாம்.

இவ்வுலா இலக்கியங்கள், புறப்பொருள் துறையில் பாடாண் திணையைச் சார்ந்தனவாகும்.

ஒட்டக் கூத்தர் உலா முதலியன பாடுவதில் வல்லவர் என்பதை, 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்'

என்னும் வாக்கால் அறியலாம். இவரியற்றிய மூவருலாவில் சோழர்கள் குல மரபும், பாட்டுடைத் தலைவனின் பெருமையும், தலைவன் பள்ளியெழுந்து நீராடித் தன்னை ஒப்பனை செய்துகொண்டு பட்டத்து யானையில் பவனி வருதலும், உடன் வருவோரும், குழாங்களும், குழாங்களின் கூற்றும், ஏழு பருவப் பெண்டிரின் உள்ளக் கிளர்ச்சியும், அதனால் நிகழும் செயல்களும், பல்வேறு விளையாட்டுகளும் கூறப்படுகின்றன.

இவர் 'தக்கயாகப் பரணி' என்னும் பரணி நூலையும் செய்தார். மேலும் அரும்பைத் தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக் கோவை, குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இராமாயண உத்தர காண்டத்தை இவர் இயற்றினார் என்றும் சிலர் கருதுகின்றனர். தமிழ் இலக்கியத் துறையில் 'பிள்ளைத் தமிழ்' என்னும் துறையை வகுத்த பெருமை இவரையே சாரும். பெரியாழ்வார் இவருக்கு முன்னரே கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பல்வேறு பாடல்களைப் பாடியிருப்பினும், 'பிள்ளைத்தமிழ்' என்ற பெயரிலே தனியொரு நூலினைச் செய்தவர் முதன்முதல் இவரே ஆவர். இவர் பாடிய மூவருலாவில் வரலாற்றுச் செய்திகளை நாம் அறியலாம். இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பது நன்கு தெளிவாகின்றது.

புகழேந்திப் புலவர்

'கேட்டாலும் இன்பம் கிடைக்குங்கண் டூர்கொண்ட
கீர்த்தியொடு
பாட்டா லுயர்ந்த புகழேந்தி'

என்று படிக்காசுப் புலவர், புகழேந்திப் புலவரைத் தாம் இயற்றிய தொண்டை மண்டல சதகத்தில் புகழ்கிறார். 'ஐயன் களந்தைப்புகழேந்தி', 'காரார் களந்தைப் புகழேந்தி' என்ற தொடர்கள் இவர் தொண்டை மண்டலத்தில் பொன்

விளைந்த களத்தூரில் பிறந்தவர் என்பதை உணர்த்தும் இவர் துளுவ வேளாள மரபினர்.

வெண்பா யாப்பில் அமைந்தது இவர் இயற்றிய நளவெண்பா. தமிழில் வெண்பாவில் அமைந்துள்ள நூல் களில் இதுவே தலை சிறந்தது. வெண்பாப் பாடுவதில் புகழேந்தி இணையற்றவர் என்பதைக் கீழ்க்காணும் பாட்டில் கண்டு உணரலாம்.

'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
செயங்கொண்டான் விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவையுலா
அந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாய வுயர்சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொ ணாதே'

நளவெண்பா முதல் நூல் அன்று. மகாபாரதத்தில் கூறப்பட்டிருக்கும் 'நளோபாக்கியானம்' என்ற நளன் வரலாற்றைப் புகழேந்திப் புலவர் தமிழில் செய்தார். நளவெண்பா, 'சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம் கலி நீங்கு காண்டம்' என்னும் மூன்று காண்டங்களும், 424 நேரிசை வெண்பாக்களும் கொண்டது. ஆசிரியர் இயற்கை யினை இனிமையுற எடுத்து இயம்புகிறார்.

'மல்லிகையே வெண்சங்கா வண்டே வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்கரம்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது'[1]

இவர் நளவெண்பாவின் ஒரு செய்யுளில் 'முரணை நகர்ச் சந்திரன் சுவர்க்கி' என்னும் சிற்றரசனைப் புகழ்ந்து பாடி

1. நளவெண்பா, சுயம்வர காண்டம். 17.

யுள்ளார். எனவே, இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டில்— ஒட்டக்கூத்தருக்குப் பின் இரு நூற்றாண்டுகள் கழித்து— வாழ்ந்திருக்க வேண்டுமென்பர்.

கந்த புராணம்

முருக்கடவுளின் பிறப்பு, அவர் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்படுதல், அதுபோது நிகழ்த்திய திருவிளையாடல்கள், தேவர்களைச் சிறை வீடு செய்து, சூரபன்மனை அழித்து, அமரர்கள் துயர் களைந்த அருள்திறம், வள்ளி தெய்வானை இருவரையும் மணந்த செய்தி முதலிய இன்னோரன்ன செய்திகளை இந்நூல் ஆறுகாண்டங்களில் கூறுகின்றது. சைவ சிந்தாந்தக் கருத்துகள் விரவி, இது காவியச்சுவையுடன் மிளிர்கின்றது. வடமொழியில் அமைந்துள்ள கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய 'சங்கர சங்கிதை'யிற் கூறப்படும் ஆறுமுகக் கடவுள் வரலாற்றை அழகுபடக் கூறுகிறது.

இதன் ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார். இவர் காஞ்சியில் ஆதி சைவ மரபில் தோன்றியவர். இது பதினொன்றாம் நூற்றாண்டில் எழுந்த நூல் என்பர். அகத்துறை அமைந்த அழகிய பாடல் ஒன்று காண்போம்:

'மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வே னுய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகந் தவிர்தியென்றான்.

சோழர் காலமே தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சிறந்த காலப் பகுதியாய் அமைந்துள்ளது. இக்காலத்தில் தான் கலை வளர்ச்சியின் உயர்வு காணப்பட்டது. பல கவிஞரேறுகள் வாழ்ந்தார்கள். ஆட்சியும் சிறந்திருந்தது; சமய உணர்ச்சியும் மக்களிடையே மிக்கிருந்தது. எனவே, மக்களின் வாழ்வும் செழித்துத் துலங்கியது.

6. நாயக்கர் காலம்

(கி. பி. 1350—1750)

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே புகழ் பூத்து விளங்கிய சோழப்பேரரசு தாழ்நிலை எய்தியது. அதன் பின்னர்ப் பாண்டியர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் முசுலீம்கள் தென்னகத்தின்மீது படையெடுத்து வந்தார்கள். மதுரையை ஆண்ட சுந்தர பாண்டியனின் திறமைக் குறைவு நன்கு பயன்படுத்திக் கொண்ட மாலிக் காபூர், ஏராளமான செல்வத்தை இங்கிருந்து திரட்டிச் சென்றான். சமய உணர்வுக்கும் முசுலீம்கள் ஊறு செய்த காரணத்தால், இந்துக்கள் அவர்கள்பால் மிகுந்த வெறுப்புக் கொண்டார்கள். இந்தச் சமயத்தில் துங்கபத்திரா நதிக்கரையில் அரிகரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்களால் ஓர் இந்துப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. அதுவே விஜய நகரப் பேரரசு. இந்துக்களை எல்லாத் துறைகளிலும் முசுலீம்கள் பிடியிலிருந்து காப்பாற்றுவதே அதன் நோக்கமாய் அமைந்தது. அப் பேரரசு இந்து சமயத்திற்கும் கலைகளுக்கும் ஒரு புது வாழ்வினை அளித்தது. அதே நேரத்தில் கி.பி. 1538ல் மூன்றாம் பள்ளாள மன்னன் மைந்தன் குமார கம்பணன், முசுலீம்களை வென்று, மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு அடிகோலினான். இதன் பின்னர் நானூறு ஆண்டுகள் வரை வழிவழியாக நாயக்கர் பேரரசு மதுரையில் நிலைத்திருந்தது. இவர்கள் ஆண்ட காலப்பகுதி தமிழக வரலாற்றில் ஒரு சிறந்த பகுதியாகும்.

முசுலீம்கள், ஐரோப்பியர்கள் பிடிகளிலிருந்து தென்னாட்டை ஓரளவு காப்பாற்றிய பெருமை, நாயக்க மன்னர்களையே சாரும். "பழங்காலப் பேரரசர்கள் என நாம்

போற்றும் பாண்டியர், சோழர், பல்லவர் ஆண்ட நாட்டை விட, அதிகப் பரப்புள்ளது நாயக்கர் அரசின் கீழிருந்த நாடு... நல்ல வளமான நிலையில் இருந்ததென்றே கொள்ள வேண்டும்...இந்திய சிற்பக்கலை நிபுணர் ஜேம்ஸ் பெர்கூசன் என்பார் கூறுவது போல, தென்னாட்டின் கலைச் செல்வங் கள் பல நாயக்கர்களால் ஆனவையே...மதுரையில் நாம் இன்று காணும் திருக்கோயிலும், ஆயிரக்கால் மண்டபமும், திருமலை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டவைகளே. இந்த ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டுவதற்கு மட்டும் 1623 முதல் 1645 வரை 22 ஆண்டுகள் பிடித்தனவென்று கணக்கிடப்பட்டிருக்கிறது...வைணவர்கள் முதல் இடம் தந்து போற்றும் ஸ்ரீரங்கம் கோயில் நாயக்கர் காலத்தில் எழுந்ததே; பேரூரில் நாம் காணும் கோயிலின் இப்போதைய நிலை நாயக்கர் காலத்தில்தான் அடைந்தது."

இவ்வாறு பலவாறாக நாயக்கர் காலத்தைப் பற்றி டாச்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் கூறியுள்ளார்கள்.1

நாயக்க மன்னர் வைணவர்களாய் இருந்த டோதிலும், பிற சமயத்தினரையும் ஆதரித்து வந்தனர் என்பது கொள்ளக்கிடக்கின்றது. இவர்கள் ஆட்சியில் முகம்மதியத் தர்க்காக்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. கிறித்தவ மதம் முதலில் பரவிய இடமும் இவர்கள் ஆட்சி செலுத்திய மதுரைதான். இக்காலத்தில் சைவ வைணவ மடங்கள் தங்கள் தங்கள் சமயத்தை வளர்த்தன. கோயில்கள் புதுப் பிக்கப்பட்டன; பல புதிய பெரிய கோயில்களும் எழுப்பப் பட்டன. கோயில்களைப் பற்றிய தல புராணங்களையும் புலவர் எழுதுவாராயினர். பள்ளு, உலா, கலம்பகம், தூது முதலிய சிறு பிரபந்தங்கள் இக்காலத்தில்தான் மிக வளர்ந்தன. சமயத்தின் உட்பிரிவுகளும், தத்துவார்த்தக் கருத்துகளும் நாடெங்கும் பரவின. இவ்வாறு பல துறை

1. டாக்டர் மு. ஆரேக்கியசாமி, மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன் விழா மலர், நாயக்கர் காலம் ப. 39, 40, 41,

களிலும் நாயக்கர் காலத்தில் தமிழ் நாடு முன்னேறியது எனலாம்.

உரையாசிரியர்கள்

பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி, அதனை அடுத்த சில நூற்றாண்டுகள் வரையிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களும் அவற்றிற்கு உரைகளும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு உரைகளும், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், திருக்கோவையார் முதலிய நூல்களுக்கு உரைகளும் தோன்றத் தலைப்பட்டன. புதிய நூல்கள் மட்டுமின்றி, இக் காலத்திற்குமுன் தமிழ் மொழியில் தோன்றிய சிறந்த சில நூல்களுக்கும் உரையாசிரியர்கள் உரை வகுக்கத் தொடங்கினமையால், இக் காலத்தை நாம் 'உரையாசிரியர் காலம்' எனக் குறிக்கலாம்.

முதற்கண் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றிற்கு எழுந்த உரைகளையும் காண்போம் :

சைவ சித்தாந்த தத்துவத்தைப் பற்றி மேனாட்டு அறிஞர்கள் பலவாறாகச் சிறப்பித்துப் பேசுகிறார்கள். டாக்டர் போப்பு அவர்கள், இது 'திராவிடர்களின் அறிவாற்றலின் விளைவு' என்றும், 'இந்தியாவிலுள்ள எச்சமயத்தினும் விரிவானதும், செல்வாக்குப் பெற்றதும், மதிப்பு வாய்ந்ததுமாகும்' என்றும் பாராட்டியுள்ளார்.[1] மறைத்திரு. கௌடி என்பவர், "'சைவ சித்தாந்தக் கொள்கை

---

1. It is the choicest product of the Dravidian intellect, and the most elaborate, influential and undoubtedly the more intrinsically valuable of all the religions of India—Rev. Dr. Pope

போன்று கருத்துச் சிறப்பும், உண்மை அல்லது வழிபாட்டு முறைமையும் அமைந்த கொள்கை பிறிதொன்று இல்லை என்றும், 'இக் கொள்கை மிகப் பழமையானது' என்றும்' 'சமயத் துறையில் தென்னிந்தியாவின் பிற சமயங் களுக்கு இச் சைவ முறையே வழி காட்டியாயிருக்கிறது, என்றும், 'தமிழர்களுடைய சமயம் இதுவே' என்றும், 'மற்றவை இதற்குப் புறம்பானவும் அண்மைக் காலத்தன வுமே ஆகும்', என்றும், 'தென்னிந்தியாவில் சமய உணர்வும்' உண்மையையும் வாழ்வையும் வெளிப்படுத்தும் ஆற்றலும் கொண்டு சைவ சித்தாந்தக் கொள்கை சிறந்து விளங்கு கிறது என்றும்" கூறியுள்ளார்.[1] இவ்வாறு சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழ்நாட்டின் பழைய சிறப்பான கொள்கை என்பது கொள்ளக் கிடக்கின்றது.

சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கு.[2] அவை 'திருவுந்தி யார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிர

---

1. There is no school of thought and no system of faith or Worship that comes to us with anything like the claims to Saiva Siddhanta. The System possesses the merits of great antiquity. In the religious world the Saiva System is the heir to all that is most ancient in South India. It is the religion of the Tamil people, by the side of which every other form is of comparatively foreign and recent orgin. As a system of religious thought, as an expression of faith, and life the Saiva Siddhanta is by for the best that South India possesses, (Rev. Mr. Goudie)

—M. S. Purnalingam Pillai,
Tamil Literature p. 242, 243

2. 'உந்தி களிறு உயர் போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

காசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்' என்பனவாம்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

திருவுந்தியார்

சிவஞான போதத்திற்கு முன்னர்த் தோன்றிய இந் நூலின் ஆசிரியர், திருவியலூர் உய்யவந்த தேவர். பன்னிரண் டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல் சிவஞான போதம் போன்று சைவ சித்தாந்தக் கருத்துகளை நிரல்படக் கூறாது. 45 செய்யுள்களில் ஆசிரியர் தம் மனத்தில் தோன்றிய உணர்ச்சி அனுபவங்களைக் கூறியுள்ள முறையில் அமைந் துள்ளது.

திருக்களிற்றுப்படியார்

அறுபத்துமூன்று நாயன்மார்கள் வாழ்க்கை வரலாற்றி லிருந்து சில செய்திகள் அவர்தம் வல்வினை மெல்வினை இரண்டனையும் விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள் ளது. இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார். திருக்குறள் மேற்கோள் இந்நூலில் சைவ சமயக் கருத்தை விளக்க எடுத்தாளப்பட்டுள்ளன. திருவுந்தியாரின் காலமே இந்நூலின் காலமுமாகும்.

சிவஞான போதம்

பதினான்கு சைவசித்தாந்த நூல்களிலும் இதுவே தலைமை வாய்ந்தது. பன்னிரண்டு சூத்திரங்களையும், முப்பத்தொன்பது அதிகரணங்களையும், எண்பத்தோர் எடுத்துக்காட்டு வெண்பாக்களையும் இந்நூல் தன்னகத்தே கொண்டு 'பதி, பசு, பாசம்' என்ற சைவ சித்தாந்த உண்மை

யினைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. இந் நூலாசிரியர் மெய்கண்டார், திருவெண்ணெய் நல்லூர் வேளாளர் அச்சுத களப்பாரின் மைந்தர். சிலர், 'சிவஞான போதம் வடமொழி இரௌரவ ஆகமத்தின் பாவ விமோசனப் படலத்தில் காணப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் மொழி பெயர்ப்பு', என்பதை மறுத்து, 'இது தமிழ் மொழியிலே தோன்றிய முதல் நூல், மொழி பெயர்ப்பு நூல் அன்று' என்பர் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார்.[1]

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் கல்வெட் டொன்று, மெய்கண்டார் காலம் பதின்மூன்றாம் நூற்றாண் டின் முற்பகுதி என்பதை அறிவிக்கிறது.

சிவஞான சித்தியார்

பரபக்கம், சுபக்கம் என்ற இரண்டு பிரிவுகள் கொண்ட விரிவான நூலான இதனை இயற்றியவர் மெய்கண்டாரின் முதன் மாணவராகிய அருள் நந்தி சிவாசாரியார் ஆவர். இது சிவஞான போதத்தின் வழி நூலாய் அமைந்துள்ளது. 'சிவத்தின் மேல் தெய்வமில்லை; சிவஞான சித்திக்கு மேல் சாத்திரமில்லை' என்று சிவபோக சாரமும், 'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என்று சிவபோகசாரப் பாடற் பகுதியும் இதன் பெருமையினைக் குறிக்கின்றன.

இருபா இருபஃது

அருணந்தி சிவாசாரியார், தம் ஆசிரியரை வழிபட்டு வினவும் முறையிலே சில சைவ சித்தாந்த உண்மைகளை இந் நூலில் விளக்கிக் கூறியுள்ளார். அந்தாதித் தொடையில்

1. தி. வை.சதாசிவப் பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (13, 14, 15 ஆம் நூற்றாண்டுகள்) ப. 24.

அமைந்த இந்நூல் பத்து நேரிசை வெண்பாவும், பத்து நேரிசையாசிரியப்பாவும் கொண்டது.

உண்மை விளக்கம்

ஐந்தெழுத்தாம் 'நமசிவாய' என்ற தத்துவப் பொருளை விளம்பி நிற்கும் இந்நூலின் ஆசிரியர், மெய்கண்ட தேவரின் மாணவர் திருவதிகை மனவாசகங் கடந்தார் ஆவர்.

சிவப்பிரகாசம்

பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களில் முற்கூறிய ஆறு நூல்கள் போக, எஞ்சிய எட்டு நூல்களையும் இயற்றியவர் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் ஆவர். இவர் மறைஞான தேசிகரின் மாணவர். இந்நூலின் பாயிரத்தில் அமைந்த பாட்டொன்றில்,

'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா'

என்று கூறியிருப்பது உணரத்தக்கதாகும். பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இப் பெரியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்ற இரண்டு நூல்களையும் அடியொற்றி இந்நூலினை ஆக்கியுள்ளார்.

திருவருட்பயன்

பத்துப் பத்துக் குறள் வெண்பாக்களைக் கொண்ட பத்துப்பத்து அதிகாரங்களில் சித்தாந்த உண்மைகளை இந்நூல் விளக்குகிறது.

வினா வெண்பா

தம் ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தரை வினவுவது போல் சித்தாந்தக் கருத்துகளை ஆசிரியர் இந்நூலில் அமைத்துள்ளார்.

போற்றிப் ப::றொடை வெண்பா

கலிவெண்பாவில் அமைந்த இந்நூலில் ஆசிரியர் தம் ஞான குருவின் அருட்செயல்களை அகங்குளிர நினைந்து நினைந்து போற்றுகிறார்.

கொடிக் கவி

தில்லையில் கொடியேற்றுகின்ற முறையிலே சில சித்தாந்த உண்மைகளைக் கூறும் சிறிய நூலாகும் இது.

நெஞ்சு விடுதூது

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் தூது ஒன்று. ஆசிரியர்பால் நெஞ்சினைத் தூதுவிடுக்கும் பான்மையில் இந் நூல் அமைந்து, இப்பெயர் பெற்றது. ஆசிரியர் திருவள்ளு வரை நூலில் போற்றுகிறார்.

உண்மை நெறி விளக்கம்

ஆறு விருத்தப் பாக்களில் 'தசகாரியம்' என்று சைவ சித்தாந்த சாத்திரத்துள் கூறப்படும் பத்தையும் இந் நூல் விளக்குகிறது.

சங்கற்ப நிராகரணம்

புறச் சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் உள்ள வேறு பாட்டினைப் புலப்படுத்தி, புறச்சமயக் கருத்துகளை இந் நூல் மறுத்துரைக்கின்றது.

இதுகாறும் கூறப்பட்ட இப் பதினான்கு சாத்திரங்களும் சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

பிரபந்த உரையாசிரியர்கள்

ஆழ்வார்கள் பாடிய பத்திப் பாசுரங்கள் 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என வழங்கப்படும். இப்பாடல்களுக்குப் பதினான்கு பதினைந்தாவது நூற்றாண்டுகளிலே உரைகள் எழத் தொடங்கின. உரை எழுதியவர்கள் தமிழில் வட சொற்களை மிகுதியாகக் கலந்து மணிப்பிரவாள நடையில் உரை எழுதினார்கள். தமிழின் தூய தனித்தன்மை அதனால் பாதிக்கப்பட்டது.

நம்மாழ்வாரின் திருவாய் மொழியினைப் பரப்பியவர் நாதமுனிகள். வைணவப் பெரியாரான இவர், பதினோராம் நூற்றாண்டிலே வாழ்ந்தார் என்பர். இவரே ஆழ்வார்கள் பாடலை முதன்முதல் தொகுத்தவர். யோக ரகசியம், நியாய தத்துவம் முதலிய நூல்கள் இவர் இயற்றியன என்பது தெரிய வருகிறது; இவருக்குப் பின்னர்த் தோன்றிய உரை யாசிரியர்களைக் காண்போம்:

இராமானுசர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி யில் வாழ்ந்தார்; ஆளவந்தார்க்குப்பின் வைணவ சமயத் தலைமை பூண்டார். 'உடையவர்' என்றும், 'எம்பெரு மானார்' என்றும் இவரை வழங்குவர். இவர் சிறந்த சமய சீர்த்திருத்தவாதியாய் விளங்கினார்; இவர் மாணவர் பிள்ளான் என்பவர். 'திருக்குருகைப் பெருமான் 'பிள்ளான்' எனவும் இவரை வழங்குவர். திருவாய் மொழிக்கு ஆள வந்தார் முதன்முதல் உரை எழுதி இருப்பினும், எழுத்து வடிவத்தில் இவரே அதை முதலில் வெளிக்கொணர்ந்தார். இவ்வுரையே 'ஆறாயிரப்படி' என்பது. இந்நூல் ஆறா யிரங் கிரந்தங்கள் என்னும் அளவினை உடையதாகும். ஒரு கிரந்தம் எனப்படுவது ஒற்றெழுத்துகளைத் தள்ளிவிட்டு உயிரும் மெய்யுமாய் அமைந்த முப்பத்திரண்டு எழுத்து களைக் கொண்டதாகும். 'படி' என்பது அளவு என்னும் பொருள்படும். இராமானுசரின் மற்றொரு மாணவர் கூரத் தாழ்வார். அவருடைய மாணவரே திருவரங்கத்தமுதனார்.

இவர் இயற்றிய நூல் இராமானுச நூற்றந்தாதி ஆகும். சகத்திர நாம பாடியம் முதலிய நூல்கள் செய்தவர் பராசரப் பட்டரின் மாணவர் நஞ்சீயர் ஆவர். சீரங்கநாதர் என்ற இயற்பெயர் கொண்ட இவர் ஊர் திரு நாராயணபுரம். இவரது காலம், பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பர். நஞ்சீயரின் மாணவர் நம்பூரிற் பிறந்த நம்பிள்ளை ஆவர். வரதராசர் என்ற பெயரே இவருக்குப் பெற்றோர் இட்ட பெயராகும். ஒன்பதாயிரப்படி, பெரிய திருமொழி உரை, திருவாய்மொழி உரை, திருப்பள்ளியெழுச்சி, திருவிருத்த உரை முதலிய பல நூல்களின் ஆசிரியர் இவர். அடுத்து, பன்னீராயிரப்படியை இயற்றிய அழகிய மணவாள ஜீயர் பன்னீராயிரம் கிரந்தங்களையுடைய பாகவதமும் செய்துள்ளார். தீபப்பிரகாசிகை, கீதாசாரம் முதலிய நூல்களும் இவரால் இயற்றப்பட்டன. தென்கலையார் பெரிதும் போற்றும் பெரியவாச்சான் பிள்ளை 'இருபத்து நாலாயிரப் படி' என்னும் விரிவுரையை இயற்றியவர் ஆவர். திருவாய் மொழி தவிர்த்து, நாலாயிரப் பிரபந்தத்தில் எஞ்சியுள்ள மூவாயிரம் பாடல்களுக்கும் இவர் விளக்கவுரை வரைந் துள்ளார். திருவாய் மொழிக்கு முப்பதாயிரப் படியினை எழுதியவர் வடக்குத் திரு வீதிப்பிள்ளை ஆவர். வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்ல வேதாந்ததேசிகர், 'நவரத் தினமாலை, திருச்சின்னமாலை, அடைக்கலப்பத்து' என்னும் நூல்களை இயற்றியுள்ளார். காஞ்சி வரதராசப்பெருமானின் பெருமையினைக் கூறும் வகையில், இவருடைய 'அத்திகிரி மான்மியம்' என்னும் நூல் அமைந்துள்ளது. 'அட்டாதச ரகசியம்' என்னும் பதினெட்டுத் தத்துவ நூல்களை இயற்றியவர் பிள்ளை லோகாசாரியார். அழகிய மணவாளப் பெருமாணயினார், திருப்பாவை உரை ஆறாயிரப்படி, மாணிக்கமாலை, ஆசாரிய இருதயம், அருளிச் செயல் இரகசியம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். தென் கலையார் தலைவராகக் கொண்டாடும் சிறப்புவாய்ந்த பெரிய ஜீயர் மணவாள முனிகள் என்னும் இயற்பெயர் கொண்டவர்; சிக்கிற்கடாரம் என்னும் ஊரினர். உபதேச

ரத்தினமாலை, திருவாய் மொழி, நூற்றந்தாதி, பிரமேய சாரம் முதலான பாட்டியல் நூல்களையும், திருவாராதனைக் கிரமம், விரோதி பரிகாரம் முதலான உரைநடை நூல்களை யும் இவர் இயற்றியுள்ளார். மேலும், இவர் பெரியாழ்வார் திருமொழி உரை, இராமானுச நூற்றந்தாதி உரை, ஞான சார உரை தத்துவ வாக்கிய உரை என்னும் உரை நூல்களை யும் இயற்றினார் என்பது தெரிகிறது. 'அழகிய மணவாள தாசர்' எனப்படும் பரத்துவ பட்டரின் மாணவர் பிள்ளைப் பெருமாளையங்கார் பிற்காலத்தவர் ஆவர்.

பதினெண் சித்தர்கள்

பண்டைக் காலத்தில் யோகம் பயின்று அறிவு நிரம்பிய வர்கள் சித்தர்கள். இவர்கள், உலகப்பொருள்களின் உண்மை நிலைகளை விளக்கி, அவை பயனளிக்கும் ஆற்றலை யும் தங்கள் நூல்களில் அறிவித்துள்ளார்கள். மருத்துவ நூல், மந்திர நூல், யோக நூல், ஞான நூல், இரசவாத நூல் முதலான பல பொருள்பற்றியும் இவர்கள் நூல் செய் துள்ளார்கள். சித்த மருத்துவம் தமிழர்க்கியைந்த மருத்துவம் ஆகும். 'பதினெண் சித்தர்கள்' என்று வழங்கப்படுவோர், அகத்தியர், புலத்தியர், புசுண்டர், நந்தி, திருமூலர், காலாங்கி நாதர், போகர், கொங்கணர், உரோமமுனி, சட்டைமுனி, மச்சமுனி, கருரார், தன்வந்திரி, தேரையர், பிண்ணாக்கீசர், கோரக்கா, யூகி முனி, இடைக்காடர் என் பவர். சித்தர்களில் தலையாயவர் அகத்தியர். அகத்தியர் ஒருவரா பலரா என்பது ஐயத்திற்கிடமானது. ஏனெனில் பல நூல்கள் பிற்காலத்தில் அகத்தியர் பெயரோடு சார்த்தி வழங்கப்படுகின்றன. சித்தர் நூல்களில் தலைசிறந்த நூலாம் திருமந்திரத்தினை இயற்றியவர் திருமூலர் என்பதை முன்னர்க் கண்டோம். காலாங்கி நாதரின் மாண வராம் போக முனிவர், யோகம் எழுநூறு, வைத்தியம் ஏழாயிரம், நிகண்டு பதினேழாயிரம், போகர் திருமந்திரம் முதலான நூல்களைச் செய்துள்ளார். இவருடைய மாணவர்

புலிப்பாணி, பழனிமலைச் சாரலில் வைகாவூரில் வாழ்ந்து சிதம்பரம் இருபத்தைந்து, சாவாத்திரட்டு நூறு, பல திரட்டு நூறு, வைத்தியம் ஐந்நூறு முதலிய பல நூல்களை இயற்றி யுள்ளார். கொங்கணர், கொங்கணர் ஞானம், குணவா கடம், கடைக்காண்டம், திரி காண்டம் முதலிய நூல்களின் ஆசிரியராவர். சட்டைமுனி, ஞானம் நூறு, கல்பம் நூறு, வாத நிகண்டு, சடாட்சரக் கோவை முதலிய நூல்களைத் தந்துள்ளார். திராவகம் எண்ணூறு, வைத்தியம் எண்ணூறு முதலிய நூல்கள் மச்ச முனியால் இயற்றப்பட்டனவாகும். தேரையர் மாணவர் யூகிமுனி வைத்திய சிந்தாமணி என்னும் நூலை இயற்றியுள்ளார். அகத்தியர் மாணாக்கர் எனக் கருதப்படும் தேரையர் எழுதிய பல நூல்களுள் 'நோய் அணுகா விதி' என்னும் நூல் அவர் மருத்துவ சாத்திரத்தில் வல்லுநர் என்பதைக் காட்டுகிறது. தன்வந்திரி என்பவர், வைத்திய சிந்தாமணி, கலை ஞானம், தன்வந்திரி நிகண்டு என்னும் நூல்களின் ஆசிரியராய் விளங்குகிறார். தனிப் பாடல்கள் பலவற்றை இயற்றிய பாம்பாட்டிச் சித்தர், சித்திர ஆருடன் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். மனத்தின் அலைச்சலுக்குப் பேயின் அலைச்சலை ஒப்பிட்டுக் கூறியவர் அகப்பேய்ச் சித்தர் ஆவர். குதம்பாய்' என்று பெண்ணை விளித்துப் பாடல்கள் பாடிய சித்தர் குதம்பைச் சித்தர்[1]. இவர்கள் தவிர, தாயுமான அடிகள் பாராட்டிய— பிற்காலத்தவரான சிவவாக்கியர் என்பவர் சிவவாக்கியம் என்ற சிறந்ததோர் அறிவு நூலினைச் செய்துள்ளார்.

இவர்களுடைய பாடல்களில் ஆழ்ந்த மறைபொருள் அமைந்திருக்கும். மேற்போக்காக எளிதில் பொருள் புரிந்து கொள்ள இயலாது. ஆயினும், இவை நாட்டு மக்கள் நெஞ்சில் கவர்ச்சியூட்டி இன்றும் வாழ்கின்றன.

---

1. குதம்பை-காதணி வகை. அஃது ஆகுபெயராய்ப் பெண்ணை உணர்த்தியது. 'குதம்பாய்' என்பது விளி.

இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள்

தமிழின் பழைய இலக்கண நூலாம் தொல்காப்பியத் திற்குப் பலர், உரை எழுதினர். 13, 14 ஆம் நூற்றாண்டு களில் வாழ்ந்த பெரியார் சிலர் சங்க நூல்களுக்கும் தெளிந்த உரை எழுதத் தொடங்கினர். சங்கம் மருவிய நூல்களான திருக்குறள் சிலப்பதிகாரத்திற்கும் இவர்கள் உரை கண்டார் கள். இவர்களுடைய உரையின் உதவி இன்றேல் நாம் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலாது. எனவே, நாம் இவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன் பட்டவர்களாவோம்.

இளம்பூரணர்

காலத்தால் முற்பட்ட உரையாசிரியர் இளம்பூரண அடிகள். 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்கு' முதல் முதல் உரை கண்ட சிறப்பினால் இவர், 'உரையாசிரியர்' என்றே வழங்கப்படுகிறார். 'புலவு துறந்த பெரியோர்' என்று பிற்காலத்தில் இவரைப் பாராட்டுகின்றனர். தொல் காப்பியம் முழுமைக்கும் இளம்பூரணர் உரை உள்ளது. இவர் உரை சுருக்கமும், எளிமையும், தெளிவும் கொண்டது. இவரது காலம் 14 ஆம் நூற்றாண்டின் இறுதியாகவாவது 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகவாவது இருக்கலாம் என்பர் அறிஞர் திரு. கா. சு. பிள்ளை.[1]

பேராசிரியர்

உரையாசிரியர்களுள் 'பேராசிரியர்' என்ற சிறப்புப் பெயர் அமைந்திருப்பது இவருடைய உரையின் பெருமை யினைப் புலப்படுத்தும். இவர் தொல்காப்பியம் முழுமைக் கும் உரை எழுதியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது ஆனால், பொருளதிகாரத்தில், மெய்ப்பாட்டியல், உவம

---

1. திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு, ப. 385.

வியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவர் உரை இப்பொழுது கிட்டுகின்றது. இவர் குறுந்தொகைக்கும் உரை எழுதினார் என்பர். கோவை நூல்களில் சிறப்புடைத்தாய் 'இராசாக் கோவை' என்று கூறப்படும் மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருக் கோவையாருக்கு இவர் அழகியதோர் உரையினைச்செய்துள் ளார். இதனால், இவரைச் சைவர் என்பர். இவர் வறுமை என்பதற்குப் 'போகம் துயக்கப் பெறாத பற்றுள்ளம்' என்று உரையெழுதிய பான்மை சிறப்புடையதாகும்.

சேனாவரையர்

இந்த வடமொழிப் பெயருக்குத் தமிழில் இயைந்த பொருள், 'படைத் தலைவர்' என்பதாம். மயிலை நாதர் தம் நன்னூல் உரையில் சிறப்பாற் பெறும் பெயருக்கு இவர் பெயரை உதாரணம் காட்டுகிறார். 'ஆற்றூர்ச் சேனா வரையர்' என்று சாசனத்தில் பெயர் காணப்படுகிறது. இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் திட்பமான ஒரு செவ்விய உரையினைச் செய்துள்ளார். இவருடைய உரையே ஏனையோர் உரைகளிலும் சிறந்து, பலராலும் பயிலப்பட்டும் வருகிறது. சொல்லதிகாரத்திற்கு எழுந்த இவருடைய உரை 'சேனா வரையம்' என்றே குறிக்கப்படும் பான்மை இவருடைய சிறப்பினை உணர்த்தும், 'வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என்று இவர் வழங்கப்படுவதற்குத் தகுந்தாற் போன்று, வடநூற் கருத்து களையொட்டிச் சில இடங்களில் தமிழிலக்கணம் கூறுகிறார். இவர் காலம், பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்பகுதி யாகும்.

நச்சினார்க்கினியர்

'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்ற புகழுரையே இவருடைய உரையின் சிறப்பை விளக்கப் போதிய சான்றாகும். இவரது உரை விரிந்தும் விளக்கமாயும் காணப்படுகிறது. இவர் உரையாசிரியர்கள் இடையில் சிறந்த இடத்தைப் பெறுகிறார். ஒரு பாடலை எடுத்துக்

கொண்டு, இடையில் ஒடித்து, முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப் பொருள் உரைத்தல் இவர்தம் உரை நெறியாகும். சேனாவரையர் உரையாசிரியரை மறுப்பது போலவே, இவர் சேனாவரையரைச் சொல்லதிகாரத்தின் உரையில் மறுத் துரைக்கிறார். இவர் உரை 'நச்சினார்க்கினியம்' எனப்படும். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி என்னும் நூல்களுக்கு இவர் அரியதோர் உரை செய்துள்ளார். குறுந்தொகைப் பாடல்களுக்கு இவர் கண்டதாகக் கூறப்படும் உரை கிட்டவில்லை. "பாலைத் தன்மையாவது, காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி நீரும் நிழலுமின்றி, நிலம் பயந்துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்ப மின்றித் துன்பம் பெறுவது" என்று பாலையின் தன்மை யினைப் பாங்குறப் புலப்படுத்தும் அழகு இவர் உரைமாட்சி யின் நுட்பத்தினைப் புலப்படுத்தும். இவர் தம் உரையைப் பற்றித் தவத்திரு டாக்டர் பவர் என்பவர் பின்வருமாறு கூறு கின்றார்: "ஐரோப்பியர்களின் உரை விளக்கம் போன்று இவர் உரை அமைந்துள்ளது. மூலப்பகுதியை விளக்கி வரை கிறார்; இலக்கணச்சிறப்பினை எடுத்துக் காட்டுகிறார்; தொல்காப்பியச் சூத்திரத்தைத் தம் உரை முழுவதிலும் மேற் கோள் காட்டுகிறார்; முக்கியமான தொடருக்கு விளக்கம் தருகிறார். இவர் காலத்து வழங்கிய பாடபேதங்களைக் குறிப்பிடுகிறார். இவருடைய நடையமைப்பு சுருங்கியும், உரைநடைப்போக்கு உயர்ந்தும் காணப்படுகின்றன. வகைப் படுத்தலின் சிறப்பை உணர்த்துவனவாய் உரை அமைந் துள்ளது.[1]

---

1. His (Nachinarkiniar's) Comments are very much on the plan of European annotators. He paraphrases the text and points out grammatical peculiarities. He quotes Tholkappia Sutrams throughout, explains obsolete terms, and gives the various readings which existed in his day but his style is condensed and his language pedantic. His productions, however show great powers of analysis—Rev. Dr. Bower.

கல்லாடர், தெய்வச்சிலையார் என்னும் இருவரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியிருப்பது தெரிகிறது.

அடியார்க்கு நல்லார்

இவர் 'பொப்பண்ண காங்கேயன்' என்னும் கன்னட அரசனால் ஆதரிக்கப் பெற்றவர் என்பது 'பொப்பண்ண காங்கேயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொல்வித்ததே' என்ற செய்யுட்பகுதியால் அறியலாம். 'நிரம்பையர் காவலர்' என்னும் பெயரும் இவருக்கு உண்டு. நிரம்பை—கொங்கு நாட்டில் உள்ள ஓர் ஊர். முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்ததோர் உரையினை இயற்றியுள்ளார். பொருண்முடிவுக் கேற்பச் சிறிதும் பெரிதுமாகத் தொடர்களை அமைத்து உரைகூறி ஆங்காங்கு இன்றியமையா இலக்கணம் முதலியவற்றை விளக்கிச்சொல்லுதல் இவருரையின் இயல்பு. சிற்சில இடங்களில் அணிகள், மெய்ப்பாடுகள் முதலியன இவராற் குறிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் இவர் நுண்ணிதின் உணர்ந்து காட்டியிருக்கும் சொல்லமைப்புகளின் பயன் கற்றோர்க்கு இன்பம் விளைவிப்பனவாகும்."[1]

இவர்தம் உரையில் காலத்தைக் கணித்தறியச் சில சோதிடக் குறிப்புகளையும் தருகிறார். சிலப்பதிகாரத்தின் பல காதைகளுக்குக் கிட்டுகின்ற இவருடைய உரையும் கிடைக்காமற் போயிருந்தால், சிலம்பின் இசை பற்றிய செய்தி சிறிதளவும் விளங்காமற் போயிருக்கும்.

பரிமேலழகர்

காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் அர்சகர் மரபினர் என்று இவரைக் கூறுவர். வைணவ சமயத்தினரான

---

1. சிலப்பதிகாரம் ந. மு. வே. நாட்டார் உரை. அடியார்க்குநல்லார் வரலாறு ப. 31.

இவர், பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். 'வடநூற் றுறையுந் தென்திசைத் தமிழும் விதிமுறை பயின்ற நெறியறி புலவன்' என்று இவர் குறிக்கப்படுகின்றமை, இவர்தம் இருமொழிப் புலமையை உணர்த்தும். திருக்குறளுக்குப் பதின்மர் செய்த உரையில் இவருடைய உரையே தலை சிறந்து விளங்குகின்றது. இதனை,

'நூலிற் பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி'

என்ற தொண்டைமண்டல சதகச் செய்யுளால் அறியலாம். இவர் உரை தருக்க முறையில் (logical) சிறந்து விளங்கு கிறது. பழைய செய்யுள்களையும் உரைநடையில் எடுத்துத் தருகின்ற பெருமை இவரையே சாரும். சிற்சில இடங்களில் வடநூலார் கருத்தையொட்டித் தமிழர் மரபிற்கு மாறான முறையில் உரை வகுக்கிறார். ஆயினும், இவருடைய உரையே சிறந்து விளங்குகிறது. சங்க நூலாம் பரிபாடலுக்கு ஓர் அரிய உரையினை இவர் வகுத்துள்ளார்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய சங்க நூல்களுக்கும், சில பாடல்களுக்கும் பழைய உரை ஒன்றுள்ளது; இயற்றியவர் இன்னார் என்பது புலப்பட வில்லை. பிற்காலத்தில் நன்னூலுக்குச் சிவஞான முனிவரும், மயிலை நாதரும், சங்கர நமச்சிவாயப் புலவரும் உரை கண்டனர்.

பல துறை நூல்கள்

வடமொழியில் அமைந்துள்ள புராணங்களில் சில வற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார்கள் நம் நாட்டுப் புலவர்கள். இக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தலபுராணங் கள் எழுதத் தலைப்பட்டார்கள். கோயில்களைப் பற்றியும்

இறைவன் எழுந்தருளியிருக்கும் அவ்வூரின் சிறப்பினைப்பற்றி யும் எழுந்த நூல்கள் தலபுராணமாய் முகிழ்த்தன. தனிப் பாடல்களும் எழுந்தன. இத்துறையில் முன்னின்ற புலவர் பெருமக்களுள் சிலரைக் காண்போம்.

சிதம்பரத்தில் சைவ வேளாளர் குலத்தில் திரு'மலைநாதர் தோன்றினார்; இளமையிலே பிரசங்கம் செய்யும் ஆற்றல் காரணமாகப் 'புராண' என்ற அடைமொழியினைப் பெற்றார்; மதுரைச் சொக்கலிங்கப் பெருமான்மீது சொக்க நாதருலாவினை இயற்றினார். சிதம்பரத்தலப் பெருமை கூறும் சிதம்பர புராணமும் இவர் செய்ததே. இவர் மைந்தர் பரஞ்சோதியார் 'சிதம்பரப் பாட்டியல்' என்னும் இலக்கண நூலினைச் செய்துள்ளார். மானா மதுரையை அடுத்த வேம்பத்தூரில் மாதவபண்டிதர் மரபிலே செவ்வைச் சூடுவார் என்ற பெரியார் தோன்றித் திருமால்மீது ஆராத அன்பு கொண்ட காரணத்தினால் வடநூலில் திருமால் சரிதையைக் கூறும் பாகவத புராணத்தைத் தமிழில் பாடினார்; 4970 திருவிருத்தங்கள் கொண்ட இந்நூல், ஓசை நயத்தினையும், மேன்மேலும் படிக்கத் தூண்டும் போக்கினையும் கொண்டு திகழ்கிறது.

அரிகண்ட புரத்தில் திருவேங்கடமுடையாரின் இரண் டாம் மகனாராகப் பிறந்தவர் அரிதாசர் என்பவர். இவர் அக் காலத்தே தமிழகத்தை ஆண்ட கிருட்டிண தேவராயரிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கினார். இவர் இருசமய விளக்கம் என்னும் நூலினை இயற்றி, நாகலாபுரம் கருமாணிக்க வண்ணன் கோயிலில் அரங்கேற்றினார். வேதாரணியம் எனப்படும் திருமறைக்காட்டில் சைவசமயப் பற்று நிரம்பிய குடும்பத்திலே நிரம்பவழகிய தேசிகர் பிறந்தார்; சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்கு அரியதோர் உரை எழுதினார். திருப்பரங்கிரிப் புராணமும் சேது புராணமும் இவர் இயற்றியனவே. இலக்கண நயங்களைத் தம் பாடல்கள் இடையே பெய்து, இவர் நூல் அமைத் துள்ளார். வடமொழிப் புலமை நிரம்பியவர் அரிகேசநி

என்னும் புலவர் ஆவர். இவர் வடமொழிப் பெருங்கவிஞர் காளிதாசனின் இரகுவம்சத்தைத் தமிழில் தந்துள்ளார் இருபத்தாறு படலங்களும் இரண்டாயிரத்து நானூற்று நான்கு செய்யுள்களும் கொண்ட இந் நூலின் நடை சிறிது கடினமாகக் காணப்பட்டாலும், பொருள் பொதிந்து அமைந்துள்ளது.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

'ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்து எழுதிப்படித்த விரகன்

இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர ராகவன்'

என்ற தொடரால் அறியலாகும். அந்தகக்கவி வீரராகவ முதலியார் தொண்டை மண்டலத்தில் செங்கற்பட்டுக்கு அணித்தேயுள்ள பூதூரில் பிறந்தவர். இவர் இலங்கைப் பரராச சேகரனைப் பாடிப் பல பரிசில்கள் பெற்றுத் திரும்பினார். அதுபொழுது அவர் பாடிய பாடல் இருபொருள் தரும் சிலேடைச் சொற்கள் அமைந்து விளங்குகிறது. இவர் இலங்கை மன்னனிடம் பாடிய 'வடவைக் கனலைப் பிழிந் தெடுத்து' என்னும் பாடல் இலக்கிய நயமுடைத்து. இவர் சேயூர்க் கலம்பகம், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருவாரூர் திருக்குன்றமாலை, திருக்கழுக்குன்றப் புராணம், சந்திரவாணன் கோவை முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

அதிவீரராம பாண்டியர்

'நைடதம் புலவர்க் கௌடதம்' என்னும் சிறப்புவாய்ந்த நைடதம் என்னும் நூலை இயற்றிய புலவர் - அரசர் - அதிவீரராம பாண்டியர் ஆவர். அவர் தென்காசியிலிருந்து பாண்டி நாட்டை ஆண்டார்; தென்காசியில் ஒரு கோயிலும் கட்டியுள்ளார். இவர் இயற்றிய நைடதம் நளதமயந்தியர் வரலாற்றினைக் கூறுவது. இதற்கு முன்தோன்றிய பெருங் காப்பியங்களின் பொலிவினை இந்நூலில் காணலாம். இதன் முதன் நூல் வடமொழியில் அமைந்துள்ள நைடதமாகும்.

கங்கைக் கரையில் அமைந்துள்ள காசிநகரின் பெருமையைக் கூறும் 'காசிகாண்டம்' என்னும் நூலையும் இவர் செய்துள்ளார். படிக்கப்படிக்க இன்பம் தரும் கூர்ம புராணத்தினையும், மொழிபெயர்ப்பு நூலான இலிங்க புராணத்தினையும், சிறுவர்களுக்காக நறுந்தொகை எனும் வெற்றிவேற்கையினையும் இவர் இயற்றியுள்ளார். கரிவலம்வந்த நல்லூரில் உறையும் சிவபெருமான்மீது திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடினார். இது 'குட்டித் திருவாசகம்' என அழைக்கப்படும் சிறப்புடைத்து.

'சிந்தனை உனக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் பரகதி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா, கருவையில் இருக்கும் தேவே!'

என்ற உருக்கமான பாடலை இந் நூலின்கண் காணலாம். இவர் தமையனார் வரதுங்கராம பாண்டியர் ஆவர். இவர் கல்வி மிக்கவர்; வடமொழிக் கொக்கோகத்தைத் தமிழ்ப் படுத்தியவர். 'பிரம்மோத்தர காண்டம்' எனும் நூலையும் செய்துள்ளார். இவர் மனைவியாரும் தமிழ்ப் புலமை சான்றவர் என்பதனை அறிகிறோம். இப் பெண்ணரசியார் நைடதத்தை 'நாய் விரைந்தோடி இளைத்தாற்போன்ற தன்மையுடைத்து' என்று கூறி, அந்நூலின் குற்றத்தினைப் புலப்படுத்தியிருப்பது, அவருடைய நூல் ஆயும் நுண்ணறிவினை நுவலும்.

கச்சியப்ப முனிவர்

கவிராட்சதர் எனப் புகழப்படும் கச்சியப்ப முனிவர், இக் காலத்தில் வாழ்ந்தவரே. இவருடைய புராணக் காதலில் முகிழ்வித்தவையே விநாயக புராணமும், தணிகைப் புராணமும். தணிகைப் புராணத்தின் நடை சிறிது கடினமாயிருந்தாலும், இன்று சைவர்களால் நன்கு போற்றப்படுகிறது.

இவர் திருத்தணிகையில்வாழ்ந்தவர் என்பர். தொண்டை நாட்டின் சிறப்பும், அக்கால மக்களின் வரலாறும், சமயமும், வழிபாட்டு நிலையும் தணிகைப்புராணம் கொண்டு தெளியலாம்.

வீரகவிராயர்

அரிச்சந்திர புராணம் பாடிய வீரகவிராயர், பாண்டி நாட்டு நல்லூரில் பொற்கொல்லர் மரபில் பிறந்தவர். அரிச்சந்திர வெண்பா என்னும் நூலையும், அரிச்சந்திர சரிதமென்னும் வடநூலையும் முதல் நூல்களாகக் கொண்டு அரிச்சந்திர புராணம் இயற்றினார். இவர் ஆசுகவி பாடுவ தில் வல்லவர். "இவர் கி. பி. 1524-இல் அரிச்சந்திர புராணம் பாடினார் ஆகவே, இவரது காலம் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியாம்" என்பர்.[1] இவர் பாடிய அரிச்சந்திர புராணம் இனிய விருத்தப் பாக்களால் ஆனது. பத்துக் காண்டங்களும் 1225 செய்யுள்களும் கொண்டது. அரிச்சந்திரன் மனைவி தன் மகன் லோகிதாசன் இறந்த பொழுது மயானத்தில் புலமபியழும் இடம் உருக்கமான பகுதியாகும். எது நேரினும் உள்ளத்தில் கொண்ட வாய்மை தவறாத அரிச்சந்திரன், இன்றும் மக்களால் நினைவுகூரப் படுபவன்.

'பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிளமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றார்;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

என்ற பாடல் மேற்கூறிய உண்மையினை உணர்த்தும்.

முனைப்பாடியார்

இக்காலத்தே ஒருசில சமணரும் தமிழ்த்தொண்டு செய்துள்ளனர். முனைப்பாடியார் என்னும் சமணப் புலவர்

1. திரு. ச. சோமசுந்தர தேசிகர், பதினாறாம் நூற்றாண்டுத்தமிழ்ப் புலவர்கள் வரலாறு. ப. 5

அருங்கலச்செப்பு என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு, காட்சி, ஒழுக்கம், ஞானம் என்ற முப்பொருள் களையும் 222 வெண்பாக்களிலே விளக்கியுள்ளார். 'பெருமை யும் சிறுமையும் தாந்தர வருமே' என்ற கருத்தை இந்நூல் விளக்குகிறது. அருகனைச் சிவனென்ற ஒரு வியப்பான செய்தியினை ஆசிரியர் கூறியுள்ளார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் இவரது காலமாகும்.

பொய்யாமொழிப் புலவர்

தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் 'கோவை' என்பது ஒன்றாகும். அகப்பொருள் தொடர்ந்து நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களில், ஒரு நாடகக் காப்பியம்போல அமைய வேண்டுமென்பது இதன் இலக்கண மாகும். இந்த வகையில் பொய்யாமொழிப்புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவை சிறந்த நூலாகும். இது அகப் பொருள் விளக்கம் என்னும் நம்பியகப் பொருள் இலக்கண நூலுக்கு இலக்கியமாகத் திகழ்கிறது. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் மாறைநாட்டுத் தஞ்சாவூரில் வாழ்ந்த வாணன் என்னும் ஒரு சிற்றரசன் ஆவன். பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியினரான பொய்யா மொழிப்புலவர், தொண்டை மண்டலத்தின் செங்காட்டுக் கோட்டத் துறையூரில், அமண்பாக்கிழார் குடியில் பிறந் தார்.

பரஞ்சோதி முனிவர்

இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களைத் தொகுத் துச் சுவைபெற நூல்கள் சில எழுந்தன. இம்முறையில் மதுரை சோமசுந்தரக் கடவுள் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை, வேம்பத்தூரார் திருவிளையாடல் குறிக்கிறது; உத்தர மகாபுராணம் என்னும் வடநூலின் ஒரு பகுதியாம் சாரசமுச்சியம் இந்நூலாக வடிவெடுத்தது. புராணம் என்றால் பழைய வரலாறு என்றும் பொருள்படும்,

இதனை இயற்றிய ஆசிரியர் பெரும்பற்றப்புலியூர் நம்பி பாண்டிநாட்டுச் செல்லி நகரினர்; பதின்மூன்றாம் நூற்றாண்டினர். 'ஹாலாஸ்ய மகாத்மியம்' என்ற வடமொழிப்புராணத்தைத் தமிழில் இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இந்நூலுக்கு ஆசிரியர் பெயர் முன்னர் அமைந்து, 'பரஞ்சோதி திருவிளையாடல்' என்று வழங்கப் படுகிறது. இந்நூல் நான்கு காண்டங்களும், அறுபத்தெட்டு படலங்களும், 3363 பாடல்களும் கொண்டது. இதுவும் வேம்பத்தூரார் திருவிளையாடலும் இறைவன் திருவிளை யாடல்களைக் கூறும் முறையில் மாறுபட்டுள்ளன. ஆசிரியர் பரஞ்சோதியார், திருமறைக்காட்டில் ஆதி சைவ குலத்தில் பிறந்து மதுரைமடத்தில் தம்பிரானாய் இருந்தவர். பரஞ்சோதியார் திருவிளையாடலே இன்று நன்கு பயிலப்படு கிறது.

குணபத்திராசாரியார் என்னும் தம் குருநாதரின் கூற்றுக் கிணங்க, மண்டல புருடர் எளிய முறையில் சூடாமணி என்னும் நிகண்டுநூலை இயற்றினார் என்பதை முன்னர்க் கண்டோம். திருப்புகழ்ப் புராணம் செய்துள்ள இவர் கிருட்டிணதேவராய மன்னன் காலத்தவர். இவர் இயற்றிய சூடாமணி நிகண்டு மேலைநாட்டினர் தொடர்பால் அகராதிகள் தோன்றிய பின்னர்த் தன் செல்வாக்கை இழந்தது.

வில்லிபுத்தூரார் பாரதம்

இந்நூலின் முதன் நூல் வடமொழியிலுள்ள பாரத மாகும். பாரதக்கதை தமிழுக்குப் புதியதொன்றன்று. சங்க இலக்கியங்களிலேயே பாரதக் கதை நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. கல்வெட்டொன்று மூன்றாம் குலோத் துங்கன் காலத்தில் அருணிலை விசாகர் என்பவர் பாரதத் தைத் தமிழ்ப்படுத்தியதாகக் கூறுகிறது. பாண்டவர் ஐவருடையவும் துரியோதனாதியர் நூற்றுவருடையவும் ஆன வரலாற்றை இந்நூல் கூறுகிறது. ஆதிபருவம், சபா

பருவம், ஆரணிய பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், வீட்டுமபருவம், துரோண பருவம், கன்ன பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம் ஆகிய பத்துப் பருவங்களையும் 4339 விருத்தப்பாக்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

இவருடைய பாரதத்திலேயே முதன்முதல் வடசொற்கள் மிகுதியாய்க் கலந்தன. இவர் கையாண்ட வடசொற்களும் தொடர்களும் தமிழின் தூய தனி நிலையினை ஓரளவு சிதைத்தன. மேலும், பின் வந்தவர்கள் இவருடைய போக்கினைப் பின்பற்றினார்கள். பிற்காலத்தில் இம்முறையில் இருமொழிப் புலமை நிரம்பியவர்களே போற்றப் பட்டார்கள். பாரதம் முழுவதிலும் ஒருவிதச் சந்த இன்பம் நிறைந்திருக்கக் காணலாம். இது சொல்லணிகளும் பொருளணிகளும் நிறைந்து, படிப்போரை உணர்ச்சி வலைக்குட் படுத்தி மகிழ்விக்கின்றது.

இதன் ஆசிரியர் வில்லிபுத்தூரார் ஆவர். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே வீரராகவர் என்பவர்க்கு மைந்தராய்ப் பிறந்தார். வில்லிபுத்தூரராம் பெரியாழ்வார்மேல் கொண்ட பத்தியினால் இவர் தந்தையார் இவருக்கு இப் பெயர் இட்டார் என அறியலாம். இவரது சமயம் வைணவம் என்பது வெளிப்படை.

வக்கபாகை என்னும் நகரத்தில் அரசாண்ட, கொங்கர் குல வரபதியாட்கொண்டான் என்ற குறுநில மன்னன் 'பிறந்த திசைக் கிசைநிற்பப் பாரதமாம்' பெருங்கதையைப் பெரியோர் தங்கள்—சிறந்தசெவிக் கமுதமெனத் தமிழ் மொழியின் விருத்தத்தாற் செய்க' என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க, இவர் இப் பாரதத்தை இயற்றினார். இந் நூலுக்கு வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவார் இருபத்து மூன்று பாடல்களால் ஒரு சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்; அவற்றுள் ஒரு பாடல் அரிய நயமுடைத்து ;

'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.'

வில்லிபுத்தூரார் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு என்பர்.

அருணகிரிநாதர்

இவர் இயற்றிய திருப்புகழ் குன்றமெறிந்த குமரக் கடவுளின் புகழினை இன்னிசைப் பாடல்களில் உணர்த்து கின்றது. தமிழ் நாட்டில் பல்வேறு கோயில்களிலும் எழுந்தருளியிருக்கும் செவ்வேளைச் சந்தப்பாக்களால், சந்த விருத்தப் பெருங்கடலாம் அருணகிரியார் பாடியிருப்பது கொண்டு, அப் பாடல் பெற்ற தலங்கள் எல்லாம் இன்று சைவர்களால் போற்றி வழிபாடு செய்யப்படுகின்றன. நூலின் பெயர் திருப்புகழாய் அமைந்திருப்பதோடு மட்டுமன்றி, நூலில் அமைந்துள்ள 1307 பாடல்கள் ஒவ்வொன்றுமே திருப்புகழ் என்றே வழங்கப்படுகின்றமை இந்நூலின் சிறப் பாகும்.

அருணகிரிநாதருடைய பிறப்பிடம் நடுநாட்டில். இப் பொழுது வடார்க்காடு மாவட்டத்தில் இருக்கும் திருவண்ணா மலையாகும். இவரோடு வில்லிபுத்தூராரையும் இணைத்துக் கூறுகின்ற கதை பொருந்தவில்லை. ஏனெனில், வில்லிபுத்தூரார் அருணகிரிநாதருக்குச் சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளாதல் முற்பட்டவராயிருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியால் அறியக் கிடக்கின்றது.[1]

திருப்புகழில் 'சலாம்', 'சபாஷ்', 'ராவுத்தன்' என்ற முகம்மதியச் சொற்கள் கலந்திருப்பது நோக்கற்குரியது. இது

---

1. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (13, 14 15ஆம் நூற்றாண்டுகள்) ப. 95

அக்காலத்து ஆட்சிப்போக்கினையும் மொழிப்போக்கினையும் உணர்த்தும். இதேபோல் அளவுக்கு மீறிய வடசொற்களும் கலந்திருக்கக் காணலாம். 1088க்கு மேற்பட்ட சந்த வேறு பாடுகளை 1307 பாடல்களில் காணலாம் என்று இசை வல்லார் கூறுவர். முதன் முதல் சந்தப்பாவைப் புதிய முறை யில் கையாண்டவர் இவரே எனலாம். இவரது காலம் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

இவரை 'வாக்கிற்கு அருணகிரி' என்றும், 'கருணைக் கருணகிரி' என்றும் புலவர் பாராட்டியுள்ளனர். தாயுமான தயாபரரும், 'ஐயா அருணகிரி, அப்பா உனைப் போல— மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?' என்று வியந்து பாராட்டுகின்றார்.

கந்தர் அந்தாதி என்னும் யமக அந்தாதி இவர் இயற்றிய தாகும். இது திருவண்ணாமலையில் பாடப் பெற்றிருக்க வேண்டும் என்பர். நூற்றிரண்டு செய்யுள்கள் கொண்ட கந்தர் அலங்காரம் என்னும் நூல், பக்திச்சுவை மிக்கதொரு நூலாகும். இவர் நூலாம் கந்தர் அநுபூதி மிகச் சிறப்பு வாய்ந்த நூல். இதனைத் தாயுமான சுவாமிகள்,

'கந்தரநு பூதி பெற்றுக் கந்தர நு பூதி சொன்ன
எந்தை யருள்நாடி யிருக்குநாள் எந்நாளோ!'

என்று சிறப்பித்துள்ளார். இது கடவுள் வாழ்த்துடன் கலிவிருத்தத்தால் அமைந்த ஐம்பத்திரண்டு செய்யுள்களைக் கொண்டது. இதனைப் பெரியோர் மந்திர நூலாகக் கொள்வர். ஆறுமுகப் பெருமானின் அருள் வேண்டுவோர் நாடோறும் பாராயணம் செய்துவரும் சிறப்பினையுடையது இந்நூல். பதினெட்டு வகுப்புக்கொண்டு பதினெட்டுச் சந்த விருத்தங்களால் ஆன நூல் திருவகுப்பாகும். இதில் முருகப் பெருமானுடைய பெருமையும் அருளும் பேசப்பட்டுள்ளன.

இந்தக் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் உள்ளம் கற்பனைக் கடலில் அமிழ்ந்தது; தடையை உடைத்துப் பாயும் புதுவெள்ளம் போலவும், கட்டுக்கடந்த இறகு முளைத்த பறவை போன்றும் வானில் பறந்தது. எனவே, தமிழிற்குப் புத்தம் புதிய துறைகளான உலா, கலம்பகம், புராணம் முதலான சிறு பிரபந்தவகை நூல்கள் பெருவாரியாய் இக் காலத்திலே இயற்றப்பட்டன.

காளமேகப் புலவர்

இவர் ஆசு கவி பாடுவதிலும், வசை பாடுவதிலும் வல்லவர் என்பதை, 'ஆசு கவியால் அகில உலகெங்கும் வீசுபுகழ்க் காளமேகம்', 'வசைபாடக் காளமேகம்' என்றும் வருகின்ற தொடர்களால் அறியலாம். இவர் கும்பகோணத் திற்குத் தெற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள 'நந்திபுரத் தில் இக்கால நாதன்கோயிலில்—பிறந்தார். இவர் இயற் பெயர் வரதன் என்பதும், கோயிற்பணி புரியும் அந்தணர் மரபினர் என்பதும் தெரியவருகின்றன. கருமுகில் பெருமழை பொழிவது போன்று ஆசுகவியால் கவிமழை பொழிந்த பான்மையினால் காளமேகம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இலக்கிய நயத்தோடு நகைச்சுவையும் கெழுமி யிருத்தல் இவருடைய பாடல்களின் தனிச்சிறப்பாகும். விகடராமன் குதிரை ஓடும் ஓட்டத்தினைப் பாருங்கள்!

'முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி'

நல்ல பசியுடன், கத்தும்கடல் பண்ணிசைக்கும் நாகைப் பட்டினத்திற்கு வருகிறார் கவி காளமேகம். அவ்வூர் காத்தான் சத்திரத்தில் உணவு உண்ணக் காத்திருக்கிறார்.

அச் சத்திரத்தில் கதிரவன் மேலைத் திசையில் மறையும் நேரத்தில் அரிசி வருகிறதாம். அவ் வரிசியினைக் குற்றி நொய்யும் நொறுங்கும் களைந்து உலையிலிட ஊரடங்கும் நேரம் ஆகிவிடுகின்றதாம். உண்போர் இலையில் அகப்பைச்சோறு விழும் நேரத்தில் கீழ்வானத்தில் வெள்ளி எழுந்து விடுகிறதாம் நகைச்சுவை கொப்புளித்தோடும் அந் நலமிக்க பாடலைக் காண்போம்:

'கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குற்றி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.'

'திருவானைக்கா வுலா' என்று இவர் இயற்றிய நூல், திருவானைக்காவில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பட்டதாகும். இவருடைய தனிப்பாடல்களைத் தமிழ் நாவலர் சரிதை, தனிச்செய்யுள் சிந்தாமணி, தனிப் பாட்டிரட்டு, பெருந்தொகை முதலிய நூல்களில் படித்து மகிழலாம்.

'இத்திரன் கலையா யென்மருங் கிருந்தான்' என்ற இவர்தம் பாடல் தொடரால், இவர் கால மன்னன் கல்பாணிச் சாளுவ திருமலைராயன் என்று கொண்டு, இவருடைய காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்கிறோம்.

அதிமதுர கவி

இவர் காளமேகப்புலவர் காலத்தவர். இருவர்க்கிடையிலும் பகைமையிருந்தது என அறிகிறோம். இவர் நாகூரை அடுத்த திருமலைராயன் பட்டினத்தில் இருந்த அரசவைப் புலவர். இவர் கொண்ட செருக்கு, காளமேகப் புலவரால் அடக்கப்பட்டது.

இரட்டையர்கள்

பல்வகைப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை போன்று பலவகைப் பாக்களால் தொடுக்கப்பட்டுள்ள நூலிற்குக் கலம்பகம் என்பது பெயராகும். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. நந்திக் கலம்பகத்திற்கு நானூறு ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய தில்லைக் கலம்பகத்தை இயற்றியவர்கள் இரட்டையர்கள். இவர்கள் 'கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்று புகழப்படுகின்றனர். இவர்களுள் ஒருவர் முடவர் என்றும், மற்றவர் குருடர் என்றும், முடவரைக் குருடர் சுமந்து செல்வதும், முடவர் குருடருக்கு வழிகாட்டிச் செல்வதுமாக இவர்கள் வாழ்ந்தார்கள் என்றும் கூறுப. முதுசூரியர், இளஞ்சூரியர் என்று இவர்கள் வழங்கப்பட்டதாகத் 'தமிழ் நாவலர் சரிதை'[1] குறிப்பிடுகிறது. இவர்கள் சோணாட்டிலே இலந்துறை என்ற ஊரினர்; செங்குந்த மரபினர். இவர்கள் போகுமிடமெல்லாம் ஒருவர் பாட்டின் முன் இரண்டு அடிகளைப் பாட, மற்றவர் பின் இரண்டு அடிகளைப் பாடி முடிப்பது வழக்கம். இவர்கள் தில்லை அம்பலவாணர்மீது தில்லைக் கலம்பகமும், திருவாமத்தூர் சிவபிரான்மீது பத்திச்சுவையும் சொற்பொருள் நயமுமிகுந்த திருவாமாத்தூர்க் கலம்பகமும், காஞ்சிவாழ் ஏகாம்பரேசுவரர்மீது ஆயிரத்து நூற்றுப்பத்து அடிகளையுடைய சைவ மணங்கமழும் இலக்கியப் புகழ்வாய்ந்த ஏகாம்பரநாதர் உலாவும், கச்சிக் கலம்பகமும் இயற்றினர். இவர்கள் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார்கள் என்பர்.

தொல்காப்பியத் தேவர்

திருப்பாதிரிப்புலியூர் ஈசன்மீது பாடப்பட்ட திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் இவரால் இயற்றப்பட்டது.

---

1. தமிழ் நாவலர் சரிதை, ப. 9.

'தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறுமோ?'

என்ற இரட்டையர் வாக்கால் இதனை உணரலாம்.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

நம்மாழ்வாரின் பிறப்பிடமான ஆழ்வார் திருநகரியிலே வேளாளர் மரபிலே வணிகக் குடியிலே திருமால் பக்தி மிகுந்த குடும்பத்தில் சடையர் பிறந்தார்; பிற்காலத்தில் திருக்குருகைப் பெருமாள் என்ற பெயர் பெற்றார். இவர் மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம், குருமகாத்மியம், திருப்பதிக்கோவை, கிளவி மணிமாலை, மாறன் பாப்பாவினம், நம்பெருமாள் மும்மணிக்கோவை என்னும் நூல்களைச் செய்துள்ளார். இவர் பதினாறாம் நூற்றாண்டினர்.[1]

சைவ மடங்கள் வளர்த்த தமிழ்

"சைவ மடங்கள் சமயத் துறையில் பெரும்பணியாற்றியபோதிலும், தமிழில்க்கியங்களைக் காப்பதிலும் பரப்புவதிலும் முனைந்திருந்தன. பழைய நூல்களின் அரணாயும், புதிய நூல்களின் பிறப்பிடமாயும் மடங்கள் விளங்கின. அவற்றின் தலைவர் பலர், தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து புலமை நிரம்பியவர்களாய் விளங்கினர். ஆதலின் மடங்களில் புலவர்க்குச் சிறப்பான இடம் இருந்தது. அவ்வக் காலத்துச் சிறந்த புலவர் பலர் மடங்களில் இருந்து இலக்கியத் தொண்டு புரிந்துவந்தனர்.[2]

1, திரு. மு. ராகவையங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம், ப.122.

2. டாக்டர் மு. வரதராசனார், கலைக்களஞ்சியம், 5 ஆம் தொகுதி ப. 436, 437.

திருவாவடுதுறை மடம்

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய இம் மடத்தைச் சார்ந்த, பாடல்பெற்ற சைவத்தலமும் ஒன்றுண்டு. இதுபோது இவ்வாதீனத்தின் தலைவராய் இருப்பவர்கள் 21 ஆம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் கல்வி, சமயம் மருத்துவம், விவசாயம் முதலிய துறைகளின் வளர்ச்சிக்குப் பெரும்பொருள் செலவிட்டு வருகின்றார்கள். பலவிடங்களில் தேவாரப் பாடசாலைகள் நிறுவியுள்ளார்கள். ஆங்காங்குத் தக்க அறிஞர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவு நடத்துவிக்கின்றார்கள். முன்னர் அருளாட்சி நடத்திய மகா சந்நிதானங்களின் நினைவு நாள்களில் ஒவ்வோர் உயரிய நூலினை வெளியிடுகின்றார்கள். இம் மடத்தின் மேற்பார்வையில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் நடத்தப்படுகின்றது. டாக்டர் உ. வே. சா. அவர்களின் ஆசிரியர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, இம்மடத்தின் அவர் காலத் தலைவராய் வீற்றிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களால் ஆதரிக்கப்பட்டவர் என்பது, ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

இம் மடத்திலே புலவராய் விளங்கிய நமச்சிவாய தேசிகர் அருள்நந்தி சிவாசாரியாரின் இருபா இருபஃதுக்கும், உமாபதி சிவாசாரியாரின் வினா வெண்பாவுக்கும் உரை எழுதிச் சைவ சித்தாந்தக் கருத்தினை மக்களிடையே பரப்பினார். இவருடைய மாணவர் தட்சணாமூர்த்தி என்பவர் தசகாரியம், உபதேசப் பஃறொடை வெண்பா என்னும் நூல்களை அருளினார். அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரகத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாயநிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் பத்து நூல்களின் ஆசிரியராய் விளங்குகிறார். சூத்திரங்களில்

வேற்றுமை, வினை, ஒழிபு என்னும் மூன்று பகுதிகள் கொண்ட 'இலக்கணக் கொத்து' என்னும் நூலைச் செய்தவர் ஈசான தேசிகர். தமிழ் நாட்டின் பலனை எல்லாம் நுகர்ந்த இவர், 'ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே நாணுவர் அறிவுடையோரே' என்று தமிழ் மொழியினை இகழ்ந்து பேசியிருப்பது வருந்துதற்குரியது. இவர் தசகாரியமும் திருச்செந்திற் கலம்பகமும் செய்ததாகவும் கூறுவர். இரு வேலப்ப தேசிகர்கள், மடத்தில் வாழ்ந்தார்கள். முன் வேலப்ப தேசிகர் பெரியலூர்ப் புராணமும், பின் வேலப்ப தேசிகர் பஞ்சாக்கரப் பஃறொடையும் இயற்றினர்.

மடங்களில் வாழ்ந்த புலவர்கள் இலக்கண நூல்களும், சித்தாந்த சாத்திரங்களும், அவற்றிற்கு உரைகளும் எழுதிய தோடு அமையாது, இலக்கண நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார்கள். இம் முறையில் சங்கர நமச்சிவாயப் புலவர் பவணந்தி முனிவரின் நன்னூலுக்கு எல்லோருக்கும் விளங்கும் எளிய முறையிலேயே ஓர் உரை கண்டார். வடமொழிப் புலமையும் தென்மொழிப் புலமையும் ஒருங்கமைந்த சிவஞான முனிவர், பாண்டிநாட்டு விக்கிரமசிங்க புரத்திலே ஆனந்தக் கூத்தர்க்கும் மயிலம்மைக்கும் மகவாய்த் தோன்றி, எண்ணற்ற நூல்களை எழுதினார். யமகம், திரிபு என்னும் சொல் அணிகளை விளக்கும் முல்லைவாயிலந்தாதி, திருக்குறட் செய்யுள்களுக்கு உதாரணச் செய்திகளைக் கூறும் சோமேசர் முதுமொழி வெண்பா, கற்பனை வளம் மிகுந்த அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், உருக்கமான பாடல்களைக் கொண்ட கலைசையந்தாதி, காஞ்சிப் புராணம் முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். இவர் நன்னூலுக்கும் உரை கண்டுள்ளார். இவரது 'தொல்காப்பியச் சூத்திர விருத்தி' சிறந்த ஆய்வு நூலாகும். 'திராவிட மாபாடியம்' என்னும், சிவஞான போதத்திற்கு இவர் எழுதிய உரை, இவருடைய பெயரை என்றும் இவ்வுலகில் வாழவைப்பதாகும்.

தருமபுர மடம்

தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி நிறைவுற்ற பிறகு தமிழ் வளர்க்கும் பொறுப்பில் சைவ— ஆதீனங்கள் பெரும்பங்கு வகித்தன. சித்தாந்த சைவத்தைக் வளர்க்கும் நோக்கில் கிளைத்த இவ்வாதீனங்கள் தமிழுக்கு ஆற்றியிருக்கும்— ஆற்றிவரும் பணிகள் குறிக்கத்தக்கன தமிழகத்துச் சைவ— ஆதீனங்கள் பதினெட்டு எனபர். இவற்றுள் பெரும் பாலானவை கி. பி. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னே தோன்றின. தமிழகச் சைவ—ஆதினங்களில், திருக்கயிலாயத் திருமரபில் மெய்கண்ட சந்தானத்தில் விளங்கிவருவது தருமபுர ஆதீனம். தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறையைச் சார்ந்து, காவிரியின் தென்கரையில் இவ்வாதீனம் அமைந்துள்ளது.

தென்பாண்டி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில், கார் காத்த சைவ —வேளாளர் மரபில் தோன்றிய ஸ்ரீகுருஞானசம்பந்தர் என்ற அருளாளரால், கி. பி. 16ஆம் நூற்றாண்டில் இடைப் பகுதியில் தருமையாதீனம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம், சமயம் போன்ற துறைகளில் இவ்வாதீனம் இயற்றிவந்திருக்கும் பணிகள் அளப்பரியன. ஸ்ரீ குருஞானசம்பந்தர் எட்டு நூல்களை அருளிச் செய்தார். சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா, முத்தி நிச்சயம் என்பன சிறந்த அருள் நூல்கள். இவ்வாதீன நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஸ்ரீ குமரகுருபரரின் ஞானாசிரியராகத் திகழ்ந்து பல அருள் நூல்களை அனார் வாயிலாக வெளிப்படுத்தியருளினார். பத்தாவது குருமூர்த்திகள் பதினாறு தோத்திர நூல்களை இயற்றினார். ஆதீன அருளாளர்களும், ஆதீன ஆதரவில் வளர்ந்த தமிழ்ப் புலவர்கள் பலரும் அரிய நூல்கள் பல வற்றை இயற்றித் தமிழுக்கு வழங்கினர். ஸ்ரீ வெள்ளியம் பலவாணர் முத்திநிச்சயப் பேருரை, ஞானவரான விளக்கப் பேருரை, ஸ்ரீ சம்பந்தசரணாலயர் வடித்த கந்தபுராணச் சுருக்கம், படிக்காசுப் புலவர் இயற்றிய புள்ளிருக்குவேளூர்க்

கலம்பகம், மற்றும் நூற்றுக்கு மேலான சைவச்சார்பு நூல்கள் சிறப்புடையன.

தருமையாதீனம், தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் திகழும் இருபத்தேழு திருக்கோயில்களைச் சிறப்பாகப் பரிபாலித்து வருகிறது. இத் திருக்கோயில்களை ஒட்டிப் பல அரிய தலபுராணங்களும் சிற்றிலக்கியங்களும் எழுந்தன. காலத்தின் தேவை கருதி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல், பல அரிய நூல்களை இவ்வாதீனம் சிறந்த முறையில் அச்சிட்டு, இலவசமாகவும் அடக்க விலையிலும் வழங்கிவருகிறது. இதுவரை 800 நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. திருக்குறள் உரை வளம், திருமுறை உரைப் பதிப்புகள், சைவசித்தாந்த உரை நூல்கள் போல்வன குறிக்கத்தக்கன. நாற்பத்திரண்டு ஆண்டுகளாக, 'ஞான சம்பந்தம்' என்ற அரிய திங்கள் இதழ் ஆதீனச் சார்பில் வெளிவருகிறது. பார்வை நூலாகப் போற்றத்தக்க இவ் வெளியீடு வாயிலாகப் பல்வேறு புதிய நூல்களும், உரைகளும், ஆய்வுகளும் தமிழுலகிற்குக் கிடைத்து வருகின்றன.

தமிழ்க் கல்வி வளர்ச்சி நோக்கில் ஆதீனச் சார்பில் 1946 முதல் தமிழ்க் கல்லூரி ஒன்றும் நடைபெற்று வருகிறது. சிறந்த தமிழறிஞர்கள் பலரும் இங்கே பணியாற்றியுள்ளனர். .ஆதீனம் 18 மொழிகளில் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்றைப் பராமரித்து வருகிறது. தமிழகத்து நல்லறிஞர்கள் பலருக்கும் ஆதீனம் பட்டங்கள் வழங்கி அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டி வருகிறது பலர் ஆதீனப் புலவர்களாக விளங்கித் தமிழ் வளர்த்து வருகின்றனர். தேவாரம் பயிற்றுவிக்க ஒரு பாடசாலையும் இங்கே நடைபெற்று வருகிறது. தமிழ்த் திருமுறை வாணர்களுக்கு ஆண்டுதோறும் சீகாழி மற்றும் திருவாரூரில் பட்டமளித்துப் பணமுடிப்பும் வழங்கப்படுகிறது.

சென்னையில் சமயப் பிரசார நிலையம் நிறுவித் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க நற்பணிகள் பலவற்றையும் இவ்வாதீனம் ஆற்றி வருகிறது.

ஆதீனம் சமய—சாத்திரத் தமிழ் மாநாடுகளை அவ்வப் போது நிகழ்த்திவருகிறது. ஆதீனத் திருக்கோயில்களில் திருமுறைப் பெருவிழாக்களும், சொற்பொழிவுகளும் நிகழ்த் தப்படுகின்றன; ஆதீனப் பல்கலைக் கல்லூரியுடன் சைவ—சித்தாந்தக் கல்லூரி ஒன்றும் நடைபெற்றுவருகிறது. தமிழ் இசைவாணர்களும், கலைஞர்களும் ஆதரிக்கப்படுகின்றனர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் என்ற அமைப்பும் அண்மையில் தொடங்கப்பெற்ற சைவ—சித்தாந்த மேல் நிலை ஆராய்ச்சி மையமும், சமூக—சமயப் பணிகளாற்றி வருகின்றன.

தமிழ்ப் பரிசுகள் பலவற்றை நிறுவி ஊக்கமூட்டிவரும் தருமையாதீனத்தைத் தற்போது புரந்துவரும் 26வது குரு மூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறந்த தமிழறிஞராகத் திகழ்பவர் கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் ஆதீனம் தமிழ் வளர்ச்சி யில் அரும்பணிகள் பலவற்றை ஆற்றிவருவது குறிக்கத் தக்கது.

திருப்பனந்தாள் மடம்

இம்மடம், கி. பி 1720-இல், ஸ்ரீ காசிவாசி தில்லைநாயக சுவாமிகளால் நிறுவப்பட்டது. இவரும், இவருக்கு முன் னிருந்த ஐந்து பெரியவர்களும், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் காசிமாநகரில் நிறுவிய குமாரசாமி மடத்தில் இருந்தவர்கள். அம் மடம் இப்போது 'காசி மடம்' என அன்போடு வழங்கப் படுகின்றது. அம்மடத்தின் தொடர்பாக ஆடுதுறை இரயி லடியிலிருந்து ஏழுகல் தொலைவில் உள்ள திருப்பனந்தாளில் ஒரு மடம் நிறுவப்பட்டதால், இம் மடத்திற்குத் 'திருப்பனந்

தாள் காசிமடம்' என்னும் பெயர் ஏற்பட்டது. குமரகுரு பரரை அவர் காலத்து ஆதரித்தவர், அப்போதைய தருமபுர மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர். எனவே இதனைத் 'தருமபுரத்தின் சிஷ்ய மடம்' என்றும் வழங்குவர். இன்னும் தருமையாதீன கர்த்தரே இம் மடத்திற்குத் தலைவரை நியமித்துவருகிறார்.

இப்போது இம் மடத்தினைத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்திவரும் சைவப் பெரியார், ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் என்பவர். இவர்கள் சைவமும் தமிழும் 'தழைத்தினிதோங்க அளப்பரிய தொண்டு செய்துள்ளார்கள். திருப்பனந்தாளில் தமிழ்ப் புலவர் கல்லூரி ஒன்றினையும், ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கலைக்கல்லூரியினையும், ஓர் உயர் பள்ளியினையும் நிறுவியுள்ளனர்; தேவாரப் பாடசாலை களும், மருத்துவமனைகளும் ஏற்படுத்தியுள்ளனர். திருக் கோயில்களில் தேவாரத் திருப்பதிகப் பாடல்களைச் சலவைக் கற்களில் பொறித்துவைத்துள்ளனர். 'சிவசிவ' என்ற மின் விளக்குகளையும் சிற்சில கோயில்களில் பொறித்துள்ளனர். இம் மடத்தின் தலைவராய் முன்னர் இருந்து மறைந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் தேர்வில் முதன்மை பெறுப வர் ஆயிரம் ரூபாய் பரிசு பெறும்வண்ணம் நிலையான ஏற்பாட்டினைச் செய்துள்ளார்கள். மேலும் குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீ கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் முதலியன டாக்டர் உ. வே. சா. அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன இவர் ஆதரவில் வெளிவந்தன. சிவபோகசார நூலினைக் கல்லூரி மாணவர் பயிலும்வண்ணம் ஒரு பரிசுத் திட்டத்தினையும், உயர்பள்ளி மாணவர்கள் தமிழில் அக்கறை கொள்ள ஒரு பரிசினையும் இம் மடத்தினர் நிறுவியுள்ளமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

'குமரகுருபரன்' என்னும் இங்கள் இதழ், இம்மடத்தின் வழி வெளிவருகிறது. தேவாரம், திருவாசகம், பெரிய

புராணம், திருக்குறள் உரைக்கொத்து முதலிய சிறந்த எண்ணற்ற நூல்களை அடக்க விலைப்பதிப்பாக இவர்கள் வெளியிட்டுள்ளமை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழி திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் எழுதி வெளிவந்த 'பன்னிரு திருமுறை வரலாறு', திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் எழுதி வெளிவந்த 'திருவாசகம்' என்னும் இரு அரிய நூல்களும், இக் காசி மடத்தின் பொருளாதரவினால் வெளிவந்தவையே என்பது சிறப்புடன் பாராட்டற்குரிய செய்தியாகும்.

மதுரை மடம்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு அண்மையில் இருக்கும் இம் மடத்தினை, ஞானசம்பந்தர் வந்து தங்கிய மடம் என்பர். இதுவே இன்றுள்ள சைவ மடங்களில் மிக மிகப் பழையது. இப்போதுள்ள ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த பரமசாரிய் சுவாமிகள் 295ஆம் குருமகா சந்நிதானம் ஆவர். இம் மடம் 'திருஞான சந்பந்தர் திருமடம்' என்று கூறப்படும். பிற சமயத்திற் சார்ந்துவிட்ட வர்களை மீட்டும் சிவதீட்சை தந்து சைவ சமயத்திற் சேர்த்துக் கொள்ளும் பணியினை இம் மடம் செய்துவரு கின்றது. சுவாமிகளே நூல் இயற்ற வல்லவர்கள். சிவலிங்கத் தத்துவம், இறந்தவர்களுடன் பேசுதல் முதலிய நூல்களை எழுதியுள்ளார்கள். ஆங்காங்கு அருள்நெறிக் கழகத்தினை நிறுவிச் சைவம் வளரத் தமிழ்தழைக்கப் பாடுபட்டு வருகி றார்கள்.

வீரசைவ மடங்கள்

வீரசைவரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமி களால் நிறுவப்பட்ட இம்மடங்கள், நாட்டின் பல பகுதி களிலும் உள்ளன. மைசூர் மாநிலத்திலும் வீரசைவர் நிரம்பி யுள்ளனர். இவர்கள் மார்பில் லிங்கம் கட்டிக்கொள்வார்

கள். வீரசைவ மடங்களுள் ஸ்ரீமயிலம் மடம், கோவையை அடுத்த பேரூர் சாந்தலிங்க சுவாமி மடம், ஸ்ரீஞானியார் மடம், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் மடம் என்பன இன்றளவும் சிறப்புற்று விளங்குகின்றன. மயிலம் மடம் தமிழ் வித்துவான் கல்லூரியினை 'ஸ்ரீசிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி' என்னும் பெயரில் நடத்தி வருகிறது. சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும் அருந்தொண் டாற்றும் இம்மடம், சிவப்பிரகாச சுவாமிகள் நூல்களையும், பிரபுலிங்க லீலை உரையினையும் வெளியிட்டுள்ளது. பேரூரில் தமிழ்ப் புலவர் கல்லூரி உளது. திருப்போரூர் மடத்தைத் தோற்றுவித்தவர் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள். இம்மடம், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரையினைப் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களைக் கொண்டு எழுது வித்து வெளியிட்டுள்ளது. திருப்பாதிரிப்புலியூர் மறைத்திரு ஞானியார் சுவாமிகள் வடமொழி, தென்மொழி, இலக்கிய இலக்கணத்தத்துவ சாத்திரம் முதலிய துறைகளில் பேரறிஞ ராகத் துலங்கியவர்கள். சைவசமயச் சொற்பொழிவாற்று வதில் இவர்கள் இந் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈடும் இணையுமற்றவர்களாக விளங்கினார்கள். இவர்களுடைய கந்தசஷ்டி சொற்பொழிவுகள் சிறப்புடையன. சில சொற் பொழிவுகள் 'ஞானியார் நினைவு மலர்'' என்னும் பெயரில் சைவசிந்தாந்த சமாஜத்தாரால் வெளியிடப் பட்டிருக் கின்றன.

திருவண்ணாமலை மடம்

வீரசைவ மடமாய் விளங்கிய இம் மடம், சித்தாந்த சாத்திரங்களைப் பரப்புவதில் முன்னின்றது. திருவண்ணா மலையில் ஒரு குகையில் துறவுபூண்டு யோகியாய் வாழ்ந்தவர் குகை நமச்சிவாயர். அக மனத்தை ஆராய்கின்ற போக்கில் நூறு வெண்பாக்கள் கொண்ட அருணகிரி அந்தாதியை இவர் இயற்றியுள்ளார். இவருடைய மாணவராகிய ஆறுமுக சுவாமிகள் 'நிட்டானுபூதி' என்ற நூலை வடநூலினின்றும் மொழி பெயர்த்தார். முத்துக் கிருட்டிணப் பிரம்மம்

எனபவர் இதற்கு உரை வகுத்துள்ளார். ஈழ நாட்டிலிருந்து வந்து திருவண்ணாமலையில் துறவு பூண்ட சிவஞான சுவாமிகள், சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்கு ஓர் உரை இயற்றியுள்ளார்கள்.

துறைமங்கல மடமும் வீரசைவ மடமாய் விளங்கிச் சமயத்தொண்டு ஆற்றியது. இந்த மடங்களில் எல்லாம் கல்லூரிகளை நிறுவித் தமிழ் கற்பித்தனர். இதனால்தான் இலக்கிய இலக்கண நூல்கள் மக்களிடையே வாழ்ந்து வந்தன. புலவர்களும் தொடர்ந்து பெருகி வந்தார்கள். சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கின.

புலவர் சிலர்

இலக்கண விளக்கம் என்னும் நூலினை இயற்றியவர் வைத்தியநாத நாவலர். இவர் திருவாரூரினர். தமிழின் ஐந்திலக்கணங்களையும் கூறும் இலக்கண விளக்கம், 'குட்டித் தொல்காப்பியம்' என்று வழங்கப்படுகின்றது. இந்நூலுக்கு உரையையும் இவரே எழுதியுள்ளார். சோணாட்டில் மாதை என்னும் ஊரிலே பிறந்த திருவேங்கடநாதர், 'பிரபோத சந்திரோதயம்' என்னும் வேதாந்த நூலை நாடக நூலாக்கினார். ஆழ்வார் திருநகரியிலே வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர் தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்ற கொள்கையுடையவராய், 'பிரயோக விவேகம்' என்னும் நூலினைச் செய்தார். வடமலையப்பப் பிள்ளையின் காலத்தவரான வென்றி மாலைக் கவிராயர் திருச்செந்தூர்ப் புராணம் பாடினார். 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இரசை வடமலையப்பப் பிள்ளையைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, திருக்குருகூர்ச் சிறிய ரத்தினக் கவிராயர் புலவராற்றுப்படையினை இயற்றினார்.

பதினேழாம் நூற்றாண்டில் இருவர் பெரும்புலவர் தோன்றினர். ஒருவர், சைவசமயத்தின் பெருமையினை

இமயம் வரை பரப்பிய குமரகுருபரர்: மற்றொருவர், 'கற்பனைக் களஞ்சியம்' என்று போற்றப்படும் சிவப் பிரகாசர்.

குமரகுருபரர்

சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாம சுந்தரி அம்மைக்கும், திருநெல்வேலிச் சீமையிலே ஸ்ரீ வைகுண்டத் திலே சைவ வேளாளர் மரபிலே ஊமையாய்ப் பிறந்து, ஐந்தாண்டுகள் வரை பேசாமல் இருந்து, திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் திறம் பெற்றார் என இவர் வரலாறு கூறுகின்றது. "இவர் பழுத்த தமிழ்ப்புலமை வாய்ந்தவர்; சிறந்த சிவநேசச் செல்வர்; உயர் குணம் ஒருங்கமைந்த பெருந்தகை. உலகியல் அறிந்த பேரறிஞர். தமிழ்மொழி யின்பால் இவருக்கிருந்த பக்தி அளவிடற்கரியது. அதனைத் தீந்தமிழ், தெய்வத்தமிழ் என்பர். பாவும் பாவினமும் ஆகிய செய்யுள்களைப் பாடுவதில் இவருக்கு மிகுந்த வல்லமை யிருந்தது. இல்பொருள் உவமை, உயர்வு நவிற்சி, தற்குறிப் பேற்றம் முதலிய அணிகளை ஆடம்பரமாக இவர் கையாளு வார். இவரது கற்பனையிலே உண்மை நிலைகளைக் காணல் அரிது. இவருடைய செய்யுள்களின் தனிச்சிறப்பு, பெருமித நடையும் ஓசை வளமுமே. சொற்களும் சொற்றொடர்களும் "பெருநை நதியின் வெள்ளப்பெருக்குப் போல் இவர் வாக்கிலே பிரவகிக்கும்." இவர் வடநாட்டிலே சைவ சமயத்தைப் பரப்பினார்; அங்கு இந்தி கற்றுச் சொற்பொழி வாற்றினார்; காசியில் ஒரு மடாலயம் நிறுவினார்; திருப்பனந் தாளில் காசிமடம் என்னும் பெயரால் இவர் ஏற்படுத்திய மடம், இன்றும் தமிழ்த்தொண்டாற்றி வருகிறது. இவர் சில இந்துஸ்தானிச் சொற்களைத் தம் பாடலில் ஆண்டுள் ளார்.

இயற்றிய நூல்கள்

ஸ்ரீ வில்லிபுத்தூரிலே கோயில் கொண்டிருக்கும் கயிலாய நாதர்மீது கயிலைக்கலம்பகம் பாடினார். மதுரை அங்கயற்

கண்ணியாம் மீனாட்சியம்மையை நோக்கிப் பாடியது 'மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்' இதில் உள்ள 'தொடுக்குங் கடவுள்' என்னும் பாடல், தெய்வீகப் பாடலாகும். திருவாலவாயில் உறையும் சோமசுந்தரப் பெருமான்மீது 'மதுரைக் கலம்பகம்' பாடினார். மதுரைத் திருமலை நாயக்க மன்னரின் வேண்டுகோட்படி, 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலினை இயற்றினார். இந்நூலில் பழந்தமிழ் நூல்களின் தொடர்களைக் காணலாம். திருவாரூரில் 'திருவாரூர் நான்மணி மாலை' பாடினார். புள்ளிருக்கு வேளூர் எனப்படும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முத்துக் குமார சுவாமி கடவுளின்மீது 'முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' பாடினார். சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரத்தில் பாடப் பெற்றது. இவர் இயற்றிய பண்டார மும்மணிக் கோவை சைவ சித்தாந்தச் சிறுகாப்பியமாய் விளங்குகிறது. காசியிலே 'காசிக் கலம்பகம்' இயற்றினார். முகம்மதிய பாதுஷாவின் ஆதரவு தேடச் சென்றபோது பாடிய நூல், சகலகலாவல்லி மாலை இவர் இரட்டை மணிமாலை, செய்யுட்கோவை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

பிள்ளைத்தமிழ்

நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் எனப்படும் பிரபந்த வகைகள் தோன்றின. 'பந்தம்' என்னும் சொல்லிற்குக் 'கட்டுதல்' என்பது பொருள். தமிழில் வழங்கும் பிரபந்தங்களை இலக்கண நூலார் தொண்ணூற்றாறு வகைப்படுத்துவர். பிள்ளைத்தமிழைப் 'பிள்ளைக்கவி' என வெண்பாப் பாட்டியலும், பிள்ளைப் பாட்டெனப் பன்னிரு பாட்டியலும் கூறுகின்றன.

'குழவி மருங்கினும் கிழவ தாகும்'

என்னும் தொல்காப்பிய நூற்பா, பிள்ளைத் தமிழ் இலக்கியத் தோற்றத்துக்குச் சான்றாய் விளங்குகின்றது.

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப்'

என்னும் தொல்காப்பிய நூற்பா, தொல்காப்பியனார் காலத்திலேயே பிள்ளைத் தமிழ் நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பதனை உணர்த்தும்.

இலக்கணம்

புலவர் தாம் விரும்பும் அரசனையோ அல்லது பெரியாரையோ அல்லது தெய்வத்தையோ குழந்தையாக எண்ணி, அக்குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரையில் உள்ள பருவங்களைப் பத்துப் பருவங்களாக வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப்பத்து விருத்தப் பாடல்களை அமைத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்படும்.

'பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே.'

—பன்னிரு பாட்டியல், 101

'சாற்றரிய காப்புத்தாள் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரொடும் பத்து'

—வெண்பாப் பாட்டியல், செய்யுளியல், 7

அவற்றுள்,

'பின்னைய மூன்றும் பேதையர்க் காகா:
ஆடுங் கழங்கம் மானை ஊசல்
பாடுங் கவியால் வகுத்து வகுப்புடன்
அகவல் விருத்தத் தாற்கினை யனவாம்'

—இலக்கண விளக்கப் பாட்டியல், 47

இங்குக் கூறப்பட்ட நூற்பாக்கள், 'ஆண்பாற் பிள்ளைத் தமிழ்' என்றும், 'பெண்பாற் பிள்ளைத்தமிழ்' என்றும் இரு பகுப்பு பிள்ளைத்தமிழில் உண்டென்பதனை உணர்த்தும். ஆண்பாற் பிள்ளைத்தமிழெனப்படுவது, காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களைக் கொண்டதாகும். பெண்பாற் பிள்ளைத்தமிழெனப்படுவது, இவற்றில் முதல் ஏழு பருவங்களையும் பொதுவாகக் கொண்டு, இறுதியில் அமைந்துள்ள மூன்று பருவங்களுக்குப் பதிலாகக் 'கழங்கு, அம்மானை, ஊசல்' என்னும் மூன்று பருவங்களைக் கொண்டதாகும். சிற்றில் இழைத்தல், சிறுசோறு ஆக்கல், ஊசல் என்னும் பருவங்களும்—பருவவிளையாட்டுகளும் பெண்பாற் பிள்ளைத்தமிழில் கூறப்படுவதுமுண்டு.

அமைப்பு

முதலாவது பருவம் காப்புப் பருவம். இது பாட்டுடைத் தலைவனைக் காத்தருளுமாறு தெய்வத்தை வேண்டுவதாகும். பெரும்பாலும் திருமாலைக் காப்புப் பருவத்து முதற்கடவுளாகக் கொள்ளல் வேண்டும் என்ற வரையறை உண்டு. இக்காப்புப் பருவம் குழந்தையின் மூன்றாம் திங்களுக்கு உரிய பருவம். இரண்டாவது பருவமான செங்கீரைப் பருவம் ஐந்தாம் திங்களுக்குரியதாகும். இது செம்மையான மொழியைப் பேசுமாறு குழந்தையை வேண்டுவதாகும். (கீர்—சொல்). மூன்றாவது பருவம் தாலப் பருவம். இது தாலாட்டுப் பருவமாகும். இது குழந்தையை இருகைகளையும் சேர்த்து ஓசையெழக் கொட்டும்படி கேட்கும் பருவமாகும். பதினோராம் மாதத்தின் நிகழ்ச்சியினைக் கூறும் ஐந்தாவது பருவமான முத்தப்பருவம் குழந்தையினை முத்தம் தருகவெனத் தாயரும் பிறரும் வேண்டுவதாகும். ஆறாவது பருவமான வருகைப்பருவம் வாரானைப்பருவம் என்றும் வழங்கப்படும். இது, தளர் நடையிட்டு வரும் குழந்தையை வாவென்று அழைப்பது. இது பதின்மூன்றாம் மாதத்து நிகழ்ச்சி கூறுவதாகும்.

ஏழாவது பருவம் அம்புலிப் பருவம். இது பதினைந்தாம் மாதத்து நிகழ்ச்சி கூறுவது. இது சந்திரனைக் 'குழந்தை யுடன் ஆடவா' எனக் கூறும் பருவமாகும். 'முத்தம், வருகை அம்புலிப் பருவங்கள்' மிகச் சிறந்த பருவங்களாகும். இவ்வெழு பருவங்களும் இரண்டு பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாகும். சிற்றில் சிதைத்தல் எனப்படும் ஆண்பாற் பிள்ளைத் தமிழின் எட்டாவது பருவம் பதினேழாம் மாதத்து நிகழ்வது. ஒன்பதாவது பருவம் சிறுபறை முழக்கலாகும். இறுதிப் பருவம் சிறுதேர் உருட்டலாகும். இவை முறையே பத்தொன்பதாம் இருபத்தோராம் மாதத்து நிகழ்ச்சியை விளக்குவனவாகும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதி மூன்று பருவங்கள், நீராடல், அம்மானை, ஊசல் ஆகும். நீராடல் என்பது, பெண் குழந்தையை நீரில் குளிக்கும்படி வேண்டும் பருவமாகும். அம்மானை என்பது, பெண் குழந்தையைக் கழங்கினை மேலே வீசி ஆடும்படி வேண்டும் பருவமாகும். ஊசல் என்பது, பெண் குழந்தையை ஊஞ்சலில் ஆடும்படி வேண்டுதலை அறிவிக்கும் பருவமாகும்.

நயம்

பிள்ளைத்தமிழ் நூல்களில் குமரகுருபரர் எழுதியுள்ள மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும், பகழிக்கூத்தர் எழுதியுள்ள திருச் செந்தூர்ப் பிள்ளைத்தமிழும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள சேக்கிழார் பிள்ளைத் தமிழும் சிறப்புடையனவாகும்.

'தொடுக்குங் கடவுள்' எனத் தொடங்கும் மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழின் பாடல் தெய்வத் தன்மையும் இலக்கிய நயமும் பொருந்தியதாகும். அப்பாடல் வருமாறு:

'தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே' வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம் வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே;
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!'

பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர்ப்பிள்ளைத் தமிழ்?, 'பிள்ளைத் தமிழாயினும் பெரியதமிழ்' என்று பாராட்டப்படும் பெருமை வாய்ந்தது; சொற்சுவை, பொருட் சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய சுவைகள் நிறைந்தது. சான்றுக்கு ஒரு பாடல் வருமாறு:

'கூத்தும் தரங்கம் எடுத்தெறிய
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு;

தத்தும் சுரட விகடதடத்
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்

கொத்தும்சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு;
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்

முத்தந் தனக்கு விலையிலலை;
முருகா! முத்தந் தருகவே!
முத்தஞ் சொரியும் கடலலைவாய்
முதல்வா! முத்தந் தருகவே.

பிள்ளைத்தமிழ் நூல்களைப் படிப்போர், அந்நூல்களின் சொற்சுவை, பொருட்சுவை, கருத்தாழம், சந்த நயம், வளமான கற்பனை, உவமை அலங்காரங்களில் தம் நெஞ்சத்தைப் பறிகொடுப்பர் என்பது உறுதி.

சிவப்பிரகாச சுவாமிகள்

வீரசைவ சமயத்தைச் சார்ந்த இவர், தொண்டை நாட்டுத் துறைமங்கலம் என்னும் ஊரினர். தருமபுர ஆதீன வித்துவான் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் கல்வி பயின்றார். அவர் விரோதியினை வென்று, திருச்செந்தூர் முருகன்மீது, 'நீரோட்டக யமக அந்தாதி' பாடினார். இதழ்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல் வரும் சொற்களை அமைத்துப் பாடப் பெறுவது இந் நூலின் தனிச்சிறப்பாகும்.

இவர் பாடிய நூல்கள்

சைவ சித்தாந்த சமயத் தலைவராய் விளங்கிய அடியவர் பெருமையினை இவர் 'நால்வர் நான்மணி மாலை'யில் புகழ்ந்துரைக்கின்றார். மாணிக்காவாசகப் பெருமாளின் திருவாசகத்தைப்பற்றி இவர் கூறும் கருத்தினைக் காண்க:

'திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுன ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே.'

இவர் வீரசைவத்தின் பெருமையினை விளக்கும் அரிய காப்பியமாம் 'பிரபுலிங்க லீலை' என்னும் ஓர் அரிய நூலினைச் செய்துள்ளார். இந் நூலில் சிவப்பிரகாசரின் கற்பனை வளத்தினையும் சொற்பொருள் நயத்தினையும் காணலாம். நீதி நூல்களில் ஒன்றாய்த் திகழும் 'நன்னெறி'யும் இவர் இயற்றியதே. திருவண்ணாமலை அருணாசலேசுவரரைக் குறித்து எழுந்த நூல் 'சோணசைல மாலை'யாகும். 'மந்திரிக்கோவை' என்று திருக்கோவையார்க்கு அடுத்த நிலையிலே வைத்து எண்ணப்படும் 'திருவெங்கைக் கோவை' இவரது படைப்பே யாகும்.

இவர் தாழை நகரிலே பிறந்தார் என்றும், இராதாநல்லூரிலே பிறந்தார் என்றும் இருவேறு வகையாகக் கூறுவர். இவர் திருவண்ணாமலையில் உறையும் இறைவனைப் பற்றி அருணாசல புராணமும், அருணைக் கலம்பகமும் செய்துள்ளார். மேலும் இவர், திருவெண்காட்டுப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம் முதலிய புராணங்களையும், 'சௌந்தர்ய லகரி' என்னும் நூலுக்கு ஓர் உரையையும் இயற்றியுள்ளார். இவர்,

'சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம், இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார மும்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாள் எம் உயிர்த்
துணையே.'

என்னும் பாடலில் தம் சைவ சமயப்பற்றைப் புலப்படுத்து கின்றார்.

பிள்ளைப்பெருமாளையங்கார்

வைணவச் சார்பான 'அஷ்டப்பிரந்தம்' இவர் இயற்றிய நூலாகும். தமிழ் இலக்கியப் புலமைக்கும் பயிற்சிக்கும் இந்நூல் ஓர் அளவுகோலெனக் கருதப்பட்டு வந்தது என்பதை 'அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்ற வாக்குக் கொண்டு அறியலாம். சொல்நோக்கு, பொருள் நோக்கு. தொடை நோக்கு, நடைநோக்கு, துறை நோக்கு ஆகிய எந் நோக்கும் பெற்று இலக்கியமாய் இப் பிரபந்தத் தொகுதி இலங்குகிறது. நூலாசிரியர் 'திவ்வியகவி' எனவும் 'மணவாளதாசர்' எனவும் வழங்கப்படுகிறார். 'திருநறையூர் நம்பி 'மேகவிடு தூது' என்னும் மற்றொரு பிரபந்தமும் இவர் இயற்றியதே.

படிக்காசுப் புலவர்

தொண்டை மண்டலத்தில், கடந்தை நகரில், செங்குந்த மரபில் பிறந்த இவர், இரகுநாத சேதுபதி என்னும் இராமநாதபுரம் அரசரின் அவைப் புலவராய் வீற்றிருந் தார். அக் காலத்துக் காயற்பட்டினத்தில் வாழ்ந்த பெருவள்ளலான சீதக்காதி என வழங்கும் முகம்மதிய வள்ளலின் கொடைச்சிறப்பினைப் புகழ்ந்து, பல தனிப் பாடல்கள் பாடியுள்ளார். அவையெல்லாம் நயமுடையவை. தொண்டை மண்டல சதகமும் இவர் இயற்றியதே. உயர்ந்த சந்தப் பாடல்களைப் பாடவல்லவரான இவர்தம் பாடலைப் பற்றிய பாராட்டுரைகளைப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் நெஞ்சார வழங்கியுள்ளார்.

'மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும்; பரிந்து அவ் வேட்டைத்

தொட்டாலும் கைமணக்கும்; சொன்னாலும்
வாய் மணக்கும்; துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே
பாட்டிலுறு நளினந் தானே'

படிக்காசுப் புலவர் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், சிவந்தெழுந்த பல்லவனுலா, சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத் தமிழ், உமைபாகர் பதிகம், பாம்பலங்காரர் வருக்கக்கோவை முதலிய நூல்களையும் பாடியுள்ளார்.

நல்லாப்பிள்ளை

தொண்டை நாட்டில் மதலம்பேடு என்னும் ஊரிலே பிறந்த இவர், தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் தேர்ந்த புலமைபெற்று விளங்கினார். வில்லிபுத்தூரார் பாரதத்திற்கு மேலும் பத்தாயிரம் பாடல்களை எழுதிச் சேர்த்தார். இதுவே 'நல்லாப்பிள்ளை பாரதம்' என வழங்கப்படுவது. இவ்வாசிரியர் மூவாயிரம் பாடல்கள் கொண்ட தேவயானைப் புராணமும் செய்துள்ளார்.

தத்துவப் பிரகாசர்

இவர் போலிப் புலவர்களைக் கண்டித்து ஓர் அழகிய பாடலைப் பாடியுள்ளார்.

'குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாய்க் காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றா முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே.'

தாயுமானவர்

இக் காலத்தில் சமயத்துறையில் தெளிந்த அறிவினைப் பெற்று ஒளிவீசித் திகழ்ந்த தாயுமான சுவாமிகள் வாழ்ந்

தார். இவர் தந்தையார் பெயர் கேடிலியப்பப் பிள்ளை. தாயார் பெயர் கஜவல்லி அம்மை என்பதாகும். திருமறைக் காட்டிலே சைவ வேளாளர் குடியிற் பிறந்து, மௌன குருவிடம் கல்வி பயின்ற இவர், வடமொழி தென்மொழி இரண்டிலும் புலமைபெற்றுத் திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் வேலையில் அமர்ந்து, பின்னர்த் துறவு பூண்டார். யோக ஞானங்களில் சிறந்த இவர், சைவ சமய உண்மைகளையும், சிந்தாந்தக் கொள்கைகளையும் தம் பத்திப் பாடல்களில் தெளிவாக உணர்த்துகின்றார். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற உயர்ந்த குறிக் கோளில் பரந்துபட்ட மனப்பான்மையில்—வாழ்ந்த பெரியார் இவர்; உறவினரின் வற்புறுத்தலால் மட்டுவார் குழலி என்னும் மங்கையைத் திருமணம் செய்துகொண்டு, சில காலம் வாழ்ந்தார். கனகசபாபதி என்று தமக்குப் பிறந்த மகவுக்குப் பெயரிட்டார். பின்னர்த் துறவறத்தை மேற்கொண்டார். 'எந்த எந்த விதமாக உணர்ச்சி ததும்பும் பாடல்களை இயற்ற இயலுமோ அந்த அந்த விதமாகத் தாயுமானவர் இயற்றியிருக்கிறார் என்று கூறலாம்.'[1] இவரது சமயக்கருத்தின் சாரம், 'ஆனந்தக் களிப்பு' என்னும் பகுதி யிற் புலப்படுகின்றது. 'நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சனநீர்; பூசை கொள்ள வாராய் பராபரமே' என்னும் பராபரக் கண்ணிப் பாடல்கள் மிகச் சிறந்து ஒளிவீசித் திகழ்கின்றன.

இசுலாமியப் புலவர்கள்

கி. பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் தென்னிந்தியா இசுலாமியர் படையெடுத்து வெல்லப்படாத

---

1. டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர். கலைக்களஞ்சியம் 5 ஆம் தொகுதி, ப. 582.

தாய் விளங்கியது. ஆனால் தென்தேசத்தில் பாண்டியர்கள் தங்கள் செல்வாக்கை இழந்தபோது, கி.பி. 1300 ஆண்டில் மாலிக் காபூர் என்னும் இசுலாமியத் தளகர்த்தன் தென் னிந்தியாமீது படையெடுத்து வந்தான்; மதுரையை வென்று, தோற்ற மன்னனிடம் திறைபெற்றுச் சென்றான். இவ்வரசி யல் செல்வாக்கால் இசுலாமியருள் பலர் தமிழ்ப் புலமை நிரம்பிக் கவி பாடும் ஆற்றலையும் பெற்றனர். மேலும் இக் காலத்தில் சில அரபுச் சொற்களும், உருதுச் சொற்களும் மக்கள் பேச்சு வழக்கில் கலந்தன. சபாஷ், சலாம் போன்ற சொற்கள் இலக்கியத்திலும் புகுந்தன. பழைய கருத்துகளும் உவமைகளும் திரும்பத் திரும்ப இக் காலத்து நூல்களில் இடம்பெற்றன. எனவே அவை மக்கள் மனத்தில் நிலைக் காமல் மறையலாயின. புராணம், கலம்பகம், தனிப்பாடல் கள் பெருகின. ஆயினும் இசுலாமியப் புலவர்கள் நபிநாயகத் தின் வரலாற்றினையும், இதனை ஒட்டிய செய்திகளையும் தமிழில் எழுதத் தலைப்பட்டதே இக் காலத்தின் புதுமை எனலாம்.

சர்க்கரைப் புலவர்

நகைச்சுவை தோன்ற உரையாடுவதிலும், செய்யுள் இயற்றுவதிலும் வல்லவரான இவர், மதீனாவைச் சிறப்பித்து ஓர் அந்தாதி பாடியுள்ளார். மதீனா, அரேபியாவில் இசுலாமி யர்களின் புண்ணியத் தலமாய் விளங்குகிறது. இப் புலவர் காலம் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

சவ்வாதுப் புலவர்

இவர் சர்க்கரைப் புலவரின் மைத்துனர் என்பர். இவர் எவனீச்சுரம் என்னும் ஊரினர். இவர் முகமது நபியின்மீது ஒரு பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். அஃது ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என்று வழங்கப்படுகிறது. சில தனிப்பாடல் களையும் பாடியுள்ளார்.

வண்ணக்களஞ்சியப் புலவர்

இவரது இயற்பெயர் முகம்மது இபுராகிம் என்பதாகும். வண்ணப்பாடல்கள்—சந்தப் பாடல்கள்—பாடுவதில் இவர் வல்லவர். ஆதலால் 'வண்ணக் களஞ்சியப் புலவர்' எனப் பெயர் வழங்குவதாயிற்று. இவர் மதுரைக்கு அண்மையி லுள்ள மீசல் என்னும் இடத்தில் பிறந்தார். மதுரையில் ஒரு தம்பிரானைச் சார்ந்து, பல மொழிகளையும் கற்றுணர்ந்தார் என்பர். முகம்மது நபியின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறும் 'முகையதீன் புராணம்' இவரால் இயற்றப்பட்டு நாகூரில் அரங்கேற்றப்பட்டது. இவர் பழுத்த தம் எண்பது தொன்பதாவது வயதில் இயற்கை எய்தினார்.

அலியார் புலவர்

இவர் 'இந்திராயன் படைப்போர்', 'இபுனி ஆண்டான் படைப்போர்' என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

முகமது உசைன் புலவர்

இருநூற்று ஐம்பத்தெட்டுக் குறள்களைக் கொண்ட 'பெண் புத்தி மாலை' என்னும் நூலின் ஆசிரியர் இவர்.

மதாறு சாகிபு புலவர்

'மிதிறு சாநா' என்னும் காப்பிய நூல் இவர் இயற்றிய தாகும்.

நயினா முகம்மது புலவர்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இவர் 'முன்கிரின் மாலை' என்னும் நூலை இயற்றியுள்ளார்.

உமறுப் புலவர்

கீழைக்கரையில் சோனகர் வகுப்பில் பிறந்த இவர், இசுலாம் மதத்தைத் தழுவினார். தமிழில் இவர் பெற்ற

புலமைக்குச் சான்று பகர்வதுபோல இவரியற்றிய 'சீறாப்புராணம்' சிறப்புற்றுத் திகழ்கிறது. சீறாப்புராணம் நபிநாயகத்தின் வரலாற்றினையும், தொண்டினையும், அறிவுரையினையும் விளக்கிக் கூறுகிறது. இராமநாதபுர மன்னர் இரகுநாத சேதுபதியிடம் அமைச்சராய் விளங்கிய வள்ளல் 'செய்து காதர் மரைக்காயர்' என்பவர். இவரே சீதக்காதி என வழங்கப்படுபவர். 'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்ற உரை, இவர் வள்ளன்மையைத் தெரிவிப் பதாய் நிலவுகிறது. இவரே உமறுப் புலவரை ஆதரித்து, முகம்மதுநபியின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு இவற்றினை ஒரு நூலாக எழுதத் தூண்டினார். சீதக்காதி, காயல்பட்டினத் தில் வாழ்ந்த வள்ளல் என்பதைப் படிக்காசுப் புலவர் பாடல் கொண்டு தெளியலாம். சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம், நபுவத்துக் காண்டம், இஜித்துக் காண்டம் என மூன்று காண்டங்களும், தொண்ணூற்றிரண்டு படலங்களும், ஐயாயிரத்து இருபத்தேழு செய்யுள்களும் கொண்டது. நாட்டுப் படலமும் நகரப் படலமும் இந்நூலில் அழகான முறையில் அமைந்துள்ளன.

குணங்குடி மஸ்தான் சாகிபு

நாற்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த இவர் பிறப்பிடம், காயல் பட்டிணமாகும். இளமையில் இவர் அத்தர் வியாபாரி யாய் விளங்கினார். பின்னர்த் துறவியாகச் சென்னை இராயபுரத்தில் வாழ்ந்தார் என்பர். இவர் முகம்மதிய மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவர். தாயுமான அடிகளின் பாடல் போன்று இவருடைய பாடல்களும் சமயத் தெளிவினையும் உண்மையினையும் வற்புறுத்தி நிற்கின்றன. இவர் அகத்தீசர் சதகம், நந்தீசர் சதகம், நிராமயக்கண்ணி ஆனந்தக்களிப்பு என்பவற்றினை இயற்றியுள்ளார். அகத்தீசர் சதகம், குரு வணக்கம், காட்சிநிலை, துறவுநிலை, உள்நிலை, தொகைநிலை, பொறைநிலை, தியானநிலை, சமாதி நிலை என்னும் பிரிவுகளோடு, ஆயிரத்து எழுநூற்று

நாற்பது பாடல்கள் கொண்டதாய் உள்ளது. இவருடைய செய்யுள்களை, வெண்பாக்கள், விருத்தங்கள், கண்ணிகள் என்ற மூன்றனுள் அடக்கலாம். நிராமயக்கண்ணி, தாயுமானவரின் பராபரக்கண்ணியை ஒத்துள்ளது. இவருடைய சிறப்பினைப் பாராட்டிப் புகழும் வகையில் அய்யாசாமி முதலியார் என்பவர், 'குணங்குடி நாதர் பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் நூலைச் செய்துள்ளார்.

கல்விக் களஞ்சியப்புலவர்

இவர் சின்னச் சீறாப்புராணம், சித்திரக் கவித்திரட்டு என்னும் இரு நூல்களையும் இயற்றியுள்ளார்.

நாயக்கர் காலத்தில் எண்ணற்ற பல நூல்கள் இயற்றப்பட்டன. அவை பலவிதப் போக்குகள் கொண்டவை. பல புதிய துறைகள் இலக்கியத்தில் படைக்கப்பட்டன. இவ்வாறு நாயக்கர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புடையதாயுள்ளது.

7. ஐரோப்பியர் காலம்

நாயக்கர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் இந் நாட்டின் பழம்பெருஞ் சமயங்களான சைவமும் வைணவமும் மக்களிடையில் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருந்தன. இசுலாமியர்கள் ஆட்சியால், இசுலாம் சமயமும் இங்குப் பரவியது. ஐரோப்பியர்களுடைய வருகையால் கிறித்தவ சமயமும் இங்குப் பரவத் தலைப்பட்டது. ஆங்கிலேயர் மக்களைக் கிறித்தவர்களாக்கத் தலைப்பட்டனர். ஆட்சியின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. இதற்கெனவே இங்கு வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள், பல்லாயிரக்கணக்கான மக்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றினார்கள். சமய மாற்றம் நிகழ்கின்றபொழுது இருவர்க்கிடையிலும் இருந்த மொழிமாறுபாட்டினை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். 'மக்களின் அன்பைப் பெறுவதற்கு வழி, அவர்கள் மொழியைக் கற்று, அவர்களோடு கலந்து வாழ்தலே என்பதை நன்கறிந்த இவர்கள், தமிழ் மக்களோடு கலந்து வாழ்ந்து, தமிழ்மொழியைக் கற்று, அம் மொழி வாயிலாகத் தங்கள் சமயக்கொள்கைகளை நாட்டிற் பரப்பினார்கள். எத்தகைய இன்னல்கள் வந்துற்றபோதும் அவற்றிற்குச் சிறிதளவேனுஞ் சலியாது தங்கள் காரியத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்து உழைத்து வந்தமையால், கிறித்துவ சமயம் அக்காலத்தில் தமிழ் நாட்டில் வளரலாயிற்று. கிறித்துவக் குருமார்கள் சமயத்திற்குச் செய்துவந்த தொண்டு, தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிற்றென்றே கருதக்கிடக்கின்றது'' என்று, திரு. வி. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார்.[1]

---

1. திரு. வி. செல்வநாயகம். தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம் ப. 136, 137.

கிறித்துவ சமயப் பிரசாரத்தில் தம் வாழ்க்கையினையே காணிக்கையாகக் கொடுத்துத் தொண்டாற்றிய கிறித்தவப் பாதிரிமார்களும், கத்தோலிக்கக் குருமார்களும், தம் சமய உண்மைகளைத் தெரிவிக்க இந்நாட்டு மொழிகளைக் கற்றார்கள் என்பதை முன்னர்க் கண்டோம். அவர்கள் சமயப் பிரசாரத்திற்காகத் தமிழ்மொழியினைப் பயின்றது தமிழுக்குப் புதியதொரு பயனை விளைவித்தது. அதுவே தமிழில் உரைநடையின் வளர்ச்சியாகும். இவ்வுரைநடை வளர்ச்சியினைப்பற்றிச் சிறிது விரிவாகக் காண்போம்.

தமிழில் உரைநடை வளர்ச்சி

தன் எண்ணங்களை வெளிப்படுத்த மனிதன் பேச்சு மொழியைப் படைத்துக்கொள்வதற்கு முன்னால் தன் உணர்ச்சிகளைப் பாட்டின்மூலம் தெரிவித்துக் கொண்டான், என்ற மொழி நூலறிஞர் ஜெஸ்பர்ஸன் குறிப்பிடுகின்றார்.[1] இதனால் ஒரு மொழியில் செய்யுளே உரைநடைக்குமுன் வழங்கியிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. 'இலக்கிய வரலாற்றில் கவிதையே உரைநடைக்கும் முற்பட்ட காலத்ததாகும்' என்று அறிஞர் எமர்சன் கூறியிருப்பதும்[2] இக் கருத்துக்கு அரண் செய்வதாகும். தமிழில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் உரைநடை அமைந்திருக்கவில்லை என்ற கூற்று முழுதும் கொள்ளக் கூடியதன்று; ஐரோப்பியர் தொடர்பால் 'உரைநடை' என்ற இலக்கியப் பிரிவு தனிக் கலையாய் வளர்ந்தது எனலாம். உரைநடை, வளர்ச்சியினையும் வாழ்வினையும் பெற்றது அவர்களால் எனலாம். தொல்காப்பியத்திலேயே உரைநடையைப் பற்றிய குறிப்

---

1. Men sang out their feelings long before they were able to speak their thoughts—Otto Jespersen, Language p. 436.

2. In the History of Literature, poetry precedes prose-Emerson's Poetry and Imagination, p. 439.

பினைக் காண்கிறோம். உரைநடையும் செய்யுளும் கலந்த நூல்கள் அக்காலத்தில் எழுந்திருந்தன என்பதே அக் குறிப்பாகும். இதனை,

'தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே'[1]

என்று தொல்காப்பியனார் செய்யுளியலில் குறிப்பிடுகின்றார். இதனை 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று அக்காலத்தில் வழங்கினர். பெருந்தேவனார் பாரதமும், தடுகர் யாத்திரையும் இவற்றிற்குச் சான்றுகளாகப் பழைய உரை நூல்களில் காட்டப்படுகின்றன. மேலும், தொல்காப்பியனார்,

'அங்கதம் முதுசொலொ டவ்வேழ் நிலத்தும்'[2]

என்று பொருளியலிலும் ஒரு நூற்பாவினை அமைக்கிறார். இந் நூற்பா, நூல் புணர்க்கும் முறை ஏழு பிரிவென்றும் அவற்றில் ஒன்று 'உரையாப்பு' வகை என்றும் விதந்தோது கிறது. அவ்வுரைநடையினை நான்கு வகையாக அவரே பிரித்துரைக்கிறார்.

'பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப.'[3]

இதனால், உரைநடையும் செய்யுளும் கலந்துள்ள நூல் களும், பாட்டிற்கு உரையாகக் கூறப்படும் உரை நூல்களும், ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லும் நவீனங்களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும், சிறு

---

1. கொல்காப்பியம்—செய்யுளியல். 237.
2. '' —பொருளியல்; 391.
3. '' —செய்யுளியல்: 173.

கதைகளும் உரைநடை நூல்களாம் என்பது பெறப்படு கின்றது.[1]

சிலப்பதிகாரத்தில் செய்யுள்களுக்கு இடையில் சில இடங்களில் உரைநடை விரவி வருவதனைக் காணலாம். இறையனார் அகப்பொருள் உரையில் சிறிது கடினமான நடையில் அமைந்த உரைநடை காணப்படுகிறது. இடைக் காலத்தில் வடமொழி கலந்த தமிழ் உரைநடையினைச் சமண ஆசிரியர் சிலர் 'மணிப்பிரவாளம்' என்னும் நடையில் எழுதினர் என்று ஸ்ரீ புராணம், கத்திய சிந்தாமணி முதலிய நூல்களால் அறியலாம். பதினான்காம் நூற்றாண்டில் தொல் காப்பியம், சங்க நூல்கள், சங்கம் மருவிய கால நூல்கள் முதலியவற்றிற்கு உரையெழுதிய இளம்பூரணர், நச்சினார்க் கினியர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர். சேனாவரையர், பரிமேலழகர் முதலியோர் திட்பமான, செறிந்த உரைநடை யினை எழுதியுள்ளனர். வைணவ உரையாசிரியர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு மணிப்பிரவாள நடையில் உரை செய்தனர். சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கும் சைவ சமயப் புலவர் உரை கண்டுள்ளனர். அந்தக் காலத்திலும் செய்யுள் அமைப்பே உரைநடையினும் இலக்கியத்தில் பெரிதும் பயிலப்பட்டது எனலாம். 'இலக்கியம், இலக்கணம், சோதிடம், மருத்துவம், நிகண்டு முதலிய அனைத்து நூல் களும் செய்யுள் நூல்களாகவே துலங்கின. அக்காலத்தில் பனையேடுகளில் இரும்பெழுத்தாணிகொண்டு எழுதினர். இது, இக்காலத்தில் தாளில் பேனாவால் எழுதுவது போன்ற எளிய செயலன்று. 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்ற முறையால்தான் அந்த இடர்ப்பாடு களையப்பட முடிந்தது. ஒரு கருத்தை உரைநடையில் சொல்வதைவிடச் செய்யுளில் சொல்வதால் காலச் சுருக்கத்தையும் முயற்சி எளிமையையும் பெற இயலும். அச்சுப் புத்தகங்கள் இல்லாத காலமாதலால் நூல்களைப் பயில்வதற்கும், பயிற்றுவதற்கும்

1, திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்; மறுமலர்ச்சி உரைநடை மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர். ப. 373.

மனத்தில் கொள்வதற்கும் மனப்பாடம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. செய்யுளை மனப்பாடம் செய்வதே எளிய விரைந்த செயல். இவ்வாறான காரணங் களால் செய்யுள் வழக்கே ஐரோப்பியர் வருகைக்குமுன் பெருவழக்காயிருந்தது. இதே நிலைமையினை ஐரோப்பியர் நன்கு குறிப்பிட்டுள்ளனர். 'தமிழர் உரை எழுதும் பழக்கம் இன்னும் தொடக்க நிலையில் இருக்கிறது. விரைவாகவும் சரமாரியாகவும் கவிபாடக்கூடிய புலவர் உரைநடையிற் சில சொற்றொடர்கள் எழுதத் தெரியாமலிருக்கின்றனர்' என்னும் கருத்துப்பட வின்ஸ்லோவின் தமிழ்—ஆங்கில அகரா தியின் முகவுரையில் எழுதப்பட்டிருக்கிறது. 'மருத்துவம், கணிதம், இலக்கணம், நிகண்டு முதலிய எல்லா நூல்களும் (அவற்றின் உரைகளைத் தவிர) செய்யுளிலே இயற்றப்பட் டிருக்கின்றன. 'உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம், ஐரோப்பியரின் தொடர்பால் ஏற்பட்டதாகும்' என்று தமிழைப் பற்றி மர்டாக் துரை எழுதியிருக்கிறார்.[1]

மேலே கூறப்பட்டு வந்த கருத்துகள் பொருந்து மாற்றினைப் பின்னர்க் காண்போம். உரைநடை நூல்கள் மட்டுமன்றி, வேறு பல மாற்றங்களும் ஐரோப்பியர் வருகை யால் விளைந்தன. 'தமிழ் எழுத்துகளை எளிமையாக்கினர். பல சொற்கள் அமைந்த தொடரினை (வாக்கியத்தை) ஒரே நீண்ட சொல்லால் ஆன தொடர் போல எழுதிவந்த பழக்கத்தினை மாற்றிச் சிறிய வாக்கியமாயிருப்பினும் பெரிய தொடராயிருப்பினும் சொற்களின் இடையிடையே இடம் விட்டு எழுதுகின்ற முறையினை அவர்கள் புகுத்தினர். துண்டுத்தாள்களையும், புத்தகங்களையும், செய்தித் தாள் களையும் அச்சியற்றிய முதல்வர் அவர்களே, பண்பாட்டில் உயர்ந்த உலகின் பிற பகுதிகளில் தமிழ் மொழி படிக்கப் பெறும் ஆர்வத்தினை அவர்களே ஊட்டினர். ஐரோப்பிய மொழிகளிலிருந்து சில நூல்களை முதன்முதல் தமிழில்

---

1. திரு. மயிலை சீனி. வேங்கட்சாமி, கிறித்தவமும் தமிழும் ப. 23.

மொழி பெயர்த்தனர்; தமிழ்ச் சொற்கோவையினை மனப் பாடம் செய்யும் பழைய பழக்கத்திற்கு 'அகராதிகளையும் சதுரகராதிகளையும் இயற்றி முற்றுப்புள்ளி வைத்தனர்; இயற்கை, விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகளை வரைந்தனர்; தமிழறிந்த அறிஞர்களைத் தமிழ் நூல்கள் வெளியிடத் தூண்டினர்; மொழி, இலக்கியம், இலக்கணம் இவைகளை நுணுகி ஆயும் திறனுக்கு வழி காட்டினர்; எல்லோரும் புரிந்துகொள்ள இயலாத நிலையில் ஒரு மொழி அமைந் திருப்பது நல்லதன்று என்று கூறி, உரைநடை இலக்கியம் தங்களுக்கென்று இல்லாதவர்கள் சமுதாயம், ஒழுங்கு, சமயம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளில் முன்னேற முடியாதென்றும் எடுத்துக் காட்டினர். அம்மட்டோடு அமையாது, நவீனத் தமிழ் உரைநடையினைப் பேசவும் எழுதவும் படிக்கவும் ஆனதொரு பழக்கத்தினைக் கற்பித்தனர். இவ்வாறு ஐரோப்பியர்களால் விளைந்த நன்மைகளை யெல்லாம் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கி மறைந்த சற்குணர் அவர்கள் விரிவாகக் கூறியுள்ளார்.[1]

இந்தியாவிலுள்ள மொழிகளுள் உரைநடை நூல் முதன் முதல் தோன்றிய பெருமை நம் தமிழ் மொழியினையே சாரும். அம்பலக் காட்டில் அச்சுப் பொறியினை அமைத்து அதன் பயனாய்க் 'கிருத்துவோபதேசம்' என்னும் தமிழ் நூல் கி.பி. 1577இல் வெளியாயிற்று.[2] மாறுபட்ட கருத்தும்

---

1. Sri S. D. Sargunar, B.A. Foreward to Kiritha-vamum Thamizhum by Mayilai Seeni Venkatasamy, P. XII & XIII.

2. In the very first book ever-printed in Tamil characters at Ambalakadu on the Malabar Coast. In 1577 or Language of book is styled Malabar' the Tamil.

Dr. Caldwell's—A Comparative Grammar of the Dravidian family of Languages, P.8.

உண்டு.[2] 'பெஸ்கி' என வழங்கும் வீரமா முனிவர் பதினெட்டாம் நூற்றாண்டில் உரைநடையினைப் பெரிதும் வளர்த்தார், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் உடைநடை நூல்களை, அச்சியற்றி வெளியிட்டுச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபட்டார். இவ்வாறு தமிழ் உரைநடை வித்து, கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் முளைத்து, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செடியாகி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரமாகி, இருபதாம் நூற்றாண்டில் கனி தந்து பலன் தருகின்றது.

மேனாட்டுக் கிறித்தவர்கள்

தத்துவ போதக சுவாமி (Robert de Nobile)

உயர்குல இந்துக்களைக் கிறித்தவராக்கும் நோக்கத் தோடு இத்தாலியிலிருந்து வந்த அவர், அதற்கேற்றவாறு நடை உடை பாவனைகளைப் பிராமணர்போல் மாற்றிக் கொண்டார். மதுரையிலே வாழ்ந்த இவர் மயிலாப்பூரில் 1656இல் காலமானார். இவர் ஞானோபதேச காண்டம், மந்திர மாலை, ஆத்தும நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, ஏசுநாதர் சரித்திரம், ஞான தீபிகை, நீதிச்சொல் முதலிய பல உரைநடை நூல்களை எழுதினார். ஆனால் அவை மறைந் தொழிந்தன.

---

2. With this booklet of 6 pages entitled Doctrina Christem or Tampiran Vanakkam (தம்பிரான் வணக்கம்) Tamil became the first Indian and Ceylonese language in which books were printed.

—Xavier S. Thaninayagam—Artlcle on "The first book printed in Tamil"—Tamil Culture p. 289 dated July 1958.

வீரமா முனிவர்

கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி (Constantine joseph Beschi) என்ற இயற்பெயர் கொண்ட இவர்) கி.பி. 1700இல் தமிழ்நாட்டுக்கு வந்து மதுரை சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றுத் தேறினார். இவர் தமிழ் எழுத்துகளில் ஒரு நல்ல சீர்திருத்தத்தினைக் கொணர்ந்தார். முற்காலத்தில் எகர ஒகரக் குற்றெழுத்துகளும் நெட்டெழுத்துகளும் வேறுபாடின்றி ஒரே மாதிரி எழுதப்பட்டன. இதனை மாற்றி, குற்றெழுத்தின்மேல் புள்ளியிட்டும், நெட்டெழுத்தின் மேல் புள்ளியிடாமலும் எழுதும் சீர்திருத்தத்தினைக் கொணர்ந் தார். மேலும் உயிர்மெய் எகர ஒகரங்களில் மற்றொரு சீர்த்திருத்தினையும் புகுத்தினார. யகர உகர உயிர்மெய்க் குற்றெழுத்துகளை அக்காலத்தில் மேலே புள்ளியிட்டு எழுதினார்கள். "உதாரணம் கெ பெ செ (இவை குற்றெழுத்து) கெ பெ செ (புள்ளி பெறாத இவை நெட்டெழுத்து; கே. பே. சே என்று வாசிக்கப்பட்டன). கொம்பு பெற்று வருகிற இந்த எழுத்துக்கள் குற்றெழுத்துக் கும் நெட்டெழுத்துக்கும் ஒரே மாதிரி எழுதப்பட்டபடியால், அவற்றின் வேறுபாட்டை எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு, வீரமா முனிவர், நெட்டெழுத்துக்குக் கொம்பை மேலை சுழித்தெழுதும் வழக்கத்தை உண்டாக்கினார்." அம் முறையே, இப்பொழுதும் வழக்கில் உள்ளது. 'பண்டை நிகண்டுகளில் அமைந்த பதங்களை வரிசைப்படுத்திச் 'சதுர் அகராதி' என்னும் பெயரால் அரியதோர் நூலை அவர் வெளி யிட்டார்.[1] அதுவே பிற்காலத்தில் எழுந்த பேரகராதிகளுக் கெல்லாம் அடிப்படையாய் அமைந்தது. இவர் எழுதிய 'பரமார்த்த குரு கதை' நகைச்சுவை நிரம்பியது; நயம் கெழுமியது. திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானைத்

---

1. திரு: மயிலை சீனி வேங்கட்சாமி, கிறிஸ்தவமும் தமிழும் ப- 13-92.

கலிவெண்பா என்னும் பிற செய்யுள் நூல்களையும், 'தொன்னூல் விளக்கம்' என்ற ஐந்திலக்கணங்களைக் கூறும் இலக்கண நூலையும் இவர் செய்துள்ளார்.

சீகன் பால்க் ஐயர்

இவர் 1706இல் தரங்கம்பாடிக்கு வந்து, முதன்முதல் இங்கே பிராட்டஸ்டண்டு கிறித்தவ சமயத்தைப் பரப்பினார். முதன் முதலில் தமிழ்ப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டார். தமிழ் இலத்தீன் இலக்கணத்தையும், தமிழ் இலத்தீன் அகராதியின் சில பகுதிகளையும் இவர் ஹாலி நகரத்தில் அச்சிட்டிருக்கிறார்.

எல்லிஸ் துரை

இவர், திரு. முத்துச்சாமிப் பிள்ளையவர்களைக் கொண்டு பழைய ஏட்டுச சுவடிகளைச் சேகரித்தார். அவரைக் கொண்டு வீரமாமுனிவர் வரலாறு வெளிவரச் செய்தார். திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு முதன் முதலில் ஆங்கிலத்தில் உரை எழுதியுள்ளார்

இரேனியுஸ் ஐயர்

போப்பையரால் பாராட்டப்பட்ட இவர், பாளையங்கோட்டையில் சமயத் தொண்டாற்றினார். மக்களுக்கு முடிந்த அளவில் உதவி புரிந்த இவர், 'வேத உதாரணத் திரட்டு' என்னும் உரைநடை நூலை ஆக்கியுள்ளார்.

போப்பையர் (Rev. G. U. Pope)

ஆங்கில நாட்டவரான இவர், தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பள்ளிக்கூடங்களையும், சமயப்பள்ளி (Missions)

---

1. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை. கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர். ப. 6.

களையும் நிறுவினார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆசிரியராய்ப் பணி புரிந்தார். இவர் மேலை நாட்டார்க்குத் தமிழகத்தின் கலைச்செல்வத்தைக் காட்டினார்; நீதியின் நீர்மையை உணர்த்தினார்; ஞானச் செல்வத்தை வழங்கினார்; தமிழ்ப்பணியே தம் உயிர்ப் பணியாகக் கொண்டார் எனலாம்.'[1] இவர் திருக்குறள் முழுவதனையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந் நூலின் பெருமையினை உலகறியச் செய்தார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'இருவினை கடந்த செல்வன் இசைத்த வாசகத்தையெல்லாம் வருவிளையாட்டாற் போலும் மறுமொழியதனில் வைத்தீர்' என்று, பேராசிரியர் சூலியன் வின்சனின் பாராட்டினைப் பெற்றார். நாலடியார் முழுவதனையும், புறநானூறு, புறப் பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் சில பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தமிழ் இலக்கியத்தின் பெருமையினைக் கட்டுரையாக ஆங்கிலச் செய்தித்தாள்களில் எழுதிப் பரப்பினார். தமது கல்லறையில் 'போப்பையர்—ஒரு தமிழ் மாணவர்' என்ற வாசகம் எழுதப்படல் வேண்டும் என்று இவர் ஆசைப்பட்டார். இவர் தமிழ் ஆர்வத்திற்கு இவ்விருப்பம் ஒன்றே போதிய சான்றாகு

---

1. Dr. Pope himself had truly said that Tamil scholarship was the direct road to poverty. Notwithstanding this disadvantage, Dr. Pope had devoted aimost sixty years of his life in the study of Tamil LIterature and to its critical examination.

(Siddhanta Deepika Vol. P. 192)

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர் ப 11.

1. Whenever I die, 'A student of Tamil' will be inscribed on my monument—Dr. Pope's letter dated 20th October 1900, to J. M. Nallaswamy Pillai, Editor of the Siddhante Deepika.

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர் ப. 20

மன்றோ? எந்நாட்டில் பிறந்தாலும், எந்நாட்டில் இறந்தாலும், போப்பையரைப் போன்றவர் சிறந்த தமிழரே என்பதில் தடையும் உண்டோ."

கால்டுவெல் ஐயர்

இவர், 1889-இல் அயர்லாந்து நாட்டிலிருந்து தமிழ் நாடு வந்து திருநெல்வேலியில் இடையன் குடியில் தங்கித் தாம் ஒருவராகவே இலட்சம் பேரைக் கிறித்தவர்களாக்கினார். இவர், 'திருநெல்வேலிச் சரித்திரம்' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதினார்; இது தவிர, 'நற்கருணைத் தியான மாலை', 'தாமரைத்தடாகம்' என்னும் இரு நூல்களையும் இயற்றினார். இவருடைய பெயர் இன்றளவும் புகழ் பூத்து நின்று நிலவுவதற்குக் காரணம், இவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A comparative Grammar of the Dravidian family of Languages) என்னும் நூலாகும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான திராவிட மொழிகள் ஓரினத்தைச் சார்ந்தவை என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டிய பெரியார் இவரே. இவருக்குத் தமிழர் நன்றிக் கடன் பட்டவர் ஆவர்.

தமிழ்க் கிறித்தவர்கள்

இங்கு வாழ்ந்துவந்த தமிழர் பலர் ஐரோப்பியர்களால் சமயமாற்றம் செய்யப்பட்டுக் கிறித்தவர்களாகி அந்தச் சமயத்திற்குத் தொண்டு செய்தனர். சிறு நூல்களையும் எழுதினர்.

வேதநாயகம் பிள்ளை

இவர், குளத்தூரிலே பிறந்து மாயூரத்தில் மாவட்ட முனிசிப்பாக வேலை பார்த்தவர்; எல்லாச் சமயத்தினரும் சமரச மனப்பான்மையோடு வாழவேண்டுமென்ற நோக்கம்

உடையவர். இதனைச் 'சர்வ சமய சமரச கீர்த்தனம்' என்ற இவர்தம் நூலால் அறியலாம். மேலும் இவர் அரிய நீதிகள் கொண்ட நீதிநூல்களையும், பெண்களுக்குக் கல்வி தேவை என்பதை வலியுறுத்தும் முறையில் 'பெண்மதி மாலை என்னும் நூலையும் எழுதியுள்ளார். இவர் தமிழ் இலக்கியத் திற்குச் செய்த சிறப்பான தொண்டு தமிழில் முதன்முதல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலை எழுதிய தாகும். தமிழ் நாட்டில் தமிழ் நாவல்துறைக்கு வித்திட்டவர் இவரே. 'சுகுண சுந்தரி' என்ற நாவலும், 'சத்திய வேத கீர்த்தனை' என்ற நூலும் இவர்தம் இறுதிக் காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.

H. A. கிருஷ்ணப் பிள்ளை

திக்கெலாம் புகழும் திருநெல்வேலியிலே ரெட்டியார் பட்டியில் வேளாளர் மரபில் தோன்றிய இவர், கிறித்துவ சமயத்தினைச் சார்ந்தார். இவர் ஜான் பனியன் (John Bunyan) என்னும் மேனாட்டு ஆசிரியர் எழுதியுள்ள துறக்கப் பயணம் (Pilgrims Progress) என்னும் நூலினைத் தமிழ்ப் படுத்தினார். அந்நூலே தமிழில் 'இரக்ஷணிய யாத்திரிகம்' எனப்படுவது. இக் காவியத்தில் வரும் உருக்கமான ஒரு பாடலைக் காண்க. ஏசுநாதரின் பொறுமையினைப் படம் பிடித்துக் காட்டுகிறது இப் பாடல் :

'தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்தி
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந் தெந்தாய்,
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திப்பிழையை
மன்னியும் என் றெழிற்கனிவாய் மலர்ந்தாநம்
அருள்வள்ளல்'

"சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பாடிய திருப்பாசுரங்களின் மணம் இரக்ஷணிய மனோகரத் தில் கமழ்கின்றது. இறைவனது பேரின்ப வெள்ளம் பொங்கிப் பெருகிப் பூரணமாய் நிற்கும் நிலையினைக் கண்டு அதனைப்

பருகுமாறு பரிந்தழைக்கும் தாயுமானவர் முதலிய ஆன்றோர் பாடல்களில் உள்ள ஆர்வம் இரக்ஷணியப் பாடல்களிலும் அமைந்து நம் உள்ளத்தை அள்ளுகின்றது.[1]

வேதநாயக சாஸ்திரியார்

திருநெல்வேலி நகரில் பிறந்த இவர், பரர்பரன் மாலை, ஞானக்கும்மி, ஆதியானந்தம், ஞான ஏற்றப்பாட்டு என்னும் நூல்களை எழுதியுள்ளார். ஏசுநாதர் பெருமையினை விளக்கப் 'பெத்லகேம் குறவஞ்சி' என்ற நொண்டி நாடகத் தினையும் இயற்றியுள்ளார்.

வின்சுலோ

1862ஆம் ஆண்டில் ராட்லர் எழுதிய அகராதியினைப் பின்பற்றி, இவர் தமிழ் ஆங்கில அகராதியினை வெளியிட் டார்.

தமிழ்க் கவிஞர்கள்

திரிகூடராசப்பக் கவிராயர்

'குளிர் தூங்கும் குற்றாலம்' பற்றிய நூல்களை இனிமை யுற இயற்றிய இவர், தென்காசிக்கருகே மேலகரத்தில் பிறந் தவர். குறவஞ்சிகளிலே தலையாயதாக எண்ணப்படுவது இவரால் இயற்றப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சியாகும். குற்றாலத் தலபுராணமும் இவர் இயற்றியதே. 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் நூல் இனிய சந்த அமைப்புகளோடு, எளிய சொற்களால் இயன்ற அரிய நூல். இதில் உள்ள கண்ணிகள் முதலியன கருத்தை உருக்கும் மோனை எதுகை

---

[1] —டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர் ப. 63.64.

நயங்களோடு நுண்ணிய பொருட்செறிவும் கொண்டிலங்குகின்றன.[1]

குறவஞ்சி—பெயர்க் காரணம்

பாட்டுடைத் தலைவன் உலாவரக் கண்ட தலைவியொருத்தி அவன்மீது காதல் கொண்டு வாடி விரக வேதனையால் தளிக்கும்போது, குறக்குல மகளொருத்தி அவளுக்குக் குறி கூறிப் பரிசில் பெறுவதான செய்திகளைக் கூறும் சிற்றிலக்கிய மாதலின் 'குறவஞ்சி' என்னும் பெயர்த் தாயிற்று. குறக்குலத்தைச் சார்ந்த பெண், 'குறவஞ்சி' எனப் பெற்றாள்.

இலக்கணம்

'கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்'

என்ற தொல்காப்பியக் களவியல் நூற்பாவினை விளக்கும் பல பாடல்களைச் சங்க இலக்கியத்தில் காணலாம். குறவஞ்சி இலக்கியம் பின்னாளில் 'குறத்திப் பாட்டு' என்றும் வழங்குவதாயிற்று.

'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட வுரைப்பது குறித்திப் பாட்டே'

என்று பன்னிரு பாட்டியல் குறவஞ்சியின் இலக்கணம் கூறுகின்றது. பொருளமைதியால் இவ்விரு இலக்கிய வகைகளும் ஒத்திலங்கக் காணலாம்.

"A poem in which a Kurava women is represented as describing to a maiden her fortune in her love-affair."

என்ற ஆங்கில விளக்கங் காண்க.

---

1. குற்றாலக் குறவஞ்சி. கழகப் பதிப்பு, முன்னுரை ப. 24.

நயம்

திருக்குற்றால மலை வளத்தினை ஆசிரியர் அழகுறப் புனைந்துள்ளார்:

'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்;
ககன சித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்;
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.'

கதைத் தலைவி வசந்தவல்லி இறைவனின் திருவுலாக் காட்சியைக் கண்டு காதல்கொண்டு மயங்குவதைக் கவினுறக் கண்ணிரளில் சித்திரிக்கின்றார் இக் கவிஞர்.

'தண்ணமுது டன்பிறந்தாய் வெண்ணிலாவே! அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே!
பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே!
என்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே!'

இக் குறவஞ்சியை இயற்றியதற்காக, அது போது மதுரையை ஆண்ட முத்து விஜய சொக்கலிங்க நாயக்கர் 'குறவஞ்சி மேடு' என்னும் பகுதியை இனாமாக அளித்தார் என்பதைத் தாமிர சாசனத்தால் அறிகிறோம்.

முக்கூடற் பள்ளு

பள்ளு—பெயர்க் காரணம்

பள்ளர்களின் வாழ்க்கையினைச் சித்திரிக்கும் இலக்கிய மாதலின் 'பள்ளு' என்ற பெயர் ஏற்பட்டது. (A dramatic poem dealing with the life of the pallars.)

பள்ளு : இலக்கணம்

'சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணாந் தோரே'

என வரும் தொல்காப்பியனார் கூற்றுக்கு, 'வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் விளங்குவன புலனென்னும் செய்யுளாம்' என்று இளம் பூரணரும் 'அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன வென்பதும் கண்டு கொள்க' எனப் பேராசிரியரும் விளக்கம் கண்டுள்ளதனை நோக்கப் பள்ளு என்னும் சிற்றிலக்கிய வகைக் கூறு, தொல்காப்பியனார் காலத்திலேயே கருக்கொண்டுள்ளது என்பதனை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் பள்ளு இலக்கியத்திற்குரிய கூறுகள் காணப்படுகின்றன. உழத்தியர் பாட்டு, எயினர் பாட்டு, ஆயர் பாட்டு, குன்றவர் பாட்டு முதலியன இளங்கோவடிகளால் இலக்கியச் சிறப்புடன் எடுத்து மொழியப்படுகின்றன.

'புரவலர் கூறியவன் வாழிய வென்று
அகவயல் தொழிலை யொருமை யுணர்ந்தனன்
எனவரும் ஈரைந்து உழத்தி பாட்டே'

எனவரும் பன்னிரு பாட்டியல் நூற்பா, 'உழத்தி பாட்டு' என்பது, உழத்தி ஒருத்தி உழவுத் தொழிலை வாழ்த்தியும் அரசனைப் புகழ்ந்தும் பாடும் பத்துப் பாடல்களால் ஆகிய ஒருவகைச் சிற்றிலக்கியமாகும் என்பதனைக் குறிப்பிடுகின்றது. எனவே உழத்தி பாட்டு வேறு, பள்ளுப்பாட்டு வேறு என்பது விளங்கும். ஆயினும், பள்ளுப் பாட்டின் வளர்ச்சிக்கு உழத்தி பாட்டின் பொருளமைதி வேண்டப் பட்டதனை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்கினால் அவை புலனாகக் காணலாம்.

பள்ளு—அமைப்பு

வீரமா முனிவர் இயற்றிய சதுரகராதியில் 'உழத்திபாட்டு' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள பின்வரும் இலக்கணம் பள்ளின் இலக்கணமாகவே அமைந்திருக்கக் காணலாம்.

"கடவுள் வணக்கம், முறையே மூத்த பள்ளி இளைய பள்ளி குடும்பன் வரவோடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டு வளன், குயிற்கூவக் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக் குறியோர்தல், ஆற்றின் வரவு, சிறப்புக் காண்டல், இவற்றிற் கிடையிடை அகப் பொருட்டுறையும் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளி களிருவர் முறையீடு, இளையவளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவன் அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல், அவர் பெருமை கூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான் போல வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளி அடிசிற்கொடு வரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தற் கூட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் ஆற்றல், அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளம் கூறல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்துவித்தல், அதைப் பண்ணைத் தலைவர்க்கு அறிவித்தல், மூத்த பள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் நாற்று நடல், விளைந்தபின் செப்பல் செயல், நெல் அளத்தல், ஏசல் என இவ்வுறுப்புகள் உறப் பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோற்றச் சிந்தும் விருத்தமும் விரவி வர இவற்றாற் பாடுவது."

முக்கூடற்பள்ளு நயம்

முக்கூடல் என்ற ஊரிலே வாழ்கிறான் ஒரு பள்ளன் அவனுக்கு இருவர் மனைவியர். மூத்த மனைவி, முக்கூடற்

பள்ளி, பெருமாளைச் சேவிப்பவள்; இளையவள் மருதூர் பள்ளி, சிவனடியாள். இவ்விருவர்க்கிடையிலும் நிகழும் உரையாடல்கள் நகைச்சுவையும் நயமும் பொருந்தியன. புதிதாகத் தமிழ் படிக்கத் தொடங்கும் சிறுவர்களுக்கு ஆசிரியர் முக்கூடற் பள்ளை ஏட்டில் எழுதிக்கொடுத்துப் படிக்கச் செய்வாரீகள். அவ்வாறு எல்லா மக்களாலும் இது விரும்பிப் பயிலப்பட்டு வந்ததோடல்லாமல் விரித்துத் தனி நாடகமாகவும் அமைக்கப் பட்டிருந்தது. நாடகமாக அமைத்தவர் 'வேளான் சின்னத் தம்பி' என்ற பெயருடைய எனையினாப் புலவர்.[1]

"எளிய நடையிலமைந்த பாடல்கள் இசையுடன் சேரும் போது, சொற்கள் நெகிழ்ச்சி பெற்று, பழகிய சொற் களாதலினாலே பாடல்களின் நயம் மிகுதியாகிறது. இசை பொருள் உணர்வதிலுள்ள எளிமை என்ற இருவித இயல்பு களாலும் பாமர மக்கள இப்பாடல்களைச் சுலபத்தில் கேட்டும் உணர்ந்தும் இன்புற முடிகிறது.[2] இம்முறையில் இன்றும் வழங்கும் முக்கூடற்பள்ளுப் பாடலின் அழகைக் காண்போம்.

'ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்று தேகுறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படுசொறித்தவளை கூப்பி டுகுதே!
சேற்றுநண்டு சேற்றைக்குழைந் தேற்றடைக்குதே மழை
தேடியொரு கோடிவானம் பாடி யாடுதே
போற்றுதிரு மாலழகர்க் கேற்ற மாம்பண்ணைச்—சேரிப்
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே.'

மூத்த பள்ளியின் அழகினை—சாயல், உடை, நடை நளினங்களைப் பள்ளு ஆசிரியர் பின் வருமாறு பாராட்டி யுள்ளார்—

---

1. திரு. மு. அருணாசலப்பிள்ளை, முக்கூட்டுப்பள்ளு நூல் ஆராய்ச்சி ப. 45.
2. ஷை ப. 15.

'உள்ளத்தில் ஊசலிடும் உல்லாசப் பார்வைவிழிக்
கள்ளத்தி னாலிரும்புங் கல்லுங் கரையாதோ
வெள்ளத்தி லேதுயில்கார் மெய்யழகர் முக்கூடற்
பள்ளத்தி யாரழகு பார்க்க முடியாதே.'

பள்ளிகளின் ஏசலில் நல்ல சுவையுண்டு. எண்வகைச் சுவைகளையும் பள்ளிற் காணலாம்.

அருணாசலக் கவி

தில்லையாடியிலே பிறந்த இவர், இல்லறம் புகுந்து, பின் துறவறத்திற்கு மாறிச் சீகாழியிலே தங்கினார். அங்கு அசோமுகி நாடகம், இராம நாடகம், சீகாழிக்கோவை. சீகாழிப்புராணம், அனுமார் பிள்ளைத்தமிழ் முதலிய நூல் களை இயற்றினார். இவற்றுள் இராம நாடகம், நாடகத் தமிழுக்கு நல்ல வளர்ச்சியினைத் தந்தது.

வடமலையப்பப் பிள்ளையன்

சீரங்கத்திற்கு அருகே நிலக்கிழார் குடியிலே பிறந்த இவர், பதினெண் புராணத்தில் ஒன்றான மச்ச புராணத்தை இயற்றினார். இவர் கலைஞர்களை ஆதரித்தார் என்பதைச் 'செந்தமிழுக்குதவும் தியாக வாரிதி' என்று இவர் வழங்கப் படுதலால் அறியலாம். இவர்,

'நானூற்றுக் கோவையும் நாற்கவி வண்ணமும்
பலர்புகழ் நீடூர்த் தலபு ராணமும்'
இருநிலம் புகழு மொருகலம் பகரும்'

இயற்றியமையை உணர்கிறோம். மேலும், 'வடமலை வெண்பா' என்ற நூலையும் இயற்றியுள்ளார். இவர் காலம் பதினெட்டாம் நூற்றாண்டு.

இராமச்சந்திரக் கவிராயர்

மக்கள் மதிப்பினைப் பெற்ற நகைச்சுவை தழுவிய இனிய எளிய பாடல் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்த இவர், எல்லீசராற் பெரிதும் பாராட்டப்பட்டவர். 'துன்பங்கள் அலைபோல் அடுக்கடுக்காக வரும்' என்ற கூற்றினை மெய்ப்பிக்க இவர் ஒரு பாடல் இயற்றியுள்ளார்:

'ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதை கொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென் றாரே.'

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்புலவராக 'மகா வித்துவான்' என்னும் சிறப்போடு துலங்கினார். நால்வகைக் கவி பாடுவதிலும் திறமை வாய்ந்த இவர் நாளொன்றுக்கு முந்நூறு பாட்டுகள் பாடினார் என்பர். திரிசிரபுரத்தில் பிறந்த இவர், துறைசை ஆதீனப் புலவராய்த் தமிழ் வளர்த்தார். இவருக்கு மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லி கொடுப்பதில் ஆர்வம் அதிகம். மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் இவரிடம் கல்வி பயின்றவரே. இவர் பதினாறு தல புராணங்களும், பத்துப் பிள்ளைத் தமிழ் நூல்களும், நான்கு மாலைகளும், பதினாறு அந்தாதிகளும் பாடினார் என்பர். தலபுராணத்தில் திரு நாகைக் காரோணப் புராணமும், பிள்ளைத் தமிழில் சேக்கிழார் பிள்ளைத்தமிழும், மாலை நூல்களில் திருவானைக்கா இரட்டை மணி மாலையும், அந்தாதிகளில் தில்லையமக அந்தாதியும் சிறப்பானவை. இவை தவிரச் சிறு காப்பியங்களும் தனிப்பாடல்களும் பாடியுள்ளார்

குமரகுருபரர் வரலாற்றினையும் சிவஞான முனிவர் வரலாற்றினையும் இவர் எழுதியுள்ளார். இவருடைய 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்' பலராலும் பாராட்டப்படுவது: சேக்கிழார்பால் இவர் கொண்ட பற்றினைத் தெரிவிப்பது. இவரைப் போன்று எண்ணிறந்த பாடல்களைத் தமிழில் எழுதியவர் வேறு இலர் எனலாம்.

இராமலிங்க அடிகள்

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சமயத்துறையில் ஓர் ஒளி விளக்காய்த் திகழ்ந்தார். தென்னார்க்காடு மாவட்டத்தில் மருதூரில் பிறந்த இவர், சென்னையிலும் கருங்குழியிலும் வாழ்ந்து, இறுதியில் வடலூரில் தமது ஐம்பத்து ஒன்றாம் வயதில் மறைந்தார். இவருடைய தந்தையார் பெயர் இராமையாபிள்ளை; தாயார் பெயர் சின்னம்மையார். நல்ல நாவன்மை வாய்க்கப்பெற்ற இவர், புராண விரிவுரையாற்றுவதில் இளமையிலேயே சிறந்து விளங்கினார். மனுநீதிச் சோழன் வரலாற்றை 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற சிறந்த உரைநடை நூலாக எழுதியுள்ளார். மேலும், இவர் கண்ணுடை வள்ளலாரின் ஒழிவிலொடுக்க நூலின் சிறப்புப் பாயிர விரிவுரை, சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவமாலை, இங்கித மாலை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கொல்லாமையைச் 'சீவ காருண்யம்' என்ற தலைப்பில் 'பிள்ளைப் பெருவிண்ணப்பமாகக்' கூறுகின்றார்; இறைவனை நோக்கி மனங்கசிந்து உருகுகின்றார்.

'அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிருக் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்'

என்பதே இவர் இறைவன்பால் வேண்டும் வேண்டுகோள்.

'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் எனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ!'

என்ற பாட்டால் வள்ளலார் கண்ட நெறியினை அறியலாம்.

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் புலவர்கள்

தமிழ்நாடும் இலங்கையும் அரசியல், மொழி, சமுதாயம், பண்பாட்டுத் தொடர்பு கொண்டுள்ளன. தமிழார்வம் கொண்டு தமிழ் வளர்த்த பெரியோர் பலரை இலங்கை ஈன்றெடுத்திருக்கிறது. சமயம், கல்வி, இலக்கியம், இலக்கணம் முதலான பல்வேறு துறைகளிலும் அவர்கள் தொண்டாற்றியுள்ளார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் இருவர். ஒருவர், ஆறுமுக நாவலர்; மற்றொருவர் திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை.

ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர், கி. பி. 1823ஆம் ஆண்டு, யாழ்ப் பாணத்து நல்லூரிலே பிறந்தார். சைவ சமயப் பற்றில் இவர் மனம் ஆழ்ந்திருந்தது. சைவமும் தமிழும் தம்மிரு கண்களெனக் கொண்டார். இரண்டினையும் வளர்க்க யாழ்ப் பாணத்திலும் சிதம்பரத்திலும் கல்லூரிகள் நிறுவினார். கிறித்துவ சமயம் பெரிதும் பரவி வளர்ந்தபோது, பழைய சமயமாம் சைவ சமயத்திற்குப் புத்துயிர் அளித்தார். சென்னையில் ஓர் அச்சுக்கூடத்தினை நிறுவி, இலக்கண நூல் களையும் சைவசமய நூல்களையும் திருத்தமாகப் பதிப்பித் தார். சமயச் சொற்பொழிவாற்றுவதில் தலைசிறந்து விளங்கிய இவர், பள்ளிச் சிறுவர்களுக்குப் பாடப் புத்தகங் களும் எழுதினார்; பல உரைநடை நூல்களையும் எழுதி யுள்ளார். இதனால் இவரை அறிஞர் வி. கோ. சூரிய

நாராயண சாஸ்திரியார், 'வசன நடை கைவந்த வள்ளலார்' எனப் பாராட்டியுள்ளார், 'வைதாலும் வழுவின்றி வைவாரே' என்ற பாராட்டுரையும் இவர் குறித்து எழுந்ததே. ஆங்கில உரைநடைக்கு ஒரு டிரைடன் (Dryden) போலத் தமிழுக்கு ஆறுமுக நாவலர் வாய்த்தார். இவரை,

'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதி எங்கே?'

என்று திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை பாராட்டியுள்ளார்.

சி. வை. தாமோதரம் பிள்ளை

திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை, வைரநாதப்பிள்ளையின் மைந்தராய், யாழ்ப்பாணத்துச் சிறுபிட்டியில் 1832 ஆம் ஆண்டு பிறந்தார். சைவ சமயப்பற்று நிறைந்த இவர், கிறித்தவர்களோடும் நெருங்கிப் பழகினார். 1857ல் நிறுவப் பட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதல் பி. ஏ. பட்டம் பெற்றார். அரசினர் பதவி வகித்த இவர், அதுநாள் வரை அச்சேறாமல் பனையோலையில் தவம் கிடந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் சேகரித்துப் பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினார். தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் சேனா, வரையம்; வீரசோழியம், இறையனார் அகப்பொருளுரை, இலக்கண விளக்கவுரை முதலிய இலக்கண நூல்களையும், கலித்தொகை, தணிகைப்புராணம், சூளாமணி முதலிய இலக்கிய நூல்களையும் பதிப்பித்தார்; தாமாகவே சில நூல்களையும் எழுதியுள்ளார். சிறந்த பதிப்பாசிரியர் என்று நாம் இவரைப் போற்றுகிறோம். இவரைக் குமாரசாமிப் புலவர் என்பார்,

'ஏட்டி லிருந்த அருந்தமிழ் நூல்க ளெனைனப்பலவுந்
தீட்டி வழுக்களைந்-தச்சினி லாக்குபு செந்தமிழ்சேர்
நாட்டி லளித்துயர் தாமோத ரேந்திரன் நண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே'

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

பிற புலவர்கள்

யாழ்ப்பாணத்தில் பிறந்து தமிழ்த் தொண்டாற்றியவர் களாகப் பல புலவர்கள் விளங்குகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்து அராலி என்னும் பகுதியில் பிறந்தவர் விசுவநாத சாஸ்திரியார் ஆவர். வண்ணக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி இரண்டும் இவர் இயற்றி யனவே. சிலேடைக் கருத்துகள் அமைத்துப் பாடுவதில் இவர் வல்லவர். ஆறுமுக நாவலரின் ஆசிரியரான சேனாதிராயர் நல்லைக் குறவஞ்சியும் நல்லை வெண்பாவும் இயற்றினார். இவர் தமிழகராதி ஒன்றையும் தொகுத்தார் என்பர். தாமோதரம் பிள்ளையின் ஆசிரியரான சுன்னாகம் முத்துக் குமார கவிராயர், நடராஜர் பதிகம், ஞானக்கும்மி, ஐயனார் ஊஞ்சல் எனும் நூல்களை அருளினார். மறைசைக் கலம்பகமும், மறைசைத் திருப்புகழும் இயற்றிய பீதாம்பரப் புலவர் சேனாதிராயரின் மாணவர். ஆறுமுக நாவலரின் தந்தையரான கந்தப்பிள்ளை இராம விலாசம், சந்திரகாசம், முதலிய நூல்களை எழுதியுள்ளார்; வடமொழியில் அமைந் துள்ள பகவத்கீதை, சாந்தோக்கிய உபநிடதம், மேகதூதம், தோபதேசம் ஆகிய நூல்களைத் தமிழ்ப்படுத்தினார் நாக நாத பண்டிதர். 'சிவ தூடன கண்டனம்', 'கிறிஸ்துவமத கண்டனம்' முதலிய மறுப்பு நூல்களை எழுதிச் சைவ சமயத்தை வளர்த்த சங்கர பண்டிதர், சைவப் பிரகசனம் என்னும் தருக்க நூலினையும் தந்துள்ளார். சிவ சம்புப் புலவர், ஈழ நாட்டுப் புலவர்களுள், பெருந்தொகையான பிரபந்தங்களைப் பாடியவர். இவர் ஏறக்குறைய அறுபது பிரபந்தங்கள்வரை பாடியுள்ளார். இவர் பாடிய தனிச் செய்யுளகளும் பல. இவர் பிரபந்தங்களுட் சிலவே சமயச் சார்புற்றன; ஏனையவை தமிழ்நாட்டிற் பற்பல இடங்களிலு முள்ள தமிழ்ப் புலவர்கள்மீது பாடப்பட்டவை. சுவைமிக்க இவர் பாடல்கள் படிப்போர்க்குப் பெரிதும் இன்பந்தர வல்லன.[1]

---

1. திரு. வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாற்றுச் சுருக்கம். ப. 159.

கல்லாடச் சாரக் கலித்துறை, செந்தில் யமக அந்தாதி, மாப்பருங்கலக் காரிகை உரை, புலோலி நான்மணிமாலை முதலிய நூல்கள் இவரால் இயற்றப்பட்டுள்ளன. சித்திரக் கவிகள் பாடுவதிலும் இலக்கணப் பயிற்சியிலும் வல்லவரான முருகேச பண்டிதர், ஈழத்தில் பிறந்து, தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். மயிலணிச் சிலேடை வெண்பா, சந்திரசேகர விநாயக ஊஞ்சல், நீதி நூறு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். பில்கணீயம்' என்ற வடமொழிக் காப்பியத்தைத் தமிழில் தந்தவர் கணபதிப்புலவர் என்பவராவர். வண்ணார் பண்ணையைச் சார்ந்த கணேச பண்டிதர் இளைசைப் புராணம் செய்தார்.

கிறித்தவரும் சமயத் தொண்டினை யாற்றுமுகத்தான் தமிழ் நூல்கள் இயற்றியுள்ளனர்; மானிப்பாயில் பிறந்த சதாசிவப்பிள்ளை என்பார் நன்னெறி மாலை, திருச்சதம், பாலவர் சரித்திர தீபகம் முதலிய நூல்களின் ஆசிரியர். கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த கனகசபைப் புலவர் அளவெட்டி என்னும் பகுதியிலே பிறந்து அழகர்சாமி மடல், திருவாக்கு புராணம் ஆகிய நூல்களைச் செய்துள்ளார்.

அதிரூபாவதி நாடகம், அபிமன்னு நாடகம், அலங்கார ரூபாவதி நாடகம், மலையகந்தி நாடகம் முதலிய நாடக நூல்களை இயற்றிய புலவர், கணபதிஐயர். மயில் வாகனப் புலவர் புலியூர் யமக அந்தாதி என்னும் நூலை இயற்றிய தோடு அமையாது, யாழ்ப்பாணத்துச் சரித்திரத்தினையும் எழுதியுள்ளார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் அமையப்பெற்ற சின்னத்தம்பிப் புலவர் மறைசை அந்தாதி, கருவை வேலன் கோவை, பறாலை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்களைப் பாடினார். உடுப்பிட்டியிற் பிறந்த கதிரைவேற்பிள்ளை தமிழ்ச்சொல்லகராதி ஒன்றினைத் தொகுத்துள்ளார். சரவணமுத்துப் புலவர் ஆத்மபோத பிரகாசிகை, வேதாந்த சுயம் ஜோதி முதலிய நூல்களின் ஆசிரியராய் விளங்கினார். திராவிடப் பிரகாசிகை என்ற

அரிய நூலை இயற்றியளித்தவர் வடகோவையிற் பிறந்த சபாபதி நாவலர் ஆவர். தமிழ்நாடு வந்து சிதம்பரத்தில் பலகாலம் வாழ்ந்த இவர், திருவாவடுதுறை ஆதீனப் புலவராய் அமர்ந்து, சிதம்பர சபாநாதர் புராணம், பாரத தாற்பரிய சங்கிரகம் முதலிய சமய நூல்களை இயற்றி யுள்ளார்.

இவ்வாறு ஈழநாட்டுத் தமிழர் பலர் புலவர்களாய் விளங்கித் தமிழ்த் தொண்டினையும் சமயத் தொண்டினை யும் திறம்பட ஆற்றியுள்ளனர்.

19, 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள்

பூண்டி அரங்கநாத முதலியார், கி. பி. 1844-இல் பிறந்து, சென்னை மாநிலக் கவ்லூரியில் கணித ஆசிரி யராய்ப் பணியாற்றினார். தியாகராச செட்டியாரின் நட்புக் கிடைக்கப்பெற்ற இவர், காஞ்சி ஏகம்பரநாதர்பேரில் கச்சிக் கலம்பகத்தை இயற்றி அழியாப் புகழ் பெற்றார். 1893ஆம் ஆண்டில் மறைந்த இவரை நினைவுபடுத்தும் வண்ணம், மாநிலக்கல்லூரியின் ஒரு பகுதி விளங்குகிறது. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய திரு. செல்வக்கேசவராய முதலியார், கம்பர், திருவள்ளுவர் முதலிய புலவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றினை எழுதியுள்ளார். சென்னைத் தபால்நிலைய மேற்பார்வை யாளராய் இருந்த திரு. கனகசபைப்பிள்ளை தமிழாராய்ச்சி யில் திளைத்து, 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' (The Tamils 1800 years ago) என்னும் நூலினைத் தந்துள்ளார். தமிழர்தம் புகழ்மிக்க பழைய வரலாற்றினை இந்நூல் பரக்கப் பேசுகிறது. காவல் துறை யில் (Police Department) உயர்ந்த பதவி வகித்த திரு. பவானந்தம்பிள்ளை அவர்கள் 'பவானந்தர் கழகத்'தை நிறுவி, பல தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அளித்தார்.

மதுரை மாவட்டத்தில் சோழவந்தானில் வேளாளர் குலத்தில் பிறந்த அரசஞ் சண்முகனார் இலக்கிய இலக்கணங் களிலும், சித்தம். சோதிடம் முதலிய துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ்ந்தார். இவர் சிறந்த திறனாய்வாளராய் விளங்கினார் என்பதற்கு, இவர் எழுதிய திருக்குறளாராய்ச் சியும், தொல்காப்பியப் பாயிரவிருத்தியும் சான்று பகர வல்லன. யாழ்ப்பாணத்திற் பிறந்து தமிழ்ப்புலவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கியவர் திரு. கனகசுந்தரம்பிள்ளை. 'இல்லாண்மை' என்னும் நூலும், 'தமிழ் நாவலர் சரிதை'யும் இவர் இயற்றியனவே ஆகும். இவர் நூல்களைப் பிழையற அச்சிடுவதிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். பின்னத்தூரிற் பிறந்த திரு. நாராயணசாமி ஐயர் அவர்கள், தம் சங்க இலக்கியப் பயிற்சி எல்லாம் விளங்க 'நற்றிணை'க்கு ஒரு நல்ல உரையினை ஆக்கியுள்ளார். தஞ்சை மாநகரில் வழக்கறிஞர் தொழில் நடத்திய திரு. கே. எஸ். ஸ்ரீநிவாச பிள்ளை, 'தமிழ் வரலாறு' என்னும் ஆராய்ச்சி நூலை அளித் துள்ளார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யின் மாணவராம் உத்தமதானபுரம் வே. சாமிநாத ஐயர் இன்று 'தமிழ்த் தாத்தா' என வழங்கப்படுகிறார். இவர் மார் ஊராகச் சென்று, செல்லுக்கும் கறையானுக்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் திரட்டி வந்து, அவைகளைத் திருத்தமான முறையில் பதிப்பித்தார். இவர் பதிப்பித்த நூல்களைவிரிக்கின்பெருகும். ஒவ்வொரு நூலினையும் உட்புகுந்து படித்து ஆழ்ந்த பொருள்களையெல்லாம் அரிதின் முயன்று கண்டு, நூற் பொருளைத் திறம்பட எளிய சொற்களால் புலப்படுத்துதல் இவருடைய தனிச்சிறப்பாகும். கதைச் சுருக்கம், பாடியவர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, மேற்கோள்கள், இன்ன பிற செய்திகள் எல்லாம் இவர் உரையில் துலங்கும்

தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். 'புதியதும் பழையதும்,' 'கண்டதும் கேட்டதும்', 'நினைவு மஞ்சரி' முதலியன இவர் இயற்றிய உரைநடை நூல்களாகும். நூல்களைப் பதிப் பிக்கும் முறையில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய இவர், 86 வயதுவரை வாழ்ந்தார்.

'குடந்தைநகர்க் கலைஞர் கோவே!
பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவர் வாயின்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித் துலங்கு வாயே!'

என்று பாரதியார் இவரைப் பாராட்டியுள்ளார்.

பழந்தமிழ் நூல்களாம் பத்துப்பாட்டு, திருக்குறள் முதலியவற்றிற்கும் இடைக்காலத்து நூல்களாம் கம்ப ராமாயணம், வில்லிபாரதம், தண்டியலங்காரம் முதலான வற்றிற்கும் அருமையான உரையினை நயம்பட எழுதியவ ரான திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் தமிழ்ப் பேரகராதிக் குழுவில் (Tamil Lexicon committee) இருபது ஆண்டுகள் இடையறாது பணியாற்றினார். 'உரையாசிரியச் சக்கரவர்த்தி' என்று இவர் போற்றப்படுகிறார். இராஜாஜி யும் "நம்முடைய தென்னாட்டில் இந்தக் காலத்தில் தோன்றிய வியாசாவதாரங்கள் உண்டு; அவர்களில் ஒரு வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் ஒருவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.[1] கி. பி. 1956ஆம் ஆண்டு இவர் மறைந்தார்.

'அபிதான சிந்தாமணி' என்ற தமிழ்ப் பேரகராதி யினை இயற்றியவர் திரு. ஆ. சிங்காரவேலு முதலியார். பட்டினத்தடிகள் பாடல்களுக்கு ஓர் உரையும் இவர் கண்டுள்ளார். தமிழ், பட்டப் படிப்புக்கென்ற தகுதிக்குப்

---

1. ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரிய சரிதை. ப. 5.

படிக்கப்பெற வேண்டும் என்று தமிழை உயர்த்தியவர் திரு. கா. நமசிவாய முதலியார். பள்ளி மாணவர்க்குப் பல பாடப் புத்தகங்களை எழுதியுள்ள இவர், தம் காலத்தில் புலவராயும், நாவலராயும் விளங்கினார்.

இயற்றமிழ்ப் புலவர்களாயும் ஆராய்ச்சியாளர்களாயும் சில தமிழ் அறிஞர்கள் விளங்கினார்கள். சேது சமஸ்தான மகாவித்துவான் ரா. இராகவையங்கார், பாண்டித்துரைத் தேவர் தொடங்கிய தமிழ்ச் சங்கத்திற்கு ஊன்றுகோலாய் அமைந்தார். இவர் 'பாரி காதை' என்ற அழகிய செய்யுள் நூலினையும் படைத்துள்ளார். "தமிழ் வரலாறு" என்னும் அரிய ஆராய்ச்சி நூலையும், சேதுநாடும் தமிழும், வஞ்சிமா நகரம், புவியெழுபது, திருவடிமாலை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கம்பராமாயணத்தில் உள்ளம் தோய்ந்து ஈடுபட்டவர் வெள்ளக்கால் திரு. சுப்பிரமணிய முதலியார், அகலிகை வெண்பா, கோம்பிவிருத்தம், சுவர்க்க நீக்கம், நெல்லைச் சிலேடைவெண்பா முதலிய இனிய செய்யுள் நூல்களையும், கம்பராமாயண இன்கவித் திரட்டு, இராமாயண உள்ளுறை பொருளும் தென் இந்தியச் சாதி வரலாறும் போன்ற அரிய நூல்களையும் இவர் தமிழகத்திற்குத் தந்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆங்கிலத்தில் எழுதியவர் திரு.எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை ஆவர்.

பண்டிதமணி

மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டியிற் பிறந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்தார். இருமொழிப் புலமை வாய்ந்த இவர், சுக்கிர நீதி என்னும் வடமொழி நூலினைத் தமிழாக்கினார். மிருச்சகடிகம் என்ற வடமொழி நூலை 'மண்ணியல் சிறு தேர்' என்று அழகு தமிழில் மொழிபெயர்த்தமைத்தார்; திருவாசகத்திற்கு அரிய உரையும் கண்டுள்ளார். உரைநடைக் கோவை, சுலோசனை, உதயணன் கதை முதலியனவும் இவர்

இயற்றிய நூல்களே. இவருடைய உரைநடை உயர்ந்து செறிந்து இட்பம் வாய்ந்ததாய்ப் பொருளாழும் அமைந்து காணப்படுகின்றது.

ந. மு. வே. நாட்டார்

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் பெரும் படிப்பாளர்; அகத்தியர், கபிலர், நக்கீரர் முதலிய புலவர் களைப் பற்றி ஆய்ந்து ஓர் அரிய நூலினை வெளியிட்டுள் ளார். திருவிளையாடற் புராண உரை, சிலப்பதிகார உரை, அகநானூறு உரை, மணிமேகலை உரை முதலியன இவர் இயற்றிய உரை நூல்களாகும்.

கா. சு. பிள்ளை

எம். எல். பிள்ளை என்று வழங்கப்படும் தாகூர் சட்ட நிபுணர் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளைக்குத் தமிழுலகம் நன்றிக்கடன் பட்டுள்ளது. சைவப்பற்று நிரம்பிய இவர், நாயன்மார் நால்வர் வரலாற்றினை எழுதியுள்ளார். 'இலக்கிய வரலாறு' என்னும் இவரது நூல் என்றென்றும் இவர்தம் பெருமையினைப் பறைசாற்றி நிற்கும்.

எஸ். வையாபுரிப் பிள்ளை

பல ஏட்டுப் பிரதிகளையும் படித்துணர்ந்து, பாடபேதங் களை நோக்கி, நூல்களைப் பதிப்பிப்பதில், அண்மைக் காலத்தில் சிறந்து விளங்கியவர் பேராசிரியர் எஸ். வையா புரிப் பிள்ளை; தமிழ் பேரகராதிக் குழுவின் தலைவராய் விளங்கியவர் இவர். புறத்திரட்டு முதலிய நூல்களை இவரால் பதிப்பிக்கப்பட்டவை. தமிழ்ச் சுடர்மணிகள், சொற்கலை விருந்து, காவிய காலம், இலக்கியச் சிந்தனைகள் இலக்கிய உதயம் முதலிய உரைநடை நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் எழுதியுள்ளார். புலவர்கள் காலத்தை இவர் பின்னுக்கு இழுப்பது அறிஞர் பலரின் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது. தமிழ் மொழி இலக்கிய

வரலாறு (A History of Tamil Language and Literature) என்னும் நூல் இவர் இறப்பதற்கு முன்னர் ஆங்கிலத்தில் எழுதியதாகும். 'ராஜி' என்ற நெடுங்கதைப் புத்தகத்தையும் இவர் எழுதியுள்ளார்.

விபுலானந்தர்

ஈழ நாட்டின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பில் உள்ள காரைத்தீவு என்னும் ஊரில் 29-3-1992-இல் விபுலானந்தர் பிறந்தார். மயில்வாகனன் என்று பெற்றோர் இட்ட பெயர், சென்னை இராமகிருஷ்ண மடத்தாரால் பிரபோத சைதன்யர் ஆக மாற்றப்பட்டுப் பின்னர் விபுலானந்தராய் மாற்றம் கண்டது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் வீற்றிருந்த இவர், 1947 ஆம் ஆண்டு திருக்கொள்ளம்புதூரில் தமது ஒப்பற்ற யாழ்நூலினை வெளியிட்டார். இந்நூலால் தமிழர்தம் இசைச்சிறப்பும் பழைய செய்தியும் புலனாயின. மதங்க சூளாமணி என்னும் நூலையும் இயற்றிய இவர், 1949இல் கொழும்பில் இயற்கை எய்தினார்.

மறைமலையடிகள்

மலைமலையடிகள் முதன்முதல் சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்பினார்; சுவாமி வேதாசலம் என்ற பெயர் மறைமலையடிகள் என்று தனித்தமிழில் மாற்றிக் கொண்டார்; வடமொழிக் கலப்பற்ற தூய தனித்தமிழ் இயக்கத்தினைத் தோற்றுவித்தார். மேனாட்டுக்கு உரிய முற்போக்குக் கருத்துகளையும் ஆராய்ச்சி முறைகளையும் தமிழிற் புகுத்தினார். மும்மொழிப் புலவராயும், சிறந்த சொற்பொழிவாளராயும், சைவ சமயப் பெரியாராயும் ஒருசேர விளங்கிய இவர் பல நூல்களை எழுதியுள்ளார். பண்டைத் தமிழரும் ஆரியரும், தமிழர் மதம், முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, திருக்குறளாராய்ச்சி, குறிஞ்சிப் பாட்டு ஆராய்ச்சி, மாணிக்க

வாசகர் வரலாறும் காலமும், பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் முதலிய பல நூல்கள் இவர் அறிவுத் திறனை அறிவிக்கும். இவருடைய திருவாசக விரிவுரை நூலுக்கு அகலவுரை எழுதும் பேராற்றலையும், கோகிலாம் பாள் கடிதங்கள், நாகநாட்டரசி என்பன நாவல் எழுதும் பான்மையினையும், சாகுந்தலம் என்ற நாடகம் பிறமொழி நாடகத்தைத் தமிழ்ப்படுத்தும் நெறியினையும் உணர்த்து வன. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலியன இவர் இயற்றிய செய்யுள் நூல் களாகும். 'அம்பிகாபதி அமராவதி'யும் இவருடைய படைப்பேயாம். 1950இல் இவர் இவ்வுலகை நீத்தார்.

திரு. வி. க.

திரு. வி. க. என்ற பெயர் தமிழ் நெஞ்சங்களில் வாழும் பெயர். திரு. வி. கலியாண சுந்தரனார் தமிழிற்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் உலகிற்கும் செய்த தொண்டுகள் அளவிறந்தன. இத் தமிழ்த் தென்றல், செந்தமிழ் நயந் தோன்ற சொற்பொழிவு ஆற்றுவதிலும், திட்பமும் நுட்பமும் விளங்கக் கட்டுரைகள் வரைவதிலும் நிகரற்றவராய் விளங் கினார். இவருடைய எழுதுகோல் எத்துறையிலும் தொண்டு செய்தது. சமரச நோக்கம் கொண்ட இத் தமிழ்ப் பெரியார், 'எல்லோர்க்கும் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றபடி அடக்கமான பணியினையும் அமைதியான வாழ்வினையும் மேற்கொண் டார். அரசியற் கருத்துகளை ஆங்கிலத்தில் மட்டுமின்றி அன்னை மொழியாம் தமிழிலும் உணர்த்த இயலும் என்பதைப் பத்திரிகைகள் வாயிலாகக் காட்டினார். இதற்கு இவருடைய தேசபக்தன், நவசக்தி இதழ்களே சான்று களாகும். சமயத் துறையில் தெளிந்த அறிவினைப் பெற்றிருந்தார். இவர் பல நூல்களைத் தமிழுலகிற்கு அளித்துள்ளார். முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, இமயமலை அல்லது தியானம், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், சைவத்திறவு, சைவத்தின் சமரசம், தமிழ்த்

தென்றல், நாயன்மார் வரலாறு முதலான பல நூல்களை எழுதியுள்ளார். 1953ஆம் ஆண்டு மறைந்தார். இவரைப் பி. ஸ்ரீ. அவர்கள், பேனா மன்னருக்கு மன்னன். அவர் சிறந்த பக்தன், அவர் சாகவில்லை. ஏனெனில் பக்தனைக் கண்டு சாவுதான் செத்துப் போகிறது. அவர் வாழ்ந்துவந்த 'புதுப்பேட்டை விலாசம்தான் மாறியிருக்கிறது. 'புது விலாசம் மக்கள் உள்ளம்' என்கிறார்.[1]

ஐரோப்பியர் வருகையால் தமிழில் உரைநடை மறு மலர்ச்சி ஏற்பட்டது.புதிய சில துறைகள் படைக்கப்பட்டன. மேலை நாட்டு நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. தமிழில் ஒரு மறுமலர்ச்சி எண்ணம் ஏற்பட்டது. இவ்வாறு ஐரோப்பியர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில், உரைநடை வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விளங்கக் காணலாம்.

---

1. புலவர் அரசு—திரு. வி. க. வரலாறு. ப. 145.

8. இக்காலம்

இக்காலத்தில் தமிழ் பல வகைகளில் முன்னேறி வருகிறது. இயல்துறையில் கவிஞர் பலர் தோன்றி நல்ல கவிதைகளை நம்மிடையே தந்துவிட்டுச் சென்றுள்ளனர்; தரமான கவிதைகளைத் தந்துகொண்டும் வருகின்றனர். அது போன்றே இசைத் துறையில் தமிழ் இசை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு, கர்நாடக இசையின் பிடியிலிருந்து தமிழிசை மறுமலர்ச்சி பெற்றுள்ளது. இசை அரங்குகளில் தமிழ் முழங்குகின்றது. படிப்படியாகச் சிறப்பாக முறையாக வளர்ந்து வந்த நாடகத்துறை, இன்று திரைப்படத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டாலும், நாடகத்தைக் கண்டு களிக்கும் மக்களின் ஆர்வம் மட்டும் குறையா நிலையில் வளமாய் உள்ளது. மேலும், சிறுகதை, நாவல், பத்திரிகை போன்ற பிற துறைகள், நல்ல வேகமான வளர்ச்சியினைப் பெற்று வருகின்றன.

இயற்றமிழ்

பாரதியார்

இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளையுடையது தமிழ். முதற்கண் இயற்றமிழ்க் கவிஞர்களைக் காண்போம். இந்தக் காலத்தைப் 'பாரதியுகம்' என்றார் அறிஞர் ஒருவர். "பாரதியார் எதிர்காலத்தில் பல நூறு ஆண்டுகள் பெருமையுடன் மதிக்கப்படப் போகின்ற கவிஞர்களில் சிரேஷ்டமானவர். பாரதியாரின் கவிதை உள்ளம், நவரஸங்கள் வழியாக வழிந்தோடி வெள்ளப் பெருக்கெடுத்திருப்பதை அவருடைய பாடல்களில் காணலாம். கவிஞர்களில்,

ரஸத்தை உடைத்து உடைத்துப் பின்னப்படுத்திக் காண்பிக் கும் பேர்வழி அல்லர் பாரதியார். அந்தந்த ரஸத்தின் சாயையை அல்லது மூர்ச்சைஸ்தானத்தை மட்டும் பாரதியார் காண்பிக்க மனங்கொள்ளார். அவைகளின் பூரண உருவத் தையும் தன்மையையும் வலிவுடனும் பொலிவுடனும் வரையக் கூடிய ஆற்றல் படைத்தவர் பாரதியார்.....அவர் சர்வதேசக் கவி; அதாவது உலக மகாகவி. இந்த ஸ்தானம் அவருடைய [illegible]க்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.''

இவ்வாறு மறைந்த பண்பட்ட எழுத்தாளர் வ.ரா. அவர்கள் குறிப்பிடுகின்றார்.[1] 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம். பொது ஜனங்கள் விரும்பும் பாட்டு இவற்றினையுடையகாவிய மொன்று இக்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்கும் புதிய உயிர் தருவோன் ஆகின்றான' எனப் பாஞ்சாலி சபத முகவுரையில் பாரதியாரே கூறுகின்றார். இக் கொள்கையை ஓர் இடத்தும் கைந்நெகிழவிடாது இவர் பாடலும் வசனமும் இயற்றியிருக் கிறார். இவ் எளிமையோடு நேர்மையும் இவர் தமிழிலே காணப்படுகின்றன.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்'

என்பது பாரதியார் கொள்கையாகும்.

தமிழ் மொழியின் பழைமையினைப் பாரதியார்,

'தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்த்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!'

என்று குறிப்பிட்டுள்ளார்.

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கொல்லாம்

---

1. திரு. வ. ரா., மகாகவி பாரதியார், ப.111—112.

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்'

என்பது பாரதியாரின் அடங்காத ஆவல்.

மேனாட்டுக் கவிஞர் மில்டன் மலையைக் காண்கிறார். அவருக்கு அம் மலையினை மேகம் தங்கும் இடமாகவே கருத முடிகின்றது.

'Mountanis on whose barren breast
The labouring clouds do often rest.'[1]

ஆனால் பாரதியார் அதே மலையைக் காண்கிறார். எவ்வாறு?

'காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களி யாட்டம்.'

பாரதியார் கையாளும் உவமை, நயம் நிறைந்தது.

'கண்ணிரண் டும் விற்றுச் சித்திரம் வாங்கிடில்
கைகொட்டிச் சிரியாரோ?'

என்ன அழகான உவமைச் சித்திரம் பாருங்கள்!

'தனியொருவனுக் குண வி லையெனில்
ஜகத்தினை ஆழித்திடுவேவ்ாம்'

என்ற அடி பாரதியாரின் மார்க்சியப் புரட்சியாகும்; அதே நேரத்தில் இலக்கியப் புரட்சியுமாகும்.

பராசக்தியைப் பரவிக் 'காணி நிலம்' வேண்டிய கவிஞர், 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்கிறார்.

'நிமிர்ந்தி நன்ஸட நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,

---

1. John Milton's Lallegro-Lines, 73-74

'திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'.

பாரதியார் கண்ட புதுமைப்பெண் இத்தன்மையவளே.

பாப்பாப் பாட்டில், பாரதியார் குழந்தையே ஆகிவிடு கின்றார்; வாழும் முறையினை எத்துணை எளியதாகக் கூறு கின்றார்!

'உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!''

கண்ணம்மா, காதலன் கண்ணனைத் துறந்து பிரி வாற்றாமல் வருந்துகிறாள். பாரதியார் பாட்டிலே சோகம் இழையோடுகிறது. ஒருவாறு ஆறுதலும் பெறுகிறாள் தலைவி.

'தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்து விட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வையமுழுதுமில்லை தோழி!'

பாரதியார் பாடலிலே, காலையிலே கதிரவன் 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கித்' தோன்றுகின்றான். மற்றும் நாட்டு மக்களுடைய ஒற்றுமை வாழ்வினை விளக்க அரியதொரு சித்திரமே தீட்டிவிடுகின்றார்.

'சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி வருவோம்'

'உள்ளத்தே உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்.'

என்ற அவருடைய வாக்கிற்கு அவரே இலக்கியமாய்த் திகழ் கிறார். வசனத்தை முதன் முதலில் கையாண்ட ஒருசிலரில்

பாரதியார் குறிப்பிடத்தக்கவர். இவர் பல நல்ல சிறுகதை களையும் எழுதியுள்ளார்.

'தழிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை;
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ!'

என்கிறார் கவியரசர் பாரதிதாசனார். பாரதியார் தம் கவிதை மூலம் என்றும் நம்மிடை வாழ்வார்.

தேசிகவிநாயகம் பிள்ளை

'தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுவதுமே தமிழ்மகன் தன்னுடன் வைத்துக்கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூஞ்செண்டு' என்று கவிமணியின் பாடலைப் புகழ்ந்து பேசுகிறார் ரசிகமணி டி. கே. சி.[1]

கவிமணியின் பாடலைப் பற்றிய புகழுரையைக் கண்டோம். கவிமணியின் உருவத்தைக் காண வேண்டாவா? நாமக்கல் கவிஞர் உரைக்கிறார், காண்போம்.

'துரும்பென பெலிந்த தேகம் துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பினும் வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவேகாட்டும் பாரெலாம் பரந்தநோககம்
கரும்பினும் இனிய சொற்கள் கவிமணி வடிவ மாகும்'.

கவிமணியின் முழு உருவமும் நம் மனக்கண்முன் வந்து நிற்கின்றதல்லவா?

'உள்ளத் துள்ளது கவிதை—இன்பது
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் -- உண்மை
தெரிந்துரைப்பது கவிதை'

இனி, கவிமணியின் பாடலைக் காண்போம்;

---

1. திரு. டி. கே. சி, கண்ணுரக் காண ஒரு கவிஞர், கவிமணி நினைவு மலர், ப. 18

என்னும் கவிதை இலக்கணம் அவருடைய பாடல்களிலேயே அமைவுற — அழகுற — அமைந்து கிடப்பது சிறப்புடைத் தன்றோ?

கவிமணியின் அற்புதப் படைப்பு 'ஆசிய ஜோதி'யாகும். அர்னால்டு எழுதிய 'லைட் ஆப் ஏசியா' (Light of Asia) என்ற கவிதையின் தழுவல் என்று இதனைப் படித்தவர் சொல்ல மனம் ஒப்பாத அளவுக்கு மொழியாக்கம் அமைந் துள்ளது; மகனை இழந்த தாய் ஒருத்தி வருந்துகிறாள். துன்பத்தைக் கொட்டுகிறாள்; துன்ப அலைகளின் மோதலைக் கவிதையில் வடிக்கிறார் கவிமணி :

'வாய்முத்தம் தாராமல் மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச் சிந்ததடு மாறுதையா!
.....
பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூ சூட்டிடம்மா
என்னும் மொழிகளினி எக்காலம் கேட்பனையா?'

* * *

'ஆழி சூழும் உலகாளும் அரசனாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும் நீ மறந்து வாழ
வேண்டுமடா

ஏழை யாகி எளியவரின் எளிய னாக வேண்டுமடா;
தோழ னாகி யாவர்க்கும் தொண்ட னாக வேண்டுமடா.'

என்ற கவிமணியின் பாடலைப் படிக்கும்போது, அது பாரசீகப் பாடலின் மொழிபெயர்ப்பு என்ற எண்ணமே நமக்கு எழுவதில்லை. நம் நாட்டுத் தாயுமானவரின் பாடலைப் படிப்பது போல, அப்பர் தேவாரத்தைப் படிப்பது போல, நம்மை மறந்து படித்து இன்ப அமைதி உறுகிறோம். எண்ணிப் பார்த்தால், கவிமணி பாரசீகப் பாடல்களை மொழிபெயர்த்தார் என்று சொல்வதைவிட, சிறந்த தமிழ்ப் பாடல்களில் திளைத்து வளர்ந்த அவருடைய கவிதை யுள்ளம் பாரசீகப் பாடல்கள் சிலவற்றைப் படித்தபோது

அவற்றில் ஒத்த கருத்துகளைக் கண்டு மலர்ந்தது என்று கூறலாம்.[1]

உமார்கய்யாம் பாரசீக மொழியில் பாடிய பாடலைப் 'பிட்ஸ்ஜிரால்ட்' என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதனைக் கவிமணி தமிழில் ஆக்கியுள்ளார். இரண்டனையும் கண்டால், கவிமணியின் கவிதைச் சிறப்புத் தெற்றெனப் புலப்படும்.

ஆங்கிலம்:

'Here with a loaf of bread beneath the bough
A flask of wine, a book of verse and Thou
Beside me singing in the wilderness
And wilderness is Paradise enow.'

தமிழ்:

:வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?'

இதனைச் சாதாரண மொழிபெயர்ப்பு என மனம் ஒருப் படவில்லை.

உமார்கய்யாம் பாடலில் அழகிய—கருத்தாழம் நிறைந்த பாடல் ஒன்று வருமாறு:

'எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்

---

1. டாக்டர் மு. வரதராசன், வாடாமலர், கவிமணி நினைவு மலர் ப, 36—37

வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?'

—உமார் கய்யாம் : 63

கவிமணியின் குழந்தைப் பாடல்களில், இனிய சந்தமும் எளிய பொருளமைப்பும் காணலாம்.

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி.'

பின்வரும் பாட்டில் பெண்ணின் பெருமையினைக் கூறுகிறார் :

'மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா.'

மேலும் கவிமணி அவர்கள்,

'அன்பினுக் காகவே வாழ்பவரார்—அன்பில்
ஆவியும் போகத் துணிபவரார்?
இன்ப உரைகள் தருபவரார்? வீட்டை
இன்னகை யால்ஒளி செய்பவரார்?'

என்று பெண்ணின் பெருவாழ்வினைப் படம்பிடித்துக் காட்டு கின்றார்.

'வாழ்க்கைத் தத்துவங்கள்' என்ற தலைப்பில் இவர் பாடியுள்ள பாடல்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறப் புடையனவாகும் :

'நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்;
சற்றும் இதற்கோர் ஐயமுண்டோ?'

'நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
நேயம் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை யுடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ?
'உள்ளந் தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர்மே டாகாதோ!
பாறை பொடியாய்ப் போகாதோ?
'சாதி சாதி என்றுநிதம்
சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி உடைப்பதொரு
மூடச் செயலென் றுணரீரோ!
'வாட்டும் உலகில் வழுத்தறிய
வாழ்க்கைத் துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
ஆக்கி வைப்ப தழகாமோ?
'கால நதியின் கதியதனில்
கடவுள் ஆணை காண்பீரேல்
ஞாலமீது சுகமெல்லாம்
நாளும் அடைந்து வாழ்வீரே'.

'கவிமணி, ஒரு முழுமணி; தமிழகம் தழைக்க வந்த தவமணி' என்று கூறுவதில் தடையுமுண்டோ?

பாரதிதாசன்

அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞர் பாரதிதாசன்,[1] பாரதிதாசனின் தமிழ்ப் பற்றுக்கு எல்லையில்லை. அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகிவிடுவான்[2]. பாரதிதாசனாருடன் பழகுவதன் மூலம் 'பாரதியைப் பார்க்கவில்லையே? அவருடன் பழகவில்லையே?' என்ற குறை எனக்கு நிவர்த்தி

1. புதுமைப்பித்தன். 2. டாக்டர், அ.சிதம்பரநாத செட்டியார்.

யாயிற்று.'[1] 'எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும். வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும். பாரதி தாசன் பாட்டும் இனிக்கும்.[2] பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு. பண்பும் உண்டு. பயனும் உண்டு.'[3] பாரதியார் சொல்லும் வீரத் தமிழ்ச் சொல் இன்பத்தைப் பாரதிதாசனின் பாடல்களிற் காண லாம்.'[4]

'விடுதலை எல்லாம் கிளர்ச்சியால் வெல்லும்
விடுதலை வேட்கை வெறிகொண்ட வீரன்.'[5]

'ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன்.'[6] 'பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஒரு உண்மையான கவி இருக்கிறார்.'[7] 'உலகெங்கும் உள்ள நவயுகக் கவிஞர்களிலே பாரதிதாசனும் ஒருவர்.'[8]

இவ்வாறு பல்வேறு கருத்துகளும் போக்குகளும் கொண்ட அறிஞர் பெருமக்கள் பலரும், பாரதிதாசனின் கவிதைகளைப் பாராட்டிப் பேசுகின்றனர்.

பாரதிதாசன் அவர்கள் 29-4-1891இல் புதுவையில் கனகசபை முதலியாரின் அருமை மகனாராய்ப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் கனக சுப்புரத்தினம் என்பது. இளமையிலேயே பிரெஞ்சு மொழியிலும், தாய் மொழியாம் தமிழிலும் நிறைந்த புலமை பெற்றுத் தமிழா சிரியராய் அரசினர் கல்லூரியில் பணியாற்றினார். இளமை நாள்களிலேயே சிறுசிறு பாடல்களை எழுதுவார். நண்பர் ஒருவரின் திருமணத்தில், விருந்துக்குப்பின் நம் கவிஞர், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். பாரதியார் அப் பாட்டைக் கேட்பதை நம் கவிஞர் அறியார். அப் பாடலே அவரைப்

---

1. கல்கி. 2. திரு. வி. க. 3. திரு. ரா. பி. சேதுப் பிள்ளை. 4. பரலி, சு. நெல்லையப்பர். 5. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை. 6. வ. ரா. 7. கு. ப. ரா. 8. தி. ஜ. ர.

பாரதியாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தது...'பாடு' என்று பாரதியார் சொல்ல, 'எங்கெங்குங் காணினும் சக்தியடா' என்று பதினாறு சீருள்ள இரண்டு அடிகளைப் பாடினார். அதன் அழகும் பொருளும் அவரைப் பாரதிதாசன் என்று தமிழ்நாட்டிற்கு உணர்த்தின...(இது) பாரதியாராலேயே 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த —கனக சுப்புரத்தினம் எழுதியது' என்றெழுதப்பட்டுச் சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பப்பட்டது...பாரதிதாசன் அவர்கள், அடிநாள்முதலே சாதி பேதத்தையும் சமய பேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும், விரிந்த அறிவும், கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர். பாரதிதாசன் அவர்கள் பாடிய அந்நாளைய கதர்ப்பாட்டு களைப்போல இதுவரை யாரும் பாடியதில்லை, அவரது 'சுப்பிரமணியர் துதியமுது' என்ற நூலில் உள்ள 'கீர்த்தனங் கள்' கீர்த்தனாசிரியர்கட்கும் வழிகாட்டும் சிறப்புடையன. பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை நிரம்பியவர். அவரது சிறு குறிப்பு முதல், கட்டுரை கவிதைகள் வரை, அனைத் திலும் கருத்து, உணர்ச்சி, நகைச்சுவை இவைகளைப் பரக்கக் காணலாம்.[1]

இயற்கையை வருணிப்பதிலே பாரதிதாசன் இணையற்ற கவிஞர். இவருடைய 'அழகின் சிரிப்பு' அனைவரும் பாராட்டிப் படிக்கும் நூலாகும். இயற்கையோடு நகைச் சுவையை இணைத்துப் பாடுகிறார்:

'கிளையினிற் பாம்புதொங்க விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக்
குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக் கீழுள்ள விழுதை
யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி உச்சிபோய்த் தன்வால்
பார்க்கும்.'

1. பாரதிதாசன் கவிதைகள்—ஆசிரியரைப் பற்றி ப. V&VI.

காதல் திருமணத்தையும், விதவைகள் மறுமணத்தை யும் ஆதரிக்கிறார் புரட்சிக் கவிஞர், பாடல்களில் வேகமும் விவேகமும் காணப்படுகின்றன:

'காதலிருவர்களும்—தம்
கருத்தொருமித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்?—இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?'

* * *

'வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

இளைஞர்களுக்கு ஏற்ற முறையில் நிலவை வருணிக்கும் பொழுது புதுப்பொருள் துலங்கப் புதுப் பார்வையோடு நிலவைக் காண்கிறார் கவிஞர்:

'முழுமை நிலா அழகுநிலா
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே!'

கவிஞரின் சீர்திருத்த உள்ளம்,

'சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கி நடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம் புதிதான ஒருலகம் செய்வோம்!'

என்னும் அடிகளில் பளிச்சிடுகின்றது.

மேலும் இவர் 'வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா?' என்று வினாக்குரல் எழுப்பி,

'ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ'

என்று விடையும் தருகின்றார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்!'

எனும் பாவேந்தர் பாரதிதாசன், 'கன்னற் சுவைதரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி' என்கிறார்.

இவர் எழுதிய 'பாண்டியன் பரிசு' ஒரு சிறந்த காவியம். காதலைப்பற்றியும், மகளிரைப்பற்றியும் சிறப்பாக எழுதுவதில் தேர்ந்த ஆற்றல் இவருக்குண்டு. இயற்கையோடு இயற்கையாக மனித வாழ்வின் ஏற்றத் தாழ்வினைச் சுட்டிக் காட்டிப் பாடல்கள் இயற்றிய புரட்சிக் கவிஞராய்ச் சமுதாயத்தில் விளங்குகிறார்.

'அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவோ நீதான்?
சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றிறை இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்திரித்த வண்ணம் தானோ!'

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்பது இவர் கருத்து. இதற்குப் பெண் கல்வி தேவை என முழங்குகிறார்:

'கல்வியில் லாத பெண்கள் களர்நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி; அங்கே
நல்லறிவுடைய மக்கள் விளைவது நவில வோநான்?'

இனி, பாரதிதாசன் தமிழ்ப் பற்றினைக் காண்போம்:

'நன்று தமிழ் வளர்க—தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க!—கலை
யாவும் தமிழ்மொழி யால்விளைந் தோங்குக!'

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'புரட்சிக்கவி' முதலிய பாடல்களும் அறிஞர் போற்றும் சிறப்புடையனவாம். பல திரைப்படங்களில் இவருடைய பாடல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவருடைய 'வாழ்க வாழ்கவே' என்ற நாட்டுப் பாடல் நாடறிந்த ஒன்றாகும். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்று இவர் முழங்குகிறார்.

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

சென்னை அரசாங்க அரசவைக் கவிஞராய் விளங்கியவர் இவர்.

'தமிழ னென்ற பெருமை யோடு
தலைநிமிர்ந்து நில்லடா
தரணி எங்கும் இணை யிலாஉன்
சரிதை கொண்டு செல்லடா'

என்று பெருமித உணர்வோடு பாடுகின்றார். மேலும் இவர்

'தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு'

என்று தம் பாடல்கள்மூலம் உணர்த்தினார். நாட்டு மக்களின் நெஞ்சங்களில் வாழும்வண்ணம் சில பாடல்களை எழுதியுள்ளார். 'தமிழன் இதயம்' 'சங்கொலி', 'அவனும் அவளும்' முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். விடுதலை வேட்கை கொண்டு கிளர்ந்தெழும் நெஞ்சத்திலிருந்து பிறந்ததே 'தமிழன் இதய'மாகும் 'அவனும் அவளும்'

ஓர் அழகிய காவியம். இவை தவிர, 'என் கதை' என்று இவருடைய சுய சரித்திரத்தையும், 'இலக்கிய இன்பம்' என்று கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றின் நயங்களையும் எழுதியுள்ளார். 'மலைக்கள்ளன்' என்ற அழகிய நவீனம் இவர் சிறையில் இருந்தபொழுது எழுதியதாகும். இவர் எழுதிய நூல்களிற் சிறந்து விளங்குவது 'அவனும் அவளும்' என்னும் காவியமாகும். அந்நூலில்,

'மான் என அவளைச் சொன்னால் மருளுதல் அவளுக்கில்லை
மீன்விழி உடையா ளென்றால் மீனிலே கருமை இல்லை;
தேன்மொழிக் குவமை சொன்னால் தெவிட்டுதல் தேனுக்
குண்டு;
கூன்பிறை நெற்றி என்றால் குறைமுகம் இருண்டு போகும்'

என்று கதைத் தலைவியின் அழகினைப் புனைகிறார்.

'தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப் பெருமை'

என்று இவர் பிற புலவர்களையும் பாராட்டிப் பேசுகின்றார்.

அண்மையில் மறைந்த இக் கவிஞரைக் காந்தி யுகத்தின் கவிஞர் என வழங்கலாம்.

இன்று தமிழிற் கவிஞர் பலர் பாடல்கள் எழுதிவருகின்றனர்; இசைப் பாடல்கள் இயற்றுகின்றனர்; நாட்கத்திற்குப் பாடல்கள் புனைந்து தருகின்றனர்; மக்களிடையே நல்ல வேகத்தினையும் செல்வாக்கினையும் பெற்றுள்ள திரைப்படத்திற்குப் பாடல்கள் இயற்றிவருகின்றனர். இவ்வாறு தமிழ்மொழி பலவற்றானும் இன்று இயல்துறையில் முன்னேறி வருகின்றது.

வாழும் கவிஞர்கள்

பாரதியார், கவிமணி, பாரதிதாசன், ச. து. சு. யோகியார், நாமக்கல் கவிஞர் போன்ற பெருங்கவிஞர்கள் மறைந்துவிட்டனர். அவர்கள் பொன்னுடல் மறையினும் புகழுடல் அவர்தம் கவிதைகளால் மாயாமல் இன்னும்

நம்மிடையே வாழ்ந்துவருகின்றது. 'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்றார் பாரதியார். அம்முறையில் தமிழ்க் கவிதை ஊற்று நில்லாமல் மேலும் மேலும் சுரந்துவருகின்றது. தெள்ளு தமிழில் தீஞ்சுவை கெழுமிய பாடல்களை இன்று வாழும் கவிஞர்கள் நமக்கு வடித்துத் தருகின்றனர். கொள்ளையின்பம் குலவும் கவிதை வழிக் காலங் காலமாக ஓடிக்கொண்டிருக்கும் தமிழ்ப் பேராற்றின் வெள்ளப்பெருக்கினை அற்றுவிடாமல் பார்த்து வருகின்ற—தம் இதயச் சோலையில் நித்தம் நித்தம் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களை நமக்கு அன்போடு, பண்போடு, உவகையோடு, உரிமையோடு படைத்து வருகின்ற இயற்றமிழ்வல்ல இன்தமிழ்க் கவிஞர் சிலரைக் காண்போம்.

சுவாமி சுத்தானந்த பாரதியார், புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் மோனத் தவமியற்றிவிட்டு, அடையாற்றில் வற்றாத கவிதைப் பணி ஆற்றினார். எண்ணற்ற கவிதைகளை இயற்றிய இவருடைய சிறந்த படைப்பு, 'பாரத சக்தி மகா காவியம்' என்பதாகும். 'யசோதரையும் சித்தார்த்தனும்' என்ற கவிதையில் வாழ்வின் நிலையாமையினையும், அதே நேரத்தில் உயிர்க்குலத்தின் தொடர்ந்த இயக்கத்தினையும் சிறப்புறப் பாடியுள்ளார்.

சித்தார்த்தன் :

'வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
வாழ்வை நம்பவோ—கண்ணே!
கோடி யுயிரைச் சாவு நாளும்
கொண்டு போகுதே!'

யசோதரை :

'உதிர்ந்த பூக்கள் உரம தாகும்
உதிர்க்கும் புதுமலர்—கண்ணா!
முதிர்ந்த கனிகள் வீழ்ந்து விதைகள்
முளைப்ப தியற்கையே'

'நாணல்' என்ற புனைபெயரில் ஆங்கிலமும் அருந் தமிழ்ப் புலமையும் கொண்டு கவிதைகள் புனைந்தவர் அ. சீனிவாச ராகவன் ஆவர். தத்துவக் கருத்துகள் இவர் பாடலில் இழையோடும். பாம்பும் பிடாரனும் என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவரது, 'வெள்ளைப் பறவை'...கவிதைத் தொகுதி சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது.

'ஜோதி' என்ற புனைபெயரில் மறைந்திருப்பவர் 'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியரும், டாக்டர் உ.வே.சா அவர்களின் மாணவருமான திரு. கி.வா. ஜகந்நாதன் ஆவர். இவர் பாடிய பாடல்கள் 'மேகமண்டலம்' என்ற நூலாக வெளிவந்துள்ளது. பெரும்பாலும் இவர் தெய்வங் களின் மேலேயே பாக்கள் புனைந்துவருகின்றார். 'கவிஞன் கர்வம்' என்ற கவிதையில் கற்பனையின் சிறப்பினைக் காணலாம்.

'கற்பனை யாம்ப ரிக்கே—ஒரு
கடிவாளம் என்பதிலை
வெற்பினில் ஏறிவரும்—அந்த
விண்ணி லும்பறக்கும்'

என்று கூறியுள்ளமை மகிழத்தக்க தொன்றாகும்.

'சோமு' என்று அன்போடு வழங்கப்படும் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள், அனைத்திந்திய வானொலித் துறையில் தமிழ் நிகழ்ச்சிகளின் தலைவராய் பணியாற்றி வந்தவர்; இவர் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றவர். ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் புலமை நிரம்பியவர். இவர் எழுதிய 'அக்கரைச் சீமையிலே' என்ற நூல் சாகித்திய அகாதெமியின் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றது. இவருடைய 'இளவேனில்' எனும் கவிதைத் தொகுப்பு நூல், சென்னை அரசாங்கப் பரிசு பெற்றுள்ளது.

'பூவில் நின்று சிரித்திடுவாள்—அவள்
பூங்கொடி தன்னில் ஆடிடுவாள்
காவில் வீசும் காற்றினிலே—இன்பக்
கண்ணிகள் பாடி உலவிடுவாள்'

என்று, கவிதை எனுமோர் பெண் தெய்வத்தினை—கவிஞர் பரவும் அருந்தெய்வத்தினைக்—கவிஞர் சோமுவும் பரவி நிற்கின்றார்.

திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள், தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராய் இருந்து நற்றமிழ்த் தொண்டு செய்தவர். இவர் கவிதைகள் 'தூரன் கவிதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. மனத் தத்துவம் இவர் கவிதைகளின் உயிர்த்துடிப்பாய் அமைந் துள்ளதனைக் காணலாம்.

படிப்போர் நெஞ்சில் பாங்குற நிலைத்து நிற்கும் இவருடைய நிலவுக் கற்பனை வருமாறு :

'காதலனைச் சந்திக்கக் கதிர்மறைவில் வந்தகன்னி
பாதைமுனை அவன் வரவைப் பார்த்தங்கு புதர்ச்செறிவில்
விளையாட்டாய்ப் போயொளிக்கும் வேளையிலே உளம்
பொங்கி
முனைகாட்டும் புன்சிரிப்பை மோன வெளிநிலத்தில்
வீசிவிட்டுச் சென்றதுபோல் விளங்குகின்ற நிலாப்பிஞ்சே.'

தூரன் சிறுவர்களுக்கான கவிதைகள் எழுதித் தமிழ் நாடு அரசின் பரிசு பெற்றுள்ளார்.

புலவர் குழந்தை இந்த நூற்றாண்டின் பெரும் காவிய மான 'இராவண காவியம்' வழங்கியவர். இராமாயணக் காவியத்தில் மனம் பறிகொடுத்த சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை போன்ற இராம பக்தியுள்ள பேராசிரியர் களாலும் புகழப்பெற்ற காவியம், 'இராவண காவியம்.' இதில் புலவர் இயற்றிய கவிதைகள் கம்பன் கவிதைகள் போலக் கற்றாரின் இதயத்தைக் களிப்புறச் செய்பவை.

காங்கிரஸ் ஆட்சியில் தடைசெய்யப்பட்ட இக் காவியம் தி.மு.க. ஆட்சியில் தடை நீங்கப்பெற்றுத் தமிழரிடை பவனி வந்தது. பல்கலைக் கழகப் பாடநூலிலும் இன்று இராவண காவியம் இடம் பெற்றுள்ளது. புலவர் குழந்தை யின் கவியாற்றலை, காவியத்தின் பாயிரமாகிய தமிழ்த் தாய் வாழ்த்திலேயே காணலாம். தமிழின் இனிமையைக் குழந்தையின் தீங்கவிதை விளக்குவதைக் காண்க.

'இனித்த பாலினும் தேனினும் இன்சுவைக்
கனித்தொ கையினும் கட்டிக் கரும்பினும்
நினைத்த வாயும்சொல் நெஞ்சும் இனித்திடும்
தனித் தமிழ்ப்பெரும் தாயினைப் போற்றுவாம்.'

புலவர் குழந்தை இக் காவியம் தவிர 'காமஞ்சரி' என்னும் கவிதை நாடகத்தையும், 'குழந்தைப் பாடல்கள்' என்னும் கவிதைத் தொகுதியையும், 'கொங்கு நாடு' முதலான உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

கவிஞர் கம்பதாசனின் இயற்பெயர் ராஜப்பா என்ப தாகும். 'அருணோதயம்' என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியரான இவர் ஏழை படும் பாட்டினைத் தம் கவிதை களில் புலப்படுத்துதலில் வல்லவர். பிச்சைக்காரன் பாடுவ தாக இவர் பாடியுள்ள பாடலில் அவலம் ஓலமிடுவதனைக் காணலாம்.

'நதியிளைப் பாற ஆழியுண்டு—கொடும்
நஞ்சிளைப் பாற மருந்து முண்டு
கதிரிளைப் பாற இரவுமுண்டு—எங்கள்
கவலை இளைப்பாற உண்டோ இடம்?'

கவிஞர் வாணிதாசன் புதுவையில் வாழ்ந்தவராவர். தமிழிலும் பிரெஞ்சிலும் புலமை பெற்ற இவருடைய இயற் பெயர் 'எதிராஜ்' என்பதாகும். பாரதிதாசன் அவர்களை நன்கு அறிந்த இவர், அவரைப் போலவே சமுதாயச் சீர் திருத்தத்தில் ஆர்வம் கொண்டவர். 'கொடிமுல்லை',

'தமிழச்சி', 'தொடுவானம்', 'எழிலோவியம்' முதலிய நூல்கள் இவர்தம் படைப்புகளாகும். 'சேரி' என்ற கவிதையில்,

'இடுவெயில் போல் உழைக்கும்
சேரிவாழ் ஏழை மக்கள்.
கொடுவெயில் குளிர்ம ழைக்குக்
குந்திடக் குடிசை யுண்டோ?'

என்று ஏழை மக்களின் வாழ்வினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அன்பின் மாட்சியினை இவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'அன்பு வளர்ந்தால் அலைகடல்சூழ் நம்நாட்டில்
துன்பம் இல்லை! தொழிலாளி செல்வனென்ற
வம்பில்லை! தாழ்வுயர்வுச் சாதி மலிவதில்லை!'

காதலியின் உயர்வினைப் பின்வருமாறு சிறக்கப் புகன்றுள்ளார் கவிஞர்:

'நாள்விளக்க வருகின்ற வைகறையைப் போல
நலம் விளக்க வந்தவளே! விடிகாலை வானே!'

கொள்ளை எழில் குலவும் குழந்தையின் இன்பத்தினைப் பாடிப் பாடிக் களிக்கிறார் கவிஞர் :

'ஒடைப் புதுமலர்த் தாமரை நீ;
ஓவியன் தீட்டாத சித்திரம் நீ!
கோடைக் குளிர் தென்றல்!
கொத்து மலர் முல்லை!
கொஞ்சும் கிளிப்பிள்ளை நீ குழந்தாய்!'

அண்மையில் 'சிரித்த நுணா', 'இரவு வரவில்லை', 'பாட்டுப் பிறக்குமடா' முதலிய இவர் கவிதைத் தொகுதி

கள் வெளிவந்துள்ளன. இவரது 'எழில் விருத்தம்' தனிச் சிறப்புப் பெற்ற நூல். இதில் விருத்தப்பா வகைகளின் இலக்கணத்தைப் புலப்படுத்தி அவற்றிற்கு இலக்கியமும் அமைத்துள்ளார்.

பாரதிதாசனின் பரம்பரையில் தோன்றிக் 'கவியரசர்' என்னும் சிறப்பு விருது பெருமளவு கவித்தொண்டாற்றியவர் கவிஞர் முடியரசன். தமிழாசிரியர் பணியோடே தமிழ்த் தாய்க்கும் தொண்டாற்றுகிறார். கவியரங்கங்களில் கலந்து கொண்டு சிறப்புப் பெற்றார். இவருடைய பாடல்கள் 'முடியரசன் கவிதைகள்' என்னும் நூலாக வெளிவந்துள்ளன. கவிதைக்காக இவர் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளார். தமிழர்கள் விழாக்களில், செயல்களில் தமிழில்லையே என்று கவிஞர் முடியரசன் ஏங்குவதைப் பாட்டிலே தீட்டிக் காட்டு கிறார்.

'மணவினையில் தமிழுண்டா? பயின்றார் தம்முள்
வாய்ப் பேச்சில் தமிழுண்டா? மாண்ட பின்னர்
பிணவினையில் தமிழுண்டா? ஆவ ணத்தில்
பிழையோடு தமிழுண்டு; கோயில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு; தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவார்; அந்தோ! அந்தோ!
அணுவளவும் மொழியுணர்ச்சி யில்லா நாட்டில்
ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வ தெங்கே?'

'சுரதா' என்ற பெயர் சுப்புரத்தின தாசன் என்பதன் சுருக்கமாகும். இவர்தம் இயற்பெயர் இராசகோபாலன். பிறந்தஊர் நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள பழையனூர். பிறந்த ஆண்டு 1921. சீகாழி அருணாசல தேசிகர், மெய்யக் கோனார் முதலியோரிடம் யாப்பிலக்கணம் பயின்றவர் இவர். 'வழுவாத ஒழுக்கமும், வன்மையான தன்னம்பிக்கை யும், சிறந்த நூலறிவும் கொண்ட இவருக்கு, மிகவும் பிடித்தது இலக்கியம் சார்ந்த பேச்சும், பழைய நூல்களைத் தேடித் தேடி வாங்கிச் சேர்ப்பதும் ஆகும்.' சிந்தனையும்

எழுத்து வன்மையும் கொண்ட இவர், 'உவமைக் கவிஞர்' என்றும் சிறப்போடு வழங்கப்படுகிறார். வாழும் கவிஞர் களில் புது வழிகாட்டிச் சிறப்பிடம் பெறும் கவிஞர் இவர்.

'தேன் மழை' என்ற கவிதைத் தொகுதியில் இவர் தம் முழுக் கற்பனை வளத்தையும் கண்டு செவியும் சிந்தையும் குளிரலாம். சான்றிற்கு ஒன்று:

'ஓடிக்கொண் டேயிருந்த நதியை நோக்கி
ஓடிக்கொண் டேயிருந்தாள் வாடிக் கொண்டே!
வாடிக்கொண் டேயிருந்தாள்! சூறைக் காற்றின்
வசப்பட்ட கப்பலைப் போல் ஆடிக் கொண்டே!
ஆடிக்கொண் டேயிருந்தாள் அழகி, ஆற்றின்
அடிநீரில் மறைந்தவனைத் தேடிக்கொண்டே!
தேடிக்கொண் டேயிருந்தாள் ஆதிமந்தி
சிந்தாத கண்ணீரைச் சிந்திக்கொண்டே!'

கவிஞர் கண்ணதாசன் நாடு நன்கறிந்த புகழ்க் கவிஞர்: இயற்றமிழ்க் கவிஞர். இயற்றமிழ்க் கவிஞர் என்ற முறையில் பெரிதும் சிறப்பிடம் பெற்ற கவிஞர் இவர். முத்தையா என்பது இவர்தம் இயற்பெயராகும். 1944-ல் ஏப்பிரல் திங்களில் இவர் கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தார். கண்ணதாசன் கவிதைகளில் கற்பனை நயமும், கவிதை யாற்றலும் மிளிரும். இவர் கவிதைகள், 'கண்ணதாசன் கவிதைகள்' என்ற பெயரில் பல தொகுதிகளாக வெளியாகி யுள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி—ஆதிமந்தி முதலிய சிறு காப்பியங்களை எழுதியுள்ளார். அரிய கருத்து,

'மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல்கூடச் சில நாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?'

என்ற பாடலில் அமைந்துள்ளது.

'காலை குளித்தெழுந்து
கருஞ்சாந்துப் பொட்டுமிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார்கூந்தல் பின்ன லிட்டுக்
காத்திருந்தேன் உம்வரவைக்
கடைக்கண்ணால் பார்த்திருந்தேன்.'

என்று தொடங்கும் பாடல், இவர்தம் முதற் கவிதையாகும்.

'போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்;
ஏற்றதொரு கருத்தைஎன துஉள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்? எவர் வரினும் நில்லேன்
அஞ்சேன்'

என்பது கவிஞரின் இலட்சியக் குரலாகும்.

இவர் திரைப்படங்களுக்காக எழுதிய பாடல்கள் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டவை. திரைப் பாடலுக்கு இலக்கிய மதிப்பை இவர் பெற்றுத் தந்தார். இவர்தம் திரைப் பாடல்கள், 'திரை இசைப் பாடல்கள்' எனும் தலைப்பில் இரண்டு பெரும் தொகுதிகளாக வந்துள்ளன. இது வேறு திரைக் கவிஞர்கள் பெறாத பெரும் பேறு. 'கவியரசு' எனப் போற்றப்பட்ட கண்ணதாசன், அமெரிக்கா சென்றபோது அங்கே 17-10-81 இல் அமரரானார்.

பொதுவுடைமைத் தத்துவத்தில் பூத்த கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் அவர்கள்.

'கவிதை எனக்கொரு கைவாள்—மார்பில்
கவசம் எனக்கொரு வாய்மை
புவியில தீமைகள் வீழ—நான்
போர்செய்யும் ஓர் படை வீரன்'

என முழங்கும் இவர், நாட்டுப்புறக் காதலைப் பின்வருமாறு நயமுற நவின்றுள்ளார் :

'பாத்தி பிடிக்கிற நாளையிலே—என்னைப்
பார்த்துச் சிரிச்சிட்ட வேளையிலே
அன்பென்னும் நாற்றைஎன் நெஞ்சில்நட்டு –அதில்
ஆசைத்தண் ணீரையும் ஊற்றிவிட்டாய்'

கவிஞர் சாலை இளந்திரையனின் இயற்பெயர் மகாலிங்கம் என்பதாகும். தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றிய இவர், 'இளந்திரையன் கவிதைகள்' 'அன்னை நீ ஆடவேண்டும்' எனும் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். கற்றுத் துறைபோய இக் கவிஞர், புரட்சியுள்ளமும், புதுமை நோக்கமும், சீர்திருத்த எண்ணமும், கொண்டவர். தத்துவ விசாரணையும் இவர் பாட்டில் தப்பாது இடம் பெறும். இதனை,

'ஆரூரர் இங்கிருக்க அங்கே திருநாளென்று
ஊரூராய்ச் சென்றலையும் ஊமர்போல்—நாமும்நாம்'

என்ற பாடற்பகுதியால் உணரலாம். மனிதனை விளித்து எழுச்சியுடன் கவிஞர் பாடுவதைப் பின்வரும் அடிகளில் காண்க.

'காட்டை அழித்தவன் நீயடா—கடுங்
கல்லும் புதர்களும் எறிய
மேட்டை இடித்து வீழ்த்திய—வளம்
வேண்டிய செய்தவன் நீயடா!
நாட்டை அமைத்தவன் நீயடா!—கொலை
நாசம் விளைத்த விலங்கினைச்
சாட்டை சொடுக்கி அடக்கியே—பழஞ்
சந்தடி தீர்த்தவன் நீயடா!'

கவிஞர் தமிழழகன் சந்தவின்பம் நிறைந்த கவிதை படைப்பதில் சமர்த்தர். அதனால் 'சந்தக் கவிமணி' எனும் பட்டமும் பெற்றுள்ளார். உணர்ச்சியும் கற்பனையும் வளமுற அமைந்த இவருடைய கவிதைகளில் உள்ளத்தைக் கவரும் ஒலிநயம் அமைந்திருத்தலைக் காணலாம்.

'கங்குல் இருளின்
கதவைத் திறந்தொரு
கன்னி யெழுந்தாச்சு! காலைப்
பொன்னி வளர்ந்தாச்சு!'

இவர் பாடல்கள் 'தமிழழகன் கவிதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

திரைப்படப் பாடல்களில் கவிதைச் சுவையையும் கருத் தாழத்தினையும் பெய்த மற்றொரு கவிஞர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள்.

'செய்யும் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி—கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி'

என்னும் அடிகளில் செறிவான சிந்தனைக்குரிய கருத்தும்,

'மாடா ஒழைச்சவன் வாழ்க்கையிலே—பசி
வந்திடக் காரணம் என்ன மச்சான்?
'தேடிய செல்வங்கள் வேறே இடத்திலே
சேருவதி னால்வரும் தொல்லையடி!'

என்ற அடிகளில் சமதருமக் கருத்துகளும் விரவி நிற்பதனைக் காணலாம்.

கவிஞர் கோமுகி வேலன் இலக்கியச் செவ்வியும் வளமார் கவிதை நலமும் கெழுமியவர். பழமைப் பாங்கும் புதுமைப் போக்கும் நிறைந்த அற்புதமான கவிதைகளை இவர் படைக்கிறார். சான்றிற்கு ஒரு பாடல் :

·செஞ்சாலி தலை சாய்க்கும்; மஞ்சள் இஞ்சிச்
செழுங்கிழங்கு நிலம்பிளக்கும் கழுகம் சாலை
அஞ்சாறு செம்பவளம் உதிர்க்கும்; தென்னை
அணி அணியாய்ச் செவ்விளநீர் அழகு காட்டும்:

பைஞ்சோலை பாட்டிசைக்கும், வாழைப் பந்திப்
பசுங்குலைகள் செம்பொன்னாய்ப் பழுத்துத் தூங்கும்
எஞ்சாது தைப்பொங்கல் வருக என்றே
இன்பூறும் செங்கரும்பைப் பாராய் பெண்ணே!

கவிஞர் என். எஸ். சிதம்பரம், இசை மரபு உணர்ந்த கவிஞர். இசைப் பாடல்கள் பல இவர்தம் படைப்புகளாகும். இவருடைய கவிதைகளில் சொற்கள் இயற்கையாக இணைந்து பொருளோடு செறிந்து இனிய உருவம் பெற்றுக் கருத்தில் ஒளியும் இன்பமும் ஊட்டும்படி அமைந்துள்ளன. 'இதயக் கோயில்' என்ற இவர்தம் கவிதைத் தொகுப்பு தெய்வ நலங்கெழுமிய அருட்பாடல்களின் தொகுப்பாகும்.

'இதயம் பதும பீடம் — அதனில்
இறையாம் சுடரைக் காணில்
உதயமாகும் ஞானம்! — அதனில்
ஒலிக்கும் தேவ கானம்'

என்னும் பாடல், தெய்வத்தைத் திருமுன்னர்க் கொணர்வ தன்றோ? 'இசைக் கனிகள்', 'பாடும் கீதம் கேட்குது!', 'தமிழைப் பாடல்கள்', 'ஆத்மாஞ்சலி' முதலிய பல பாடல் தொகுதிகள் இவர்தம் அரிய படைப்புகளாகும். அமைதி தவழும் அருட் பாடல்கள் இவர்தம் கவிதைகள் எனலாம்.

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு, பேச்சுத் தமிழிலேயே எளிய சந்தங்களில் பாட்டுப் பாட வல்லவர். சான்றாக,

'பெரிய மனுஷன் புளுகினாக்க பேப்பரிலே போடுறான்;
சின்ன மனுஷன் புளுகினாக்க செயிலுக்குள்ளே போடுறான்;
கன்னக்கோலு களவடிச்சா கட்டி வச்சு வாங்குருன்;
கள்ளச் சந்தை காரங்கிட்டே கையால் பிச்சை வாங்குறான்'

என்ற பாடல் அடிகளைக் காட்டலாம். 'காந்தி மகான் கதை' இவருடைய அருமையான கவிதைப் படைப்பாகும்.

கவிஞர் திரிலோக சீதாராம், பொங்கல் நன்னாளில் கீழ்த்திசையில் கதிரவன் ஒளி பரப்புவதைப் பாடியுள்ளார்.

'வெள்ளென்று கீழ்வானம் வெளிர ஒளியுலகுப்
புள்ளரையன் கோயில் புதுக்கோலம் கண்டிலிரோ?
துள்ளும் இரவின் துடுக்கடக்கி, தொல்புவியின்
கள்ளங் கரையக் கடுகிவரும் தேர்க்காலின்
வெள்ளம் சுழன்றெழுங்கால் வீசி விசும்பேறிப்
பள்ள மடைதிறந்தே பாயும் கருணையொளி'

என்று தம் 'பாமாலைத் தொகுப்பில்' கதிரவனின் கவி னொளியை—இந்நிலவுலகின் கள்ளத்தைக் கரைக்கும் அறிவு ஒளியைக் காண்கின்றார்.

எஸ். கந்தசாமி என்ற இயற்பெயர் கொண்ட துறைவன், இந்திய வானொலித் துறையில் பணியாற்றித் தேனென இனிக்கும் கவிதைகள் தந்து சிறப்புற்றவராவர்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் அரிய படைப்பு 'மலரும் உள்ளம்' என்பதாகும். குழந்தைக் கவிதையுலகில் தனியாட்சி செலுத்தும் இவர்,

'ஏடு தூக்கி இன்று பள்ளி செல்லும் செல்வரே
நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்'

என்று கூறுகிறார். இவர் பாடலைப் படிக்காத தமிழ்க் குழந்தையே இல்லை எனச் சொல்வது மிகையன்று.

குழந்தை இலக்கியத் துறையில் சிறப்பிடம் பெறுபவர் கவிஞர் பூவண்ணன். குழந்தை இலக்கியத்துக்காகவே மத்திய மாநில அரசுகளிடமிருந்து பதின்மூன்று பரிசுகள் பெற்றுள்ளார். இவருடைய குழந்தைக் கவிதைகளின் தொகுதியான 'பாட்டுத் தோட்டம்' பரிசு பெற்றதே. இந்திய ஒருமைப்பாட்டைவற்புறுத்தும் 'இந்தியரே' என்னும் பாடல் கருத்து வளமும் கவிதை நலமும் சிறந்த பாடல்.

எத்தனை பட்டைகள் வயிரத்தில்
எனினும் சாதிகள் இந்நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!
எத்தனை ஆறுகள் கடல் வயிற்றில்
எனினும் பெருங்கடலே!
எத்தனை மதங்கள் இந்நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே!
எத்தனை விழுதுகள் ஆலினிலே,
எனினும் ஆலும் ஒரு மரமே!
எத்தனை மொழிகள் இந்நாட்டில்
எனினும் இந்தியர் இந்தியரே.'

தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமானவர் கவிஞர் தணிகை உலகநாதன். வாழ்த்து, வரவேற்பு, பாராட்டு, இரங்கல் முதலிய பல துறைகள் குறித்துக் கணக்கற்ற கவிதைகளை எழுதிக் குவிக்கும் இவர், சென்னை மாணவர் மன்றக் கவிஞராய் விளங்குகிறார். இவரது 'குருவிக்குடில்' தமிழ்நாட்டு இளஞ்செல்வங்களை உருவாக்குகின்றது. நாடகம், கதை, கவிதை முதலிய துறைகளில் பல நூல்களை எழுதியிருக்கும் இவரது கவிதை நூல், 'பாடும் பாப்பா' என்பதாகும். இந்நூலில் எண்ண எண்ண இனிக்கும் வண்ணத் தமிழ்க் கவிதைகளை வளமாகக் காணலாம். வானொலி மூலமும் கல்வித் தொண்டாற்றும் இவர், தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்குக் கூறும் ஊக்க உரை அடியில் வருமாறு :

'இன்று சிறுவர் தாமே நம்மால்
என்ன செய்யமுடியும்?
என்று நீங்கள் எண்ணவேண்டா
எதுவும் முடியும் உம்மால்.'

சொல்லாட்சியும் பண்ணலமும் கெழுமிய பாடல்கள் புனைவதில் 'குயிலன்' வல்லவர்.

கவிஞர் முடியரசன் சிறந்த கவிஞர் ஆவர். இவர் பாடல்கள் 'முடியரசன் கவிதைகள்' என வெளிவந்துள்ளன. 'பூங்கொடி' என்பது இவரியற்றிய காப்பிய நூலாகும். 'பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில் புரிகின்ற முழு மதியே' என்று கவிஞர் நிலவினை நோக்கிப் பாடுகிறார். இயற்கைத் தாயினைக் கவிஞர்,

'தென்றலெனும் தொட்டிலிலே எனைக் கிடத்தித்
தேன்றுகர மலர்கள் தோறும்
சென்றிருந்த தமிழ்பாடும் வண்டொலியால்
செவிகுளிரத் தாலோ தாலோ
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள்
எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி'.

என்று கவினுறப் பாடியுள்ளார்.

இளங் கவிஞரும், சொற்பொழிவாளரும், எழுத்தாளருமான வேழவேந்தன் கவிதைகள், 'வேழவேந்தன் கவிதைகள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. 'நெடிய சிந்தனைக்குப் பின்னால், நெஞ்சின் அடித்தளத்திலிருந்து பீறிட்டெழுந்து, முடுகிப் பாய்ந்து ஓடிவருவதே கவிதை' என்றும், 'உணர்வலைகள் உடலின் ஒவ்வொரு நரம்பணுவிலும் பாய்ந்து, உள்ளத்திலே ஒருவகைக் கொதிப்பை ஏற்படுத்தும் போது மின்னலிடுகிறது' கவிதை என்றும் கவிஞரே தம் முன்னுரையாம் 'சோலை முகப்பில்' குறிப்பிட்டுள்ளார். இக் கூற்றின் உண்மைகளை இவர்தம் கவிதைகளில் சிறக்கக் காணலாம். இவர்தம் கவிதையின் பெற்றி குறித்து நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'கவிஞர் வேழவேந்தனின் கவிதைகளில் அரிய அழகிய இனிய எளிய தமிழ்ச் சொற்கள் தங்குதடையின்றி அருவியை

வீழ்ச்சிபென ஓசையெழுப்பிப் பாய்ந்து வீழ்ந்து, பட்டுத் தெறித்து விரைந்து ஓடுகின்றன.'

இவர் கவிதைகளில் நாட்டு விடுதலை—மொழி வளர்ச்சி பகுத்தறிவு நெறி—சமூகச் சீர்திருத்தம்—இயற்கை யழகு—காதல்—வீரம்—கடமை பொழுது போக்குப் போன்ற பல திறப்பட்ட பொருள்கள், கற்பனைத் திறனால் பொலிவும் வலிவும் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுத் திகழ்கின்றன. கவிதைகளில் உவமை நயமும், சொல்லழகும் பொருட் செறிவும் கற்பனையோட்டமும் நெடுக நன்கு மிளிர்கின்றன.

'உரித்த ஆரஞ்சுபோல் உலகம் முகிழ்த்தது'

'பிய்த்த வடைபோன்று நிலவோன்'

'மலைப்பெண்ணாள் முத்தாரம் அருவி,
'குலையறுதத வாழையைப் போல் நீர்பெருக்கி'

'உரித்த முந்திரி உருவில் நடந்த முழுநிலவு'

முதலிய கவிதைத் தொடர்களின் உவமை நயத்தின் சிறப் பினைக் காணலாம்.

பேரறிஞர் அண்ணாவைக் கவிஞர் நாவார வருணிக்கும் நயத்தினை,

'நெற்றியில் அறிவைத் தேக்கி
நெஞ்சத்தில் வீரம் தேக்கி
வற்றாத நாவில் நாளும்
வளமூறும் கருத்தைத் தேக்கிச்
சுற்றாமல் சுற்றும் கண்ணில்
துடிப்பினைத் தேக்கி, மண்ணில்
கற்றவர் திகைக்கும் வண்ணம்
காண்பவர் ஒருவர் அண்ணா!'

என்ற பாடலில் புலப்படுத்தியுள்ளார்.

வளர்ந்துவரும் மற்றோர் இளங் கவிஞர் வல்லம் வேங்கடபதி ஆவர். காதலின் சிறப்பினை இக் கவிஞர் பின் வருமாறு வகுத்துக் காட்டுகின்றார் :

கண்கள் கிறங்க வருகின்றாள்
காதல் மயக்கம் தருகின்றாள்
எல்லாம் அவளாய்த் தெரிகின்றாள்
எங்கும் அவளே நிறைகின்றாள்
பொல்லா உலகில் அவள் என்மேல்
பொங்கும் அள்பைப் பொழிகின்றாள்.'

இக் கவிதையில் 'காண்பவையெல்லாம் அவளே போறல்' என்ற பழைய மரபு பின்பற்றப்பட்டிருப்பதனைக் காண லாம். 'நாமே உலகம்' என்ற கவிதையில் கவிஞர் நம்மை யெல்லாம் அறம் காணும் முயற்சிக்கு அடிகோலவேண்டும் என்று அழைக்கின்றார்.

'கவலையெனும் சுடுகாட்டில் உலக மக்கள்
கணந்தோறும் வேகின்றார்; சாகின்றார்கள்'
கவலையினால் ஆவதிங்கே ஒன்று மில்லை
கவலையினை விட்டொழிக்கக் கற்றுக் கொள்வோம்
துவண்டுவிழும் மனப்பாங்கைத் துடைத் தொழிப்போம்
துணிச்சலொடு வீரநடை பழகிக் கொள்வோம்
நவநவமாய்ப் புதுஉலகைப் படைப்போம் வாவா
நாமின்றேல் உலகில்லை; உயிர்கள் இல்லை.'

கவிதைச் சோலையில் சிறகடித்து வானம்பாடிகளாகப் பறந்துவரும் கவிஞர்கள் பலர் இன்று தமிழ் இலக்கியச் சோலையில் நித்தநித்தம், புத்தம்புதுப் பண்ணிசையில் பாட்டிசைத்து தருகின்றனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், மின்னூர் சீனிவாசன், தமிழோவியன், மு. பி. பாலசுப்பிரமணியன், தமிழ்முடி, பல்லடம் மாணிக்கம், சின்னூர் இளங்கோவன், கோவை இளஞ்சேரன், இளம்பரிதி, எழில் முதல்வன், இளந்தேவன், பெருங்கவிக்கோ, மா. செல்வராசன், பொன்

னடியான், கலைவாணன், திருமதி சௌந்தரா கைலாசம், ஜீவாலா ஜயராம், சீதா என்பவர் ஆவர்.

'கவியரங்கக் கவிஞர்கள்' என்று, கலைஞர் கவிஞர் கருணாநிதி தலைமையில் ஒரு கவிஞர் படையே உளது. முருகுசுந்தரம், ஈரோடு தமிழன்பன், மீ. இராஜேந்திரன், அப்துல் ரகுமான், பொன்னி வளவன், தமிழண்ணல், முத்துலிங்கம், கருணானந்தம் முதலான கவிஞர் பலர் வேகமும், விறுவிறுப்பும் சுவையும் சிந்தனைச் செறிவும் நிறைந்த கவிதைகளை வடித்துத் தந்து மக்களின் ஒரு முகமான பாராட்டுதல்களைப் பெற்று வருகிறார்கள்.

சுருங்கச் சொன்னால் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள், புதிய வடிவிலும் பொருளிலும் நடைபோடுகின்றன எனக் கூறலாம்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் கவிதை, உணர்ச்சிச் செறிவும் கருத்தாழமும் நிறைந்ததாகும். எடுத்துக்காட்டு வருமாறு :

'பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்
பொறைகொண்டார் பொறுத்திருந்து நிலமாள்வார்
இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு
அதனைப் பொறையென்று சொல்லாதீர்
தரைமீது அப்பறவை கற்ற சூழ்ச்சி

கண் அடக்கம் இமைக்கதவில்
நா அடக்கம் வாய்ச்சிறையில்
மூச்சடக்கம் காற்றினிலே
மெய் அடக்கம் கல்லறையில்—நல்ல
மன அடக்கம் அறிவொளியில்.

காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும்—இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்.

ஈரோடு தமிழன்பன்

திறம் வாய்ந்த இளங்கவிஞர்களில் ஒருவர் ஈரோடு தமிழன்பன். 'பாடசாலை போக வேண்டும்— பாப்பா எழுந்திரு!...செல்லப் பாப்பா எழுந்திரு' என்னும் பாட்டல், வானொலி, தொலைக்காட்சிமூலம் எல்லார்க்கும் அறிமுக மானது.

நெருப்பு, தானே பேசுவதாக வரும் கவிதை உவமைச் சிறப்புமிக்கது.

'அஞ்சுபொருள் தனில் நான்தான் மற்றோர் கண்டே
அஞ்சுபொருள்! ஆண்மைகொண்ட நான்சி னந்தால்
எஞ்சுபொருள் எதுவுண்டு? நாக்கால் முத்த ம்
இடும்போதில் எப்பொருளும் என்னுள் ஒன்றும்.

தமிழன்பன் இலக்கணம் வல்ல பேராசிரியர். அதனால் தமிழ், 'நெஞ்சம் மானம் போக்கும் சிறு செயலை நினைக் காது' என்பதற்கு இலக்கணத்திலிருந்தே இரண்டு உண்மை களை எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

வினைச் சொல்போய் வேற்றுமையை ஏற்ப தில்லை!
வெண்பாப் போய்ப் பிறதளையை மணப்ப தில்லை!
நினைவுயர்ந்த தமிழ் நெஞ்சந் தனது மானம்
நீக்கவருஞ் சிறுசெயலை நினைப்ப தில்லை!

அப்துல் ரகுமான்

'பருப்பில்லாமல் கல்யாணமா'? என்பது பழமொழி. 'அப்துல் குயில் இல்லாமல் கவியரங்கமா?' என்பது புதுமொழி. அந்த அளவு கவியரங்கங்களில் கலந்துகொண்டு சொற்சுவை, பொருட்சுவையோடு நகைச்சுவையும் பொருந்தப் பாடுபவர் அப்துல் ரகுமான். அவர் உறுதி பற்றியும் தலைவர் பிறந்தநாள் வாழ்த்தையும் இங்குக் காண்போம்.

(உறுதி பற்றி)

பிறப்பதும் பின்னர் பிழைப்பதும் உறுதியால்தான்
சிறப்புகள், செயல்கள் விந்தைச் சிந்தனைச் சாதனைகள்
பொறிப்பதும் புகழால் வாழ்க்கை புரிவதும்
உறுதியால்தான்
இறப்பதோ உறுதி தன்னை இவ்வுடல் இழப்பதால்தான்.

(தலைவர் பிறந்தநாள் வாழ்த்து)

திங்கள் பிறப்பினுக்கே—இருள்
தேசங்கள் வாழ்த்துரைக்கும்
கங்குல் பிறப்பினுக்கோ—இளங்
காதலர் வாழ்த்துரைப்பர்!
மங்குல் பிறப்பினுக்கோ—பயிர்
வயல்கள் புகழுரைக்கும்
உங்கள் பிறப்பினுக்கோ—தமிழ்
உலகமே வாழ்த்துரைக்கும்.'

தி. கு. நடராசன்

வாழ்க்கைக்கு வள்ளுவர்: 'காதலி'

'இப்படியும் அப்படியும் எப்படியும் வாய்த்தபடி
செப்படி வித்தைப்படி சிறந்தபடி தரைமீதில்
தரமுடியா தப்படி தந்தபடி குறளாகும்!
ஒரு நூலில் இரண்டடி உருவாக்கி மூன்று
கருப்பொருளால் நான்காம் வீட்டைக் காட்டி
ஐந்தால் ஆன அகிலத் தினாறே அறமென்று
எந்தமதமும் சம்மதிக்கும் எழுசீர்ப் பாடலுக்குள்
வாய்ப்பால் ஊட்டவரும் வளர்ப்பால் உரம்தரும்
தாய்ப்பால்
செங்கமலப் பூவினிலே வண்டு கொஞ்சும்
சிவந்தோடும் வெள்ளத்தில் மீன்கள் கொஞ்சும்
தங்கமலர்க் காவிலே கிளிகள் கொஞ்சும்
தரைசூடும் கடலினிலே அலைகள் கொஞ்சும்'

முருகு சுந்தரம்

பாவேந்தர் பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் கவிஞர் முருகு சுந்தரம். 'கடைத்திறப்பு', 'சந்தனப் பேழை', 'பனித்துளிகள்' ஆகியவை இவருடைய கவிதைத் தொகுதிகள். இவற்றுள் 'பனித்துளிகள்' 1971இல் தமிழக அரசின் கவிதைக்கான முதற் பரிசு பெற்றுள்ளது, இவர் கவிதைகளுள் ஒரு பகுதி காண்க.

(குழந்தை)

'உழுதொழில் உழவன் ஓர் நாள்
உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கப்
பழந்தமிழ்ப் புதையல் ஒன்றைப்
படைச்சாலில் பெற்ற தைப்போல்
அருந்தொழிற் குழந்தை பெற்றேன்
அன்னமே! சொல்லப் போனால்
குழத்தையும் புதையல் என்று
கொள்வதில் குற்ற மில்லை!'

புதுக்கவிதையின் தோற்றமும் வளாச்சியும்

தோற்றுவாய்

தான் அனுபவித்த ஓர் உணர்ச்சியை அப்படியே பிறரும் அனுபவிக்கத் தூண்டும் உள்ளத்தின் வெளிப்பாடே கலை. உள்ளதை உள்ளவாறே உரைக்காமல், உள்ளதை உணர்ந்தவாறு உரைக்கும் உன்னதக் கலை கவிதைக்கலை. இலக்கிய வடிவங்களுள் மிகத் தொன்மையானதும், முதன்மையானதுமாகக் கருதப்படுவதும் கவிதைக் கலையே. ஏறத்தாழ ஈறாயிரம் ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பினையுடைய இக்கவிதைக்கலை காலமாறுபாட்டால் உருவத்

தாலும், உள்ளடக்கத்தாலும் பல்வேறு கோலங்களைப் பெற்றுத் துலங்குகிறது. மனிதன் இயற்கைவாழ்வு நடாத்திய சங்க சாலம் தொட்டு, இயந்திரங்களோடு இயைந்து வாழும் இக்காலம்வரை பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவருகிறது. அவ்வக்காலக் கவிதை உலகில் மேலோங்கி நின்ற கருப் பொருட்களை விளக்கும் வண்ணம் அமைந்த காதற் கவிதை, நீதிக்கவிதை, அருட்கவிதை, கதைக்கவிதை, கைக்கிளைக் கவிதை, போற்றிக் கவிதை, தேசியக் கவிதை, கிராமியக் கவிதை, புதுக்கவிதை முதலிய பல்வேறு கவிதைகள் வரலாற்றில் கவிதைக்கலை பெற்ற மாற்றத்தை வளர்ச்சியை உணர்த்தி நிற்கின்றன. இவற்றில் புதுக்கவிதை யின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஈண்டுக் காண்போம்.

புதுக்கவிதை என்றால் என்ன?

'சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, பேச்சமைதி, புதுமைப் படிமப் பயன்பாடு (பிரயோகம்), தற்காலச் சொல்லாட்சி' உணர்ச்சிப் பாங்கு, தத்துவ நோக்கு, ஒலிநய அழுத்தம், உடனிகழ் கால உணர்வு, இன்றைய இக்கட்டான நிலை இவற்றைத் தன் உள்ளடக்கத்துக்கும், உருவத்திற்கும் பொருளாகவும், சாதனங்களாகவும் கொண்டு புதுக்குரலில் ஒலிப்பதுதான் இன்றைய புதுக்கவிதை' எனப் புதுக்கவிதை பற்றி உரைக்கின்றார் திரு. சி. சு. செல்லப்பா. சங்கக்கவிதை கள், பக்தி இயக்கம், காவிய காலம் என்று வசதிக்கேற்பப் பாகுபடுத்திக் கொண்டமையை ஒட்டிப் பாரதிக்குப்பின்னர்த் தோன்றியுள்ள ஒரு திருப்பத்தை உணர்த்தவே புதுக்கவிதை என்ற சொற் பிரயோகம் 1910க்குப் பிறகு, இங்கிலாந்து அமெரிக்காவில், தோன்றிய New Poetry என்ற சொல்லின் மொழி பெயர்ப்பாகத் தோன்றியது என்றும், தமிழில் புதுக் கவிதைக்கு வித்திட்டவர் பாரதிதான் என்றாலும், இன்று அது ஒரு திருப்பம் அடைந்து சமதன்மை உண்டாக்கிச் சுயரூபம் பெற்று இருக்கிறது என்றும் குறிக்கின்றார்.

முன்னைய கவிதை மரபுகளைப் பின்பற்றி வரும்போது, அம் மரபுகள் போதாத நிலையில் புதிய மரபுகள் தோன்றி அவ்வக்காலத்தின் தேவைகளை நிறைவு செய்வது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாக இருந்து வருகிறது. புதுக் கவிதை மரபும் அத்தகையதே என்பது அறிஞர் கருத்து.

புதுக்கவிதையின் தோற்றம்

இருபதாம் நூற்றாண்டை உரைநடையின் பொற்காலம் எனலாம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மருத்துவம், நாடகம், சோதிடம் முதலிய அனைத்துத்துறை களிலும் செய்யுளே தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண் டிருந்தது. செய்யுள்நடை செல்வாக்குப் பெற்றிருந்த அந்தக் காலத்தில் உரைகளிலும்கூட எதுகை மோனை முதலிய அமைப்புகள் காணப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வரவால் நாடெங்கும் அச்சுக்கூடங்கள் தோன்றலாயின. ஒரு சிலருக்கு மட்டும் என்றிருந்த கல்வி எல்லோர்க்கும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே எல்லோர்க் கும் விளக்கமான செய்யுள்நடை விடைபெற்று உரைநடை இடம் பெற்றது. இந்நிலையில் தம் சமயத்தைப் பரப்பவந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் உரைநடையில் தம் சமயப் பிரசாரங்களை எழுதத்தொடங்கினர். பின்னர் அதனை வசனநடையில் மாற்றும் பணியில் ஈடுபட்டனர். இறுதியில் சமயப்பிரசாரத்திற்காக எழுந்த உரைநடை எல்லாவித இலக்கியங்களையும் ஆட்சி செய்யத் தொடங்கியது. சிறு கதை, புதினம் முதலான இலக்கியத் துறைகள் வசனத்தின் ஆளுமையைப் பெற்றன. இவற்றின் தொடர்ச்சியாகக் கவிதைத் துறையிலும் வசனம் தன் ஆதிக்கத்தைப் படர வைத்தது. பழங்காலத்தில் செய்யுள் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, எவ்வாறு உரைநடையில் அது தன் செல்வாக்கைக் காட்டியதோ அது போன்று உரைநடை செல்வாக்குப் பெற்றபோது அது தன் செல்வாக்கைக் கவிதையில் காட்டத் தொடங்கியது. இதன் வெளிப்பாடே வசன கவிதை

வசனத்தின் செல்வாக்கை ஏற்றுக்கொள்ளும் நிலையி லேயே அன்றைய கவிதைகள் இருந்தன. குறிப்பாகப் பாரதிக்கும் பின்வந்த பாரதிதாசன் பரம்பரையினர் அனைவருமே வறிதே செய்யுளை நிரப்பும் பொருட்டுச் சொற்களைக் கையாண்டனர். சொற்சுருக்கமே கவிதை என்ற நிலைபோய், சொற்பெருக்கமே கவிதை என ஆகிய நிலையில், வசனத்திலேயே கவிதை எழுதிவிடலாமே என்ற எண்ணம் வேரூன்றத் தொடங்கியது. இந்த எண்ணமே நாளடைவில் புதுக்கவிதை மலர்வதற்கு உரிய வித்தாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டு முதல் சனநாயக அரசுகள் தோன்ற, மக்கள் சுதந்திர நிழலில் இன்பம் காணத் தொடங் கினர். தனிமனித சுதந்திரம் என்ற நோய் மக்களைப் பிடிக்க அதன் விளைவாக 'ஹிப்பி' சமூகம் தோன்றியது. கட்டுப்பாட்டிற்கு எதிர்க்குரல் எழுப்பும் தகைமை மிக்கது இச்சமூகம். தன் எதிர்க்குரலை எல்லாத் துறைகளிலும் பரப்புதற்கும் இச் சமூகம் வழிவகுத்தது. அரசியல், கல்வி, சமூகம், தொழில் துறை என்ற துறைகளிலெல்லாம் ஏற்பட்ட கட்டுப்பாட்டின் எதிர்க்குரல் கவிதைத்துறையிலும் கேட்கத் தொடங்கியது. சீர், தளை. அடி, தொடை போன்ற எந்த விதியும் கவிதைக்குத் தேவையில்லை என்ற புதுக்குரல் கேட்கத் தொடங்கியது. இந்தப் புதுக்குரலும் வசனகவிதை யுமே புதுக்கவிதையின் தோற்றத்திற்குக் காரணங்களாக அமைந்தன. இதனை,

காலத்தின் பாதிப்பில் கூர்மை
தீட்டப்பட்ட அலகுகளால்
நாங்கள் புதிய
கானம் இசைக்கிறோம்

என்ற புதுக்கவிஞர் ஒருவரின் புதுக்கவிதையால் தெளிய லாம்.

அமெரிக்கச் செல்வாக்கு

1910-ம் ஆண்டில் அமெரிக்காவில் பழைய ஆங்கில யாப்புக் கட்டுக்கோப்புகளை எதிர்த்து 'வால்ட் விட்மன்' என்பவர் எதிர்க்குரல் கொடுத்தார்.

"யாப்பு பழமையின் சின்னம்! நிலப்பிரபுத்துவத்தின் எச்சம்! புதிய இலக்கியத்தின் உரைநடைக்கும் செய்யுளுக்கும் இடையே எவ்வித வேற்றுமையும் இருத்தல் ஆகாது! விஞ்ஞானம், சமுதாயம், ஆகியவற்றைப் பற்றி ஆழமாகவும் விரிவாகவும் எழுதவேண்டும் என்றால், கவிதைக்கும் உரைநடைக்கும் இடையே வேறுபாடு இருத்தல் ஆகாது! பழைய ஆங்கில யாப்பு அமைதிகள்—அடிமைத்தளைகள்!" என்று கூறுகின்றார் வால்ட் விட்மன். இதனால் புதுக் கவிதை (New Poetry) என்றும், பிரெஞ்சு இலக்கியத்தைப் பின்பற்றிக் கட்டற்ற கவிதை (Verse libre) என்றும் புதிய கவிதை முயற்சி தோன்றலாயிற்று. இஃது இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் 1910க்குப் பிறகு ஏற்பட்டது. ஏறத்தாழ இதே காலத்தில்தான் பாரதி தமிழில் 'வால்ட் விட்மன்' என்ற தலைப்பில் வசன கவிதை எழுதினார். 'வால்ட் விட்மனை', 'நகரம்' என்ற தம் கட்டுரையில் மகான் என்று குறிப்பிடுவதால் வால்ட் விட்மனின் தாக்கத்தால் எழுதத் தொடங்கினார் எனலாம். இவருக்குப்பின் புதுக்கவிதையில் நாட்டம் கொண்ட ந. பிச்சமூர்த்தி அவர்களும் வால்ட்விட்மனின் தாக்கம் தன்னைப் பெரிதும் பாதித்தது எனக் கூறுகின்றார். வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' என்ற யாப்பு மரபே கண்டிராத கவிதைத் தொகுப்பிலிருந்து (வசன கவிதை) சில பகுதியை மொழிபெயர்த்து. 'மனிதனைப் பாடுவேன்' என்ற தலைப்பில் ச து. சு. யோகி அவர்கள் வெளியிட்டனர்.

வால்ட் விட்மனைத் தொடர்ந்து புதுக்கவிதைக்குத் தொடர்ந்து ஆக்கம் தந்தவர் எஸ்ரா பௌண்ட் (Ezre Bount) என்பவர் ஆவார். 1912-ம் ஆண்டில் டிண்டன் என்பவருடன்

சேர்ந்து புதுக்கவிதை பற்றிய ஒரு கொள்கையை ஏற்படுத்தினார்.

1. கவிதைக்குள்ளே அகமோ புறமோ எதையும் நேர் முகமாய் இயம்பவேண்டும். பொருளின் ஆன்மாவைச் சட்டெனத் தொடவேண்டும்.

2. கவிதை வெளியீட்டுக்குப் பயன்படாத ஒரு சொல்லையும் புகுத்தக்கூடாது. சொற்களைக் கூட்டினாலும் குறைத்தாலும் ஒரு படைப்பு மாறும். தெய்வத்தச்சன் ஒருவன் படைப்பு ஒன்று செய்தால் அதிலிருந்து ஒன்றை எடுத்துவிட முடியாது. சொல் ஆடம்பரத்திற்காகவோ தேவையற்ற அணி என்பதற்காகவோ சிறந்த படைப்பில் ஏதும் இடம்பெறுதல் கூடாது.

3. ஓசைக்கோப்பு அல்லது சொல்லின் இசை ஒழுங்கைக் கவனிக்க வேண்டுமே தவிர, கடிகாரம் போலக் கணக்காய்ப் போகின்ற முறையைப் பின்பற்றக் கூடாது.

இம் மூன்று கருத்துக்களைத் தவிர, வேறு மூன்று கருத்துகளையும் எஸ்ரா பௌண்ட் தனியே விளக்குகின்றார்.

1. தேவையில்லாத சொற்களை வழங்குதல் கூடாது. ஒரு பொருளை விளக்காததும் அவசியம் இல்லாததுமான அடைச்சொல்லை அகற்றவேண்டும்.

2. உருவத்தை மழுங்கச் செய்யும் சொற்களை நீக்க வேண்டும்.

3. அருவ உவமைகளைத் தவிர்த்து, நாம் தொட்டு நுகரக்கூடிய தூல உருவத்தைப் படைக்கவேண்டும்.

எஸ்ரா பௌண்ட் அவர்களைப் பின்பற்றி டி. எஸ். எலியட் என்பவர் புதுக்கவிதை வளர்ச்சிக்கு வழிகோலினார். எலியட்டின் எழுத்துகளும், எலியட் வழியாக பௌண்டின் கருத்துகளும் உலகெங்கும் பரவின. ஆங்கிலக் கல்விவழி இந்தியாவிலும் பரவியது. வங்க மொழியிலும் வேறு சில

இந்திய மொழிகளிலும் இப்பாதிப்பு ஏற்பட்டது தமிழும் இதிலிருந்து தப்பவில்லை.

பொதுவாக நோக்கும்போது, உரைநடையின் செல்வாக்கு, மரபுக் கவிதையின் செறிவின்மை, சனநாயகத்தால் விளைந்த கட்டுப்பாட்டு வெறுப்பு, அமெரிக்க நாட்டுச் செல்வாக்கு என இவை தமிழில் புதுக்கவிதை தோன்றுவதற்குக் காரணமாயின. ஆய்ந்து நோக்கினால், இவற்றுள் எதுவும் திட்டமிட்டு நுழைக்கப்பட்டது அல்ல என்பதும், அறிவியல் ஊழியின் பரிணாமம் என்பதும், சனநாயக ஊழியின் இலக்கிய விளைச்சல் என்பதும், ஆங்கிலக் கல்வியை விரும்பித் தழுவிய தழுவல் என்பதும் விளங்கும்.

கவிதையின் கண்ணோட்டம்

தமிழ்க் கவிதையின் நீண்ட வரலாற்றுச் சாரமாகத் திகழ்வது அதன் மானுடக் கண்ணோட்டம்தான். சங்கக் கவிஞர்கள் முதல் வள்ளுவன், இளங்கோ, சாத்தனார், கம்பன், பாரதி, பாரதிதாசன் வரை தமிழ்க்கவிதைக்கு ஒரு மானுடக் கண்ணோட்டம் உண்டு. இந்தக் கண்ணோட்டம் தான், வருங்காலத்தைப்பற்றி ஆக்க ரீதியான படைப்புக் கற்பனைதான் தமிழ்க்கவிதையில் தொடர்ந்துவரும் உயிர்ப் புள்ள சாராம்சமாகும். இந்த மனிதநேயக் கருத்துகள் இடம்பெறும் கவிதைகளின் தொடர்ச்சியாகத்தான் புதுக் கவிதை தோன்றி வளர்ந்து வருகிறது.

தமிழில் புதுக்கவிதை வளர்ச்சி

புதுக்கவிதை ஒரு தோற்றமல்ல; இது பரிணாம வளர்ச்சி என்று கூறும் பிரெஞ்சுத் திறனாய்வாளர் கஸ்டாவ் கான், மரபு யாப்புக் கவிதையிலிருந்து புதிய கட்டற்ற கவிதையின் தோற்றத்திற்கான காரணங்களைக் கூறும் போது, 'சந்தம கண்ணுக்கு மிகையாகத் தோன்றுகிறது. அது மாற்றி அமைக்கப்படவேண்டும். அது துண்டிக்கத்

தக்கதல்ல, அதற்கு விடுதலை கொடுத்துவிடுவோம்' என்று நம்படக் கூறும் கான், 'வரிகளின் தொடக்கங்களில் தொடர்ந்து உண்டாக்கப்படும் மணியோசையின் நாதத்தை (அ) எல்லாச் சந்தத்தை நிறுத்திவிடுவோம். சந்தம் ஓரிடத்திற்கு மட்டும் சொந்தமல்ல. அது எல்லாச் சத்தத் துக்கும் சொந்தம். சந்தத்தில் சப்த மயக்கம் மட்டும் இல்லை; அதில் சலன விழிப்பும் வேண்டும்' எனப் புதிய கோணத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். கான் கூறும் இக் காரணங்களையே இருபதாம் நூற்றாண்டின் புதுக் கவிதைக் கும் கூறவேண்டிய நிலை உள்ளது. பாரதிதாசன் பரம்பரை என்று அழைக்கப்படும் கவிஞர்களின் படைப்பு களில் ஒரே மாதிரியான உருவ உள்ளடக்கங்கள் இடம் பெற்றன. உருவத்தின் கட்டுக்கோப்புக்கு யாப்பு முதலிடம் கொடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றது. உருவத் திற்கு மட்டுமே சிறப்புக் கொடுக்கப்பட்டதால், செய்யுளே மிகுதியாகத் தோன்றியது. புதுக் கவிஞர்கள் பலர் தம் முடைய தனி மனித அனுபவத்திற்கும் சமூக அனுபவத்திற் கும் வடிகாலைத் தேடியபோது, யாப்பு அவர்களைப் பின்னுக்குத் தள்ளியது. எனவே, தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே தமிழ்ப் புலவர்களாகச் செய்யுள் இயற்றிக் கொண்டிருந்தனர்.

தமிழ்க் கவிதைக்கு முதன்முதலாக உலகளாவிய பார்வையை வழங்கியவர் பாரதி. ஓருலக மனப்பான்மை யையும், பொதுவுடைமைக் கோட்பாட்டையும், அறிவியல் முறையில் கவிதையில் புகுத்தியவர் இவரே. இவர்தம் கவிதா ஆளுமை தேசியத்திலிருந்து சர்வதேசியத்திற்கும் கொண்டு சென்றது பாரதிக்குப்பின் இந்தியத் தேசியத்திலிருந்து தமிழ்த்தேசியத்திற்குத் தமிழ்க் கவிதை தன்னளவில் சுருங்கியது. இதனால் தமிழ்க் கவிதை நாளுக்குநாள் மெலிவடைய, தேவையற்ற தேக்கம் உண்டானது. தமிழ், தமிழினம், இயற்கை, காதல், பெண்விடுதலை, தனிமனிதத் துதி என்று கூறுகள் பிரித்துத் தமிழ்க் கவிதைகள் படைத்த

பாரதிதாசன் பரம்பரையினர் இரு கிளையாகப் பிரிந்தபோது நா. காமராசன், இன்குலாப், சிற்பி, தமிழன்பன், மீரா போன்றோர் தேக்கத்தைத் தகர்த்தெறிந்தனர்.

கி.பி. 1910இல் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் புதுக்கவிதை முயற்சி தொடங்கியது. 1910-18 என்ற இடைவெளியில் தமிழ்நாட்டில் பாரதியின் வசன கவிதை முயற்சி வளர்ந்தது. 1930க்குப் பின்னர்ப் பாரதியின் வழியில் ந. பிச்சமூர்த்தி, கு ப.ரா., வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோர் தொடர்ந்து வளர்த்தனர். 1930-40 என்ற காலவெளியில் கிராம ஊழியன், சிவாஜி, எழுத்து போன்றவை புதுக்கவிதையைப் போற்றி வளர்த்தன. அண்மைக் காலத்தில் 'எழுத்து' நின்றுவிட்ட போதிலும் நடை, கசடதபற, வானம்பாடி, அஃ ஆகிய இதழ்கள் தொடர்ந்து பல புதுக் கவிதைகளையும் புதிய தமிழ்க் கவிஞர்களையும் அறிமுகப்படுத்திப் பரப்புகின்றன. புதுக் குரல்கள், பால்வீதி, கனவுகள், கற்பனைகள், காகிதங்கள், விதி, அன்று வேறு கிழமை, உதய நிழல், தமிழ்நாட்டின் கவிதைகள், தமிழன்பன் கவிதைகள், வைகறை முதலிய புதுக்கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்தன. இவையே அன்றிக் கதம்பம், அலைகள், புள்ளி, வெண்மை, உதயம் ரசிகன், நீ முதலிய குட்டிக் கவிதைத் தொகுப்புகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

புதுக்கவிதையும் வசனகவிதையும்

புதுக்கவிதைக்கும் வசன கவிதைக்கும் உள்ள ஒற்றுமைகள் :

1. வசனகவிதை, புதுக்கவிதை யாப்பு இல்லாதவை.
2. எதுகை, மோனை இயைபுத் தொடைகள் அற்றவை.
3. இசை ஆதிக்கத்தைவிட வசன ஆதிக்கத்திற்கு இடம் தந்து நிற்பவை.

இரண்டிற்கும் உள்ள வேற்றுமைகள் :

1. வசன கவிதை சற்று விரிவானது. சொற்செட்டு உடையது

2. வசன கவிதையில் ஒருவித இசைநயத்தைப் பெரும் பாலும் காணலாம். ஆனால், புதுக் கவிதையில் ஒருவித ஓசை நாம் இருப்பதாகச் சொல்லப் பட்டாலும், அது காதுக்கு எளிதில் பிடிபடுவ தில்லை.

இந்த வகையில் நோக்கும்போது மீராவின் கனவுகள், கற்பனைகள், காகிதங்கள் என்ற நூலையும், நா. காமராச னின் கறுப்பு மலர்களையும் புதுக்கவிதைகள் என்று கூறுவதைவிட வசனகவிதை என்பதே பொருத்த முடைத்து.

எனவே, நீண்டு ஓரளவு ஓசைநயத்தோடு வருகின்ற வற்றை வசனகவிதை என்றும், சுருங்கி, இறுகி, அந்த அளவிற்கு ஓசைநயம் இல்லாது வருவனவற்றைப் புதுக் கவிதை என்றும் குறிக்கலாம்.

புதுக் கவிதைக்கு எதிர்ப்பு

காலம் காலமாக மரபில் ஊறிய தமிழர்கள், அம் மரபை மீறி எழுந்த புதுக் கவிதைக்குப் பெரும் எதிர்ப்புப் தெரிவிக் கின்றனர்.

1. தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் யாப்புக் கட்டுக்கோப்பில் நின்றே கவிதைகளைப் படைக்க முடியும்; அவ்வாறு இருக்க வீணே யாப்பையும் புறக்கணிக்கின்றனர்.

2. புதுக்கவிதைகளில் எவ்வித ஓசை ஒழுங்கும் இல்லை.

3. வசனத்திற்கும் இன்றையப் புதுக் கவிதைக்கும் இடையே வேற்றுமைகள் ஒன்றுமில்லை.

4. புதுக் கவிதையின் உள்ளடக்கங்களாகப் பாலும் பாலி உறவும், விரக்தியுமே அமைகின்றன. இன்றைய சமூகத்தில் தெரியும் சிக்கலைப் பற்றிக் கவலை கொள்வ தில்லை.

5. புதுக்கவிதை எளிதில் புரிவதில்லை.

6. குறியீடு தெரியாவிடின் புதுக் கவிதைகளைச் சுவைக்க முடியாது.

7. கண்காட்சிக் கவிதை கவிதைகளே அல்ல எனக் புதுக்கவிதையை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர். பொதுவாக நோக்கும்போது உள்ளடக்கம், உருவம், உணர்த்துமுறை ஆகியவை புதுக்கவிதையில் ஒழுங்காக அமையவில்லை என்பதே இவர்கள் கருத்தாகக் காணப்படுகிறது.

கவிதையின் உருவம்

யாப்பு வரலாற்றை நோக்கும்போது, யாப்பு என்பது நிலைபேறு உடையது அல்ல என்பதும், காலத்திற்கேற்ற கோலம் கொள்ளும் தன்மை மிக்கது என்பதும் புலனாகும். யாப்பு வரலாறு பொதுவாக வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, இவற்றின் இனங்கள், கட்டளைக் கலித்துறை, சிந்து, கண்ணி, களிப்பு. சீர், தளை முதலான புதுப்புது வடிவங்களைக் கொண்டு திகழ்கிறது. இவற்றை நோக்கும்போது யாப்பு என்பதில், காலத்தின் போக்கிற்குத் தகப் புதுப்புது உருவங்கள் தோன்றும் என்பதும் தெளிவாகிறது. எனவே, இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் அறிவியலும், அச்சியலும் தோன்றிய காலத்திற்கேற்பப் புதிய உருவங்களைப் படைத்துக் கொண்டதில் தடை ஒன்றுமில்லை.

மேலும், ஒரு கவிதையின் வெற்றி என்பது அதன் உணர்த்தும் முறையிலேயே அமைகின்றது; உருவத்தில் அன்று. எனவே, பழைய கால யாப்பு வடிவம் இல்லை என்பதால் புதுக் கவிதைகளைப் புறக்கணிக்க இயலாது.

புதுக் கவிதைகளில் ஓலிநயம் இல்லை என்றும் கூறிவிட முடியாது தமக்கே உரிய சில ஏற்றத் தாழ்வுகளை இவை பெற்றிருக்கின்றன.

பூக்களிலே நானும் ஒரு
பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்ட லையே
பொன் விரல்கள் தீண்டலையே—நான்
பூமாலை ஆகலையே'

என்ற மேத்தாவின் கவிதையும். நா. காமராசனின் கறுப்பு மலர்களில் காணப்படும் சில கவிதைகளும் ஒலிநயம் மிக்குத் திகழ்வதற்குக் காட்டுகளாகும். புதுக்கவிதையில் யாப்பும் ஓசைநயமும் இல்லை என்று கூறுவார் கூற்றை மறுப்பதற்கு இவை சான்றுகளாகும்.

புதுக் கவிதையில் பாடுபொருள்

புதுக் கவிதையின் பாடுபொருள்களாக வாழ்க்கை, சாவு, இணைவிழைச்சுணர்வு, நிராசை, தனிமனித உணர்வுத் தாரை, கவிஞன் தொழில், எழுத்தாளன் தொழில், உவமை, படிமம், உருவகம், கூடார்த்தம் (Obscurity) ஆகியன இடம் பெறுகின்றன.

நடந்தே அழியணும் வழி
கொடுத்தே தீரணும் கடன்
செய்தே அழியனும் வேலை
அழுதே அழியணும் துக்கம்
வாழ்ந்தே முடியணும் வாழ்வு
இதுவே உலகின் நியதி

என வாழ்க்கையைப் பற்றி வல்லிக்கண்ணன் கூறுகிறார்.

புதுக் கவிஞர்களில் 'இன்டலெக்சுவல் கவி' என்று பட்டம் சூட்டப்பெற்ற டி.கே. துரைசாமி, 'இறப்பு' என்ற தலைப்பில் சாவு பற்றி இரண்டு கவிதைகளில் தம் கருத்தை வெளியிடுகிறார்.

ஓலமிடும் நின்னுடுக்கை
ஓலமிடும் நின்னுடுக்கை

எனை ஓலமிடும் நின்னுடுக்கை
சாவுக்கும் அர்த்தமுண்டு
சம்போகத்தின் நாசமுண்டு.

'பெண்ணும் இணைவிழைச்சும்' என்ற தலைப்பில் தர்மு சிவராமு அவர்கள்,

பூவின் இதழ்ச்சுவருள்
வண்டு குரல் ஒலிகள்
மோதிமடிகிறது
முத்தத் திரை மறைவில்
பேச்சுப் புதைகிறது
ஆனால் சுத்தம் கதைக்கிறது
மவுனம் அதிர்கிறது

என்று எழுதுகின்றார்.

கறுப்பு வளையல்
கையுடன் ஒருத்தி
குனிந்து
வளைந்து
பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு
மனம் குப்பையாச்சு.

இக் கவிதை காமத்தையும் சாவையும் இணைத்துப் பாடுகிறது.

சத்தம் சரணம் கச்சாமி
காமம் சரணம் கச்சாமி
மரணம் மரணம் கச்சாமி

பொருட்பாலுக்குக்
காமத்துப்பாலை விற்கிறேன்
அதற்காக
அறத்துப்பால்
ஏன் அழுது புலம்புகிறது.

இவற்றையெல்லாம் கண்டு புதுகவிதையில் பாலும். பாலுற வும், நிராசையும் மட்டுமே இடம் பெறுகின்றன, சமூகப் பின்னணி ஒன்றும் அதில் இடம் பெறவில்லை என்று கூறுதல் இயலாது.

நாங்கள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில்
கை வைக்க முடியாது

என்ற கவிதை, ஏழை உழவனின் உள்ளக் குமுறலாக வெளி வருகிறது.

நடை பாதையைப் பற்றி நா. காமராசன் குறிப்பிடும் போது,

ஏழைகள் உறங்கிட
இயற்கையால் ஏற்படுத்தப்பட்ட புழுதிக்கட்டில்

எனச் சுட்டுகின்றார். இக் கவிதை அவரது சமுதாயப் பார்வைக்கு நல்லதோர் காட்டு.

ஏழையின் குடிசையில்
அடுப்பும் விளக்கும் தவிர
எல்லாமே எரிகின்றன

என வறுமையின் கொடுமையைப் படம்பிடிக்கிறார் இரா. வைரமுத்து.

முடிவாகக் காணும்போது, புதுக்கவிதையின் பாடு பொருள் மிகவிரிவானது. அதில் சமூக உணர்வும் உண்டு; பால், பாலுறவு, நிராசை போன்றவை இடம்பெற்ற வெற்றுக் கவிதைகளும் உண்டு. எனவே, பாடுபொருள்களில் சிலவற்றை மட்டும் கண்டுவிட்டுப் புதுக்கவிதைகளை எதிர்ப்பது பொருத்தமுடைத்தன்று.

புதுக்கவிதையில் உணர்த்துமுறை

புதுக்கவிதைகள் சில புரியாமல் போவதற்கு உணர்த்து முறையின் ஒழுங்கின்மையே காரணமாகும்.

1. சொல்ல வருகின்ற எல்லாக் கருத்துகளையும் புதுக் கவிஞன் கூறுவதில்லை. சுவைஞர்களுக்குச் சில புரிந்து கோடல்களை அமைக்கின்றான்.

2. தான் கூறவரும் கருத்தினை இறுக்கமாகவும், செறி வாகவும் தரவேண்டும் என அவன் விரும்புகின்றான்.

3. தான் கூறவருகின்ற ஒன்றை மிகவும் நுட்பமாகக் கூறுகின்றான். சுவைஞனுக்கு அந் நுட்பத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் போகிறது.

4. தான் ஏதேனும் ஒருசில குறியீடுகள் வைத்துக் கொண்டு எழுதுவதால், அக் குறியீடுகள் என்ன என்று தெரிகின்றவரை புதுக்கவிதை புரிவதில்லை.

இரண்டாம் உலக
தமிழ் மாநாட்டுக்குத்
திறக்கப்பட்டன சென்னையில்
இருபத்தியொரு
புதிய லெட்ரீன்கள்.

இதில், சென்னையில் இருபத்தியொரு சிலைகள் திறக்கப் பட்டமையும், அவை பறவைகளுக்கு லெட்ரீன்களாக இருந்தமையும் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகிறது.

5. இலக்கிய மேற்கோள்கள், பழம் புராண இதிகாச மேற்கோள்கள் புதுக் கவிதையின் உள்ளாக உறைந்து புதுக் கவிதையைப் புதிர்க் கவிதையாக்கி விடுகின்றன.

எடு ஒருகல்
ஏசு வருமுன்
வீசி எறி

ஏசு கதை தெரிந்தாலொழிய இக் கவிதையைச் சுவைப்ப தென்பது மிகவும் அரிது.

புதுக்கவிதையில் உணர்த்தும் முறையைக் காணும்போது தேவையான சொற்களை மட்டும் பெய்து கவிதையை உணர்த்தல், சில படிமங்களை அமைத்து உணர்த்தல், பொருளுக்கேற்ப எழுத்துகளை மாற்றி அமைத்து உரைத்தல், (கண்காட்சிக் கவிதை) அங்கதச் சுவை மிளிர உணர்த்தல் முதலிய பல்வேறு வகைகளைக் கையாளுகின்றனர்.

கணவன்
நிரபராதி என்று
நிரூபிக்க
நாணத்தை
மறந்த
குற்றவாளி

'கண்ணகி' என்ற தலைப்பில் தேவையான சொற்களை மட்டும் வைத்துப் பாடப்பட்ட கவிதை.

பூவின் இதழ்ச் சுவருள்
வண்டு குரல் ஒலிகள்
மோதி மடிகிறது
முத்தத் திரை மறைவில்
பேச்சு புதைகிறது

தர்மு சிவராமுவின் இக் கவிதை படிமக் கவிதைக்குச் சான்றாகும்.

கவிதையில் கூறவரும் பொருளும் உருவமும் இறுகிச் செறிந்திருக்கவேண்டும். பொருளையும் உருவத்தையும் பிரிக்க முடியாதபடி பிணைந்திருக்கவேண்டும். உள்ளடக்கத் தின் ஆதிக்கம் உருவத்தில் புலப்பட வேண்டும். அதனைக் கண்காட்சிக் கவிதை என்கின்றனர்.

முதுகு வளர
நீ
ண்
டு
விட்ட
கூந்தலுக்கு
மேலும் வளரத்
துடிதுடிப்பென்ன

என்ற எஸ். வைத்தீஸ்வரனின் 'ஆசை' என்ற கவிதை கண்காட்சிக் கவிதைக்குச் சிறந்ததோர் காட்டு.

பாட்டி செத்த பத்தாம் வீணாடி
பெரிய குழப்பம் —
பிணத்தை
எரிப்பதா புதைப்பதா என்று...
உள்ளூர்ப் புலவர் ஓடி வந்தார்
பட்டி மன்றம் வைத்துப்
பார்த்தால் என்ன என்று

வெற்றுப் பட்டி மன்றங்களின் சொற் குப்பை கூளங்களை நன்றாகவே கிண்டல் செய்கின்றது. மீராவின் 'ப(ர)ட்டி மன்றம்'

உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் இருந்த காலம் போய், இன்று உணர்த்துமுறைக்கு ஒரு காலம் வந்துள்ளது. புதுக் கவிதைகளில் உணர்த்தும் முறை உள்ளடக்கத்திலிருந்து எளிதில் பிரிக்க முடியாதபடி செறிவாகப் பிணைந்து கிடக்கிறது. உணர்த்து முறையைப் புதுக் கவிதை உயிராகப் போற்றுகிறது.

புதுக் கவிதையும் பேச்சு வழக்கும்

'சுதந்திரம்' என்ற தலைப்பில்

இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே யில்லை

என்ற கவிதையில் பேச்சு வழக்கின் முழு அமைதியைக் காணமுடிகிறது. கோடிக்கணக்கான பாட்டாளி மக்களின் ஏழ்மைக் கோலமும், பட்டினிக் கொடுமையும் நிழலுருவமாக நம்முன் காட்சி அளிக்கின்றன.

நாங்கள் சேற்றில்
கால் வைத்தால்தான்
நீங்கள் சோற்றில்
கைவைக்க முடியும்

என்ற நகரத்தவர்களின் ஆடம்பர வாழ்வை இடித்துக் காட்டும் போக்கில் அமைந்த கிராமியக் கவிதையிலும் பேச்சு வழக்கின் இறுக்கத்தைக் காணலாம்.

பாரதியின் சர்வதேசியப் பார்வையை மீண்டும் தமிழ்க் கவிதைக்கு வழங்கியவர்களில் இன்குலாப்ஒருவர். 'கிரௌஞ்ச வதத்திற்குக்கேள்விகள் இல்லையா?' என்ற புதுக்கவிதையில் அமைந்த.

இந்தக் குருச்சேத்திரத்தில் எங்கள் கைகள்
ஆயுதங்களைக் கீழே போடவில்லை
மாறாக
எங்கள் கைகளில்தான் ஆயுதங்கள் இல்லை

என்ற வரிகள் விடுதலை பெறப் போராடும் ஒவ்வொரு நாட்டின் ஆத்ம தாகத்தையும் எதிரொலிக்கின்றன.

கண்மூடும்போது கனவுகள் சுரண்டின
கண்விழித்தபோது கனவான்கள் சுரண்டினர்
இருட்டறையில் வேர்த்துக் கிடக்கும் நாம்
இனிமேல் திறக்கப்போவது
சன்னல்களை யல்ல
கதவுகளையே

என்ற கோ. கேசவனின் கவிதை ஆண்டாண்டுக் காலமாகப் புதிய கொத்தடிமையில் சிக்கித் தவிக்கும் இந்திய ஆத்மாவின் குரலாகக் கேட்கிறது.

இவ்வாறாகப் புதுக்கவிதைகளில் பேச்சு வழக்கின் பண்புகளும் காணப்படுகின்றன. யாரோ ஒரு தனிமனிதனின் ஒற்றைக் குரலாக இல்லாமல் வீழ்ந்த மானுடத்தின் எழுச்சிக் குரலாக அவை எதிரொலி செய்கின்றன.

புதுக் கவிதையும் பொதுவுடைமையும்

தனி உடைமைச் சமுதாயத்தை உடைத்தெறிந்து பொது உடைமைச் சமுதாயத்தைக் காணவேண்டும் என்ற துடிப்பினைப் புதுக்கவிகள் பல புலப்படுத்தி நிற்கின்றன.

ஜகத்தினில் அனைவர்க்கும் உணவில்லை எனவே
அரசினை அழித்திடுவோம்—முதலாளி
தொட்டிற் சனியன் தொடர்ந்தே அழுதது
தூங்கிய மனிதர்கள் சலித்தனர்
வட்டில் நோயால் தாயும் சேர்ந்தழ
வறுமை நோய்க்கு மருந்துகள் உண்டோ.

இக் கவிதைகளில் புதுக்கவிஞர் ஒருவர், பசிக்குக் காரணமான தனி உடைமைச் சமுதாயத்தை உடைத்தெறிய முன்னேறுகிற உலகப் பெரும்படையைச் சுட்டிக்காட்டி, அதன் வெற்றியால் உலகில் பசி அழியும் என்ற நம்பிக்கையை ஏழை உள்ளங்களில் எழுப்புகிறார்.

பூமிச் சருகாம் பாலையை
முத்து பூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே—கோடிப்
புதிய தென்றலாக்குவேன்

இரவில் விண்மீன் காசினை—செலுத்தி
இரவ லரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை—ஏழை
விறகெரிக்க வீசுவேன்

என்ற நா. காமராசனின் சபதம் பொதுவுடைமைச் சமுதாயத்தை ஏற்படுத்தத் துடிக்கும் உள்ளத்தின் எதிரொலி யாக அமைகிறது,

'குடிகாரன்' என்ற கவிதையில் நா. காமராசன் அவர்கள் கூறும்.

மாளிகைக்குப் பெர்மிட்டு
சேரிக்கு மட்டும் கைவிலங்கு

என்ற கூற்று, சமுதாயத்தின் போலி வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது.

புதுக் கவிதையில் நாட்டுப்புறச் சாயல்

நாட்டுப் பாடல்களில் பேச்சு வழக்கில் உள்ள வசனநடை வடிகட்டப்பட்டு, இயல்பாக, சொற்களுக்குள்ளே ஒலிநயச் சேர்க்கை குன்றாத அளவிற்கு நாட்டுப்புறக் கவிதைகளாக வாழ்கின்றன. இதனால்தான் நா. காமராசன், இன்குலாப், சிற்பி, செந்தமிழ் மாறன், புவியரசு போன்ற கவிஞர்கள் நாட்டுப்புறப் பாடல்களைப் பின்பற்றி எழுதுகின்றனர்.

'ஒரு சேரிக்கிராமமும் தபால்காரன் மரணமும்' என்ற தலைப்பில் அமையும் நா. காமராசனின் கவிதை இதற்குத் தக்கதோர் சான்றாகும்.

மாசிப் பிறையடிக்கும்—
சாத்திரிகள் சொல்லவேண்டும்
மாசங்களிலே விளையாடும்
மழைமேகம் சொல்லவேண்டும்

தரைஅழுகும் பறைச்சேரித்
தரைமெழுக வந்ததுரை
தரைக்குள்ளே போனதென்ன
தனித்தூக்கம் ஆனதென்ன
ஊர்க்கோடிச் சாவடியில்
ஒளிவிளக்கு எரிஞ்சாலும்
விழிவிளக்கு எரியலியே
வியாசர் கதை முடியலியே

என்ற பாடல் நாட்டுப்புறப் பாங்கில் அமைந்த ஒன்றாகும்.

'என்னுடைய கனவு பூமியின்' என்ற கவிதையில் நா. காமராசன் அவர்கள் பாடும் வயல்வெளிப் பாட்டும் நாட்டுப்புறப் பாங்கில் அமைந்ததுவேயாம்.

ஊரோரம் கிளிக்காடு
ஒவ்வொண்ணும் பஞ்சவர்ணம்
பஞ்சவர்ணக் கிளியுறங்கப்
பழத்தாலே கூடு செய்தோம்
பழத்தாலே கூடு செய்து
பவுர்ணமிப்பூ மெத்தையிட
கிழக்கே புயலடிக்க
கிளிச்சிறகு பறந்தோட
கிளியோ கிளி
பொலியோ பொலி
ஓ! பொலியோ பொலி.

புதுக் கவிதையில் இயற்கை

சங்க இலக்கியத்தில் இயற்கை என்பது பின்னணியாக அமைந்து அதன் மூலம் சில கருத்துகளைத் தெளியுமாறு அமைந்து கிடந்தது. கவிஞன் தன் பல்வேறு கருத்துகளை, நோக்கங்களை வெளிப்படுத்துவதற்காகவே இயற்கையைப் பயன்படுத்திய நிலை காணப்படுகிறது. இன்று புதுக்கவிதையில், எவ்வித நோக்கமும் இன்றி, இயற்கையிலுள்ள அழகை மட்டுமே சித்திரித்துக் காட்டுகின்ற நிலையில் இயற்கை

அமைகிறது. வெறும் இயற்கையை மட்டுமே அதன் அழகை மட்டுமே பாடுவது இன்றையப் புதுக்கவிஞர்களின் மரபாகத் திகழ்கிறது.

தளிர் பற்றிப் பாடவரும் நா. காமராசன் அவர்கள்.

இலைப்பிஞ்சு
விதைப்பட்டு
தாவர மின்னல்
வேர்த்தூ ரிகையின் ஓவியம்

என்றெல்லாம் அடுக்கிச் செல்கின்றார். கடலைப் பற்றிப் பாடும்போது,

வானத்திற்கும் பூமிக்குமாக
மழைநெசவு நடந்தபோது
அறுந்துபோன மின்னல் நூல்களை
நினைத்துப்போன மின்னல் நூல்களை
நினைத்துத்தான் நான்
அழுதுகொண்டிருக்கிறேன்

என்று கூறுவது கவியின்பம் நல்குவதாக அமைகிறது. வான வில்லைப் பற்றிப் பாடும்போது.

இயற்கை
ஒரு தூரிகையை சிருஷ்டிக்க எண்ணி
ஒரு ஓவியத்தை சிருஷ்டித்தது
அதுதான் வானவில்
சொர்க்கத்திலிருந்து வீசியெறியப்படுகிற
துரும்புகூட
அழகாகத்தான் இருக்கிறது

என்று கூறுகின்றார்.

இவ்வாறாகப் புதுக்கவிதைகளில் இயற்கை எவ்விதத் தாக்கமும் இன்றி அழகுணர்ச்சிக்காக மட்டுமே கையாளப் படுகின்றது.

புதுக் கவிதை—ஒரு பொதுக் கண்ணோட்டம்

பொதுவாகச் சங்ககாலம் முதல் பிற்காலம் வரை தோன்றிய மரபுக் கவிதைகள் அனைத்துமே வாழும் கவிதை களாகத் திகழ்கின்றன என்று கூறமுடியாது. அவற்றுள் ஒருசில மட்டுமே நிலைபேறு உடையனவாகத் திகழ்கின்றன. இவற்றில் மணிகளும் உண்டு; பதர்களும் உண்டு. இவற்றைப் போலவே புதுக்கவிதைகளிலும் சில மணிகளும் உண்டு; பதர் களும் உண்டு. இவற்றில் கால வெள்ளத்தை நீந்தி வாழ்வன மட்டுமே பின்னால் வாழும் கவிதைகளாகத் துலங்கும்.

முடிவுரை

இவ்வாறாக வசன கவிதையின் ஆதிக்கத்தால் தோன்றிய புதுக்கவிதை ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக வளர்ந்து இன்று கவிதை உலகில் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது.

இசைத்தமிழ்

'இசை' என்ற சொல்லுக்கு 'இசைவிப்பது', 'வயப் படுத்துவது', 'ஆட்கொள்ளுவது' என்பது பொருளாகும். எல்லாம் கடந்து எங்குமாய் எல்லாமுமாய் நீக்கமற நிறைவுற்று விளங்கும் இறைவனையே நம்முன்னோர் இசை வடிவமாகக் கண்டனர். 'ஓசை ஒலியெலாம் ஆனாய நீயே' என்பது அப்பர் அருள்வாக்கு. மேலும், கோவை நூல்களில் சிறப்பித்துக் கூறப்படும் திருச்சிற்றம்பலக் கோவையார் எனப்படும் திருக் கோவையாரில் (20)

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண்
தீந்தமிழின்

துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்
சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட் கென்கொ லாம்புகுந்
தெய்தியதோ'

என்று கூறப்படுகிறது. ஏழிசையின் சூழலில் இறைவன் ஆட்பட்டான் என்பது இதனால் பெறப்படுகின்றதன்றோ?

தமிழின் மிகப் பழமையான நூலான தொல்காப்பியம் கொண்டே தமிழ் இசையின் பழமையினை அறியலாம். தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூல் மரபியலின் இறுதி நூற்பாவில்,

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'

(தொல், எழுத்து, நூன்மரபு, நூ. 38)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவர் பொருளதிகாரத்தில் அகத்திணையியலில் கருப்பொருள்களைக் கூறுகின்றபொழுது,

'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'

(தொல், பொருள், அகத், நூ. 13)

என்று தமிழ் இசைக்கருவிகளில் பழமையான யாழினையும் சுட்டியுள்ளார். எனவே, இசையோடு மட்டுமின்றி இசையினை எழுப்பத் துணைகோலும் யாழும் பழமையாய் வந்து கொண்டிருக்கிறது என்பதனை அறியலாம்.

இறையனார் களவியலுரையாசிரியர் முச்சங்க வரலாறு மொழியுமிடத்து—தலைச்சங்க வரலாறு கூறுமிடத்தில்—'அவர்களாற் (தலைச்சங்கப் புலவர்கள்) பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமென இத் தொடக்கத்தக்கன' என்றும், கடைச்சங்கத்தைக் குறிக்குமிடத்தில் 'அவர்களாற் (கடைச்சங்கப்

புலவர்கள்) பாடப்பட்டன. நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையுமென இத் தொடக்கத்தன'' என்றும் குறிப்பிட்டுள்ளார். இக் குறிப்பினாலும் தமிழ் இசையின் பழமை தெற்றெனத் துலக்கமுறும்.

பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், பஞ்ச மரபு, தாளசமுத்திரம், சச்சபுடவெண்பா, இந்திரகாளியம், இசை நுணுக்கம், பதினாறு படலம், தாளவகை யோத்து, இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை முதலிய எண்ணற்ற இசைத் தமிழ் நூல்கள் பழங்காலத்தில் வழக்கிலிருந்து பின்னர் வழக்கு வீழ்ந்துபட்டிருக்கும் என்பர்.

நமக்கு இன்று கிட்டும் இசை பற்றிய குறிப்புகளில் மிகப் பழமையானவை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் காணப்படும் அரிய இசைக் குறிப்புகளாகும். பரிபாடல் கி. பி. முதல் நூற்றாண்டினைச்சேர்ந்த ஒரு நூலாகும். எழுபது பரிபாடலில் இன்று நமக்குக் கிட்டுவன இருபத்திரண்டேயாகும். ஒவ்வொரு பரிபாடலின் கீழும் அப் பாடலைப் பாடிய புலவரின் பெயர், இசை அமைத்தவரின் பெயர், யாழ், செந்துறை, வண்ணம், தூக்கு முதலியன குறிப் பிடப்பட்டுள்ளன. இக் குறிப்புகளை நோக்கினால் வளமார்ந்த தமிழிசையின் பழமையினையும் சிறப்பினையும் சுவைத்து இன்புறலாம்.

தமிழ்ப்பண்கள் நூற்றுமூன்று என்று கொள்ளப்படும். 'பண்களாவன பாலையாழ் முதலிய நூற்று மூன்று' என்பர் பரிமேலழகர். பிங்கலந்தை நிகண்டு 'ஈரிரு பண்ணும் எழு மூன்று திறனும்' எனக் குறிப்பிடுகின்றது. பெரும்பண் களாவன பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்பனவாம். இந்நாற்பெரும் பண்களுக்கும் மொத்தம் இருபத்தொரு திறங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் பாலையாழ்த்திறம் ஐந்தாகவும், குறிஞ்சி யாழ்த்திறம் எட்டாகவும், மருத

யாழ்த்திறம் நான்காகவும், செவ்வழி யாழ்த்திறம் நான்காகவும் கொள்ளப்படும். ஏழு சுரங்கள் எனப்படுவன, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். இவற்றை வடமொழியில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று குறிப்பிடுவர். தமிழில் 'பண்' என்பதை வடமொழியில் 'இராகம்' என்பர். ஏழு சுரங்களால் ஆகிய இராகங்களைப் பண் என்றும், ஆறு சுரங்களால் ஆகியவற்றைப் பண்ணியல் என்றும், ஐந்து சுரங்களால் ஆகியவற்றைத் திறம் என்றும், நான்கு சுரங்களால் ஆகியவற்றைத் திறத்திறம் என்றும், இசை இலக்கண நூலார் கூறுவர். வடமொழியாளர் இவற்றையே சம்பூரணம், ஷாடவம், ஔடவம், சதுர்த்தம் என வழங்குவர்.

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் பழந்தமிழிசையின் நுட்பம் தெற்றெனப் புலப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், கானல் வரியால் விளங்கும் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முகவரி, திணைநிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, முதலிய பல்வேறு வரிப் பாடல்கள் இசையின் மேன்மையினையும் விரிவினையும் விளக்கவல்லன. சமணப் பெருங்காப்பியமான சீவக சிந்தாமணியில் காந்தருவ தந்தையார் இலம்பகத்தில் இடைக்காலத் தமிழிசையினைப் பரக்கக் காணலாம். மதம் பிடித்த யானையின் சீற்றத்தினை இசையால் தணித்த செய்தி உதயணன் கதையில் பேசப்படுகின்றது.

இவ்வனைத்திற்கும் மேலாகச் சமய குரவர்கள் அருளிச் செய்த தேவாரத்தில் தமிழிசையின் முழு மறுமலர்ச்சியினையும் காண்கிறோம். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், தாண்டகவேந்தராம் திருநாவுக்கரசர், தம்பிரான் தோழராம் சுந்தரமூர்த்திகள் ஆகியோர் கழகமொடமர்ந்த கண்ணுதற் கடவுளை இன்னிசையுடன் பாடிப் பரவினர்; எண்ணற்ற தேவாரப் பதிகங்களை அருளிச் செய்தனர்.

திருவாசகத்தில் திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் முதலியன இசைத் தமிழ்த்துறையைச் சார்ந்த பாடல் வகைகளாகும்.

இசைத்தமிழின் பொற்காலமான தேவார காலத்தில் நாயன்மார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் பண்முறையோடு ஓதப்பட்டு வந்துள்ளமையைக் கல்வெட்டுக் கொண்டு அறியலாம். விசயநந்தி விக்கிரமனாகிய நந்திவர்ம பல்லவனது 17ஆம் ஆட்சி ஆண்டில், கி. பி 750-ல் எழுந்த திருவல்லம் திருக்கோயிற் கல்வெட்டு ஒன்றில், 'திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதிகம் பாடுவாருள்ளிட்ட பல பணி செல்வார்க்கும் நெல்லு நானூற்றுக்காடியும்' என்று குறிப்பிடுவதால், கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலேயே திருக்கோயில்களில் தேவாரப் பதிகங்கள் முறையாக ஓதப்பெற்றன என்பது தெளியலாம்.

திருஞானசம்பந்தர் காலத்திலேயே அவரோடு திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரும் சீகாழிப்பதி போந்து, சம்பந்தரை வணங்கி, அவர் பாடியருளிய தேவாரப் பதிகங்களைத் தம் யாழில் இட்டு இசைத்தும், பின்னர்த் தமிழ்நாடெங்கும் சென்று, அத் தெய்வப் பாடல்களை இசையுடன் பரப்பியும் போற்றினர் என்பது வரலாறாகும். இன்றளவும் இந்தப் பழந்தமிழ்த் தேவார இசையினை விடாது போற்றிக் காத்திருப்பவர்கள் ஓதுவா மூர்த்திகளே. அவர்களுக்குத் தமிழ் உலகம் பெரும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

பிற்காலத்தில், அதுவும் நாயக்க மன்னர்கள் காலத்தில், இசை பல்வேறு வகையாக வளர்ந்தது. கி. பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் சந்தப் பாடல்களால் ஆன திருப்புகழை இயற்றினார். பழம் பண்கள் மறைக்கப்பட்டு, இராகங்கள் வந்து சேர்ந்தன. மேலும்

இராகங்கள் பழைய பண்களிலிருந்து அமைந்து வளர்ந் தவையே என்னும் உண்மை புறக்கணிக்கப்பட்டது. கர்நாடக இசை தென்னாட்டு இசைக்கலை என்பதும் ஏற்றுக் கொள்ளப்படாமற் போயின. கர்நாடக இசை என்பது, தெலுங்குப் பாட்டுகள் என்ற அளவிற்கு மயக்க மான ஒரு நிலை ஏற்பட்டது. தெலுங்கைத் தாய்மொழி யாகக் கொண்ட தியாகையர், தெலுங்கில் கீர்த்தனங்கள் இயற்றினார்; சாகியத்தியங்களை உருவாக்கினார். இது போன்றே சீகாழி அருணாசலக் கவிராயர், தமிழில் 'இராம நாடகம்' என்னும் இயல் இசைத் தமிழ்மாலை இயற்றினார். கோபால கிருஷ்ண பாரதியார் 'நந்தனார் சரித்திரக் கீர்த் தனை'களை இயற்றி இசைத் தமிழிற்குத் தொண்டாற்றி னார். முத்துத் தாண்டவரும், நெஞ்சைத்தொடும் நல்ல கீர்த்தனைகள் இயற்றி உதவினார். மேலும், திருக்குற்றாலக் குறவஞ்சி இயற்றிய திரிகூட ராசப்பக் கவிராயர், கனம் கிருஷ்ணய்யர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், பெருங்கரைக் கவிக்குஞ்சர பாரதி, திருக்கடலூர் அபிராமி பட்டர், வைலை மகாவைத்திய நாதையர், மாயூரம் வேத நாயகம் பிள்ளை, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், வடலூர் இராமலிங்க அடிகள் ஆகியோர் இசைத்தமிழ் உலகிற்குப் பெருந் தொண்டாற்றினர்.

இந் நூற்றாண்டில் தோன்றிய பாரதியார், "வித்துவான் கள் பழைய கீர்த்தனைகளைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளிலே பழம்பாட்டுகளை மட்டும் பாடுதல் நியாய மில்லை. அதனால் நமது ஜாதி, சங்கீத ஞானத்தை இழந்துபோகும்படி நேரிடும்" என்று எச்சரிக்கை விடுத்தார். பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதி தாசன் ஆகிய மூவரும் இசைத் தமிழிற்குரிய பாடல்களை யும் எழுதி உதவினர். இன்று வாழும் கவிஞர்களில் யோகி சுத்தானந்த பாரதியார், பெரியசாமித் தூரன், என் எஸ். சிதம்பரம், உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் முதலியோர்

இசைப்பாடல்களை இசைத் தமிழுலகிற்கு அளித்துவருகின்றனர்.

தமிழிசைக்கு மீண்டும் புத்துயிர் கொடுத்து, தமிழ் இசைஇயக்கம் கண்டு தொண்டாற்றிய பெருமை இராஜா சர், அண்ணாமலைச் செட்டியார் அவர்களையே சாரும். 1943-ல் தமிழ் இசை இயக்கம் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு உறுதுணையாக சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும், கோவை திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் அவர்களும் தொண்டாற்றினார்கள். ரசிகமணி டி. கே. சி., கதைமணி கல்கி முதலானோரும் துணைநின்றனர். தமிழிசை இயக்கம் தொடக்கக்காலத்தில் தனக்கேற்பட்ட இன்னல்களையும இடையூறுகளையும் கடந்து வெற்றிகண்டது. இப்பொழுது சென்னையில் இராஜா அண்ணமாலை மன்றம் அமைக்கப்பட்டு, டிசம்பர்த் திங்கள் இறுதியில் தமிழிசை விழாவும், பழம் பண்களை ஆராயும் பண்ஆராய்ச்சிமாநாடும் நடைபெற்று வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்க் கீர்த்தனங்களையும் தமிழிசைப் பாடல்களையும் வெளியிட்டுள்ளது. தமிழ் இசைச் சங்கத் தலைவராக, நீதிபதி எஸ். மகராசன் அவர்கள் இருந்துவந்தார்கள். செட்டிநாட்டு அரசர் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களுக்குப்பின், அவர்தம் இளவல் மு.அ. சிதம்பரம் அவர்கள் தந்தையார் விட்டுச் சென்ற பணியினை—தமிழிசை வளர்ச்சியினை—கண்ணும் கருத்துமாகக் காத்துவருகின்றனர். தமிழிசை நாளும் வளர்வதாக!

நாடகத் தமிழ்

'நாடகத் தமிழ்' என்ற ஒரு பிரிவு தமிழ் மொழியில் இருப்பதுபோல, உலகிலுள்ள மற்றெந்த மொழிகளிலும் நாடகப் பிரிவு என்பது இல்லை. ஆகவே நாடகத்தமிழ் என்பது தமிழ்மொழி ஒன்றிற்கே உரிய சிறந்த செல்வ

மாகும்.[1] தொல்காப்பியத்தில் 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்று வரும் தொடர்கொண்டு, அக் காலத்தில் தமிழ் நாடகம் இருந்திருக்கவேண்டும் என அறிகிறோம். சிலப்பதிகாரத்தின் உரையில் அடியார்க்கு நல்லார், 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இருந்தன' என்று கூறியுள்ளார். இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலிய நூல்கள் அக்காலத் தில் வழங்கி இறந்து பட்டிருக்கவேண்டும் என்பது உணரக் கிடக்கின்றது. அதன் பின்னர்ப் பௌத்த சமணர் இடை யீட்டால் இடைக் காலத்தில் நாடகங்கள் காமக்கிளர்ச்சியை வளர்ப்பன என்ற கருத்துப் பரவி, நாடகத் தமிழ் தேய்பிறை யானது. இராசராச சோழன் காலத்தில் இராசராசேசுவர நாடகம் கோயில்களில் நிகழ்த்தப்பட்டது என்பதும். நாடகம் நடிப்பவர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன என்பதும் சாசனங்களால் அறியக்கிடக்கின்றன. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அருணாசலக் கவியின் இராம நாடகம், திரிகூடராசப்பக் கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி', என்னயினாப் புலவரின் 'முக்கூடற் பள்ளு', கோபாலகிருஷ்ண பாரதியாரின் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' முதலியன மீண்டும் நாடகத்தமிழுக்குப் புத்துயிர் அளித்தன. நாடகக்கலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரவிச் செழித்தது. பின்னர்ப் புராண சம்பந்தமான நாடகங்கள் தோன்றின. அரிச்சந்திர நாடகம், மார்க் கண்டேயர் நாடகம், சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம், பவளக்கொடி நாடகம், கிருஷ்ணன் தூது நாடகம் கோவல நாடகம், காத்தவராயன் நாடகம், இராவண சம்ஹார நாடகம் முதலிய நாடகங்கள் நாடக மேடையில் நடிக்கப்பட்டுப் பொதுமக்களால் பாராட்டப் பட்டன.

1. திரு. பி. சம்பந்த முதலியார்-நாடகத் தமிழ்-மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர். ப. 137.

1891 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாடக உலகில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. து. தா. சங்கரதாஸ் சுவாமிகள் என்னும் பெரியார் நாடக உலகில் நுழைந்தார். அவர் பழைய நாடகங்களை ஒழுங்குபடுத்திப் புதிய நாடகங்கள் பலவற்றை எழுதித் தாமே நடித்தும், ஆசிரியராயிருந்தும், தமிழ் நாடகக் கலைக்கு மகத்தான சேவை புரிந்தார். சங்கரதாஸ் சுவாமிகள் சுமார் 40 நாடகங்கள் எழுதியிருக்கிறார்.[1]

நாடகத் துறைக்குத் தொண்டாற்றிய பெருமக்களுள் சிலரைப் காண்போம்.

பெ. சுந்தரம் பிள்ளை

திரு. பெ. சுந்தரம் பிள்ளை 1855 ஆம் ஆண்டு ஆலப்புழையில் பிறந்தவர். இவர் மனோன்மணீயம் என்று தாம் இயற்றிய நூலால் நினைவுகூறப்படுகிறார். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி முதலிய சங்க நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'திருஞான சம்பந்தர் கால நிச்சயம்' என்ற ஆங்கிலக் கட்டுரை ஒன்றை எழுதி இலக்கிய வரலாற்றுக்கு—கால ஆராய்ச்சிக்கு—வழி கோலினார். இவருடைய நாடக நூலாம் மனோன்மணீயம் நடிப்பதற்கன்றிப் படிப்பதற்காகவும் எழுதப்பட்டது. இது லிட்டன் பிரபு (Lord Lytton) ஆங்கிலத்தில் எழுதிய 'இரகசிய வழி' (The Secret way) என்னும் நூலைத் தழுவியதாகும். தமிழ்ச்சுவை, நாடகச்சுவை, கவிச்சுவை கலந்த இந்நூல் நாடகக் காப்பிய உலகில் தலையாயதாய் மிளிர்கின்றது.

வி. கே. சூரியநாராயண சாஸ்திரியார்

திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தம் பெயரைப் 'பரிதிமாற்கலைஞர்' எனத் தூய தமிழில் மாற்றி

---

1. திரு. டி, கே. சண்முகம், தமிழ்நாட்டில் நாட்க வளர்ச்சி—மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர், ப. 226.

அமைத்துக்கொண்டார். கவிஞராயும் நாடக ஆசிரியராயும் ஒருங்கே புகழ்பெற்று விளங்கிய இவர், 'ஞான போதினி' என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும் ஆசிரியராய் இருந்தார். நலிந்து கிடந்த நாடகத்தமிழ் மீண்டும் புத்துயிர் பெற வேண்டுமென்று பாடுபட்டார். அதன் காரணமாகவே 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூலை இயற்றினார். 'பாவலர் விருந்து' என்ற பாடல் தொகுப்பு நூலையும், 'தனிப் பாசுரத் தொகை' என்ற இசைப்பாடல் தொகுப்பு நூலையும் இயற்றி வெளியிட்டார் அவற்றுள் சில, போப்பு அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 'மதிவாணன்' என்ற உரை நூல் உயர்ந்த நடையில் எழுதப் பட்டதாகும். 'ரூபாவதி', 'கலாவதி', 'மான விஜயம்' என்னும் மூன்று நூல்களும் இடையிடையே பாட்டுகள் அமைக்கப்பட்டு உரைநடையில் எழுந்த நாடக நூல்களாகும். இவர் எழுதிய நாடகம் இவர் காலத்திலேயே நடிக்கப்பட்டது. இவர் எழுதிய 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூல், மொழி நூலாகப் பயன் படுகிறது. நாடகத் தமிழ் நூல்கள் எழுதிய இவர், 1893 ஆம் ஆண்டிலேயே இவ்வுலகை விட்டு மறைந்தது ஓர் இழப்பே ஆகும்.

பம்மல் சம்பந்த முதலியார்

'பம்மல் சப்பந்த முதலியார்' அவர்கள் நம்மிடையே வாழ்ந்த 'தமிழ் நாடகத் தந்தை' ஆவர். 1891இல் தான் அமெச்சூர் சபைகளும் தோன்றின. நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் சென்னையில் சுகுண விலாச சபையை நிறுவினார்...பம்பல் முதலியாரவர்கள் நாடகத் தைத் தொழிலாகக் கொள்ளாமல் கலை வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு, நாடகக் கலைக்கு ஓர் உயர்வான ஸ்தானத்தைத் தேடித்தந்தார்...பம்பல் சம்பந்த முதலியார் ஷேக்ஸ்பியர், காளிதாசன் ஆகியோரின் நாடகங்களை மொழி பெயர்த்ததோடு. கற்பனையாகவும் சுமார் எண்பது நாடகங் களுக்கு மேல் எழுதியிருக்கிறார். இவருடைய நாடகங்கள்

மாவும் அமெச்சூர், தொழில் முறை சபைகள் ஆகிய இரு சாராராலும் மேடையில் நடிக்கப்பட்ட நாடகங்கள். 'மனோகரா' என்ற இவரது கற்பனை நாடகம், சென்ற 65 ஆண்டுகளாகத் தமிழ் நாடக மேடையில் அமரத்துவம் பெற்ற நாடகமாய் விளங்கிவருகிறது. தமிழ் நாடக உலகம் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்று சங்கரதாஸ் சுவாமிகளையும், 'தமிழ் நாடகத் தந்தை' என்று பம்மல் சம்பந்த முதலியாரையும் இதயத்தில் வைத்துப் போற்றி வருகிறது''.[1]

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

'ஒரு நாடகம் சிறப்பாக இருக்கவேண்டுமானால், அந்த நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கும் நியதியும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும்' என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நாடக மேடை சீர்குலைந்திருந்த அந்த நாளிலேயே குரல் எழுப்பிய பெரியார், தமிழ் நாடகத் தலைமையாசிரியர் இவர். சுவாமிகள் நாடக அமைப்புத் திறன் தெரிந்தவர்; காட்சி அமைப்பின் நுணுக்கம் அறிந்தவர்; நாடகப்போக்கு அமைப்பதில் நயங்கண்டவர். நாடகப் பாத்திரங்கள் வாயிலாக வெளிவரும் பாடல்களிலும் உரையாடல்களிலும் நல்ல பல கருத்துகளைப் பெய்துவைத்தவர். நாடகம் பார்ப்போர் பண்பும் பயனும் பெறவேண்டுமென்று பாடுபட்டவர். சுவாமிகள் ஏறத்தாழ நாற்பது நாடகங்களை எழுதியுள்ளார். அபிமன்யு சுந்தரி, சீமந்தினி, பவளக்கொடி, சதியநுசூயா, பிரகலாதன், சிறுத்தொண்டர், சத்தியவான் சாவித்திரி சதி சுலோசனா, வள்ளி திருமணம் முதலிய நாடகங்கள் அவற்றுள் சிலவாகும். வடமொழி நாடகமான மிருச்சகடியையும், ஷேக்ஸ்பியர் நாடகமான ரோமியோ ஜூலியத், சிம்பலைன் ஆகியவற்றையும் தமிழ் நாடகங்களாக்கியுள்ளார். நாடகத்திற்குப் பாடல்களையும் இவரே எழுதுவார். இவருடைய நாடகப் பாடல்களில் உணர்ச்சிக்கே

---

1. திரு. ஔவை டி. கே. சண்முகம், நாட்டுக் கலை, ப. 25.

முதலிடம் தரப்பட்டிருக்கும். "ஒரே நாள் இரவில் நான்கு மணிநேரம் நடைபெறக்கூடிய ஒரே நாடகம் முழுவதையும் அடித்தல் திருத்தல் இல்லாமல் பாடல்கள், வசனங்களோடு எழுதி முடித்த மகத்தான தெய்வீக ஆற்றல் பெற்றவர் சங்கரதாஸ் சுவாமிகள். சுவாமிகள் இயற்றியளிய நாடகங்கள்தாம் தமிழ் நாடகக் கலைவளர்ச்சிக்கு, 'அடிப்படைச் செல்வங்கள்' என்று சொல்லலாம்."[1]

பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடகத்தின் மூலம் தம் கருத்திற்கு வடிவம் தந்து. தம் கொள்கைக்கு விளக்கம் தந்து ஆட்சிபீடத்தையே நாடகத்தின் மூலம் பிடித்த பெருமைக்கு உரியவர் ஆவர். 'நாடகமாடிகள்' என்று ஏச்சுக்கும் பேச்சுக்கும் கலைஞர்கள் ஆளாகியிருந்தபொழுது அரசியல், சமுதாய சீர்திருத்த நாடகங்களை எழுதி. மக்களிடையே ஒரு புரட்சியினையும், சிந்தனைக் கிளர்ச்சியினையும் உண்டாக்கி, அதன் விளைவாக மக்கள் மன்றத்திலேயே ஒரு மறுமலர்ச்சியினை உருவாக்கிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும். சம்பவங்கள் ஓர் இரவிற்குள்ளேயே முடிந்துவிடும் கதையமைப்புக் கொண்ட 'ஓர் இரவு' என்னும் நாடகத்தைப் பார்த்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இவரைத் 'தென்னாட்டுப் பெர்னார்டுஷா' என்று பாராட்டியுள்ளார். 'நீதிதேவன் மயக்கம்' சிந்தனையாற்றலைத் தூண்டிவிடுவதாகும்; நாடக உலகின் தனிச்சிறப்புப் பெற்றது, கம்பராமாயணத் திறனாய்வுக்கே அண்ணா நாடகம் வடிவம் தந்தது பிறர் செய்யாத அருஞ் செயல். அண்ணா தீட்டிய ஓப்பற்ற வரலாற்று நாடகம் சந்திரமோகன். இந்நாடகத்தில் இவரே குல்லுகபட்டராகத் தோன்றி நடித்தார். 'வேலைக்காரி' ஒரு சமூக சீர்திருத்த நாடகம். கருணாகரத் தொண்டைமானை மையமாக

---

1. திரு. டி. கே: சண்முகம், தமிழ் நாட்டில் நாடக வளர்ச்சி, மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர். ப. 223

வைத்துப் பின்னப்பட்ட நாவல் 'கலிங்க ராணி' யாகும். இந்த வரலாற்று நிலைக்களனையே பின்னர் ஜெகசிற்பியன் 'மதுராந்தகி' என்றும், கோவி. மணிசேகரன் 'செம்பியன் செல்வி' என்றும், சாண்டில்யன் 'கடல் புறா' என்றும் தம் கற்பனையைக் கூட்டி விரித்துப் பெரிய புதினமாக எழுதினார்,

நாடக உலகிற்கு அண்ணா ஆற்றிய அருந்தொண்டுகள் அளப்பிலவாகும்.

இன்று திரைப்படத்தோடு நாடகம் போட்டியிட வேண்டிய நிலையில் உள்ளது குறைந்த செலவில் இன்பமாகத் திரைப்படத்தினை மக்கள் பார்க்க இயல்வதால் நாடகம் முன்போல் நல்ல செல்வாக்கினை மக்களிடையில் பெற வாய்ப்பில்லை. ஆயினும், இந் நூற்றாண்டில் பல நாடக, ஆசிரியர் வாழ்கின்றனர். பல நாடக மன்றங்கள் தங்கள் தொண்டினை இத் துறைக்குச் செலுத்தி உயிரூட்டி வருகின்றன.

நாடகத்தமிழின் இன்றைய நிலை

இன்று நாடகம் நல்ல முறையில் வளர்ந்துவருகின்றது. திரு. பி. எஸ். ராமையா அவர்கள் எழுதிய 'தேரோட்டி மகன்', 'டாக்டருக்கு மருந்து' ஆகிய நாடகங்களும் திரு. கோமல் சுவாமிநாதன் அவர்கள் எழுதிய 'தில்லை நாயகம்' முதலிய நாடகமும் திரு. சகஸ்ரநாமம் அவர்கள் நடத்தும் 'சேவா ஸ்டேஜ்' குழுவினரால் நடத்தப்படுகின்றன. டி.. கே. எஸ். சகோதரர்கள் கல்கியின் 'சிவகாமியின் சபத'த்தினை அரங்கேற்றித் திறம்பட நடித்தனர். இதனை நாடக ஆக்கம் செய்தவர் கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியன் ஆவர். 'காதல்' ஆசிரியர் திரு. அரு. இராமநாதன் எழுதிய 'ராஜராஜ சோழன்' இக் குழுவினரின் புகழ்மிக்க நாடகமாகும். 'அப்பாவின் ஆசை' என்ற சிறுவர் நாடகத்தையும் அரங்கேற்றினர்.

இளைஞர் இருவர் இன்று நாடகத் துறையில் புதிய முறைகளைப் புகுத்தி மேனாட்டு நாடகங்களோடு நாடகங்கள் போட்டி இடும் வண்ணம் நவீன உத்திகளைக் (Techniques) கையாண்டு மேடையில் வெற்றி கண்டுவருகிறார்கள். ஒருவர் இப்பொழுது திரைப்பட இயக்குநராகிவிட்ட திரு. கே. பாலசந்தர் ஆவார். இவர் மனவுணர்ச்சிகளின் நெளிவு சுளிவுகளைப் புரிந்துகொண்டு, உணர்ச்சிக் கூத்தாடும் நாடகங்களை எழுதி, மேடையேற்றி வருகிறார். 'சர்வர் சந்தரம்', 'நீர்க் குமிழி', 'மெழுகுவத்தி', 'நாணல்,' 'எதிர் நீச்சல்', 'நவக்கிரகம்' பெண் பாத்திரம் இன்றி ஒரே அரங்கில் (Set) பாட்டும் இல்லாது நடைபெறும் நாடகமான 'மேஜர் சந்திரகாந்த்' முதலிய நாடகங்கள் இவர் எழுதியனவாகும். இந்த நாடகங்கள் திரைப்படமாக வந்தும் வெற்றி கண்டுள்ளன.

நாடக மேடையைத் தம்வயப்படுத்தியிருக்கும் மற்றோர் இளைஞர் திரு. 'சோ' ஆவார். இவர் மக்கள் பெரிதும் விரும்பி மகிழும் நகைச்சுவை நாடகங்களை எழுதி மேடையேற்றி வருகிறார். இன்றைய சமுதாயச் சூழலில் உள்ள குற்றங்குறைகளை இவர் நாடகங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. எனவே, இவர் நாடகங்கள் பொதுமக்கள் இடையில் நல்ல வரவேற்புப் பெறுகின்றன, 'மனம் ஒரு குரங்கு', 'சம்பவாமியுகே யுகே', 'கோவாடிஸ்', 'முகம்மது பின் துக்ளக்', 'யாருக்கும் வெட்கமில்லை', 'உண்மையே உன் விலை என்ன?' முதலியன இலர் எழுதி நடிக்கும் பிரபலமான நாடகங்களாகும்.

'ஆனந்த விகடன்' நிறுவனத்தினர் நடத்திய நாடக இலக்கியப் போட்டியில் திரு. முத்துசாமி என்பவர் எழுதிய 'கலங்கரைத் தெய்வம்? முதற்பரிசு பெற்றது.

இலங்கேஸ்வரன் மனோகர் குழுவினர் நடிக்கும் 'இலங்கேஸ்வரன்', 'சாணக்கிய சபதம்' (மதுரை திருமாறன் எழுதியது), 'காடக முத்தரையன்', 'துரோணர்', இரா. பழனிச்சாமியின் 'சூரபத்மன்', 'மாலிக் காபூர்', 'விசுவா

மித்திரர்' முதலிய இதிகாச சரித்திர நாடகங்கள் சிறந்த காட்சி அலங்காரத்தோடு செம்மையான முறையில் நடத்தப் பெறுகின்றன.

நடிகர் திலகத்தின் சிவாஜி நாடகமன்றம் முன்பு திரு. சக்தி கிருஷ்ணசாமி எழுதிய 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நாடகத்தினைச் சிறப்புற நடத்தி வந்தது. திரு. பாலமுருகன் எழுதியுள்ள 'நீதியின் நிழல்', திரு. ஜி. பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள 'தேன்கூடு', திரு. சக்தி கிருஷ்ணசாமி எழுதியுள்ள 'ஜஹாங்கீர்' முதலிய நாடகங்களைச் சிறப்புற நடத்தி வருகின்றனர். திரு. அகிலன் அவர்களின் சிறந்த படைப்பான 'வேங்கையின் மைந்தன்' என்ற புதினத்தை, திரு. சக்தி கிருஷ்ணசாமி, திரு. ஏ. பி. நாகராஜன் ஆகிய இருவரைக் கொண்டு நாடகமாக்கித் திறப்பட நடத்தினர். வியட்நாம் வீடு, தங்கப்பதக்கம் ஆகியன சிவாஜி மேடையில் அரங்கேறிப் பின் திரைப்படம் ஆகி வெற்றி கண்டன. எம்.ஜி.ஆர் நாடக மன்றம் முன்பு 'அட்வகேட் அமரன்', திரு. நா. பாண்டுரங்கன் அவர்கள் எழுதிய 'சுமைதாங்கி' (பின்னர் இந்நாடகம் 'நல்லவன் வாழ்வான்' என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது), 'இன்பக்கனவு' முதலிய நாடகங்களை நடத்திவந்தது. நடிகவேள் எம்.ஆர். ராதாவின் பிரபலமான நாடகம். 'ரத்தக்கண்ணீர்' பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்தது. நாடகத்தில் பகுத்தறிவுப் பிரசாசம் செய்தவர் திரு. எம் ஆர் ராதா ஆவர். இங்குக் குறிப்பிடப் பட்டவர்கள் எல்லாம் தொழில்முறை நாடகக் கலைஞர்கள் (Professionals) கோமல் சுவாமிநாதன் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட ஓரங்க நாடகங்களையும் சில மேடை நாடகங்களையும் எழுதியுள்ளார்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உரையாடலில் தீப் பொறி பறக்கும்; சிந்தனை சுடர்விட்டுத் தெறிக்கும். வளமான தமிழ் வந்து விளையாடும்; காதலைப்பற்றி வருணிக்குமபொழுது கொஞ்சு தமிழ் குலவும். இற்றை நாள் தமிழ் உரைநடைக்கு உரமும், வளமும் ஊட்டி வருபவர் இவர். காதலானாலும் சரி, வீரமானாலும் சரி, இவர் எழுது

கோல் உரைநடை தீட்டுவதில் தன்னிகரற்று விளங்குகிறது. 'திருவாளர் தேசியம் பிள்ளை' 'காகிதப்பூ' முதலியன தேர்தல் பிரசார நாடகங்களாகும். இவருடைய உரைநடை ஆற்றலால் வண்ணமும் எழிலும் பெற்று வெற்றிநடை போட்ட நாடகங்கள் பலவாகும். பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி, பூம்புகார், அணையாவிளக்கு முதலிய திரைப்படங்களில், இவர் வசன நடை கைவந்த கலைஞராய்த் திகழ்வதனைக் காணலாம்.

பேராவூரணிப் பக்கத்தில் இருக்கும் மனோகரா என்ற பகுதியை மையமாக வைத்து எழுதப்பெற்ற புதினம் 'புதையல்' ஆகும். இவரது 'ரோமாபுரி பாண்டியன்' பெரும்புகழ் பெற்ற வரலாற்றுப் புதினம் ஆகும்.

அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள சில நல்ல நாடகங்கள் பின்வருவன: ஒரு கிறித்தவனின் இதயத் தூய்மையை மையமாகக் கொண்டெழுந்துள்ள நாடகம் 'ஞான ஒளி' என்பது. கோவி. மணிசேகரனின் 'நான்கு திசைகள்', மணியனின் 'சொல்லத்தான் நினைக்கிறேன்' முதலியன தரமான நாடகங்களாகும்.

இவைகள் அல்லாமலும், எத்தனையோ பயில்முறை (அமைச்சூர்) நாடக மன்றங்கள் இப்போது இயங்கி நல்ல நாடகங்களை நடத்திவருகின்றன.

பிரபல எழுத்தாளர் சுஜாதாவும் நாடக உலகில் நுழைந்துள்ளார். 'ஒரு கொலை -ஒரு பயணம்?', டாக்டர் நரேந்திரனின் 'வினோத வழக்கு' ஆகிய இவருடைய நாடகங்களைப் பூர்ணம் விசுவநாதன் அரங்கேற்ற, மேடையில் புகழ் பெற்றுள்ளன. இவை நூல்களாக வெளிவந்துள்ளன.

இப்போது மனோகர் நாடகக் குழுவினரின் 'சுக்கிராச்சாரியார்,' எழுத்தாளர் 'மெரீனா' எழுதியுள்ள 'தனிக் குடித்தனம்' 'மௌலியின் 'ஒரு புல்லாங்குழல் அடுப்பூதுகிறது' ஆகிய நாடகங்கள் நல்ல வெற்றி கண்டுவருகின்றன.

தொலைக்காட்சி (television)யிலும் நாடகங்கள் இடம்பெறுகின்றன. நாவலாசிரியர் இந்திரா பார்த்தசாரதியும் நாடக மேடையில் புதுமுயற்சி மேற்கொண்டு வெற்றிகண்டுள்ளார்.

பரீக்ஷா என்னும் நாடகக் குழு, ஞாநி முதலியோரின் புதுமை நாடகங்களை மேடையேற்றிப் புரட்சி செய்து வருகின்றது.

இக் கால நாடகங்கள் பெரும்பாலும் நகைச்சுவைத் துணுக்குகளின் தொகுதிபோலக் காணப்படுகின்றன. நகைச்சுவையோடு நல்ல நாடகங்களை, கிரேசி மோகன், விசு ஆகியோர் எழுதி வருகின்றனர். 1980 இல் அரங்கேறிய கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர் தண்ணீர்' இன்றைய நாடகங்களில் சிறந்தது எனக் கூறலாம். இது புத்தகமாகவும் வெளிவந்து, 1981 இல் இலக்கியச் சிந்தனையின் பரிசு பெற்றுள்ளதுடன், திரைப்படமாக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழில் சிறுகதை வளர்ச்சி

இன்று தமிழில் மிகுதியாய் வளர்ந்துவரும் துறை சிறுகதைத் துறை எனலாம். மேலைநாட்டினர் தொடர்பால் தமிழ் உரைநடை வளர்ச்சி நல்ல திருப்பம் கண்டது. அதன் பயனாக உரைநடையில் பல திருப்பங்கள் ஏற்பட்டன. மேலும், பத்திரிகைகளின் வளர்ச்சி சிறுகதை நாவல்களின் விரைந்த வளர்ச்சிக்கு வித்தூன்றிவிட்டது.

முதற்கண் சிறுகதையின் இலக்கணத்தைச் சுருங்கக் காண்போம்: சுவையான நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு கவர்ச்சியான ஒரு காட்சி; நெருங்கிப் பின்னப் பட்ட சிறு நிகழ்ச்சிகள்; ஒருவரின் தனிப்பண்பு; ஒரு சிறு அனுபவம்; வாழ்க்கையின் ஒரு பெற்றி; அறவுணர்வால் விளைந்த ஒரு சிக்கல்—இவற்றுள் ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாய் அமையலாம். "சிறுகதை

களில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை; கதை மாந்தரின் பண்பை விளக்குவதற்கோ கதைநிகழ்ச்சியைப் புலப்படுத்துவதற்கோ ஏற்ற அளவிற்கு உரையாடல் அமையலாம். மேலும், சிறுகதை 'குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும்' என்பார் செட்ஜ்விக்.

தமிழில் பஞ்ச தந்திரக் கதைகளும், மதனகாமராஜன் கதையும், விக்கிரமாதித்தன் கதையும் மிகப் பழமையானவை. கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டிலே விளங்கிய வீரமாமுனிவர், 'பரமார்த்த குரு கதை முதலிய கதைகளைத் தமிழில் எழுதினார். அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார் 'விநோத ரச மஞ்சரி' என்னும் நூலை எழுதினார். இதில் அவர்தம் சிந்தனையிலே மலர்ந்த சிறுகதைப் போக்கான கதைகளைக் காணலாம்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த மாயூரம் வேதநாயகம்பிள்ளை (1824—89) அவர்கள் 'பிரதாப முதலியார் சரித்திரமும்' 'சுகுண சுந்தரி கதையும்' எழுதினார். இந்நூல்கள் இக்காலப் போக்குப்படி நாவல்கள் என்று கொள்ளப்பட்டாலும், இந் நெடுங்கதைக்கு இடையிடையே பல சிறுகதைகளும் மலர்ந்துள்ளன என்பதை நாம் அறிய வேண்டும். தனித்தமிழ்த் தந்தையார் மறைமலையடிகளார் (1876-1950) 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்னும் நூலினை எழுதினார். இந்நூல் கடிதத் தொகுப்பேயானாலும், ஒவ்வொன்றும் ஒரு சிறுகதையேபோலத் தோற்றமளிக்கின்றது. ஆயினும்—இவையெல்லாவற்றைக் காட்டிலும் வ.வே.சு. ஐயர் (1881—1925) அவர்கள் எழுதிய 'மங்கையர்க் கரசியின் காதல்' என்னும் நூல் சிறந்த சிறுகதைத் தொகுப்பு நூலாய் விளங்குகின்றது. சுப்பிரமணிய பாரதியார் கவிஞராக மட்டுமின்றிச் சிறுகதை ஆசிரியராகவும் நமக்குக் காட்சியளிக்கிறார். அவர் எழுதிய 'திண்டிம சாஸ்திரி', 'ஸ்வர்ண குமாரி' முதலான கதைகள் சிறந்த கதைகளாகும்.

புதுமைப்பித்தன்

மறைந்துபோன சிறுகதை எழுத்தாளர்களில் மூவர் புகழ்பெற்றவர். முதலாமவர், விருத்தாசலம் என்ற இயற் பெயரினைக் கொண்ட 'புதுமைப் பித்தன்' (1906—1948) ஆவர். இவரைச் 'சிறுகதை மன்னன்' என்றும், 'தமிழ் நாட்டின் மாப்பஸான்' என்றும் வழங்குவர். உலகத்தின் சிறந்த சிறுகதைகளை 'உலகத்துச் சிறுகதைகள்', 'தெய்வம் கொடுத்த வரம்' என்ற இவர்தம் மொழிபெயர்ப்புத் தொகுதிகளில் காணலாம். 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளை யும்' என்ற இவர்தம் கதை, பாத்திரப்படைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. 'அன்று இரவு' ஒரு நல்ல கதை. இவருடைய சிறுகதைகள் பல, 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன.

கு. ப. ரா.

இரண்டாமவர், கு. ப. ரா. எனச் சுருக்கமாக வழங்கப் படும் கு. ப. ராஜகோபாலன் ஆவர். கற்பனை, மனத் தத்துவம் என்ற இரண்டும் இவர் சிறுகதைகளில் களிநடம் புரிவதைக் காணலாம். 'காணாமலே காதல்', 'புனர்ஜன்மம்' 'கனகாம்பரம்' முதலான இவர்தம் சிறுகதை தொகுதிகள், தேனிலுமினிய செந்தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகளாகும். இவற்றுள் 'காணாமலே காதல்' சரித்திரச் சிறுகதைத் தொகுதியாகும். 'விடியுமா' என்ற இவர் கதைக்கு ஈடாகத் தமிழில் குறிப்பிட எந்த ஓர் கதையும் இல்லை எனலாம்.

கல்கி

மூன்றாமவர், சிறுகதை, நாவல் முதலான புதிய இலக்கியத் துறையில் தமக்கெனத் தனியானதோர் இடத் தினைப் பிடித்துக் கொண்டுள்ள 'கல்கி' எனப்படும் ரா. கிருஷ்ணமூர்த்தி ஆவர். இவரைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை எனலாம். எண்ணற்ற கதைகளை

இவர் ஆசிரியராய் இருந்த ஆனந்த விகடன், கல்கி பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார். 'காதறாக் கள்ளன்', 'மயில்விழி மான்', 'ஒற்றை ரோஜா' என்பவை இவர்தம் சிறந்த சிறு கதைப் படைப்புகளாகும்.

வ. ரா. பண்பட்ட எழுத்தாளர். இவர் புதுமை நோக்கம் கொண்ட கதைகளை வழங்கியுள்ளார். 'ராஜாஜி' தத்துவங்களைப் புகுத்தி எளிய முறையில் எழுதுவதில் தலைசிறந்தவர். இவர் கதைகள் 'ராஜாஜி கதைகள் என்ற நூலாய் வந்துள்ளன. திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் 'பவள மல்லிகை' ஓர் உயர்ந்த படைப்பாகும். 'கலைஞன் தியாகம்' என்னும் இவரது சிறுகதைத் தொகுதி மிகவும் பாராட்டப் படுவதாகும். திரு. டி. எஸ். ராமையா மணிக்கொடி பத்திரிகை மூலமும், தினமணிக் கதிர் வாரப் பதிப்பு மூலமும் பல நல்ல அரிய கதைகளைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

இன்றைய எழுத்தாளர்களில் 'சோமு' அவர்கள் பல முறை சென்னை அரசாங்கத்தின் சிறுகதைக்கான பரிசினைப் பெற்றுள்ளார். 'கல்லறை மோகினி' 'கேளாத கானம்' என்பவை இவர்தம் அரிய படைப்புகள். விந்தன், புரட்சி மனம் உடைய ஓர் எழுத்தாளர்; ஏழையின் நெஞ்சக் குமுறலை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவர். 'முல்லைக் கொடியாள்' என்ற இவர்தம் சிறு கதைத் தொகுதியில் உள்ள சிறுகதைகள் அனைத்தும் சிறுகதை மணிகள் எனலாம். டாக்டர் மு. வ. அவர்களின் 'விடுதலையா' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளும், 'குறட்டை ஒலி' என்ற சிறு கதையும் சிந்தனைக்கு விருந்தூட்டுவன.

பெண் எழுத்தாளர்களில் அநுத்தமா, 'லக்ஷ்மி' எனும் புனைபெயர் கொண்டுள்ள டாக்டர் திரிபுர சுந்தரி, வேங்கட லக்ஷ்மி, வசுமதி ராமசாமி, ராஜம் கிருஷ்ணன், ஆர். சூடாமணி, லட்சுமி சுப்பிரமணியம், கோமதி சுப்பிரமணியன் கிருஷ்ணா, குமுதினி, எம். எஸ். கமலா, எஸ். ரங்கநாயகி, ஆர். எஸ். ஞானாம்பாள், லக்ஷ்மி நாகராஜன், கல்கி

மங்களார் ஆனந்தி, உமா குருமூர்த்தி, கு. ப. சேது அம்மாள், சரோஜா ராமமூர்த்தி, குயிலி, எல். என். சியாமளா, விமலாராணி, கஸ்தூரி பஞ்சு, கோமகள், இந்திரா, கே. ஜெயலட்சுமி, துளசி ஜெயராமன், சரஸ்வதி ராம்நாத், வத்சலா கோபால கிருஷ்ணன், லட்சுமி ராஜரத்தினம், ஜோதிர்லதா கிரிஜா, வாஸந்தி என்போர் குறிப்பிடத் தக்கவர். வேங்கடலக்ஷ்மி எழுதிய 'மயிலும் மங்கையும்' என்ற சிறுகதை, சிறுகதை வரிசையில் சிறப்பிடம் பெறுவதாகும்.

ரா. கி. ரங்கராஜனின் படைப்பான 'பல்லக்கு' பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதி, 'பல்லக்கு' என்ற கதை ஓர் அரிய கருத்தினை நுண்மையான முறையில் விளக்குகின்றது. 'நிலா நனையுமா?' என்ற இவர்தம் கதையும் ஓர் அரிய படைப்பாகும். அகிலனின் 'இதயச் சிறையில்' ஒரு நல்ல சிறுகதை. 'நிலவினிலே, என்னும் இவர்தம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்தும் சுவைமிக்கன. இன்று சிறுகதைத் துறையில் மேலைநாட்டு மாப்பஸான் போன்று புகழ் பெற்று விளங்குபவர் ஜெயகாந்தன். இவர் தம் 'யாருக்காக அழுதான்?' என்னும் சிறுகதை ஓர் அரிய கதை. இது திரைப்படமாகவும் வந்தது. இவர் எழுதிய 'உதயம்', 'ஒரு பிடி சோறு', 'இனிப்பும் கரிப்பும்' முதலிய சிறு கதைகள் சிந்தனைக்கு விருந்தூட்டுபவை. சமுதாயத் தில் இருண்டு கிடக்கும் பகுதிகளை இவர் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். புரையோடிப்போன—செல்லரித் துப் போன சமுதாயத்தின் பலவீனமான பகுதியினை இவர் அலசிக் காட்டுகின்றார்.

அறுநூறுக்கு மேற்பட்ட சரித்திரச் சிறுகதைகளை எழுதிக் குவித்தவர் கோவி. மணிசேகரன். இவருடைய 'சரித்திரக் கதைக் களஞ்சியம்', காளையார் கோயில் ரதம்', 'உயிரும் ஒளியும்' சரித்திர சமூகச் சிறுகதைத் தொகுதிகள் மிக்க நயமும் சுவையும் உடையன.

ந. பிச்சமூர்த்தி பழம்பேரெழுத்தாளர்; மணிக்கொடி எழுத்தாளர். இவர் எழுதிய 'மோகினி' முதலிய கதைகள்

சிறந்தன. தி. ஜானகிராமனின் 'சிவப்பு ரிக்ஷா', 'கொட்டு மேளம்' நல்ல சிறுகதைத் தொகுதிகளாகும். இவரது 'சக்தி வைத்தியம்' சிறுகதைத் தொகுதி 1979இல் சாகித்திய அகா தெமியின் பரிசு பெற்றது. ல. சா. ராமாமிருதம் எழுதும் கதைகளை மேலோட்டமாகப் படித்தால் பொருள் விளங்காது. சிறிது சிந்தனைச் செறிவோடு ஆழ்ந்து கவன மாகப் படித்தால்தான், அக் கதைகளினூடே ஆழ்ந்த மறை பொருள்—தத்துவம் ஒன்று நிழலாடுவதைக் காண இயலும். ஜெகசிற்பியனைச் சிறந்த சிறுகதை எழுத்தாளர் வரிசையின் முன்னணியில் வைக்கலாம். இவருடைய 'நரிக்குறத்தி', 'நொண்டிப் பிள்ளையார்' நல்ல படைப்புகள். இவர் சிறு கதைகள் அனைத்தும் நல்ல சுவையினை நல்குவன.

நா. பார்த்தசாரதி, தமிழ் இலக்கியம் பயின்றவர். புதுமை இலக்கியம் உணர்ந்தவர். பழமையில் கால்கொண்டு புதுமையில் கிளைவிடும் இவர் கதைகள் அரிய படைப்பு களாய் உள்ளன. 'மூவரை வென்றான்' என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகள் மிகுந்த சுவைநலங் கொண்டன வாகும். டி. கே. சீனிவாசன் ஓர் அற்புதமான சிறுகதை எழுத்தாளராவர். ஆழ்ந்த கருத்துகளை உள்ளடக்கியன வாக இவர் சிறுகதைகள் பளிச்சிடும். 'எல்லைக்கு அப்பால்', 'துன்பக் கதை', 'குறள் கொடுத்த குரல்' ஆகியன இவர்தம் சிறுகதைத் தொகுதிகள். பம்பாய்ச் சூழலை வைத்துச் சுவை யாகக் கதை பின்னுபவர் மாயாவி. 'சாவி' நகைச் சுவை நயமிக்க சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர்.

வ. சா. நாகராசனின் 'வெள்ளம்', கு. ப. ராவின் 'விடியுமா'விற்குப் பின்னர்த் தமிழில் வந்த சிறந்த சிறுகதை எனலாம். கலைமகளில் வெளியான அகிலனின் 'எரிமலை' உயர்ந்த சிறுகதை. கோவி. மணிசேகரன் ஔரங்கசீபைப் பாத்திரமாகக் கொண்டு எழுதிய 'பாதுஷாவின் பாதுகை' சிறந்த கதையாகும். ஷாஜகானைப் பாத்திரமாகக் கொண்டு எழுதிய 'கண்ணே, கனியே, கற்கண்டே', ஆனந்த விகடனில் வந்த சமூகக் கதையாகும். 'அதுவும் அங்கே முடியுமானால்'

என்ற கதையும், கடையெழு வள்ளல்களைப் பற்றிய தனித் தனிச் சிறுகதைகளும் அண்மைக்கால உயரிய அரிய படைப்பு களாகும்.

1980 ஆம் ஆண்டில் தமிழக அரசின் முதற்பரிசு, ஜெக சிற்பியனின் 'ஒரு பாரத புத்திரன்' என்னும் சிறுகதைத் தொகுதிக்கும், இரண்டாம் பரிசு மணிசேகரன் எழுதிய 'கோவியின் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுதிக்கும் கிடைத்துள்ளன.

இன்று இத்துறையில் எண்ணற்றோர் சிறக்க எழுதி வருகின்றனர். ஸோமாஸ், சுபாஸ்ரீ, ஸ்ரீரங்கம் நரசிம்மன், சுகி சுப்பிரமணியன் முதலிய பழம் பேரெழுத்தாளர்களோடு தாமரை மணாளன், ராஜேந்திரகுமார், புனிதன், இனியவன், ஜ. ரா. சுந்தரேசன், பூவை எஸ். ஆறுமுகம், டி. கே. பட்டுசாமி, சுஜாதா, ஆதவன், வண்ணநிலவன், வையவன், வே. சபாநாயகம், சு. சமுத்திரம், சுபா, அழகாபுரி அழகப்பன், பூமணி முதலியோர் இத் துறையில் முன்னேறி வருகின்றனர்.

சிறந்த சிறுகதைகள்

தற்காலத்தை 'சிறுகதைகளின் யுகம்' என்று சொல்வது மிகையாகாது. காப்பியத்தின் இடத்தை நாடகம் கைப் பற்றியது. நாடகத்தின் இடத்தை நாவல் பிடித்துக்கொண்டது. நாவலின் இடத்தைச் சிறுகதை கைப்பற்றிக் கொண்டது என்று கூறலாம். இலக்கியப் பிரிவுகளில் சிறு கதையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

இன்று தமிழகத்தில் ஐம்பதாயிரம் பிரதிகளுக்கு மேலே விற்பனையாகும் வார இதழ்கள் மட்டும் ஆறுக்கு மேலே யுள்ளன. இவற்றோடு மாத இதழ்கள், மாதம் இருமுறை இதழ்கள், நாளிதழ்களின் வாரமலர்கள் முதலியனவும் சிறுகதைகளைத் தவறாமல் வெளியிட்டுவருகின்றன. இவை அனைத்திலும் சேர்ந்து மிகக்குறைந்த அளவாகக் கணக்கிட்

டாலும் மாதந்தோறும் நானூறு சிறுகதைகள் வெளியாகின்றன. ஆண்டுக்குச் சுமார் நான்காயிரத்து எண்ணூறு கதைகள் பிரசுரமாகின்றன. இக் கதைகளின் தன்மை என்ன, தரம் என்ன என்பதைத் தொடர்ந்து மதிப்பிடுவது சிறந்த இலக்கியத் தொண்டாகும்.

சென்னையில், ப. இலட்சுமணன், ப. சிதம்பரம், ப. பாரதி என்னும் உடன் பிறந்தோர் 'இலக்கியச் சிந்தனை' என்னும் ஓர் அமைப்பை நடத்திவருகிறார்கள். இலக்கியச் சிந்தனை ஒவ்வொரு திங்களும் கடைசிச் சனிக்கிழமையில், ஒரு சிறந்த எழுத்தாளரைக் கொண்டு, அதற்கு முந்திய மாதத்தில் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பிடச் செய்து, சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் செய்கின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை, குறிப்பிட்ட மாதத்தின் சிறந்த கதையாக அறிவிக்கப்பட்டுப் பரிசளிக்கப்படுகிறது. இவ்வாறு ஜனவரி முதல் டிசம்பர் வரை இலக்கியச் சிந்தனை தேர்ந்தெடுக்கும் பன்னிரண்டு சிறுகதைகளையும், ஒரு சிறந்த திறனாய்வாளரிடம் அளித்து, அவற்றுள் சிறந்த ஒரு கதையைத் தேர்ந்தெடுக்கச் செய்து, அதனை அந்த வருடத்தின் சிறந்த சிறுகதையாக அறிவித்துப் பரிசளிக்கிறார்கள். வருடத்தின் பன்னிரு சிறுகதைகளையும் நூலாக வெளியிட்டு, அதற்கு வருடத்தின் சிறந்த சிறுகதையின் தலைப்பையே தலைப்பாகத் தருகிறார்கள். இது தொடர்ந்து நடந்துவருகிறது.

1978, 79, 80 ஆகிய மூன்றாண்டுகளில், பசி, அற்பஜீவிகள், சின்னம்மிணி ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகள் இலக்கியச் சிந்தனை தேர்ந்தெடுத்த கதைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1978 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதை 'பசி', இதனை எழுதியவர் மும்தாஜ் யாசின். 1979 ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதை 'அற்பஜீவிகள்'; இதை எழுதியவர் மலர் மன்னன். 1980 ஆம் ஆண்டில் சிறந்த சிறுகதை சின்னம்மிணி; இதை எழுதியவர் திருப்பூர்

கிருஷ்ணன். ஒரு தொகுதியிலுள்ள பன்னிரு சிறுகதைகளைப் படித்தால், அந்த ஆண்டின் சிறு கதைகளின் தரம் எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ளலாம். கதைகளின் திறனாய்வுக் கட்டுரையும் நூலின் முற்பகுதியில் உள்ளது.

இலக்கியச் சிந்தனை அளிக்கும் இச் சிறுகதைத் தொகுதிகள் 'தமிழகத்தின் சிறுகதைக் கலை, சிறுகதைத் திறனாய்வுக் கலை' ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கும் துணை செய்கின்றன. 'கல்கி' இதழும் ஆண்டுதோறும் அமரர் கல்கி நினைவாகச் சிறுகதைப் போட்டி நடத்திச் சிறுகதைக் கலை வளம்பெறத் துணை செய்கிறது.

அண்மைக் காலத்தில் ஒரு சிறுகதைக்குப் பரிசாக அளிக்கப்பட்ட பெருந்தொகை ரூபாய் பத்தாயிரம். ஆனந்த விகடன் தனது வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசாகப் பத்தாயிரம் ரூபாய் அளித்தது. அண்மைக் காலத்தில் புனைகதை உலகில் புகுந்து மிக விரைவில் பெரும் புகழ் பெற்றுவிட்ட அனுராதா ரமணன் 'சிறை' என்னும் சிறுகதைக்காக இப் பத்தாயிரம் ரூபாய்ப் பரிசைப் பெற்றார். ஒரு சிறுகதைக்கு இவ்வளவு பெரிய தொகையை வேறு எந்த மொழியிலும் அளித்திருப்பதாகத் தெரியவில்லை.

குட்டிக் கதைகள்

சிறுகதை என்பது சிறிய கதை என்னும் பொருளது. முன்பெல்லாம் ஒரு பத்திரிகையில் வரும் சிறுகதை ஐந்து பக்கம் இருக்கும். சில கதைகள் இருபது பக்க நீளமும் பெற்றிருக்கும். ஆனால், சின்னஞ்சிறு கதையாக, ஒரே ஒரு பக்கத்தில் சிறுகதைகளை நிறைய வெளியிடும் போக்குத் தற்போது காணப்படுகிறது. ஆனந்தவிகடனில் 'சசி' என்பவர் ஒரு பக்கக் கதைகளை ஒரு காலத்தில் எழுதி வந்தார். கல்கியில் 'விந்தன்' அவர்கள் ஒரு பக்கக் கதைகளைக் 'குட்டிக் கதைகள்' என்னும் பெயரில் வழங்கினார். இப்போதோ,

எந்தப் பத்திரிகையை எடுத்தாலும் ஒரு பக்கக் கதைகள் நான்கைந்தை ஒரே இதழில் காணமுடிகிறது. சில சந்தர்ப் பங்களில், பத்து, இருபது ஒரு பக்கக் கதைகளையும் இப் பத்திரிகைகள் ஒரே இதழில் வழங்கி வருகின்றன. ஆற அமரப் படித்துச் சுவைப்பதற்குப் போதுமான ஓய்வு கிடைக்காத காலம் இது. மனிதனும் இயந்திரகதியில் விரைவாகச் செயல்படுகின்றான். அதனால் பேருந்தை எதிர்பார்த்துக் காத்து நிற்கையில், பேருந்தில் பயணம் செல்கையில், சில நிமிடங்களில் படித்து முடிக்கக்கூடிய இக் 'குட்டிக் கதைகளுக்கு வாசகர்களிடம் வரவேற்பு இருக்கிறது. சில ஆண்டுகளில் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில், 'குட்டிக் கதை இலக்கியம்' என்று ஒரு பிரிவு தோன்றினாலும் வியப் படைவதற்கில்லை.

தமிழில் நாவல் வளர்ச்சி

மனித மனம் கதையிலும் வரலாற்றிலும் ஆர்வம் காட்டுவது; உணர்ச்சிகளுக்கு ஒரு வடிவம் தரவேண்டும் என்று விரும்புவது. ஒருவர் வாழ்வே நாவல் எனலாம். எனவேதான், மேலைநாட்டு ஆசிரியர் ஒருவர் சாதாரண மனிதர்கூடத் தத்தம் வாழ்வினையே வடித்தெடுத்தெழுதி னாற்கூட ஒரு நாவலாகிவிடும் என்று கூறிப்போந்தார்.

மேலை நாட்டார் தொடர்பால் வளர்ந்த துறை, இந்த நாவல்துறை. முதற்கண் நாவலில் இலக்கணத்தை ஓரளவு காண்போம். நம் வாழ்க்கையை அவ்வாறே எடுத்துக் காட்டுவதாகக் கதை அமைய வேண்டுவதில்லை. வாழ்க்கை யோடு இயைந்ததாக அமைய வேண்டும்; மக்களின் வாழ்க்கையைவிட உயர்ந்த வாழ்க்கையாக பெருமைமிக்க வாழ்க்கையாக—ஆற்றல்மிக்க வாழ்க்கையாகக் கதையின் கற்பனை அமையலாம். ஆயினும் மக்களின் உணர்ச்சி களையும் குறிக்கோள்களையும் ஒட்டியதாகவே அந்தக்

கற்பனை வாழ்க்கை அமைதல்வேண்டும்.....கூடியவரையில் ஆசிரியர், தமக்கு நன்கு தெரிந்த வாழ்க்கைப் பகுதிகளையும் இடங்களையும் அமைத்தே நாவல் எழுதுதல் நல்லது.[1]

மேலை நாட்டார் தொடர்பால் தோன்றிய இந் நாவல் துறை சென்ற நூற்றாண்டின் இறுதியில் சிறப்புடன் தொடங்கியது. மாயூரத்தில் முனிசீப் வேலை பார்த்த வேதநாயகம் பிள்ளையவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து தமிழ் நாவல் தொடங்குகின்றது. இந் நாவல் வெளிவந்த காலம், கி. பி. 1879ஆம் ஆண்டாகும். அடுத்து, இவர் எழுதிய 'சுகுண சுந்தரி கதை' (1887) புதினத்தின் பல கூறுகள் கொண்டுள்ளது. 1865இல் சித்தி வெவ்வை மறைக்காயர் முகமது காசிம் என்னும் இலங்கை வாசி எழுதிய 'அசன்பேயுடைய கதை' தமிழின் இரண்டாவது நாவலாகவும், இலங்கையின் முதல் தமிழ் நாவலாகவும் திகழ்கிறது. 1893ஆம் ஆண்டில் ஸு. வை. குருஸ்வாமிசர்மா என்பவர் 'பிரேம கலாவத்யம்' என்னும் குடும்பச் சூழ்நிலை கொண்ட நாவலை எழுதினார். 1893இல் அ. மாதவய்யா எழுதத் தொடங்கிய 'சாவித்திரி சரித்திரம்' அரைகுறையாய் நின்றுவிட்டது. 'பிரபுத்த பாரத' என்னும் ஆங்கில வேதாந்த பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த ராஜமையர், கமலாம்பாள் சரித்திரத்தை இதே காலத்தில் (1896) வெளியிட்டார். வத்தலக்குண்டில் இருபத்தாறே ஆண்டுகள் வாழ்ந்து இளமையிலேயே மறைந்த இவருடைய நாவலில், மனித வாழ்வும் தத்துவமும் பின்னிப் பிணைந்துள்ள சிறப்பினைப் பார்க்கலாம். இந்நாவலில் வரும் தலைவர் முத்துசாமி ஐயர்; தலைவி கமலாம்பாள். அடுத்து இந் நாவலில் வரும் தமிழ் வித்துவான் அம்மையப்பப் பிள்ளை மறக்கமுடியாத ஒரு பாத்திரமாவர். 1894ஆம் ஆண்டு 'தானவன்' என்னும் நாவலை எழுதிய பண்டித ச. ம. நடேச சாஸ்திரி, 1900ஆம் ஆண்டில் 'தீனதயாளு' எனும் நல்லதொரு நாவலை

---

1. டாக்டர் மு. வ. இலக்கிய மரபு—பக்கம், 113-114.

எழுதினார். 1902இல் இவருடைய, 'திக்கற்ற இரு குழந்தைகள்' எனும் நாவலும், 1903ல் 'மதிகெட்ட மனைவி' எனும் நாவலும் வெளிவந்தன. 1898-ல் பத்மாவதி சரித்திரத்தின் முதல் பாகமும், 1899-ல் இரண்டாம் பாகமும் வெளிவந்தன. இந் நாவலின் ஆசிரியர் அ. மாதவய்யா. இந்த நாவல்கள் வரலாற்றின் தொடக்கக் காலத்தனவாகும்.

மேலைநாட்டு நாவல்களில் வரும் பெயர்களையும் சம்பவங்களையும் தமிழ்ப் பாத்திரங்களின் உடையிலும் நடையிலும் உலவவிட்டுச் சில நாவல்கள் தமிழில் வந்தன. ரெயினால்ட்ஸ் (Reynolds) நாவல்கள் தமிழ் உருவம் கொண்டன. இத் துறையில் முதன்முதல் இறங்கியவர் ஆரணி குப்புசாமி முதலியார். இவர் நாவல்கள் அக்காலத்தில் மிகவும் பிரபலமானவை.

அடுத்து வந்த வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆங்கில நாவல்களைத் தழுவித் தமிழ்நாட்டு நிலைக்களன்களையும் சூழல்களையும் புகுத்தித் தமிழ் நாவல்கள் எழுதினார். இவர் எழுதிய நாவல்களில் மேனகா, திகம்பர சாமியார் அல்லது கும்பகோணம் வக்கீல் ஆகிய இரண்டும் சிறப்புடையன. இவை திரைப்படங்களாக்கப்பட்டுப் புகழ்பெற்றன. ஜே.ஆ. ரங்கராஜு என்பவர் பல துப்பறியும் நாவல்களை எழுதினார். இராஜாம்பாள், சந்திரகாந்தா என்னும் நாவல்கள் இவர் எழுதிய நாவல்களில் புகழ் பெற்றன. மேலைநாட்டு நாவல்களில் வரும் ஷெர்லாக் ஹோம்ஸ் போன்று இவர் நாவல்களில் துப்பறியும் கோவிந்தன் வருவார். ரங்கூன் தி. ம. பொன்னுசாமிப் பிள்ளை மர்ம நாவல்கள் பலவற்றை எழுதினார். டி.டி. சாமி என்பவர் 'கருங்குயில் குன்றத்துக் கொலை' எனும் நாவலை எழுதி வெளியிட்டார்.

கே. எஸ். வேங்கடரமணி எனும் காந்தி பக்தர், காந்திய நோக்குடன், 'தேச பக்தன்', 'முருகன் ஓர் உழவன்' என்னும் நாவல்களை எழுதினார்; இவர் ஆங்கிலத்திலும் அருமையாக

எழுதக்கூடியவர். வை. மு. கோதைநாயகி அம்மாள் அக்காலப் பெண் எழுத்தாளர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க வராவர். இவர் எழுதிய நாவல்கள் மிகப் பலவாகும். பெண்ணின் மன ஆழத்தை விளக்குவனவாகவும், வாழ்வின் துன்பப் பகுதிகளைத் தொடுவனவாகவும் இவர் நாவல்கள் அமைந்துள்ளன. இவர் நாவல்களுள் சில திரைப்படமாயின.

ரெயினால்ட்ஸ் எழுதியதொரு நாவலை மறைமலையடிகள் 'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' எனத் தமிழில் நாவலாகத் தந்தார்.

கல்கி

கல்கி அவர்களைத் தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட்டு (Walter Scott) என்பர். சுவையாகக் கதையை வருணித்துச் செல்வதில் இவருக்கு நிகர் இவரே. தமிழ் நாட்டில் தொடர் கதை படிக்கும் ஆர்வத்தினையும் வேகத்தினையும் ஊட்டியவர் இவரே ஆவர். இந் நூற்றாண்டின் மிகச் சிறந்த எழுத்தாளரான இவர் தொடக்கத்தில் 'கள்வனின் காதலி', 'தியாக பூமி' எனும் நாவல்களைத் தொடர் கதைகளாக எழுதினார். பின்னர் வீணை பவானி, மகுடபதி, சோலை மலை இளவரசி முதலிய நாவல்கள் வெளிவந்தன. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியில் எழுதப்பெற்ற சுவையான புதினம் 'அலையோசை' ஆகும். இது சாகித்திய அகாதமியின் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றது. இவர் இறுதியாக எழுதிய புதினம் 'அமரதாரா' என்பது. இவரால் தொடங்கப்பட்ட இப் புதினம் இவர் மகளார் ஆனந்தியால் முடிக்கப்பட்டது.

தமிழில் வரலாற்றுப் புதினங்களை முதன் முதல் சிறக்க எழுதிப் பின் வந்தோர்க்கு வழிகாட்டியாய் விளங்கியவர் கல்கியே. இத் துறையின் தந்தை இவரே. முதலில் இவர் எழுதிய வரலாற்றுப் புதினம் (Historical Novel) 'பார்த்திபன் கனவு' ஆகும். பல்லவரின் சிறந்த காலத்தைச் சித்திரிக்கும் மற்றோர் அற்புத நாவல் 'சிவகாமியின் சபதம்', இந் நாவலில்

வரும் சிவகாமி கற்பனைப் பாத்திரமே யானாலும், நெஞ்சை விட்டு என்றென்றும் அகலாத நினைவுப் பாத்திரமாகும். சோழர்களின் பொற்காலத்தையொட்டி எழுந்த மிகச்சிறந்த புதினம் 'பொன்னியின் செல்வன்', கல்கியில் ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகள் வாரந்தோறும் தொடர்கதையாக வந்த இந்த நாவல், மிக அரிய படைப்பாகும். இக் கதையில் வரும் 'நந்தினி' என்னும் பாத்திரம் போன்ற பாத்திரப் படைப்பு இதுவரை எழுத்தாளர்கள் படைத்து உலவவிட்ட பாத்திரங்களில் மணிமுடியான பாத்திரமாகும். புரியக்கூடிய எளிய தமிழில் (ஜனரஞ்சகம்) எழுதி, வாசகர்களின் நெஞ்சங் களையெல்லாம் கொள்ளைகொண்ட இவர், இன்று நம் மிடையே இல்லை.

வரலாற்றுப் புதினங்கள்

கல்கியை அடியொற்றிப் பலர் சரித்திர நாவல்களை எழுதி வருகின்றனர். இத்துறையில் சாண்டில்யன் குமுதம் பத்திரிகை மூலம் எண்ணற்ற வாசகர்களைப் பெற்று முன்னணியில் நிற்கிறார். இவருடைய தொடக்ககால நாவல்களான 'மலைவாச'லும் 'ஜீவபூமி'யும் என்றும் வாழும் தகுதிபடைத்த நாவல்களாகும். சுவை பயக்கச் சொல்லப்பட்ட நாவல்கள் இவை எனலாம். இவர் எழுதும் நாவல்களின் அத்தியாயங்களின் முதல் தொடர் (வாக்கியம்) மிகவும் நீண்டனவாக இருக்கும். சுற்றிச்சுற்றி வரும். குமுதத்தில் இவர் எழுதிய கன்னி மாடம், மன்னன் மகள், யவன ராணி, கடல்புறா, ஜலதீபம் முதலிய தொடர்கதை கள் அலுப்புத் தட்டாமல் படிக்கக்கூடிய வகையில் அகச் சுவையும் புறச்சுவையும் ஒன்றையொன்று விஞ்சும் வகையில் அமைந்துள்ளன. இவரது 'ராஜபேரிகை' என்னும் ராபர்ட் கிளைவ் பற்றிய வரலாற்று நாவலை, கல்கத்தாவில் உள்ள பாரதீய பாஷா பரிஷத் என்னும் அமைப்பு 1981இல் சிறந்த தமிழ் இலக்கியம் எனத் தேர்ந்தெடுத்து, ரூபாய் பதினோ ராயிரம் பரிசளித்துள்ளது.

மற்ற எல்லோரைக் காட்டிலும் வரலாற்று நூல்களை மிகவும் அக்கறையோடும் நுணுக்கமாகவும் ஆர்வத்தோடும் படித்து, நாவல்கள் சமைப்பவர் கோவி. மணிசேகரன். 'செம்பியன் செல்வி', கலிங்கத்துப் பரணியினை அடியொற்றி எழுதப்பட்ட சுவை மிகுந்த புதினம். களப்பிரர் காலத்தை யொட்டியெழுந்தது 'முகிலில் முளைத்த முகம்', 'பொற் காலப் பூம்பாவை' விசயநகர வேந்தர்காலச் சூழ்நிலையில் படைக்கப்பட்ட அருமையான புதினமாகும். 'பொன் வேய்ந்த பெருமாள்' தமிழ்ச் சூழ்நிலையில் நடமாடும் நல்ல புதினமாகும். இவர் எழுதிய 'சந்திரோதயம்' நினைவில் நிற்கும் புதினமாகும். தட்சண பயங்கரன், சேரன் குலக் கொடி, சுமித்திரை, அசோகன், செஞ்சி அபரஞ்சி, குடவாயிற் கோட்டம், தென்றல் காற்று எனும் ரஷ்ய சரித்திரப் புதினம், காஞ்சிக் கதிரவன், ரத்த ஞாயிறு, அஜாத சத்ரு ஆகியவை இவர் எழுதிய நல்ல வரலாற்றுப் புதினங் களாகும்.

அகிலன் எழுதிய 'வேங்கையின் மைந்தன்' ஓர் உயரிய படைப்பு. இந்நூல் சாகித்திய அகாதெமியின் ஐயாயிர ரூபாய்ப் பரிசினைப் பெற்றது. சோழர் காலச் சூழ்நிலையில் எழுந்த இந்நாவலில் வரும் 'ரோகிணி' என்னும் கற்பனைப் பாத்திரம் கனவிலும் நினைவிலும் நிழலாடுகின்றது 'கயல் விழி', 'வெற்றித் திருநகர்' இவர் எழுதிய பிற சிறந்த வரலாற்றுப் புதினங்களாகும்.

ஜெகசிற்பியன், ஆனந்த விகடன் நாவல் பரிசுப் போட்டி யில் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைத் தம்முடைய 'திருச்சிற்றம் பலம்' என்னும் வரலாற்று நாவலுக்காகப் பெற்றார். படிக்கப் படிக்கச் சுவையும் திகிர்த் திருப்பமும் கொண்ட நாவல் இது. மேலும், இவர் நாயகி நற்சோணை, ஆலவாய் அழகன், மகர யாழ் மங்கை, பத்தினிக் கோட்டம் முதலிய நாவல்களையும் வடித்துள்ளார். காதல் ஆசிரியர் அரு. இராமநாதன் எழுதிய 'வீரபாண்டியன் மனைவி' மிகச்சிறந்த படைப்பாகும். இக் காதையில் வரும் ஊர்மிளா, வீரசேகரன், ஜனநாதன் மறக்க முடியாத பாத்திரங்கள். இவருடைய 'அசோகன்

காதலி' சரித்திர நாவல்களில் ஒரு காவியச் சிறப்புப் பெறு கிறது. காருவகி நல்ல பாத்திரம். விக்கிரமன் எழுதிய 'உதய சந்திரன்', 'நந்தி புரத்து நாயகி', 'காஞ்சி சுந்தரி' என்பன நல்ல வரவேற்பைப் பெற்ற நாவல்களாகும். இவர் வரலாற் றிற்குப் புறம்போகாமல் எழுதக் கூடியவர்...சோமுவின் 'கடல் கண்ட கனவு', 'வெண்ணிலவுப் பெண்ணரசி' பழந் தமிழகப் பண்பாட்டைப் பரக்கப் பேசும் பொற் சித்திரங்களா கும். நா. பார்த்தசாரதியின் 'பாண்டிமா தேவி' நல்ல நாவலாகும். இதில் வரும் மகா மண்டலேசுவரரை நாம் எளிதில் மறக்க இயலாது. 'மணிபல்லவம்' இவர் எழுதிய மற்றொரு நல்ல நாவலாகும்.

வரலாற்று நாவல்களைச் சுவையுற எழுதும் மற்றோர் எழுத்தாளர் பூவண்ணன். இருவடைய 'காந்தளூர்ச் சாலை' 'கொல்லி மலைச் செல்வி' சிறந்த வரலாற்றுப் புதினங்கள் என்று குறிப்பாகச் சொல்லலாம். ஆர்வி.யின் 'ஆதித்தன் காதல்'. மாயாவியின் 'மதுராந்தகியின் காதல்', கி. ரா. கோபாலனின் 'மாலவல்லியின் தியாகம்' முதலியன தமிழ் மக்களுக்கு வரலாற்று நாவல் படிப்பதில் உள்ள மோகத் தினால் பிறந்தவை.

நாட்டியக் கலைக்கு முதன்மை தந்து, பல்லவர் கால வரலாற்றுப் பின்னணியில் எழுந்த கதையே கோவி. மணிசேகரனின் 'ராஜசிம்மனின் காதலி'. கொற்கை சுந்தர பாண்டியனை மையமாக வைத்துக் கற்பனையை நெடுகப் படரவிட்டுச் சுவைபயக்கச் சாண்டில்யனால் எழுதப்பட்ட கதை 'ராஜ முத்திரை', கலைஞர் மு. கருணாநிதி அவர் களின் 'ரோமாபுரிப் பாண்டியன்', 'தென்பாண்டிச் சிங்கம்', தாமரைமணாளன் எழுதிய 'அந்தப்புரம்', ஸ்ரீ வேணு கோபாலன் எழுதிய 'திருவரங்கன் உலா', 'சுவர்ணமுகி', மு. மேத்தாவின் 'சோழநிலா', கி. ராஜேந்திரனின் (செம்பியன்) 'ரவிகுல திலகன்' ஆகியன அண்மைக் காலத்தில் வெளிவந்த இனிய வரலாற்றுப் புதினங்களாகும்.

சமுதாய நாவல்கள்

டாக்டர் மு. வ.

இத் துறையில் ஈடு இணையற்ற புகழ்பெற்றவர் டாக்டர் மு. வ. அவர்களே ஆவர். இவருடைய நாவலைப் படிப்போர் மனத்தூய்மை பெறுவர். சங்க இலக்கியத்தின் சாரமான கருத்துகளை எல்லாம் இவர் நாவலில் காணலாம். தூய தமிழ் நடையில் இவர் நாவல்கள் அமைந்திருக்கும். மங்கை, தேன்மொழி, மலர்விழி, அல்லி, அறவாழி, அருளப்பன், மணி முதலிய தூய தமிழ்ப் பெயர்கள் இவர் நாவல்களில் இடம்பெற்ற பின்னரே, பலரும் இத்துறையில்—பாத்திரங்களுக்குப் பெயர்வைக்கும் துறையில் இவரைப் பின்பற்ற முனைந்தனர். 'பாவை' தொடக்ககால நூல். 'அந்த நாள்' பர்மாவிலிருந்து தமிழர் ஓடிவந்த நிகழ்ச்சியினை அவலந் தோற்ற வருணிக்கின்றது. 'செந்தாமரை' ஓர் உயரிய இலக்கியப் படைப்பு. ஒழுக்கத்தில் வழுக்கி விழுவோர்க்கு எச்சரிக்கை தரும் நாவல் 'அல்லி'. 'கயமை' ஒரு புரட்சிப் படைப்பு. நாவலின் தலைப்பே புரட்சி அன்றோ. 'மலர் விழி' பண்பைப் பறைசாற்றும் நாவல். 'கரித்துண்டு' மேலை நாட்டுப் படைப்புகளோடு ஒப்பிடத் தக்கது. 'நெஞ்சில் ஒரு முள்' நாவலின் தலைப்பு மட்டுமல்ல, நாவலைப் படித்து முடித்த நாம் பெறும் அனுபவமும் அஃதே. 'வாடாமலர்' இது வரை இவர் எழுதிய நூல்களில் இறுதியானது. 'அகல் விளக்கு' சாகித்திய அகாதெமியின் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்ற நாவலாகும். 'கள்ளோ? காவியமோ?' என இவர் எழுதிய புகழ்பெற்ற நாவல் பலரின் இல்வாழ்விற்குத் துணை கோலி உரமூட்டியுள்ளது. நெஞ்சைத் தொடும் நல்ல நாவல் 'பெற்ற மனம்'; அது திரைப்படமாகவும் வந்தது. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சமுதாய நாவல் எழுத்தாளராகத் திகழ்ந்தவர் டாக்டர் மு. வ. அவர்களே ஆவர்.

சமுதாய நாவல்களில் தேவன் எழுதிய 'மிஸ்டர் வேதாந்தம்' தனியிடம் பெறத்தக்கது. வ. ரா. வின் 'சுந்தரி'

நல்ல வரவேற்பைப் பெற்ற நாவலாகும். விந்தனின் 'பாலும் பாவையும்' புரட்சியான நாவல். அப்பட்டமான வாழ்வியல் உண்மைகள் இதில் அலைமோதுகின்றன. அகிலனின் 'நெஞ்சின் அலைகள்' சுவையான நவீனம். குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. 'பிரம்மச்சாரி' 'காதலெனும் தீவினிலே' 'நீ', 'சொல்லாதே', 'ஓவியம்' என்னும் நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் சிறந்த இடத்தினைப்பெறுவது 'காதலெனும் தீவினிலே' எனும் நாவலாகும். இந் நாவலில் வரும் காதலர்கள் ராதாவையும் வசந்தனையும் நாம் எளிதில் மறக்க இயலாது. 'கலைமணி' என்னும் கொத்தமங்கமலம் சுப்பு எழுதிய மிகவும் உயர்ந்த நாவல், 'தில்லானா மோகனாம்பாள்'. நாட்டிய ராணி மோகனா, நாதசுரக் கலைஞன் சண்முகசுந்தரம், வடிவாம்பாள், வைத்தி என்றும் பாத்திரங்கள் வாழும் கீர்த்தியுடையன. பி. எம். கண்ணனின் 'நாகவல்லி' 'முள்வேலி' 'நிலவே நீ சொல்' என்பன நல்ல வரவேற்பைப் பெற்ற நாவல்களாகும். சோமுவின் 'நந்தவனம்', ஆர்வியின் 'அணையா விளக்கு' ரஸவாதியின் 'ஆதாரசுருதி', நா. பார்த்தசாரதியின் 'குறிஞ்சி மலர்' 'பொன்விலங்கு', மாயாவியின் 'அன்பின் ஒலி', க. நா. சுப்பிரமணியத்தின் 'ஒரு நாள்', கி. ராஜேந்திரனின் 'நெஞ்சில் நிறைந்தவள்'. பி. வி. ஆரின் 'தங்கம்', கோவி. மணிசேகரனின் 'தென்னங்கீற்று', 'தவமோ? தத்துவமோ?' கு. ராஜவேலுவின் 'காதல் தூங்குகிறது' 'மகிழம்பூ', ஜெகசிற்பியனின் 'சொர்க்கத்தின் நிழல்', ரா. கி. ரங்கராஜனின் 'இது சொர்க்கம்' 'வயது பதினேழு' 'படகு வீடு', தமிழ்வாணனின் 'மணிமொழி நீ என்னை மறந்து விடு', தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' 'மரப்பசு' என்பன இன்றைய சிறந்த சமுதாய நாவல்களாகும்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் இராஜ அரியநாயகம் (தங்கப் பூச்சி), அருள் செல்வநாயகம் (பாசக்குரல்), செ. கணேசலிங்கம் (நீண்ட பயணம்), 'நந்தி' எனும் புனைபெயர் கொண்ட செ.சிவஞான சுந்தரம் (மலைக்கொழுந்து) என்போர் ஆவர்.

கல்கி நடத்திய வெள்ளிவிழா நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற நாவல் உமாசந்திரன் எழுதிய 'முள்ளும் மலரும்' என்பதாகும், இரண்டாவது பரிசு பெற்ற நாவல் ர. சு. நல்லபெருமாள் எழுதிய 'கல்லுக்குள் ஈரம்' என்பதாகும். மூன்றாவது பரிசு ஏ. எஸ். ராகவன் எழுதிய 'யாத்திரை' நாவலுக்குக் கிட்டியது. ஆனந்த விகடன் பொன் விழாவை ஒட்டி நடத்திய போட்டியில் கிருஷ்ணமணி எழுதிய 'வேர்கள்' சமூக நாவல் பரிசு பெற்றது. வையவனின் 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்னும் நாவல் பரிசு பெற்றுள்ளது.

அண்மைக்கால நாவல்கள்

இனக் கவர்ச்சி ஊட்டி ஒரு புதுமைப் போக்கில் அழைத்துச் செல்லும் ஜெயகாந்தனின் 'பாரிஸுக்குப் போ' புதினமும், ஒரு நடிகையையும் ஒரு பத்திரிகையாளனையும் வைத்துப் புதுமுறையில் பின்னப்பட்ட ஒரு தனி நோக்கு கொண்ட 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' என்ற நவீனமும், கல்லூரி வாழ்வில் கற்பிழந்த பெண்ணின் பிற்கால வாழ்வை விளக்கும் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவலும், இந்நாவலின் தொடர்ச்சியாக எழுதிய 'கங்கை எங்கே போகிறாள்?' என்னும் நாவலும் சிறந்தவை. ஓவியன் ஒருவனைப் பாத்திரமாகக் கொண்டு உயரிய கற்பனையை அவனைச் சுற்றி ஓடவிட்ட கதையமைப்புக் கொண்ட ஒரு லட்ச ரூபாய் ஞானபீடப் பரிசு பெற்ற ஆகிலனின் 'சித்திரப் பாவை'யும், எளிய தமிழில் புரட்சி முறையில் சுவை ததும்பப் புனையப் பெற்ற மணியனின் 'மோகம் முப்பது வருஷம்' என்னும் புதினமும், புதுமைப் பெண் ஒருத்தியை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட கி. ராஜேந்திரனின் 'சாருலதா'வும், மனத்தத்துவத்தைப் புகுத்தி எழுதும் பெண் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் 'அமுதமாகி வருக'வும் பெரிய இடத்துப் பிரச்சினைகளையும் வாழ்வையுமே தம் புதினத்தில் சித்திரிக்கும் எஸ். ஏ. பி.யின் 'பிறந்த நாள்' புதினமும்,

'கல்லுக்குள் ஈரம்', 'போரட்டங்கள்', 'திருடர்கள்', 'நம்பிக்கைகள்' என்னும் ர. சு. நல்லபெருமாளின் நல்ல புதினங்களும் மிகச்சிறந்த புதினங்களாகும்.

நா. பார்த்தசாரதி 'சமுதாய வீதி' நாவலுக்காக சாகித்திய அகாதெமிப் பரிசையும், 'துளசி மாடம்' நாவலுக்காக அண்ணாமலை அரசரின் பத்தாயிரம் ரூபாய்ப் பரிசையும்(1981-ல்)பெற்றுள்ளார். அண்ணாமலை அரசரின் பரிசை 1980-ல் 'யாகசாலை' நாவலுக்காக கோவி. மணிசேகரன் பெற்றார். இலக்கியச் சிந்தனை நாவலுக்காக அளிக்கும் பரிசை 1981-ல் பால குமாரன் தன் 'மெர்க்குரிப் பூக்கள்' என்னும் நாவலுக்காகப் பெற்றுள்ளார். மனத்தின் ஆழத்தில் இருக்கும் உணர்வுகளை, எண்ணங்களை வெளியே இழுத்துப் பலரும் உணருமாறு செய்யும் அற்புத நடையில் எழுதப்பட்டதாகும் இந் நாவல். இவருடைய 'இரும்பு குதிரைகள்' 1985 ஆம் ஆண்டு அண்ணாமலை அரசர் பரிசு பெற்றது.

கூட்டு நாவல்கள்

மேல் நாட்டில் லாரி காலின்ஸ், லாப்பரி டொமினிக் (Larry collins and Lapier de Dominique) என்னும் இரட்டையர்கள், அண்மையில் 'The fifth horse man' என்னும் நாவலைக் கூட்டாக எழுதி வழங்கியிருக்கிறார்கள். இந்நாவல் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இவர்கள் இதற்கு முன்னர் Freedom at midnight, Is Paris Burning முதலிய நூல்களைக் கூட்டாக எழுதியிருக்கிறார்கள். ஆற்றல் மிக்க இரண்டு எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்து எழுதும்போது, புதுமையும் சுவையும் பொதிந்த நாவல்கள் பிறப்பது இயல்பே. பழங்காலத்து இரட்டைப் புலவர்கள் போல இக்காலத்திலும் இரட்டை எழுத்தாளர்கள் ஒரு நாவலின் அத்தியாயங்களை மாறிமாறி எழுதிப் படைத்து நாவல் உலகில் புதிய சாதனை செய்துள்ளார்கள்.

புதுமைக்குப் பெயர் பெற்ற குழுதம் இதழ், பிரபலமான பெண் எழுத்தாளர்களான சிவசங்கரி, இந்துமதி ஆகிய இரு

வரையும் கொண்டு 'இரண்டு பேர்' என்னும் நாவலை எழுதச் செய்து வெளியிட்டது. நாவல் மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றது. பின்னர் 'நானும் நீயும்' என்னும் நாவலை, கவிதா, நித்யாமூர்த்தி ஆகிய இருவரைக் கொண்டு எழுதச் செய்து வெளியிட்டது. 'அமுதசுரபி', ஒவ்வோர் அத்தியாயத்தை ஒரு பிரபல எழுத்தாளரைக் கொண்டு எழுதச் செய்தது. அண்மையில் 'சாவி' இதழ் பன்னிருவரைக் கொண்டு ஒரு நாவல் எழுதி வெளியிடும் முயற்சியில் இறங்கியது. கூட்டு நாவல்கள் ஒட்டுமாங்கனி போல, பழக் கலவை (fruitsalad) போலப் புதுச்சுவை தருகின்றன.

குட்டி நாவல்கள்

'மாதம் ஒரு நாவல்' வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சில பத்திரிகைகள் தோன்றியுள்ளன. சுமார் 100 பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை இவை வழங்குகின்றன. மாலைமதி, மோனா, மணியன் மாதஇதழ், ராணிமுத்து, கதைக்கதிர், மெட்டி, குங்குமச்சிமிழ் முதலிய இதழ்கள் இப் பணியில் இறங்கியுள்ளன. ஜெயகாந்தனின் 'ஜய ஜய சங்கர' என்னும் நாவல் ஒரு ரூபாய் மலிவு விலைக்கு வெளியிடப் பட்டு இலட்சம் பிரதிகள் விற்றது. தொடர்ந்து கண்ணதாசனின் நாவல்கள் இவ்வாறு விற்பனையாயின. இவ்வெற்றிகளைக் கண்டே மாதம் ஒரு நாவல் வெளியிடும் பத்திரிகைகள் தோன்றின. இவை புதிய நாவல்கள் வெளியிட்டன. அதனால், முன்பு பழைய நாவல்களைச் சுருக்கி வெளியிட்டு வந்த 'ராணிமுத்து' இதழும் புதிய நாவல்களை வெளியிடத் தொடங்கிவிட்டது.

சுமார் நூறு பக்கங்களைக் கொண்ட இக் கதைகளைக் 'குட்டி நாவல்கள்' என்று அழைப்பதே பொருத்தமாகும். இவையும் தமிழ்ப் புனைகதை இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்றன. சுஜாதாவின் 'விபரீதக்கோட்பாடு', மகரிஷியின் 'புவனா ஒரு கேள்விக்குறி', அனுராதாரமணனின் 'சந்தியா காலத்துச் சலனங்கள்', சிவசங்கரியின், 'ஒரு சிங்கம் முயலாகிறது' (அவன்-அவள்-அது —என்னும் திரைப்பட

நாவல்), ராஜேந்திர குமாரின் 'வணக்கத்துக்குரிய காதலியே', வாலியின் 'அது அதில் இல்லை', கோமகளின் 'சுநாதங்கள்' முதலியன இக் குட்டி நாவல்களுள் சிறந்தவை யாகும்.

தொடர்கதை எழுத்தாளர்கள்

தமிழகத்தில் இன்று வெளியாகும நாவல்களில் பெரும் பாலானவை முதலில் தொடர் கதைகளாகப் பத்திரிகைகளில் இடம் பெறுபவையே. 1925 முதல் இன்றுவரை பத்திரிகை உலகைத் தம் தொடர்கதைகளால்—நாவல்களால் ஆளுமை கொண்டிருப்பவர்கள் சாண்டில்யன், கோவி. மணிசேகரன், புஷ்பா தங்கதுரை, சுஜாதா, லக்ஷ்மி, சிவசங்கரி, அனுராதா ரமணன், இந்துமதி, வாஸந்தி ஆகியோர். லக்ஷ்மி, சிவசங்கரி, இந்துமதி, அனுராதாரமணன், வாஸந்தி ஆகியோர் பெண் எழுத்தாளர்கள்; சுஜாதா, புஷ்பா தங்கதுரை பெண் பெயரில் புகுந்து கொண்டு எழுதும் ஆண் எழுத்தாளர்கள். எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங் கள். அதில் உறுதியாக இந் நால்வரில் ஒருவரின் தொடர் கதையைக் காணலாம். இவர்கள் நால்வருமே ஒரே சமயத்தில் இரண்டு. மூன்று தொடர்கதைகள் எழுதுபவர் கள். 'பத்திரிகை உலகினர் இவர்கள் பின்னே அலைகின்றனர் என்று கூறுமளவு மக்களிடை செல்வாக்குப் பெற்றவர்கள், இந்த நால்வர்.

சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன், குமுதத்தில் வெளிவந்த 'நைலான் கயிறு' என்னும் தொடர்கதை மூலம் புகழ்பெற்ற இவர், குறுகிய காலத்தில் நிறைய நாவல்களை எழுதியுள்ளார். இவரது நடை வித்தியாசமானதாக அமைந் திருப்பது ஒரு சிறப்பாகும். இவர் பெரும்பாலும் துப்பறியும் கதைகளையே எழுதி வருகிறார். ஆங்கிலத்தில் துப்பறியும் நாவல்களை வழங்கும் James Hadly chase இன் நடையையும் போக்கையும் இவர் நாவல்களில் காணலாம். எர்ல் ஸ்டேன்லி கார்டனர் என்னும் துப்பறியும் நாவலாசிரியர், பெர்ரி மேசன் என்னும் வழக்கறிஞரை உருவாக்கி அவர்

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதாக நாவல்களை எழுதி வந்தார். சுஜாதாவும் இதே பாணியில் கணேஷ் என்னும் வழக்கறிஞரை உருவாக்கித் தம் துப்பறியும் நாவல்களை உலவ விட்டுள்ளார். கணேஷுக்குத் துணைவனாக வஸந்த் என்னும் இளைஞனைப் படைத்துள்ளார். வஸந்த், நகைச் சுவையும் பாலுணர்வு மிகையும் பெற்ற பாத்திரம். இவ்விரு வரையும் கொண்டு சுஜாதா எழுதிய நாவல்களின் 'கொலை யுதிர்காலம்' 'அனிதா இளம் மனைவி' 'காயத்திரி' ஆகியன சிறந்தன. இன்றைய கல்லூரி மாணவ மாணவியரிடையே கணேஷும், வஸந்தும் அன்றைய ஷெர்லக்ஹோம்ஸ் போலப் பிரபலமானவர்களாக, பிரியத்துக்குரியவர்களாகத் திகழ் கிறார்கள்.

சுஜாதா அறிவியல், பொறி இயலில் வல்லவர். அதனால் அவ்வியல்களின் நுட்பங்களை வெளிப்படுத்தும் வகையில் தம் நாவல்களை அமைக்கிறார். 'நிர்வாண நகரம்' நாவலில், ஆப்செட் அச்சுமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை யும், 'பெண் இயந்திரம்' நாவலில் கம்பியூட்டர் எவ்வாறு இயங்குகிறது என்பதையும், 'காகிதச் சங்கிலிகள்' என்னும் குறுநாவலில், சிறுநீரகக் கோளாற்றுக்குத் தரும் மருத்துவ முறை (டையாலிஸிஸ்)யையும் மிக அற்புதமாக விளக்கிச் சொல்கிறார். கணேஷ் பாத்திரம் இடம் பெறாமல் இவர் எழுதிய நாவல்களில், 'கரையெல்லாம் செண்பகப்பூ', 'கனவுத் தொழிற்சாலை', 'பிரிவோம், சந்திப்போம்', 'வஸந்த் வஸந்த்', 'மூன்று நிமிடம் கணேஷ்' ஆகியன தலை சிறந்தவையாகும்.

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதத் தொடங்கியவர் சிவசங்கரி. இந்த ஒரு மாமாங்கக் காலத்தில் ஒப்பற்ற புகழைப் பெற்று விட்டார். திரிவேணி சங்கமம், நதியின் வேகத்தோடு, நண்டு, 47½ நாட்கள், மெள்ள மெள்ள, பாலங்கள் முதலியன இவருடைய நாவல்களில் சிறந்த சில வாகும். பெண்ணை வர்ணிப்பதற்கோ, பெண் மனத்தில்

எழும் உணர்வுகளை அப்பட்டமாக வெளியிடுவதற்கோ தயங்காதவர் இவர்.

அண்மையில் (1981) இவர் எழுதிய 'ஒரு மனிதனின் கதை' மகாத்மா காந்தியின் பணியைப் போலச் சிறப் பானது. ஒருவன் மதுவினால் பெறும் தீங்கையும், மதுவின்றி வாழ முடியாத அபாய நிலை (drink addict) எய்தும் ஒருவன் அதிலிருந்து மீள்வதற்குத் தற்போதுள்ள மருத்துவ முறை எவ்வாறு துணை செய்கிறது என்பதையும், படிப்போர் உள்ளத்தில் பதியுமாறு, இந்நாவலில் விளக்கியுள்ளார் சிவசங்கரி. மதுவிலக்குப் பிரச்சார நாவலாகக் கூறத்தக்க இந் நாவல் அலுப்பும் சலிப்பும் வராத சுவையான நாவல். இந்நாவலைப் படித்துப் பல மது விரும்பிகள் மனம் மாறிய தாகத் தெரிகிறது. 'பாலங்கள்' சிறந்த படைப்பாகும்.

ஸ்ரீ வேணுகோபாலன் என்னும் சிறந்த எழுத்தாளர், சிவப்பு விளக்குப் பகுதிக் கதைகளை வழங்கியபோது, புஷ்பா தங்கதுரையானார். இப்போதும் வரலாற்று நாவல்களை ஸ்ரீ வேணுகோபாலன் என்னும் பெயரிலேயே வழங்கி வருகிறார். 'திருவரங்கன் உலா', 'மதுர நாயகி' ஆகியன இவருடைய சிறந்த வரலாற்று நாவல்களாகும்.

புஷ்பா தங்கதுரை என்னும் பெயரில், உண்மைக் கதை களைச் சிறுகதைகளாகவும், நாவல்களாகவும் எழுதிப் புகழ் பெற்றார். தினமணி கதிரில் எழுதிப் புகழ்பெற்ற இவர், இன்று எழுதாத பத்திரிகைகள் இல்லை. இவரது 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது' நாவல் திரைப்படமாகவும் புகழ்பெற்றது. இவர் நாவல்களிலும் பெரும்பாலானவை துப்பறியும் நாவல்களின் பாணியில் அமைந்துள்ளன. அண்மைக் காலத்தில் புதிய சூழ்நிலைகளில் நாவல்களைப் படைக்கத் தொடங்கியுள்ளார். 'கடலுக்குள் ஜூலி' 'இளமைக்கு வீசா' ஆகியன இத்தகைய புதுமை நாவல் களாகும்.

குறுகிய காலத்தில் பெரும் புகழ்பெற்ற எழுத்தாளர் களுள் ஒருவர் திருமதி இந்துமதி. எழுத்தாளர் என்னும் நிலையிலிருந்து உயர்ந்து 'அஸ்வினி' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் சில மாதங்கள் பணியாற்றினார். இவர் நடையில் ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் அதிகமாகப் பயன்படுத்துகிறார். சில இடங்களில் ஆங்கிலத் தொடர்களை ஆங்கிலத்திலேயே எழுதிவிடுகிறார். இவர் நாவல்களில், 'தரையில் இறங்கும் விமானங்கள்', 'யார்?', 'சக்தி 81' ஆகியன சிறந்தவை.

புதுமை நாவல்கள் சில

தமிழ் நாவல்களுக்குப் பொதுவாக இருக்கும் போக்கை மாற்றிப் புதிய கோணத்தில் எழுதப்பட்ட சில நாவல்கள், தமிழ் நாவல் இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்துள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கே அறிவது பயனுடையது.

புத்தம் வீடு

இதை எழுதியவர் ஆங்கிலப் பேராசிரியராகப் பணி யாற்றும் திருமதி ஹெப்சியா ஜேசுதாசன். கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலுக்கு அருகேயுள்ள பனை விளை என்னும் கிராமத்தையும், பனைமேறிகளின் தொழிலையும் சூழலையும் இயல்பாய் விளக்குகிறது இந்த நாவல். குலப்பெருமை பேசும் கண்ணப்பச்சி என்றும் கதாபாத்திரம் மிகச் செம்மையாக, நெஞ்சில் நிறைந்து நிற்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது. கண்ணப்பச்சியில் தொடங்கி மூன்று தலைமுறையின் கதை நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கில் சுவை ததும்பச் சொல்லப்பட்டுள்ளது. 1964 இல் வெளியான இந்த நாவல் நடையாலும் கதை யாலும் ஒரு புதுமைப் புதினமாகப் போற்றப்படுகிறது. ஆசிரியர் ஹெப்சியா ஜேசுதாசனின் முதல் நாவல் இது. முதல் நாவலிலேயே, ஓர் எழுத்தாளன் அடையவேண்டிய முழுப் புகழையும் அடைந்துவிட்டார்.

ஒரு புளியமரத்தின் கதை

வ. வே. சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' சிறு கதைகளில் புகழ்பெற்றதுபோல, 'ஒரு புளிய மரத்தின் கதை' நாவல் உலகில் நற்புகழ் பெற்றது. தரமான சிறு சதை களைத் தந்து புகழ் கொண்ட சுந்தர ராமசாமி 1966இல் இதை வழங்கி நாவலாசிரியராக உயர்வு பெற்றார்.

இந் நாவலின் முக்கிய கதாபாத்திரம் புளியமரம். நான்கு நெடுங்கதைகள் இந்தப் புளியமரத்தைச் சுற்றிப் பின்னப்படுகின்றன. தனி மனிதனின் விருப்பு வெறுப்பு களுக்குச் சமுதாயக் காரணங்களைக் கண்டுபிடித்துப் புகுத்தும் இன்றைய அரசியல் நோக்கு, பழைய தலைமுறை களில் படிந்திருப்பதை இந்த நாவல் படம் பிடிக்கிறது. ஒவ் வொரு கதையின் இறுதியிலும் புளியமரத்துக்கு அழிவு ஏற்படும் நிலை வருகிறது. இறுதியில் பல தலைமுறைகள் கண்ட, பலவகை வாழ்க்கையைக் கண்ட புளியமரம் அழிக்கப்படுகிறது. திருநெல்வேலி வட்டார வழக்கில் எழுதப்பட்ட இந் நாவலின் உத்தி, இதுவரை வேறு யாரும் பயன்படுத்தாத ஒன்றாகும்.

தலைமுறைகள்

நீல பத்மநாபன் எழுதி, 1968இல் வெளிவந்த 'தலை முறைகள்', நாவல் உலகில் ஒரு பெரும் சாதனை.

கதை இரணியல் செட்டியார்களில் ஒருவரான மூக்காண்டிச் செட்டியாரின் பரம்பரையைப் பற்றியது. சுமார் எழுபதாண்டுக் கதையை, திரவி என்னும் கதை மாந்தன் தன் பத்தாண்டுக்கால வாழ்வு மூலம் சொல்லிச் செல்வதாக ஆசிரியர் கதையை அமைக்கிறார். காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து செட்டியார்கள், இரணியல் முதலிய பகுதிகளில் குடியேறிய பிறகு, அவர்களது உடை, நடை, மொழி முதலியன பெற்ற மாற்றங்களைச் சுவையாகச் சொல்கிறது நாவல். இரணியல் செட்டியார் சமூகத்தின் பழக்க வழக்கங்கள், அன்றாடச் செயல் முறைகள், சடங்கு

கள். சம்பிரதாயங்கள் முதலியவற்றைக் கற்பனை கலவாது உள்ளது உள்ளபடி ஆசிரியர் அமைத்துச் செல்கிறார். இதுவும் நாகர்கோயில் பக்கத்து வட்டார வழக்கில் எழுந்த நாவலே. கவிஞர் மீரா 'இந்த நூற்றாண்டின் இதிகாசம்' என்று தலைமுறைகள் நாவலைப் புகழ்கிறார். இந் நாவலின் சிறப்பைக் கண்டே, திறனாய்வாளரான க. நா. சுப்பிரமணியம் இதை Generation என்னும் பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

கோபல்ல கிராமம்

பொருளுக்காகவோ, புகழுக்காகவோ எழுதாமல் ஆத்ம திருப்திக்காகவே எழுதும் எழுத்துவேந்தராக மதிக்கத் தக்கவர் கி. ராஜநாராயணன், 'கிடை' 'கரிசல் காட்டில் ஒரு சம்சாரி' என்னும் இரு குறுநாவல்களும் இவரது அருந் திறனைப் பறைசாற்றும். இவர் வழங்கிய 'கோபல்ல கிராமம்' நாவல், கம்மவார் என்னும் தெலுங்கர்கள் ஆந்திரத்தை விட்டுத் தமிழ் நாட்டில் குடியேறியதை விளக்கும் சமூக வரலாற்று நாவலாக அமைந்துள்ளது.

கோட்டையார் வீடு என்னும் புகழ்பெற்ற வீட்டையும், அந்த வீட்டைச் சார்ந்தோர் முதலில் சொந்த நாட்டை விட்டு வந்த கதையையும், திருடர்களை அவர்கள் ஒருமுறை விரட்டி வென்ற தந்திரத்தையும், வீரத்தையும், கம்மாளப் பெண்ணைக் கொன்றவனைக் கழுவேற்றும் நீதி விசாரணை யையும், ஆங்கிலேயர் வருகையால் ஊரின் சுதந்தரம் பறி போக, விடுதலை உணர்வு தோன்றுவதையும் இந்நாவல் கூறு கிறது. பல கதைகள் இருப்பினும், அவை ஓர் அடிமரத்தி லிருந்து எழுந்த பல கிளைகளைப் போல ஒட்டி உறவாடி ஒரு நாவல் என்னும் தன்மையைத் தருகின்றன. ராஜ நாரயணனின் இந்த நாவலில் எந்த நிகழ்ச்சியைப் படித்தா லும், அதை எதிரே பார்ப்பது போன்ற உணர்வு எழும். அத் தகைய அற்புதமான நடையிலே எழுதிய கோபல்ல கிராமம்

1976 இல் வெளிவந்து, தமிழ் நாவல் உலகில் தனியிடம் பெற்று விட்டது.

மேலே குறிப்பிட்டவற்றைப் போலவே, ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்', ல.சா. ராமாமிருதத்தின் 'புத்ர', 'அபிதா', ச. கந்தசாமியின் 'சாயாவனம்', ஆ. மாதவனின் 'புனலும் மணலும்', எம். எஸ். கலியாண சுந்தரத்தின் 'இருபது வருஷங்கள்', ஆர். விட்டல் ராவின் 'போக்கிடம்' ஆகியன தனித் தன்மை வாய்ந்த சிறந்த நாவல்கள்.

பெண் எழுத்தாளர்கள்

அறுத்தமாவைத் தமிழ்நாட்டின் ஜேன் ஆஸ்டின் (Jane Austin) என்பர். மனத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதுபவர் ராஜம் கிருஷ்ணன். இவர் எழுதி ஆனந்தவிகடன் போட்டியில் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசு பெற்ற 'மலர்கள்', 'குறிஞ்சித்தேன்' மிகவும் சிறந்த நாவல் களாகும். இவரது 'வளைக்கரம்' நாவல் சோவியத்லாந்து நேரு பரிசையும், 'வேருக்கு நீர்' 1973இல் சாகித்திய அகாதெமிப் பரிசையும், 'கரிப்பு மணிகள்' 1980இல் இலக்கியச் சிந்தனையின் பரிசையும் பெற்றன. மறைந்த ராஜம் ராம மூர்த்தி நல்ல நாவல்களைக் குழுதத்தில் எழுதியுள்ளார். வசுமதி ராமசாமி 'காப்டன் கல்யாணம்' எனும் நாவலை எழுதியவர். அந்நாளில் புகழ் பெற்றவர் 'லக்ஷ்மி'. இவர் எழுதிய 'பெண் மனம்', 'காஞ்சனையின் கனவு' 'மிதிலா விலாஸ்', 'அரக்கு மாளிகை' பெண் வாசகர்களையேயன்றி ஆண் வாசகர்களையும் கவர்ந்த புதினங்களாகும். சூடா மணி எழுதிய சிறந்த நாவல்கள் 'மனத்துக்கு இனியவள்', 'விடிவை நோக்கி' என்பனவாகும். 'கிருஷ்ணா' எழுதிய 'ராஜி' உயரிய படைப்பாகும். விமலா ரமணி 'பாரிஜாதம்' என்னும் நாவல் எழுதியுள்ளார்.

மொழிபெயர்ப்பு நவீனங்கள்

காண்டேகர் எழுதிய அழகு நாவல்களைத் தமிழில் தந்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ ஆவர். 'எரிநட்சத்திரம்', 'இருமனம்,

'சுகம் எங்கே!', 'கிரௌஞ்ச வதம்' முதலியன இவர் மொழி பெயர்த்த சிறந்த நாவல்களாகும். த. நா. குமாரசுவாமி வங்காள இலக்கியங்களைத் தமிழில் தந்தவர். த. நா. சேனாதிபதி, தாகூர் நூல்களை மொழிபெயர்த்துள்ளார். எம். எஸ். கமலா, அடவி பாபிராஜு என்னும் பிரபல தெலுங்கு நாவலாசிரியர் எழுதிய 'நாராயண ராவை'த் தமிழில் தந்துள்ளார். துளசி ஜெயராமன், சரஸ்வதி ராம்நாத் இருவரும் வங்காளம், இந்தி, குஜராத்தி நாவல்களை நன்கு தமிழில் மொழிபெயர்த்துத் தருகின்றனர். ரா. வீழிநாதன் இந்தி நாவல்களைத் தமிழில் தந்துள்ளார்.

இன்றையத் தமிழ் நாவல்கள், நாவல் உத்திகள் பலவும் நன்கு கைவரப் பெற்றுச் சிறந்த முறையில் அமைந்து வருவதனைக் காணும்பொழுது, நம் மனம் களிபேருவகை அடைகின்றது. இத் துறையில் புதுமை இலக்கியங்கள் பல தமிழில் நித்த நித்தம் புத்தம்புது மலர்களாகப் பூத்துக் குலுங்குக!

இதழ்களும் புனைகதை இலக்கியமும்

தற்காலத்தில் சிறுகதை, நாவல், பயணக் கட்டுரை, வாழ்க்கை வரலாறு, கவிதை, புதுக்கவிதை முதலிய இலக்கியக் கூறுகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாத காரணம், இதழ்களின் வளர்ச்சியே. சிறப்பாக நாவல்கள், சிறுகதைகள் ஆகிய புனைகதைகள் இதழ்களையே இலட்சியமாகக் கொண்டு எழுதப்படுகின்றன. ஓராண்டில் வெளிவரும் புனைகதை (fiction) நூல்களில் தொண்ணூறு சதவிகிதம், இதழ்களில் வெளிவந்தவையே.

அண்மைக் காலத்தில் பருவ ஏடுகள் பல்கிப் பெருகின. ஆனந்த விகடன், கல்கி, குமுதம், ராணி ஆகியன பழங்காலத்

தவை எனச் சொன்னால் குங்குமம், இதயம் பேசுகிறது, தேவி ஆகியன எழுபதுகளில் எழுந்தவை. இவ்விரண்டும் பத்திரிகை உலகில் நிலை பெற்ற காரணத்தால், சாவி, தாய் ஆகியவை தோன்றி வேருன்றி வருகின்றன. இவை யாவும் வார இதழ்கள். கலைமகள், அமுதசுரபி ஆகியன அன்று போல் இன்றும் வெளிவரும் திங்கள் ஏடுகள்.

அஸ்வினி, புஷ்யம், கமலம் முதலிய பல இதழ்கள் தோன்றிய வேகத்தில் மறைந்துவிட்டன.

நாளிதழ்கள்கூடச் செய்திகளைத் தருவதுடன் சிறுகதை களையும் தொடர்கதைகளையும் அவ்வப்போது வெளியிடு கின்றன. வாரத்தில் ஒருநாள் வாரமலரைச் செய்தித் தாளுடன் இணைத்து வெளியிடுகின்றன சில; வேறு சில வாரத்திற்கு இரண்டு மூன்று முறை சிறுகதை, தொடர்கதை களை வெளியிடுகின்றன.

'தினமலர்' என்னும் நாளேடு, நாளிதழுடன் வெளியிட்ட வார மலரைத் தனியே ஒரு பத்திரிகை போல அச்சிட்டு ஞாயிற்றுக்கிழமை நாளிதழுடன் வழங்கியது. விற்பனைச் சரிவால் பாதிக்கப்பட்ட தினமணி கதிர் அதை நிறுத்துவ தற்குப் பதில், அதைத் தனியே அச்சிட்டு, ஞாயிற்றுக்கிழமை தினமணியுடன் இணைத்து அளித்து வருகிறது.

இன்று சிறுகதையும் நாவல்களும் வளம்பெற்று வாழ்வதற்கு இதழ்களே துணை செய்கின்றன இதழ்களின் எண்ணிக்கை மிகுதியானமையினால் சிறுகதை நாவல்கள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன. ஒவ்வொரு வாரமும் சுமார் நூறு சிறுகதைகளும், ஒவ்வோராண்டும் சுமார் ஐம்பது தொடர்கதைகளும் இவ்விதழ்கள் மூலம் வெளிவருகின்றன. இவற்றுள் மூன்றிலொரு பகுதி நூல்களாக வெளிவந்து நிலை பேற்றுக்கு வித்திடுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் இன்றைய புனைகதை இலக்கியம் இதழ்களைச் சார்ந்தே நிற்கிறது. இதழ்களின்

தயவிலேயே வளர்கிறது. அதனால் தற்காலப் புனைகதை இலக்கியத்தில் இதழ்களின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது.

இதழ்களின் தயவை நாடாமல் புனைகதை வளரும் போதே அதன் தரம் உயரும் என்பது உறுதி.

இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சி

இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழ் பல்வேறு துறைகளிலும் செழித்து வளருவதனைக் காண நம் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. சென்னையில் திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கல்வி அமைச்சராயிருந்த பொழுது 1946 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' நிறுவப்பட்டது. இக் கழகத்தின் நோக்கம் தமிழின் பண்டைச் சிறப்புகளைக் காப்பதும், இக்கால நடை முறைக்கு ஏற்ற பண்புகளைப் பெற்று விளங்கச் செய்வதுமாகும். இக் கழகத்தின் முக்கியமான பணிகள் மூன்று. ஒன்று: தமிழிற் பல்வேறு துறைகளிலும் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தல்; இரண்டு: ஆண்டுதோறும் வெவ்வேறிடங்களில் தமிழ் விழா நடத்துதல்; மூன்று, கலைக்களஞ்சியம் தயாரித்தல்.

இம் மூன்று பணிகளும் சீரிய முறையிலே செயலாற்றப் பட்டு வருகின்றன. 750 பக்கங்கள் கொண்ட பத்துத் தொகுதிகள் கலைக்களஞ்சியமாக வெளிடயிப் பெற்றுள்ளன. இஃது இந்திய மொழிகளிலேயே முதன் முயற்சியாகத் தமிழில் நடந்து வெற்றியும் கண்டுவிட்டது. இதுபோது நிறுவர் கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகள் வெளிவந்து நிறைவுற்றுள்ளது.

தமிழ் இந்நூற்றாண்டில் எவ்வாறெல்லாம் வளர்ந்து வளமான வாழ்வினைப் பெற்று விளங்குகிறது என்பதனைக் காண்போம்.

வாழ்க்கை வரலாற்று நூல்கள் (Biographies)

மேலைநாட்டு இலக்கியங்களிலே பாஸ்வெல் (Boswell) என்பார் டாக்டர் ஜான்சனை பற்றி எழுதியிருக்கும் வாழ்க்கை வரலாற்று நூலே சிறப்புடையதாகும். அது போன்று தமிழ்நாட்டிலும் வெவ்வேறு துறைகளிலும் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகள், நூல்வழி வெளிவருவதாயிற்று. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தம் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றைச் சுவைபட, தமக்கே இயல்பான எளிய நடையில் எழுதியுள்ளார். நபிநாயகம் வரலாற்றினை அப்துல் ரஹீம் அவர்கள் எழுதியுள்ளார். காந்தியண்ணல், கவிஞர் தாகூர், அறிஞர் பெர்னார்ட்ஷா ஆகியோர் வரலாறுகளைத் தெளிவான இனிமையான தமிழ் நடையில் நூல் வடிவாக டாக்டர் மு.வ. அவர்கள் தந்துள்ளார். புலவர் அரசு என்பவர் பல்வேறு தமிழ்ப் புலவர்கள் வரலாற்றினையும் நூல்களாக வடித்துள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை 'மறைமலையடிகள் வரலாறு', 'திரு. வி.க. வரலாறு' என்பன. ம. பொ. சி. அவர்கள் வ.உ.சி. வரலாற்றைக் 'கப்பலோட்டிய தமிழ'னாகவும், கட்டபொம்மனின் வரலாற்றை 'வீரபாண்டிய கட்ட பொம்ம'னாகவும் தந்துள்ளார். 'மருதிருவர்' வரலாற்றைத் தமிழ்ப் பேராசிரியர். சஞ்சீவி அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். புலித் தேவன் வாழ்க்கை வரலாறு, புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணனால் எழுதப்பட்டு, நூலாகி வந்துள்ளது. மு. நமசிவாயம் வழங்கிய 'காமராசர்' சமகாலத் தலைவரைப் பற்றிய சுவைமிகுந்த வாழ்க்கை வரலாறு ஆகும். சிதம்பர ரகுநாதன் தம் நண்பர் புதுமைப்

பித்தனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைபடப் புனைந் துள்ளார். சிலம்புச் செல்வர் ம. பொ. சி. எழுதிச் சாகித்திய அகாதெமியின் ஐயாயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்ற 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' குறிப்பிடத்தக்க நூலா கும். 'பெருந்தகை மு.வ.' என்று டாக்டர் சி. பா. ஒரு வாழ்க்கை வரலாற்று நூலினை வடித்துள்ளார். சுந்தா எழுதிய 'பொன்னியின் புதல்வர்' என்னும் கல்கியின் வாழ்க்கை வரலாறு புது முறையில் அமைந்து, வாழ்வு, இலக்கியம் ஆகிய இரண்டையும் உயரிய முறையில் அறிமுகம் செய்தது. அண்மையில் 'குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வாழ்கை வரலாறு' என்னும் நூலைப் பூவண்ணன் எழுதியுள் ளார்.

சுயசரிதம் (Autobiography)

காந்தியடிகள் குஜராத்தியில் எழுதிய சுயசரிதம், 'சத்திய சோதனை' என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார், கவிதை யில் தம் சுயசரிதத்தைச் சுருங்கிய முறையில் எழுயுள்ளார். வ. உ. சி. எழுதிய சுயசரிதையும் உண்டு. நாமக்கல் கவிஞர் உரை நடையில் தம் வரலாற்றை, 'என் கதை' என எழுதியுள்ளார். தமிழ்த் தாத்தா சாமிநாத ஐயரின் 'என் சரித்திரம்' என்ற நூல் விரிந்த அளவில் உள்ளது. திரு.வி.க. வின் 'வாழ்க்கைக் குறிப்புகள். இத் துறையில் சிறந்த நூல் எனலாம்' முன்னாள் அமைச்சர் டி.எஸ்.எஸ். ராஜன், 'நினைவு அலைகள்' என்னும் நூலில் தம் வாழ்க்கையினை வடித்துத் தந்திருக்கிறார். கலைஞர் மு. கருணாநிதியின் 'நெஞ்சுக்கு நீதி' சுவையான தன் வரலாற்று நூல். கண்ணதாசன் எழுதிய 'வனவாசம்' புதினம் போலப் படிக்கத்தக்க தன் வரலாற்று நூலாகும்.

இலக்கியத்துறை ஆராய்ச்சி நூல்கள்

இத்துறையில் இந்த நூற்றாண்டில் முன்நின்று வழி காட்டியவர் மறைமலையடிகள் ஆவர். இவரது முல்லைப்

பாட்டு ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி என்பன சிறந்தனவாம். மகாவித்துவான் ரா. ராகவையங்கார் பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி பட்டினப்பாலை ஆராய்ச்சி, தித்தன் கோசர் என்பாரைப் பற்றிய சிற்றாராய்ச்சி நூல்களை இயற்றியுள்ளார். திரு. கே. கோதண்டபாணிப் பிள்ளை அவர்கள், 'நெடுநல் வாடை ஆராய்ச்சி' எழுதியுள்ளார். டாக்டர் இராசமாணிக்கனார். அவர்கள், 'பெரியபுராண ஆராய்ச்சி'யும்; திரு. வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார் அவர்கள் 'சிலப்பதிகார ஆராய்ச்சி'யும் செய்துள்ளனர். டாக்டர் மு. வ. அவர்களின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'ஓவச் செய்தி', 'மாதவி', 'கண்ணகி' என்னும் நூல்கள், இலக்கிய ஆராய்ச்சியின் இனிய பெற்றியினை எடுத்தியம்புவனவாகும். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'ஊரும் பேரும்' என்னும் நூல் ஆராய்ச்சித் துறையில் குறிப்பிடத்தக்கது. இத்துறையில் எண்ணற்ற நூல்கள் வெளிவருகின்றன.

இலக்கிய வரலாறு

பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை தமிழ்நூல்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்தார். திருஞானசம்பந்தர் காலத்தை முதன்முதல் வரையறுத்து உதவினார். கோபி நாதராவ், மு. ராகவையங்கார் முதலானோர் மேலும் இத் துறையில் ஊக்கத்துடன் உழைத்தளர். திரு. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள், 'தமிழ் இலக்கியம்' (Tamil Literature) என்று ஆங்கிலத்தில் ஒரு நூல் செய்துள்ளார். தாகூர் சட்ட நிபுணர் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதியுள்ள 'இலக்கிய வரலாறு' இதுவரை இத்துறையில் வெளிவந்த நூல்களில் முதலிடம் பெறத்தக்கது எனலாம். தஞ்சை ஸ்ரீநிவாஸப் பிள்ளை அவர்கள் 'தமிழ் வரலாறு' என்னும் அழகிய நூலை இயற்றியுள்ளார். ரா. ராகவையங்கார் எழுதிய 'தமிழ் வரலாறு' என்னும் நூல், வரலாற்றுக் காலத்தின் தொடக்கப் பகுதியினை விளக்குகிறது. திரு. மு. ராகவையங்காரின் 'ஆழ்வார்கள் கால

நிலை' ஆழ்வார்கள் காலத்தைக் கணிக்க உதவுகிறது திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள், 'தமிழிலக்கியம்' என்னும் நூலை மிகச் சுருங்கிய வகையில் எளிய முறையில் எழுதியுள்ளார்கள். திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரையிலுள்ள இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இலங்கை வி. செல்வநாயகம் 'தமிழ் இலக்கிய வரலாறு-சுருக்கம்' எழுதியுள்ளார். தொல் காப்பியர் காலத்தைப்பற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் க. வெள்ளை வாரணன் அவர்கள் அண்மையில் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதியுள்ளார். சமண, பௌத்த, வைணவ சமய நூல்களின் இலக்கிய வரலாற்றினை வரதராச ஐயரும், சைவ இலக்கிய வரலாற்றினை ஔவை சு. துரைசாமிப் பிள்ளையும் எழுதியுள்ளனர். கி. பி. 250—கி. பி. 600 காலப்பகுதிக்கும் 13, 14, 15, ஆம் நூற்றாண்டின் காலப்பகுதிக்கும் கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் சிறு சிறு நூல்கள் இயற்றியுள்ளார்.

தமிழ்ப் பேராசிரியர் சேசுதாஸ் அவர்கள், ஆங்கிலப் பேராசிரியையான தம் துணைவியாருடன் சேர்ந்து 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலினை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார். அவர்கள் அமெரிக்கப் பல்கலைக் கழகமான சிகாகோ பல்கலைக் கழகத்தில் தாம் ஆற்றிய சொற்பொழிவுகளைத் திரட்டி, முறையாக ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றினை எழுதிய நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாய் வந்துள்ளது. டாக்டர் மு. வ. அவர்கள் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூல் சாகித்திய அகாதெமி மூலம் வெளிவந்துள்ளது. தமிழறிஞர் மு. அருணாசலம் 9 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை 'தமிழ் இலக்கிய வரலாறு' நூல்களைச் சிறப்பான முறையில் எழுதியுள்ளார்.

தமிழ் நூற் பதிப்புகள்

ஆங்கிலேயர் கொணர்ந்த அச்சு இயந்திரத்தின் பயனாய், ஓலைச்சுவடிகளின் இட்டத்தினைப் புத்தகங்கள் பற்றின. யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெரியபுராணம் போன்ற சைவ இலக்கியங்களைப் பதிப்பித்தார். நன்னூற் காண்டிகையுரையும் அவருடையதே. அவர் சென்னையில் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவிப் பல நூல்களை வெளியிட் டார். திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் உரை, கலித்தொகை, வீர சோழியம் என்னும் நூல்களைப் பதிப்பித் தார். கறையானுக்கு இரையாகி மட்கிக்கிடந்த ஓலைச்சுவடி களுக்குப் புதுவாழ்வு தந்தவர் டாக்டர் உ. வே. சா. ஆவர். பதிப்பாசிரியரான அவர் பதிப்பித்த நூல்கள் பல; பத்துப் பாட்டு, குறுந்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, மூவருலா என்பன குறிப்பிடத் தக்கனவாகும். அவரது முன்னுரை, அவர் தம் உழைப்பின் சிறப்பினைப் புலப்படுத்தும். திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை தொல்காப்பியத்தைப் பதிப்பித்துள்ளார். திரு. பவானந்தம் பிள்ளை அவர்கள் 'பவானந்தர் கழகம்' நிறுவி, நல்ல பல நூல்களை நாட்டிற்கு வழங்கினார். பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் எண்ணற்ற தமிழ் நூல் களைப் பதிப்பித்துள்ளார்.

இலக்கணக் கட்டுரைகள்

சோழவந்தான் அரசஞ்சண்முகனார், திருமயிலை சண்முகம்பிள்ளை, சோமசுந்தரம் பிள்ளை, மறைமலையடி கள், சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை ஆகியோர் பல இலக்கணக் கட்டுரைகள் வரைந்துள்ளனர். 'செந்தமிழ்ச் செல்வி' பல இலக்கணக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரு கின்றது.

உரை நூல்கள்

திரு. கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் 'திருக்குறள் தெளிபொருள் விளக்கம்' என்னும் நூலில், திருக்குறளுக்குத்

தெள்ளிய உரையினைக் கண்டுள்ளார். மறைமலையடிகள், திருவாசக விரிவுரையினை எழுதியுள்ளார். பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்கள் 'திருவாசகக் கதிர்மணி விளக்கம்' என்றோர் அரிய நூலினைத் திருவாசகத்திற்கு உரையாக வெளியிட்டுள்ளார். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் நற்றிணைக்கு ஓர் அழகிய உரை கண்டுள்ளார். உ. வே. சா. அவர்கள் குறுந்தொகை உரையினையும், மணிமேகலை உரைக்குறிப்பினையும் செய்துள்ளார். அக நானூற்றிற்கு உரை கண்டவர்கள் ந. மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையு மாவர். சிலப்பதிகாரம் முழுமைக்கும் நாட்டார் அவர்களும், புகார்க் காண்டத்திற்கு மட்டும் சர். ஆர். கே. எஸ். அவர் களும் நல்ல உரை கண்டுள்ளனர். பதிற்றுப்பத்திற்கும், புற நானூற்றிற்கும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரை எழுதியுள்ளார். திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமா சாரியார் அவர்கள் கம்பராமாயணம், வில்லிபாரதம், திருக்குறள், பத்துப்பாட்டில் சில பாட்டுகள் முதலியன வற்றிற்குத் திண்ணிய உரை வகுத்துள்ளார். டாக்டர் மு. வ. அவர்கள் திருக்குறளுக்கு ஒரு தெளிவுரையினை எழுதி யுள்ளார். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாகப் பல இலக்கியங்களுக்கு உரை எழுதப்பெற்று நூல்கள் வெளிவருகின்றன.

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை, கலிங்கத்துப்பரணி முதலான நூல்களுக்குப் புலியூர்க் கேசிகன் தெளிந்த உரை கண்டுள்ளார். மற்றும் முத்தொள்ளாயிரம், நாலடியார் முதலான நூல்களுக்கும் அறிஞர் பெருமக்கள் சிலரால் நல்ல உரை காணப் பட்டுள்ளது.

வழிச்செலவு நூல்கள்

'எனது இலங்கைச் செலவு' என்று திரு. வி. க. எழுதிய கட்டுரை, இத்துறைக்கு ஆக்கத்தினை அளித்தது. உலகம்

சுற்றிய தமிழர் ஏ. கே. செட்டியாரும், சோம. இலக்குமணச் செட்டியாரும், சுத்தானந்த பாரதியாரும், உலகில் தாம் பார்த்த பல நாடுகளைப்பற்றிச் சுவைபட நூல்கள் எழுதியுள்ளனர். தம் வெளிநாட்டுப் பயணத்தை டாக்டர் மு.வ., கல்கி, தேவன், அ. மு. பரமசிவானந்தம், தனிநாயக அடிகள், ராமசாமிநாயடு முதலியோர் நூல்களால் எழுதியுள்ளனர். திரு. நெ. து. சுந்தரவடிவேலு, காந்தி மதி, டி. கே. சண்முகம், டாக்டர் சிதம்பரநாதச் செட்டியார், சாவி, மணியன் ஆகியோர் தம் பிரயாண நினைவுகளைக் கட்டுரைகளாக வரைந்துள்ளனர். சோமு எழுதிய 'அக்கரைச் சீமையில்' எனும் பயணநூல் சாகித்திய அகாதெமியின் பரிசு பெற்றது. மணியன் 'இதயம் பேசுகிறது' என்னும் தலைப்பில் வழங்கிய பயணக் கட்டுரைகள், பல தொகுதிகளாக வெளிவந்து புகழடைந்துள்ளன.

மொழி நூல்

இது, இந்த நூற்றாண்டில் சிறப்பாக வளரும் துறை யாகும். மாகறல் கார்த்திகேய முதலியார் முதன் முதல் மொழிநூற் கருத்துகளை எழுதியிருப்பினும், அவை விஞ்ஞான முறையோடு ஒட்டியமையாமையினால், இன்று வாழவில்லை. அடுத்து வடமொழி தென்மொழி இரண்டும் தெரிந்த டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் 'தமிழ் மொழி நூல்', எழுதினார். டாக்டர் மு. வ. அவர்களின் 'மொழி நூல்' 'மொழி வரலாறு', 'மொழியியற் கட்டுரைகள்' மேனாட்டு ஆராய்ச்சியாளரும் மதிக்கும்வண்ணம் திறம்பட அமைந்துள்ளன. தேவநேயப் பாவணர், மொழி நூல் சிலவற்றினை எழுதியுள்ளார். டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள், 'சொல்லும் அவற்றின் குறிப்பீடும்' (Words and tneir Significance) என்றநூலை எழுதியுள்ளார். 'சோமலெ' யின் 'செட்டிநாடும் தமிழும்' கிளைமொழி (Dialect) பற்றியதோர் ஆராய்ச்சி நூலாகும். டாக்டர் அகஸ்திய லிங்கம், 'உலக மொழிகள்' என்னும் மொழி வரலாற்று நூலினை எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டு வரலாறு

தொடக்கத்தில் நம் நாட்டு வரலாறு ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. பி. டி. சீனிவாச ஐயங்காரின் 'தமிழர் வரலாறு' (History of the Tamils), எம். சீனிவாச ஐயங்காரின் 'தமிழ் ஆராய்ச்சி' (Tamil Studies) இராமச்சந்திர தீட்சிதரின் 'வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தமிழர்' (Pre-Historic Tamils), கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியின் 'தென்னிந்திய வரலாறு' (A History of South India) என்பன ஆங்கிலத்தில் எழுந்த நூல்களாகும். திரு. சதாசிவ பண்டாரத்தார் 'பிற்காலச் சோழர் வரலாறு', 'பாண்டியர் வரலாறு' ஆகிய நூல்களையும், டாக்டர் இராசமாணிக்கனார் 'சோழர் வரலாறு','பல்லவர் வரலாறு', 'தமிழக வரலாறு' முதலிய நூல்களையும் எழுதியுள்ளனர். அண்மையில் டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள், 'தென் இந்திய வரலாற்றினை'த் 'தென்னிந்திய மொழிகள் புத்தகக் குழு' (Southern Languages Book Trust) மூலம் வெளியிட்டார். டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் 'நாமிருக்கும் நாடு', 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல்களை எழுதியுள்ளார். பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் 'தமிழக வரலாறு' என்னும் நூலினை எழுதியுள்ளார். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் முதலாம் இராசராசன்.(க. த. திருநாவுக்கரசு எழுதியது) முதலிய பல சிறந்த வரலாற்று நூல்களை வெளியிட்டுவருகிறது.

திறனாய்வு நூல்கள்

திறனாய்வுத்துறை, மேனாட்டார் இலக்கியத்தினாலும் தொடர்பினாலும் வளர்ந்து வருகின்றது. மேலை நாடுகளிலே ஒரு திறனாய்வு நூலுக்கு ஒரு திறனாய்வு நூல் வெளிவரும் முன்னேற்றத்தினைக் காண்கிறோம். தமிழ் நாட்டில் திரு. வ. வே. சு. ஐயர் ஆங்கிலத்தில் எழுதிய 'கம்ப ராமாயண ரசனை' (Kampa Ramayana—A Study) இத் துறையில் வழிகாட்டி நூலாகும். ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதிய 'இதய ஒலி' அடுத்தபடி

பாய் அமைந்தது. மறைந்த பேராசிரியர் ஆ. முத்துசிவன் அவர்கள் எழுதிய 'கவிதை', 'அசோகவனம்.', 'அசலும் நகலும்' என்னும் நூல்கள் நல்ல திறனாய்வு நூல்களாய் அமைந்தன அடுத்து. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் எழுதிய 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்', 'இலக்கியக் கலை' ஆகிய இரண்டு நூல்களும் தனி மதிப் பினைப் பெறுகின்றன. பின்னது பாடப் புத்தகமாகவும் பயன்படுகிறது. திரு. மார்க்கபந்து சர்மா அவர்களின் 'சிலப்பதிகார ரசனை' மேனாட்டு இலக்கிய ஆராய்ச்சிப் போக்கில் அமைந்துள்ளது. டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் 'இலக்கிய ஆரரய்ச்சி' இலக்கியத்திறனை ஆயும் அளவுகோலாகப் பயன்படுகிறது. அவர் எழுதி வெளி வந்துள்ள நூல்களாம் 'இலக்கியத்திறன்' 'இலக்கியமரபு' என்பன, இத்துறை நூல்களில் மணிமுடியாய் விளங்கு கின்றன. டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் 'இலக்கிய இயல் அ. ஆ' எனும் நூல் புதிய உத்தி முறையில் எழுதப் பட்ட நூலாகும்.

டாக்டர் கைலாசபதியின் நூல்கள் ஈண்டுக் கருதத் தக்கனவாகும்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் இந்நாளில் அமிழ் தினும் இனிய நம் செந்தமிழ் மொழியானது வளர்ந்து செழித்து நிற்கின்றது. பல்கலைக்கழகப் பயிற்றுமொழி யாகவும், நீதித்துறைக்கு ஏற்ற மொழியாகவும் தமிழ் விரை வில் முற்ற அமையப்போகும் இனிய நிலையினைக் காணும் போது, தமிழர் உள்ளமெல்லாம் மகிழ்கின்றன: தமிழ் வாழ நாமும் வாழ்ந்து, தமிழ் உயர நாமும் உயர்வோம்!

பிற்சேர்க்கை

1. ஐரோப்பியர் வருகை

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில்தான் ஐரோப்பியர்களாகிய போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோர் இந்தியாவுக்கு, அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தனர். ஆனால் ஐரோப்பியரின் தொடர்பினைச் சங்க காலத்திலேயே தமிழகம் பெற்றிருந்தது. யவனர் என வழங்கப்பட்ட ரோமரும் கிரேக்கரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர். மதுரை, புகார் நகரங்களில் யவனர்கள் தங்கி வாணிகம் செய்தனர். யவனர்கள் தங்கிய பகுதி 'யவனச்சேரி' 'என அழைக்கப்பட்டது. யவன நாட்டின் கைவினைப் பொருள்கள் இங்கே இறக்குமதியாயின. தமிழ் நாட்டின் வாசனைப் பொருள்களும் பிறவும் யவன நாட்டுக்கு ஏற்றுமதியாயின.

கி. மு. 22இல் மதுரையிலிருந்து ஆண்ட பாண்டியன் ஒருவன், ரோம்நாட்டு அரசன் அகஸ்டஸ்சீசரின் அவைக்குத் தன் தூதரை அனுப்பியமை தெரிகிறது. யவன நாட்டுச் செல்வம் நம் நாட்டில் வந்து குவிவதாகப் பிளினி என்பார் குறை கூறியிருந்தார். கி.பி. 47இல், ஹிப்பாலஸ் என்பார் இந்தியப் பெருங்கடலில் வீசும் வடகிழக்குப் பருவக் காற்றையும், தென்மேற்குப் பருவக் காற்றையும் கண்டு பிடித்தார். அக்காற்று வீசும் பருவத்தில் கடற்பயணம் மேற்கொண்டால் விரைவாகத் தமிழகத்தை அடையலாம் என்பதை யவனர் அறிந்திருந்தனர். அதனால், யவனரின் வருகை மிகுந்தது, வாணிபம் வளர்ந்தது.

யவனர்கள் வாணிகம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வந்தார்கள். அதனால் அவர்கள் சமயம், கலை, மொழி முதலியவற்றில் தலையிடவில்லை.

யவனர்களின் வாணிகத் தொடர்பு கி. பி. ஏழாம் நூற்றாண்டுவரை தொடர்ந்தது. அதன்பின் அராபிய நாட்டினரான இசுலாமியர் தமிழகத்தோடு வாணிகத் தொடர்பு கொண்டார்கள். அவர்கள் தரைவழியையும் கடல்வழியையும் தம் ஆதிக்கத்தில் கொண்டு வந்தனர். தம்மைத் தவிரப் பிறர் அவ்வழிகளில் வருவதை வன்முறை மூலம் தடுத்தனர். அதனால் யவனரின் தொடர்பு அறு பட்டது.

இசுலாமியர் இந்தியப் பொருள்களை ஐரோப்பிய நாடு களில், ஒன்றுக்குப் பத்தாக விலையிட்டு விற்றுக் கொள்ளை லாபம் அடைந்தனர். இசுலாமியரிடம் செல்வம் குவிந்தது. ஐரோப்பியர் கடல்வழியே இந்தியாவுடன் நேரடியாய் வாணிகத் தொடர்புகொள்ள முயன்றனர். ஆனால், இசுலாமியரின் கடலாதிக்கத்தை மீறி அவர்களால் இந்தியா வுக்கு வர முடியவில்லை. எனவே, இந்தியாவை அடையும் வேறு வழியைக் காணப் பலர் முயன்றனர்.

கொலம்பஸ் என்பார், ஸ்பெயின் நாட்டு அரசரின் உதவி பெற்று, இந்தியாவைக் காண மேற்குத்திசையில் பயணம் செய்தார். அவர் மேற்கிந்தியத் தீவுகளையும், புதிய உலகம் என வழங்கப்படும் அமெரிக்காவையும் கண்டு பிடித்தார். ஆனால் அவர் தாம் இந்தியாவைக்கண்டுபிடித்த தாகவே நம்பினார்.

கொலம்பஸ் புதிய நாட்டைக் கண்ட செய்தியை அறிந்த பிறகு, மேலும் பலர் கடல்வழியே இந்தியா செல்லும் புதுவழி காண முயன்றனர். போர்ச்சுகல் நாட்டின் அரசரான இமானுவெல், ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு கிழக்குத் திசையில் பயணம் செய்தால், இந்தியாவை அடையலாம் என்று நம்பினார். அதனால் அவர் வாஸ்கோ-டா காமா என்பவர்க்கு எல்லா வசதிகளை

யும் செயது, இப் புதிய வழியைக் கண்டு பிடிக்கும்படி அனுப்பினார். வாஸ்கோ-டா-காமா போர்ச்சுக்கல் நாட்டின் துறைமுகமான லிஸ்பன் நகரத்திலிருந்து கி. பி. 1497 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9 ஆம் நாள் புறப்பட்டார். பல துன்பங்களையும் சோதனைகளையும் கடந்து 1498 ஆம் ஆண்டு மேத்திங்கள் 22 ஆம் நாள், மலையாளக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தார். யவனருக்குப்பின் வாணிபத்தின் பொருட்டு நம் நாட்டையடைந்த முதல் ஐரோப்பியர் இவரே. இவரைத் தொடர்ந்து போர்ச்சுகீசியர் அடிக்கடி வந்து தமிழகத்தை நிறைத்தனர். இவர்கள் கள்ளிக்கோட்டை, கோவா, கொச்சி முதலிய நகரங்களில் தங்கி வாணிகம் செய்தனர். வாணிகம் செய்வதோடு நில்லாமல் சமயப் பிரச்சாரம் செய்ய இவர்கள் கிறித்துவ மதப் பாதிரிமார்களையும் இங்கு அழைத்து வந்தனர். அப்போதே இந்தியர்களைக் கிறித்தவராக்கும் மதமாற்றமும் தொடங்கிவிட்டது.

போர்ச்சுக்கீசியர் இந்திய வாணிகத்தால் பொருள் சேர்ப்பது கண்டு, ஹாலண்டு நாட்டினரான டச்சுக்காரர்களும் பெரும் முயற்சி செய்து இந்தியாவுக்கு வந்து வாணிகம் செய்தனர். டச்சுக்காரர்கள் கி. பி. 1502 ஆம் ஆண்டில் 'கிழக்கிந்திய வாணிகக் கழகம்' ஒன்று ஏற்படுத்தினர். இந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் தம் வாணிக நிலையங்களை நிறுவி, மெல்ல மெல்லப் போர்ச்சுக்கீசியரின் இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

மூன்றாவதாக இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர் பின்னே இந்தியத் துணைக்கண்டத்தையே அடிமைப்படுத்தியாண்ட ஆங்கிலேயர் ஆவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக இந்தியா செல்லும்வழி காண ஆங்கிலேயர் முயன்றனர். சர் பிரான்ஸிஸ் டிரேக் என்பார் 1578 ஆம் ஆண்டு, போர்ச்சுக்கீசியக் கப்பல் ஒன்றைக் கொள்ளையடித்தார். அதில் கிடைத்த வரைபடம் ஒன்று, ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு, இந்தியாவுக்குச் செல்லும் வழியைத் தெரிவித்தது. அதனால் ஆங்கிலேயர்

மிக எளிதில் இந்தியாவுக்கு வந்தனர். கி. பி. 1600 ஆம் ஆண்டு, 'ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி' நிறுவப் பட்டது.

நம் நாட்டுக்கு நான்காவதாக வந்த ஐரோப்பியர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த டேனிஷ்காரர்கள். இவர்கள் 1620 இல் 'கிழக்கிந்திய வாணிகக் கழகம்' ஏற்படுத்திக் கொண்டு நம் நாட்டுக்கு வந்தனர். பழவேற்காடு, தரங்கம்பாடி முதலிய பல இடங்களில் வாணிபம் செய்தனர். இவர்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியவில்லை. தம் வாணிக நிலையங்களை 16 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பினர்.

நம் நாட்டுக்கு வாணிகம் செய்ய இறுதியாக வந்த ஐரோப்பியர், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரெஞ்சுக் காரர்கள். இவர்களும் 1664 இல் 'பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் கழகம்' ஏற்படுத்திக் கொண்டு நம் நாட்டுக்கு வந்தனர். புதுச்சேரி முதலிய இடங்களில் தம் வாணிப நிலையங்களை நிறுவிக்கொண்டனர்.

ஐந்து ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஐரோப்பியர்கள் நம் நாட்டுக்கு வருகை தந்தனர். வாணிபம் அவர்கள் முதல்குறிக்கோளாக இருந்தாலும், அவர்கள் சமயம், மொழி, அரசியல் ஆகியவற்றிலும் தலையிட்டனர். ஆதிக்கம் செலுத்துவதில் ஐரோப்பியர்களுக்குள்ளே போட்டி ஏற்பட்டது. அவர்கள் உள்நாட்டு அரசர்களுடனும் சிற்றரசர்களுடனும் சேர்ந்துகொண்டு, ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டுத் தம் தலைமையை நிலைநாட்ட முயன்றனர். போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள் ஆகிய முத்திறத்தினரும் மிக விரைவில் தோல்வி கண்டு திரும்பிச் சென்றனர். ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய இரு நாட்டவர் மட்டுமே பல்லாண்டுகள் பல போர்கள் செய்து தம் ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றனர். என்றாலும் முடிவில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். கி.பி. 1784 இல்

கடலாதிக்கம் ஆங்கிலேயரின் ஆளுகைக்குட்பட்டது. 'ஆங்கிலேயக் கம்பெனி வாணிபம்' என்பது மாறி, 'ஆங்கிலேயக் கம்பெனி அரசாங்கம்' என்பது தோன்றியது. அகண்ட இந்தியா முழுவதுமே அதற்கு அடிமைப்பட்டது. கி.பி. 1858இல் இங்கிலாந்து அரசு, இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து தானே ஏற்றுக் கொண்டது. அது முதல் கி.பி. 1944ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14ஆம் நாள் வரை அந்த ஆட்சி நிலைத்து நின்றது.

ஐரோப்பியரின் வருகை, அரசியலில் பெரும் மாற்றம் செய்தது போலவே மொழியிலும் இலக்கியத்திலும் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் தாக்கம், அதன்பின் எழுந்த பெரும்பாலான இலக்கியத்தில் இருக்கக் காணலாம். அடிமைப்படுத்தியவர்களின் ஆட்சியில், தமிழ் மொழியும் இலக்கியமும் சில புதுமைகள் பெற்று, புதுத் துறைகள் பெற்று வளம் பெற்றதை மறுக்க முடியாது

2. அச்சு இயந்திரத்தின் தோற்றம்

பொதுவாக உலகம் முழுவதிலும் கல்வி என்பது செல்வம் மிக்கவர்களின் தனியுரிமையாக இருந்து வந்தது. நடுத்தர மக்களும், கடைநிலை மக்களும், பெரும் பொருள் செலவிட்டுத் தம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுத் தரமுடிய வில்லை. அதனால் அவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவு அற்றவர்களாகவே இருந்தனர். செல்வம் மிக்கவரிடம் சிறைப்பட்ட கல்வியினால் கல்வியில் புதுமை உண்டாக வில்லை. புதிய இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்ற வில்லை. அச்சுக்கலை தோன்றிய பின்னரே, அச்சு இயந் திரங்கள் நூற்றுக்கணக்கான படிகளை எளிதில் அச்சிட்டு மலிவு விலைக்கு விற்ற பின்னரே, எளிய மக்களும் அவற்றை வாங்கிப் படித்துப் பயனடையத் தொடங்கினர். உலக மொழிகள் யாவுமே, அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்புக்

குப் பின்னர் இலக்கிய வளம் செழித்து, சிறுகதை, நாவல் முதலிய புதுத்துறைகளைப் பெற்றுச் சிறந்தன. நம் நாட்டின் இலக்கியமும் அச்சு இயந்திரத்தின் அறிமுகத்திற் குப் பின்னரே புதுமை பல பெற்றுப் பொலிவுற்று வளர்ந்தது.

ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னர், தமிழ் நாட்டி னர் கல்வி அறிவு பெறுவதும், தமக்குச் சொந்தமாகச் சில நூல்களைப் பெறுவதும் அரிதாக இருந்தன. தமிழர்கள் பனை ஓலையில் எழுதிப் படித்தனர். பனை ஓலையில் எழுதுவதும், எழுதியதை அடிக்கடி எடுத்துப் பயன்படுத்து வதும், அதைப் பாதுகாத்து வைப்பதும் தொல்லை மிகுந்த செயல்களாகும்.

எழுதப் பயன்படுத்தப்பட்ட பனைஓலை பக்குவநிலை யில் தக்கபடி காய்ந்ததாக இருக்கவேண்டும். அதில் இரும்பு எழுத்தாணிகொண்டு அழுத்தி எழுதவேண்டும். ஓலையில் எழுத்துக்கள் தெரியுமளவு அழுத்தி எழுதவேண்டும். அதே சமயம், எழுத்தாணி ஓலையைக் கிழித்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஓலைகள் ஒரே அளவாக இருக்க வேண்டும். அவற்றில் துளையிட்டு, அதில் நூல் நுழைத்து, அந் நூலால் ஏடுகளைச் சுற்றிக் கட்டிவைக்க வேண்டும். நூலை இறுக்கிக் கட்டினால் சுவடி முறிந்துபோகும். ஏட்டைப் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும், அதை மிகக் கவனத்துடன் கையாளவேண்டும். அதன்பின் ஏடுகளைச் செல்லரிக்க விடாமல் கருத்தோடு பாதுகாக்க வேண்டும். இத்தனை தொல்லைகள் மிகுந்த ஏட்டைப் பெற்றுக் கல்வி யறிவை வளர்த்துக் கொள்வது அருமையாகவே இருந்தது.

ஒருவரிடமுள்ள ஓர் நூலை மற்றொருவர் பிரதி எடுத்துக் கொள்வது, உழைப்புமிக்க செயலாக அமைந்தது. அதனால் தமிழகத்தில் மொழிவளம் பெறுவதும், நல்ல நூல்கள் எல்லாத் தரத்து மக்களிடையே பரவுவதும் எளிதாக இருக்கவில்லை.

ஓலையில் எழுதும்போது, புள்ளி எழுத்துக்கள் ஓலை யைக் கிழித்துவிடும் என்று கருதி, மெய்யெழுத்துக்களைப்

புள்ளியில்லாமல் எழுதினர். 'கொள' என்று ஏட்டில் இருந்தால் அதைக் 'கொள, கோள, கொள் கோள்; என்று பல வகையில் படிக்க இடமிருந்தது. ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதும்போது பிலழகள் ஏற்பட்டன. இவற்றால் பாட பேதங்கள் மிகுந்தன. சுவடி படிப்பது, எழுதுவது ஆகிய இவ்விரு செயல்களில் ஏற்படக்கூடிய பிழைகளை உணர்ந்தே, 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்னும் பழமொழியும் ஏற்பட்டது.

ஓலையில் எழுதுவதும் கடினமாய் இருந்தமையால், எதையும் சுருக்கமாக எழுதும் வழக்கத்தைத் தமிழர் கைக்கொண்டனர். அதனால் சுருங்கச் சொல்வதற்கேற்ற கவிதையை ஏற்று, விரித்துச் கொல்லும் உரைநடையைப் புறக்கணித்தனர். அதனால், உரைநடை வளம் பெறாமல் ஒடுங்கியது.

மேற்சொன்ன எழுது முறையின் இன்னல்களை நீக்கும் நன்மருந்தாக அச்சு இயந்திரம் வந்தது. ஒரு நூலை அச்சு இயந்திரத்தின் மூலம் எத்தனை படிகள் வேண்டுமானாலும் அச்சிடலாம். ஒரு படிக்கும் மற்றொரு படிக்கும் வேறுபாடு இருக்காது. அதாவது பாடபேதங்கள் ஏற்படாது. புள்ளி நீக்கி எழுத வேண்டிய அவசியமும் அச்சு நூலுக்கில்லை. அச்சிடுவது எளிது என்பதால், எதையும் சுருக்கமாகக் கவிதையில் எழுதவேண்டிய அவசியமின்றித் தெளிவாக, விளக்கமாக உரைநடையில் எழுதி அச்சிட்டனர். மக்களிடையே கல்வி எளிதில் பரவவும், நூல்கள் மிகுதியாக வெளிவரவும் பெருந்துணை புரிந்த அச்சு இயந்திரம் ஐரோப்பியர்களால் நம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ் நாட்டிற்கு அச்சு இயந்திரம் வரும் முன்னரே, ஐரோப்பிய நாடுகளில் தமிழ் அச்செழுத்துக்களை உருவாக்கிப் பல தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. இந்திய மொழிகளில் அச்சுப் புத்தகத்தை முதலில் பெற்றது தமிழ் மொழியே. பிறகுதான் மற்ற மொழிகளில் அச்சு நூல்கள் ஏற்பட்டன.

'மலையாளத் தாவர நூல்' (Horti Indicl Malabaricl) என்னும் தமிழ்நூல், ஹாலந்து நாட்டின் தலைநகரமான ஆம்ஸ்டர்டாமில், கி. பி. 1686இல் அச்சிடப்பட்டது. ஷூல்ஸ் ஐயர் என்னும் ஜெர்மானியர், 'பரதிஸ் தோட்டம்' (garden of paradise) என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்து 1749-இல் அச்சிட்டார். அவரே True Chiristlanity என்னும் நூலை மொழிபெயர்த்து 'ஞானக்கண்ணாடி' என்னும் தலைப்பில் 1750இல் அச்சிட்டார். இவ்விரு நூல்களும் ஜெர்மன் நாட்டின் ஹாலி (Halle) நகரத்தில் அச்சிடப் பட்டன. ஏறத்தாழ இதே காலத்தில் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த ரோம்நகரிலும் சில தமிழ்நூல்கள் அச்சிடப்பட்டன.

தமிழகத்திலும் அச்சு இயந்திரங்களை வரவழைத்துத் தமிழ் நூல்கள் அச்சிட ஐரோப்பியர் முயன்று வெற்றி கண்டனர். 1578இல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்னும்இடத்தில் அச்சுக்கூடம் ஏற்பட்டது. கொச்சி, வைப்புக்கோட்டை, அம்பலக்காடு முதலிய பல நகரங்களில் அச்சு இயந்திரங்கள் தோன்றித் தமிழ் நூல் களை அச்சிட்டன.

தமிழ்நாட்டில் அச்சான முதல் தமிழ் நூல் "கிறித்தவ வேதோபதேசம்" என்று, மயிலை சீனி வேங்கடசாமி குறிப் பிடுகிறார். இந்நூல் கி. பி. 1577இல் வைப்புக் கோட்டை யில் நிறுவப்பட்ட அச்சு இயந்திரத்தில் அச்சிடப்பட்டது. இதற்குரிய தமிழ் எழுத்துகளை, ஏசுசபைப் பாதிரியாராகிய கோண்ஸால்வஸ் என்னும் ஸ்பெயின் நாட்டவர் உருவாக்கிக் கொடுத்தார். 1579இல் 'கிறித்துவ வணக்கம்' என்னும் நூல் கொச்சியில் அச்சிடப் பெற்றது. இதே ஆண்டில் அம்பலக்காட்டில், 'போச்சுகீஸ் தமிழ்ப் புத்தகம்' ஒன்று அச்சிடப்பெற்றது. இந்நூலுக்கான தமிழ் எழுத்துகளை நம் நாட்டவரான இன்னாசி ஆச்சாமணி (Ignatius Aichamani) என்பவர் உருவாக்கினார். இந்நூல்கள் 'மலபார்' மொழியில் அச்சிடப்பட்ட நூல்கள் என்று சிலர் எழுதியுள்ளனர். இரண்டும் தமிழ் நூல்களே. தமிழ் மொழியை அக்காலத்தில்

சில ஐரோப்பியர்கள் 'மலபார் மொழி' என வழங்கிவந்தனர். மேற் குறிப்பிட்ட அம்பலக்காட்டு அச்சுக்கூடம் 1550இல் நிறுவப்பட்டது.

புன்னைக்காயல் என்னும் ஊரில் 1578ஆம் ஆண்டு, ஏசுசபைப் பாதிரிமார் தமிழ் கற்பதற்காக ஒரு கல்லூரி நிறுவப்பட்டது. அக் கல்லூரி மாணவர்களுக்கான நூல் களை அச்சிட, கல்லூரியின் தலைவர் என்ரீகஸ் (Er, Henriquez) என்பவரின் முயற்சியால், அவரது மேற் பார்வையின்கீழ் ஓர் அச்சுக்கூடம் தோன்றியது. ஜோவாட்டி —பாரிய (Joav de Faria) என்பவர், இவ்வச்சுக் கூடத்துக் கான தமிழ் எழுத்துகளை உருவாக்கிக் கொடுத்தார். இவ் வெழுத்துகள் மரவெழுத்துகளாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். இங்குப் பல தமிழ் நூல்கள் அச்சிடப் பெற்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸீகன் பால்கு ஐயர் என்னும் டேனீஷ் பாதிரியார் தஞ்சை மாவட்டத்தின் தரங்கம்பாடியில் தங்கித் தொண்டாற்றி னார். அவர் ஜெர்மனியிலிருந்த நண்பர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, தமக்கு வேண்டிய நூல்களையும், தம்மிடம் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களையும் ஓலைச் சுவடியில் எழுதித் தயாரிப்பது காலச் செலவும் பொருட் செலவும் மிக்கதாக இருக்கிறது என்றும், அவ்வாறே காலமும் பொருளும் செலவிட்டாலும் ஒரு சில படிகளையே உருவாக்க முடிகிறதென்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும், குறைந்த செலவில், எண்ணற்ற படிகளை உருவாக்கத் தமிழ் அச்செழுத்துகளையும், அச்சு இயந்திரம் ஒன்றையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும் நண்பர்களை வேண்டினார். ஸீகன் பால்கு ஐயரின் சிறந்த செர்மன் நண்பர்கள், அவர் வேண்டு கோளுக்குச் செவி சாய்த்து, தமிழ் அச்செழுத்துகளையும் அச்சுப்பொறியையும் அவருக்கு அனுப்பி வைத்தனர். கி. பி. 1713ஆம் ஆண்டு அவை தரங்கம்பாடிக்கு வந்து சேர, அதே ஆண்டில் அச்சகம் செயல்படத் தொடங்கியது. ஸீகன்

பால்கு ஐயரின் இடைவிடா முயற்சியால் ஏராளமான தமிழ் நூல்கள் அங்கே அச்சிடப்பட்டன. நூல்கள் அச்சிடுவதற்குப் போதுமான காகிதம் ஐரோப்பாவிலிருந்து வருவதற்குக் காலதாமதம் அடிக்கடி ஏற்பட்டதால், தரங்கம்பாடிக்கு அருகே, அவர் ஒரு காகித உற்பத்திச் சாலையும் தொடங்கினார். அது நீண்டநாள் நிலைத்து நிற்கவில்லை. என்றாலும் இந்தியாவில் முதன்முதலில் காகிதத் தொழிற்சாலை நிறுவியவர் தரங்கம்பாடி ஏசு சபையினர் என்னும் பெருமையைப் பெற்றுத் தந்தது.

ஆங்கிலேயர் 1761ஆம் ஆண்டு புதுச்சேரியைக் கைப்பற்றினர். அங்கிருந்த அச்சு இயந்திரத்தைத் கைப்பற்றி அதைச் சென்னைக்கு அனுப்பினர். அது சென்னை வேப்பேரியில் நிறுவப்பட்டது. அங்கே அரசுக்குத் தேவையான நூல்கள் பல அச்சிடபபட்டன.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அச்சுக்கூடங்கள் பல தோன்றின. 1835ஆம் ஆண்டில், இந்தியர் அச்சுக்கூடம் வைக்கக்கூடாது என்றிருந்த கடைச் சட்டம் நீங்கியது. அதனால் தமிழர்களும் அச்சு இயந்திரங்கள் வரவழைத்து அச்சுக் கூடங்கள் நிறுவினர். கிறித்தவ நூல்கள் அல்லாமல் பல நல்ல தமிழ் நூல்கள் அச்சாயின. பழந்தமிழ் இலக்கியங்கள் அச்சுப் புத்தக வடிவம் பெற்றன. மக்களிடையே அவை எளிதில் பரவின.

தமிழர் கல்வி அறிவு பெறவும், தமிழ் மொழி வளமுறவும் புதிய இலக்கியத் துறைகள் தோன்றவும் ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய அச்சு இயந்திரம் பேரளவு துணை செய்தது என்பதைத் தமிழர்கள் நன்றியுடன் நினைத்து இன்றும் போற்றுகின்றனர்.

3. இந்திய நாட்டின் விடுதலை இயக்கமும் தமிழ் நாட்டில் அதன் செல்வாக்கும்

போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் என்று, ஐந்து ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் நம் நாட்டில் புகுந்தனர். இவர்களுள் ஆங்கிலேயர் நம் நாட்டில் காலூன்றிப் பிற ஐரோப்பியர்களின் செல்வாக்கைச் சிதைத்தனர். ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு, மெல்ல மெல்லத் தன் ஆதிக்க வலையை இந்திய நாடு முழுதும் பரப்பியது. 1799இல் கம்பெனி, தென்னிந்தியாவில் மைசூர் சுல்தானைத் தோற்கடித்தது. 1818இல் வட இந்தியாவில் மகாராட்டிரரை வென்றது. அதன்பின் அகண்ட பாரதமே ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டு அடிமையானது.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வப்போது அதை எதிர்த்துப் போராடினர்; புரட்சி செய்தனர். 1806ஆம் ஆண்டு வேலூர்க் கோட்டையிலிருந்த சிப்பாய்கள் ஆங்கிலேயர்க்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து புரட்சி செய்தார்கள். அதில் 100 வெள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டனர். உடனே ஆர்க்காட்டிலிருந்த கர்னல் கில்லஸ்பி (Col Gillespie) ஒரு படையுடன் சென்று, முந்நூறு இந்தியச் சிப்பாய்களைக் கொன்று புரட்சியை அடக்கிவிட்டார். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த முதன் போராட்டமே இந்த வேலூர்ப் புரட்சி. இந்திய விடுதலைப்போரைத் தொடங்கிவைத்த பெருமையை வேலூர்ப் புரட்சிமூலம் தமிழர்கள் பெற்றார்கள்.

வட இந்தியாவில் 1857இல் பேரளவில் விடுதலைப்போர் ஒன்று நடந்தது. அதனை வெள்ளையர் 'சிப்பாய்க் கலகம்' என்று குறிப்பிட்டனர். சிப்பாய்களும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப்புரட்சி செய்தனர். புரட்சித்தீ பல நகரங்களுக்கும் பரவியது என்றாலும், முடிவில் தோல்வி கண்டது. இப் புரட்சியின் விளைவாக

1858இல் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து, ஆங்கில அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

இந்திய விடுதலைப்போர் தொடர்ந்தது. அதில் தமிழரின் பங்கும் வளர்ந்தது. தமிழ்நாட்டின் பாளையக்காரர்கள் சிலர் வெள்ளையரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினர். சிவகங்கை அரசரான முத்து வடுக நாதர், பாஞ்சாலங் குறிச்சியின் கட்ட பொம்மன், மறவர்குலத் திலகங்களான மருது சகோதரர்கள், புலித்தேவன் முதலானோர் அவ்வப் போது அன்னியர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி முடிவில் வீழ்ந்தனர். 'வானம் பொழியுது பூமி விளையுது வெள்ளையனுக்கேது கிஸ்திப்பணம்' என்னும் கட்ட பொம்மனின் முழக்கம் தமிழரின் உரிமைக் குரலாய் ஒலித்தது.

இந்தியரின் விடுதலைப் போருக்கு, ஆங்கிலேயரில் பரந்த மனமும் மனிதாபிமானமும் கொண்ட சிலர் துணைநின்றனர். அத்தகையோக் 1852இல், 'பிரிட்டிஷ் இந்தியக் கழகம்' (Britiah Indian Association) தொடங்கினர். அதில் இந்தியர்களும் பங்குகொண்டனர். இக் கழகமே, 28-12-1885இல், 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்னும் அமைப்பாக உருவாகி, முடிவில் இந்தியா விடுதலை பெறச் செய்தது.

காங்கிரஸ் மெல்ல மெல்ல, ஆனால் மிக உறுதியாக வளர்ந்தது. இந்திய விடுதலைப் போரில் காந்தி அடிகளின் நேரடிப் பங்கு தொடங்கியது. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தேசிய இயக்கத்தில் பங்குகொண்ட பின் காங்கிரஸின் பலம பன்மடங்கு பெருகியது. காந்தியடிகளே, வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணித்தல், வெள்ளையனே வெளியேறு என்னும் இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம் முதலியன நடத்தி முழுச் சுதந்திரம் எனும் இலட்சியத்தை அடையத் துணை செய்தார். அவரது போராட்டத்தில் தமிழரும் பங்கு கொண்டு, உடல் பொருள் உயிரைக் காணிக்கையாக்கி உழைத்தனர்.

புரட்சிக் கனலாம் வ.வே.சு. ஐயர், தேசிய கவி சி. சுப்பிரமணிய பாரதியார், அவர் பாடல்களை நாடு

முழுதும் பரப்பிய சுப்பிரமணிய சிவா, வெள்ளையனுக்குப் போட்டியாகக் கப்பல் செலுத்திய கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை, சீனிவாச ஐயங்கார், மூதறிஞர் இராஜாஜி, வைக்கம் வீரர் ஈ.வே. இராமசாமிப் பெரியார், தமிழ்த் தென்றல் திரு. வி. க., முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி முதலியோர் இந்திய தேசியக் காங்கிரஸின் போராட்டங்களில் ஈடுபட்டு விடுதலைப் போராம் பெருந் தீயில் நெய் சொரிந்தனர். 1887 ஆம் ஆண்டு காங்கிரஸின் மூன்றாம் மாநாடு சென்னையில் நடைபெற்றது. சென்னையிலிருந்து வெளியான 'இந்து' என்னும் ஆங்கில நாளேடும், 'சுதேச மித்திரன்' என்னும் தமிழ் நாளோடும் சுதந்திரப் போருக்குத் துணை நின்றன, 'வந்தே மாதரம்' என்னும் முழக்கம் தமிழகத்தின் பட்டிதொட்டிகளிலும் எதிரொலித்தது.

பஞ்சாப், வங்காளம் போன்ற மாநிலங்களில் சுதந்திரப் போரில் பயங்கரவாதம் இடம்பெற்று, வன்முறைச் செயல்கள் தலை தூக்கின. அவ் வன்முறை இயக்கத்தின் செல்வாக்குத் தமிழ்நாட்டிலும் மெல்ல நுழைந்தது. குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அதற்கு ஆதரவு கிடைத்தது. அதன் விளைவாக வாஞ்சி என்னும லாலிபன், மணியாச்சி ரயில் சந்திப்பில் திருநெல்வேலிக் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்தான். வாஞ்சியின் சட்டைப் பையிலிருந்த கடிதத்தில் "ஜார்ஜைக் கொல்வதாக நாங்கள் மதறாசிகள் 3000 பேர் சபதம் பூண்டுள்ளோம். அவர்கள் அனைவரிலும் பெரியோனான நான் அதைத் தெரிவிக்கும் வகையில் இன்று இச் செயலை (ஆஷ் கொலை)ச் செய்தேன்" என்று எழுதப்பட்டிருந்தது. இக் கொலை வழக்கில் நீலகண்ட பிரமச்சாரி முதலிய 14 பேர் தண்டனை பெற்றனர். தீவிரவாதிகளின் வன்முறை இயக்கம் வெள்ளையரால் அடக்கி ஒடுக்கப் பட்டது.

தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில், தன்னாட்சி இயக்கம் (Home Rule), ஒத்துழையாமை இயக்கம், கிலாபத்

இயக்கம் ஆகியவை தோன்றின. அப்போது அன்னி பெஸண்ட் அம்மையார் தமிழ்நாட்டில் தேசிய விழிப்புணர்ச் சியை உண்டாக்கினார். தமது, 'புதிய இந்தியா' (New India) பத்திரிகை மூலம் விடுதலைக் கனலைப் பரப்பினார்.

1930இல் காந்தி அடிகள் வடநாட்டில் உப்புச்சத்தியாக் கிரகம் தொடங்கினார். அவரது 'தண்டியாத்திரை' உலகப் புகழ் பெற்றது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் வேதா ரண்யத்தில் தமிழ்த் தலைவர்கள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். இராஜாஜி, டி .எஸ். எஸ். ராஜன், சர்தார் வேதரத்தினம், திருமதி லட்சுமிபதி முதலானோர் இப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். நாமக்கல் கவிஞரின் 'கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தம் ஒன்று வருகுது' என்னும் புகழ் வாய்ந்த பாடல், இந்தச் சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்காக வழிநடைப் பாடலாக எழுதப்பட்டதாகும்.

இந்தியர்களின் விடுதலைக் கிளர்ச்சியின் பலனாக ஆங்கில அரசு, ஆட்சி முறையில் சில புது முறைகளைப் புகுத்தியது. அதன்படி 1935இல் கொண்டுவரப்பட்டதே மாகாண சுய ஆட்சித் திட்டம். அதன்படி 1936இல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு, பல மாநிலங் களில் காங்கிரஸ் அரசை நிறுவியது. சென்னையில் இராஜாஜி தலைமையில் முதன் முதலாக காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது.

இந்நிலையில் இரண்டாவது உலகப்போர் மூண்டது. இதில் இந்தியாவையும் வெள்ளையரசு ஈடுபடுத்தியது. இப் போருக்கு உதவுவதில்லை என்று காங்கிரஸ் முடிவுசெய்தது. அதனால் காங்கிரஸ் அமைச்சரவைகள் 1942இல் பதவி விலகின. வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து இதே ஆண்டு நாடு முழுவதிலும் ஒரு பெரும் புரட்சி எழுந்தது. இதனை 1942 புரட்சி எனக் குறிப்பிடுவர். இப் புரட்சியில் தமிழ்நாடும் பங்கு கொண்டது. அதனால் பல தலைவர்கள் சிறைப் பட்டார்கள். 1945இல் அனைவரும் விடுதலை பெற்றனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், வல்லரசுகள் உலக நிலைக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை உருவானது. ஆங்கிலேயர் தம் ஆதிக்கத்திலிருந்த இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு உரிமை வழங்கினர். இவற்றுள் இந்தியா மட்டும், இந்தியா, பாக்கிஸ்தான் என்னும் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டன் பிரபுவே விளங்கினார். அவருக்குப்பின், தமிழ்நாட்டவரான இராஜாஜி நியமிக்கப்பட்டார்.

இந்திய தேசிய விடுதலைப் போரின்போது தமிழ் இலக்கியமும் அதனை எதிரொலித்தது, வளர்ந்தது. சுப்பிரமணிய பாரதியார் தம் பாடல்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் சுதந்திர உணர்வை வளர்த்தார். நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதி, ம. ரா., கல்கி. ரா. கிருஷ்ணமூர்த்தி, வெ. சாமிநாத சர்மா, வேங்கடரமணி முதலியோர் தம் எழுத்தால் தேசியத்தையும் செந்தமிழையும் வளர்த்தனர். தமிழ் மொழி, முன் எப்போதும் இல்லாத அளவு நாட்டு விடுதலைப் பாடல்களையும், கதை, கட்டுரைகளையும் பெற்று வளமுற்றது.

இந்திய தேசிய இயக்க வரலாற்றிலும், இந்திய விடுதலைக்கான போராட்டத்திலும், தமிழ்நாட்டின் பங்கும், தமிழரின் பணியும் பெருமைகொள்ளத்தக்க அளவினதாய் அமைந்தன. இந்தியச் சுதந்திரப் பயிருக்குத் தமிழரின் கண்ணீரும் செந்நீரும் போதிய அளவு பாய்ச்சப்பட்டன. தமிழ்நாட்டு மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்துகிடந்தும், ஏழோர்கள் செக்கடியில் நொந்தும், மாதரையும் மக்களையும், வன்கண்மையால் பிரிந்து காதல் இளைஞர் கருத்தழிந்தும், இதந்தரும் கோடி இன்னலின் விளைவை அனுபவித்தும், சுதந்தரத் தேவியைத் தொழுது, விடுதலை வேள்வியை இயற்றி வெற்றி பெற்றனர். இன்று நாம் துய்க்கும் சுதந்திரம் நம் முன்னோர் உழைப்பால், தியாகத்தால் உருவானது என்பதை யாரும் என்றும் மறக்க முடியாது.

4. சாகித்ய அகாதெமி பரிசுபெற்ற தமிழ் நூல்கள்

தொடர் எண்	ஆண்டு	நூல்	ஆசிரியர்
1.	1954	தமிழ் இன்பம் (கட்டுரைகள்)	பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை
2.	1956	அலை ஓசை (நாவல்)	திரு. ரா. கிருட்டிண மூர்த்தி ("கல்கி")
	1957	வழங்கப்படவில்லை	
3.	1958	சக்கரவர்த்தித் திருமகன் (இராமாயணக்கதை)	திரு. சி. இராச கோபாலாச்சாரியார்
	1959	வழங்கப்படவில்லை	
	1960	வழங்கப்படவில்லை	
4.	1961	அகல் விளக்கு (நாவல்)	டாக்டர் மு. வரதராசனார்
5.	1962	அக்கரைச்சீமையில் (பயண இலக்கியம்)	திரு. மீ. ப. சோமசுந்தரம்
6.	1963	வேங்கையின் மைந்தன் (வரலாற்று நாவல்)	திரு. அகிலன்
	1964	வழங்கப்படவில்லை	
7.	1965	ஸ்ரீ இராமானுசர் (வாழ்க்கை வரலாற்று நூல்)	திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியா
8.	1966	வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வரலாறும் இலக்கியமும்)	திரு. ம. பொ. சிவஞானம்
9.	1967	வீரர் உலகம் (பழந் தமிழ் இலக்கியக் கட்டுரைகள்)	திரு. கி. வா. ஜகந்நாதன்

தொடர் எண்	ஆண்டு	நூல்	ஆசிரியர்
10.	1968	வெள்ளைப்பறவை (கவிதை)	திரு. அ. சீனிவாச ராகவன்
11.	1969	பிசிராந்தையார் (நாடகம்)	புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
12.	1970	அன்பளிப்பு (சிறுகதைகள்)	திரு. கு. அழகிரி சாமி
13.	1971	சமுதாய வீதி (நாவல்)	திரு. நா. பார்த்தசாரதி
14.	1972	சில நேரங்களில் சில மனிதர்கள் (நாவல்)	திரு. த. ஜெய காந்தன்
15.	1973	வேருக்கு நீர் (நாவல்)	திருமதி. ராஜம் கிருஷ்ணன்
16.	1975	திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கி யத்திறனாய்வு)	திரு. க. தி. திருநாவுக்கரசு
17.	1975	தற்காலத் தமிழ் இலக்கியம் (இலக் கிய வரலாறு)	டாக்டர். இரா. தண்டாயுதம்
	1976	வழங்கப்படவில்லை	
18.	1977	குருதிப்புனல் (நாவல்)	திருமதி. இந்திரா பார்த்தசாரதி
19.	1978	புதுக்கவிதைகளின் தோற்றமும் வளர்ச் சியும் (திறனாய்வு)	திரு. வல்லிக் கண்ணன்
20.	1979	சக்தி வைத்தியம் (சிறுகதைகள்)	திரு. தி. ஜானகி ராமன்
21.	1980	சேரமான் காதலி (நாவல்)	கவிஞர். கண்ண தாசன்
22.	1981	புதிய உரைநடை (திறனாய்வு)	எழில் முதலவன் மா. இராமலிங்க
23.	1982	மணிக்கொடிக் காலம்	(பி. எஸ். ராமையா)

5. வினாத்தாள்கள்

TAMILNADU PUBLIC SERVICE COMMISSION

Competitive Examination for Recruitment to the State Services (Masters Degree Standard)

1977

காலம் — மூன்று மணி. மொத்த மதிப்பெண்கள்: 100.

குறிப்பு : (1) கீழ்க் காணப்பெறும் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகளுள் ஏதேனும் ஒரு பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும், மற்றொரு பிரிவிலிருந்து மூன்று வினாக்களையும் தேர்ந்தெடுத்து, மொத்தத்தில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(2) வினாக்களனைத்தும் ஒத்த மதிப்பெண்களைப் பெறுவனவே.

'அ' பிரிவு

1. திராவிட மொழிகளில் தமிழின் தொன்மையினையும் பெருமையினையும் எடுத்துக் காட்டுக.
2. எழுத்துகளின் மாத்திரையினை எடுத்துக் காட்டுக.
3. தமிழின் 'தொகைநிலைத் தொடர்களை' விளக்கி வரைக.
4. இடைச்சொல் அல்லது உரிச்சொல்பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் இடைப் பட்ட வேற்றுமைகளை விளக்குக.

'ஆ' பிரிவு

6. சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் குறித்து எழுதுக.
7. தமிழ் இலக்கியத்துள் திருக்குறள் பெறும் சிறப்பிடத் தினைக் குறித்து ஆய்க.
8. தமிழ் இலக்கியத்திற்கு முசுலிம் புலவர்கள் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.
9. தமிழில் புதினங்களின் (Novel) வளர்ச்சி குறித்து எழுதுக.
10. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த இலக்கிய நூலொன்றை அதன் தகுதி அடிப்படையில் மதிப்பிடுக.

1980

காலம்—மூன்று மணி

மொத்த மதிப்பெண் : 100

[குறிப்பு—(1) கீழ்க்காணப்பெறும் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் முதல் வினாவுக்குத் தவறாது விடை தருக.

(2) ஒவ்வொரு பிரிவிலும் பிற வினாக்களுள் ஐந்தனுக்கு விடை தருதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வினாவிற்கும் ஒன்றரைப் பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.

'அ'—பிரிவு

i. திராவிட மொழிகளுள் தமிழ் மொழியின் சிறப்பியல்புகளை எழுதுக. 10

அல்லது

தமிழ் நெடுங் கணக்கு வைப்பு முறையை வரைக.

ii. 'ஐ', 'ஔ' — இவ்விரண்டு கூட்டொலிகளைத் தமிழ் இலக்கண நூலார் வழிநின்று விளக்குக. 8

iii. உடம்படு மெய்யாவது யாது? அதன் தோற்றத்தினையும், அதனால் மொழி பெற்ற சிறப்பினையும் எழுதுக. 8

iv. சங்ககாலத் தமிழ் பற்றிச் சுருக்கி எழுதுக. 8

v. தமிழில் கால இடை நிலைகளை வரலாற்று முறையில் ஆய்க. 8

vi. "தமிழில் வேற்றுமை உருபுகள்" என்பது பற்றிக் கட்டுரை வரைக. 8

vii. தமிழ்ப் பேச்சு மொழியில் மாவட்டம்தோறும் காணும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் சில சான்றுகள் காட்டி விளக்குக. 8

viii. "சார்பெழுத்துக்"கள் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க. 8

'ஆ'—பிரிவு

ix. "தொல்காப்பியமே சங்க இலக்கியங்களுக்கு வழி காட்டி"—என்பதை நிறுவுக. 10

அல்லது

எட்டுத் தொகை நூல்களைச் சுட்டி, அவற்றுள் எவையேனும் இரண்டிற்குக் குறிப்பு வரைக.

x. சங்க இலக்கியங்களுள் "ஆற்றுப்படை இலக்கியங்கள்" பெறும் இடத்தை வரையறுக்க. 8

xi. தமிழில் "இரட்டைக் காப்பியங்களாகக்" கருதப்படுவன யாவை? அப் பெயர் பொருந்துமாற்றை ஆய்க. 8

xii. தமிழ் இலக்கியத்துக்குச் சமணர்கள் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக. 8

xiii. பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய காப்பியங்களுள் ஒன்றினைப்பற்றி எழுதுக. 8

xv. தமிழில் சிறுகதைகளின் வளர்ச்சியை வரைக. 8

xv. தமிழ் உரைநடை வளர்ச்சியில் மறைமலையடிகள் அல்லது திரு. வி. க. பெறும் பங்கு யாது? 8

xvi. "தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்" பற்றி நும் கருத்தினை வரைக. 8

1981-82

'அ'—பிரிவு

1. இலக்கியத்தினின்று அமைவது இலக்கணம் என்பதெவ்வாறு?

அல்லது

தமிழின் சார்பெழுத்துக்கள் பற்றி விளக்குக.

2. குற்றியலுகரம் பற்றி ஒரு விளக்கம் தருக.

3. பெயரெச்சம், வினையெச்சங்கள் குறித்து விவரிக்க.

4. தமிழ் மொழிச் சொற்கள் பிற மொழிகளிலும், பிற மொழிச் சொற்கள் தமிழ் மொழியிலும் கலந்துள்ள நிலையை விவரிக்க.

5. கி.மு. வில் தமிழ் இலக்கண, இலக்கிய நிலையைக் கூறுக.

6. குறிப்புவினை பற்றி ஒரு கட்டுரை வரைக.

7. தமிழில் அசையழுத்தம் உண்டா? அது பற்றி இலக்கண நூலாரும் மொழி நூலாரும் தரும் கருத்துக்களை விளக்குக.

8. வேற்றுமை உருபுகள் "தனிச் சொற்களின் திரிபுகள்" என்ற அறிஞர் கால்டுவெல்லின் கருத்தை ஆராய்க.

'ஆ'—பிரிவு

9. எட்டுத்தொகை நூல்களின் சிறப்பியல்புகளைச் சுட்டுக.

அல்லது

பதிற்றுப்பத்து வழி சேர அரசர்களின் சிறப்புகளை விளக்கிக் காட்டுக.

10. வைணவப் புராணம், சிற்றிலக்கியம் பற்றிய நூற் பெயர்களைத் தொகுத்துரைக்க.

11. 'சிலப்பதிகாரம் சமயப் பொதுமைக் காப்பியம்' என்ற கூற்றினை ஆய்க.

12. குலோத்துங்க சோழனின் தமிழ்ப்பணி யாது?

13. சித்தர், பட்டினத்தார், தாயுமானவர் ஆகியோர் பாடல்கள் தமிழிலக்கிய வளர்ச்சியில் பெறும் இடம் யாது?

14. இருபதாம் நூற்றாண்டில் நாடகம் அடைந்த வளர்ச்சியினை விவரிக்க.

15. பத்திரிகைகள் தமிழ் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனவா? ஆய்க.

16. நாவலர் சோமசுந்தர பாரதியார், புதுமைப் பித்தன், பாரதிதாசன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், மு. வ ஆகியோரில் மூவர் குறித்துக் குறிப்பு வரைக.

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

Competitive Examination For Recruitment to the Subordinate Services (Bachelor's Degree Standard)

Group ii Services.

1973

I. சிலப்பதிகாரம் அல்லது பெரிய புராணத்தின் காலத்தைச் சான்றுகளுடன் நிறுவுக.

II. எதையேனும் இரண்டினைப் பற்றி எழுதுக.

அ. சைவ, வைணவ அடியார்களின் தமிழ்த்தொண்டு.

அல்லது

கிறித்தவர்களின் தமிழ்த்தொண்டு.

ஆ. தமிழோடு மற்றத் திராவிட மொழிகளுக்குள்ள உறவை எடுத்துக் காட்டுக.

அல்லது

பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுந்த வரவலாற்றை எழுதுக.

இ. தமிழ் இலக்கியத்தில் உரைநடை அல்லது நாடக வளர்ச்சி.

III. பின்வரும் நூல்களிலே இரண்டு பற்றியும், தமிழ் அறிஞர்களுள் இருவர் ஆற்றிய தமிழ்த் தொண்டினையும் விளக்குக.

நூல்கள்	தமிழ் அறிஞர்கள்
அ. நெடுநல்வாடை	அ. கபிலர்
ஆ. நம்பி அகப்பொருள்	ஆ. பரிமேலழகர்
இ. குற்றாலக் குறவஞ்சி	இ. கால்டுவெல்
ஈ. மனோன்மணியம்	ஈ. பாரதிதாசன்

1977

'அ'—பிரிவு

i. திராவிட மொழிகளின் இலக்கிய நடைகள் அம்மொழிகளின் தொன்மை நிலையினை உணர்த்த எந்த அளவு துணை புரிகின்றன?

ii. திராவிட உயிர் எழுத்துக்களின் ஒலிப்புமுறை பற்றி டாக்டர் கால்டுவெல் கூறுவதென்ன?

iii. திராவிட மொழிகளின் ஒருமை, பன்மை பற்றி ஒரு கட்டுரை வரைக.

iv. திராவிட மொழிகளில் வேற்றுமை விதி முறைகளை ஆய்க.

v. திராவிட வினைக்காலங்கள் பலவும் வினையின் எச்ச வடிவங்களிலிருந்தே தோன்றுகின்றன என்பதனை விளக்குக.

'ஆ'—பிரிவு

vi. தமிழில் எழுத்து, சொல், மொழி ஆகியவற்றின் சிறப்பியல்புகளை வகைப்படுத்தி வரைக.

vii. தமிழின் மூவகைப் பாகுபாடுகளை இலக்கிய எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

viii. சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் யாவை?

ix. வீரமா முனிவர் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளத்திற்கும் ஆற்றிய பணிகள் பற்றிக் கட்டுரை வரைக.

x. தேசியம் தமிழ் வளர்ச்சிக்குத் துணை நின்ற திறத்தை ஆய்க.

Tamil—Languages ane Literature.
Time—Three hours.
(Maximum marks : 100)
1978

[குறிப்பு—(1) கீழ்க்காணப்பெறும் 'அ', 'ஆ', என்னும் இரு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் முதல் வினாவிற் குத் தவறாது விடை தருக.

(2) ஒவ்வொரு பிரிவிலும் பிற வினாக்களுள் ஐந்தனுக்கு விடை தருதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வினாவிற்கும் ஒன்றரைப் பக்கங் களுக்கு மிகாமல் விடை எழுதுக.]

'அ'—பிரிவு

i. தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதனை விளக்குக. 10

அல்லது

தொல்காப்பியர் காலத் தமிழ்பற்றி நீவிர் அறிவன யாவை?

ii. தமிழில் வழங்கும் திணை, பால், எண் பற்றிய செய்தி களைத் தொகுத்துரைக்க. 8

iii. தமிழில் வழங்கும் மூவிடப் பெயர்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக. 8

v. தமிழில் வேற்றுமை உருபுகள் எட்டா? இல்லை அதற்கும் மேலா? மொழியியலார் கருத்து யாது? விளக்குக.

v. தமிழில் வழங்கும் வினையெச்ச வாய்பாடுகள் யாவை? இவ்ற்றால் மொழி பெற்ற சிறப்பினை ஆராய்க. 8

vi. கடன் வாங்குதல் (Borrowing) என்பது தமிழ் மொழியில் காலந்தோறும் எந்த எந்த அளவில் எந்த

எந்த வகையில் நேர்ந்தது என்பதனைத் தெளிவுறுத்துக.

vii. சொல்லும், அதன் பொருளும் காலந்தோறும் மாறும் இயல்புடையன என்பதனை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. 8

viii. தமிழ் மொழியின்கண் காணலாகும் தொடரமைப்பு (Syntax) நிலையினைப் புலப்படுத்துக. 8

'ஆ'—பிரிவு

xi. சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகளைச் சுட்டுக. 10

அலலது

தமிழில் தொடக்க காலத்தே எழுந்த நீதிநூல்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

x. பல்லவர் காலத்தெழுந்த பக்தி இலக்கியங்கள் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க. 8

xi. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை? இவற்றில் சிந்தாமணி பெறும் இடத்தினை மதிப்பிடுக. 9

xii. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பௌத்தர்கள் ஆற்றிய தொண்டின் திறத்தினை விளக்குக. 8

xiii. சிற்றிலக்கியங்கள் எனப்படுவனவற்றை விளக்கி, அவற்றில் உலா இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்க. 8

xiv. தமிழில் சிறுகதை அல்லது நாடக இலக்கியம் வளர்ந்துள்ள பாங்கினைத் தெளிவுறுத்துக.

xv. தமிழ் நாவல் வளர்ச்சிக்கு டாக்டர் மு. வரதராசனார் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளைப் புலப்படுத்துக. 8

xvi. இக் காலக் கவிதைப் போக்குகளைச் சான்றுகள் தந்து நிறுவுக.

1980

Tamil—Language and Literature.

(மொத்த மதிப்பெண்கள் : 100)

[குறிப்பு—(1) விடையைத் தமிழில் எழுத வேண்டும்.

(2) அ, ஆ எனும் பிரிவுகளில் உள்ள கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் ஒன்றரைப் பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக.

(3) இ-பிரிவிலுள்ள கேள்விகட்கு இருபது வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

(4) உ-பிரிவிலுள்ள கேள்விகட்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.]

'அ'—பிரிவு

1. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்கு விடை தருக :— $4 \times 12 = 48$

(a) பத்துப்பாட்டு நூல்களுள் அகத்துறை நூல் ஒன்றைக் குறிப்பிட்டு அதில் அகத்திணைப் பொருள் அமைந்துள்ள சிறப்பைப் புலப்படுத்துக.

(b) திருக்குறள் சிறந்த அற நூல் என்பதை விளக்குக.

(c) சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் என்பதற்குரிய சான்றுகள் தந்து நிறுவுக.

(d) "குறவஞ்சி" இலக்கிய வகையில் தலைசிறந்ததாகக் கூறப்பெறும் நூல் எது? ஏன்?

(e) தற்காலத் தமிழ் நாவல்களின் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு படைப்பாளியின் நாவல்கள் பெறும் இடத்தை ஆய்க.

(f) புதுமைப்பித்தன் சிறுகதைகளின் உள்ளடக்கம் பற்றித் திறனாய்வு செய்க.

'ஆ'—பிரிவு

ii. யாதேனும் ஒன்றினுக்கு விடை தருக— $1 \times 12 = 12$

(a) தமிழ் மொழியின் தொன்மையைப் புலப்படுத்துக.

(b) தமிழில் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்க.

'இ'—பிரிவு

iii குறிப்பு எழுதுக :— $4 \times 5 = 20$

(a) நாலடியார் அல்லது களவழி நாற்பது

(b) பெரியபுராணம் அல்லது கந்தபுராணம்

(c) தாயுமானவர் அல்லது இராமலிங்க அடிகள்

(d) சீறாப்புராணம் அல்லது தேம்பாவணி

'ஈ'—பிரிவு

IV. பின்வரும் நூல்களின் ஆசிரியர்களின் பெயரை எழுதுக :— $5 \times 2 = 10$

(a) மணிமேகலை

(b) திருவாசகம்

(c) நன்னூல்

(d) குயில்பாட்டு

(e) கமலாம்பாள் சரித்திரம்

'உ'—பிரிவு

V. பின்வருவனவற்றுள் இரண்டின் கருத்தை வரைக :— $2 \times 5 = 10$

(a) அறிவுடையார் ஆவது அறிவார்.

(d) நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை.

(c) உள்ளத் துள்ளது கவிதை—இன்ப
உருவெடுப்பது கவிதை

1983

Tamil Language and Literature
Time—Three Hours
(Maximum marks : 100)

[குறிப்பு-(1) கீழ்க்காணப் பெறும் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் முதல் வினாவிற்குத் தவறாது விடை தருக.

(2) ஒவ்வொரு பிரிவிலும் பிற வினாக்களுள் ஐந்தனுக்கு விடை தருதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வினாவிற்கும் ஒன்றரைப் பக்கங் களுக்கு மிகாமல் விடை தருக.]

மதிப்பு எண்கள்

'அ'—பிரிவு

(1) தமிழ் இலக்கணத்தின் தனித் தன்மைகள் குறித்துச் சான்றுகள் காட்டி விளக்குக. 10

(அல்லது)

வடமொழிச் சொற்கள் தமிழில் எவ்வாறு எழுதப் படல் வேண்டும் என்பதை விளக்கி வரைக.

(2) இலக்கண நூலார் கூறும் கால மயக்கம் பற்றி விளக்குக. 8

(3) உரிச் சொற்களின் சிறப்பியல்புகளைத் தெளிவு படுத்துக. 8

(4) தமிழில் இருதிணை ஐம்பால் பாகுபாட்டினை ஆய்க. 8

(5) தமிழில் அமைந்துள்ள சொற்றொடர் அமைப்பினை விளக்குக. 8

(6) இரண்டாம் வேற்றுமையும், நான்காம் வேற்றுமையும் எவ்வெப் பொருளில் வரும் என்பதை விவரிக்க. 8

(7) தொகை என்பது யாது? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக. 8

(8) தமிழில் எண்ணுப் பெயர்கள் பெறும் தனித் தன்மையினை நிறுவுக. 8

'ஆ'—பிரிவு

(9) சங்க இலக்கிய அகப்பாடல்களுக்கும், புறப்பாடல் களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புலப்படுத்துக. 10

(அல்லது)

"பிள்ளைத் தமிழ்" இலக்கியங்கள் குறித்து விளக்குக.

(10) இரட்டைக் காப்பியங்களின் ஒற்றுமை வேற்றுமை களைச் சுட்டிக் காட்டுக. 8

(11) சமய ஒற்றுமைக்குப் பாவைப் பாடல்கள் சான்றாகத் திகழ்வதை விவரிக்க. 8

(12) தமிழ் இலக்கிய வரலாற்றில் வளமான காலம் என்று நீவிர் கருதும் காலம் எது? அதற்குக் காரணங்கள் யாவை? 8

(13) தமிழில் உரைநடை அடைந்த மாற்றங்களைச் சுட்டுக. 8

(14) தமிழில் ஒப்பிலக்கிய வளர்ச்சியினையும் பயனையும் எழுதுக. 8

(25) நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்பியல்புகளை விளக்குக. 8

(16) பண்டிதமணி கதிரேசனார், இரா. பி. சேதுப் பிள்ளை, க. கைலாசபதி, டாக்டர் அ. சிதம்பர நாதனார், டாக்டர் சி. இலக்குவனார் ஆகியோரில் மூவர் தம் இலக்கியப்பணி குறித்துக் குறிப்பு வரைக. 8

1985

TAMIL LITERATURE

Time—Three hours.

(Maximum marks : 100)

[குறிப்பு (1) கீழ்க்காணப்பெறும் வினாக்களுள் முதல் இரு வினாக்களுக்குத் தவறாது விடை தருக.

(2) எஞ்சிய வினாக்களுள் எவையேனும் பத்தினுக்கு விடை தருக.

(3) ஒவ்வொரு வினாவிற்கும் ஒன்றரைப் பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.]

மதிப்பு எண்கள்

1. தமிழ்மொழியின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துக. 10

அல்லது

தமிழில் அமைந்துள்ள ஐந்திலக்கணப் பாகுபாட்டினை விளக்குக.

2. சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற் காலம் என நிறுவுக. 10

அல்லது

நாட்டுப்புற இலக்கியக்கூறுகள் திருவாசகத்தில் காணக்கிடப்பதனைப் புலப்படுத்துக.

3. செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் பாகுபாட்டினை விவரிக்க. 8

4. மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் எவ்வெப்பொருள்களில் வரும் என்பதனைத் தெளிவு படுத்துக. 8

5. வினை வகைகளை விளக்கி வரைக. 8

6. சொல்லும் பொருளும் காலந்தோறும் மாறுந் தன்மை யன என்பதனை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. 8

7. மணிமேகலை ஒரு சமூகப் புரட்சிக் காப்பியம் என்பதனை நிறுவுக. 8

8. பெரிய புராணம் ஒரு காப்பியமாகுமா? உன் கருத்தை விவரிக்க. 8

9. பிற்காலச் சோழர் காலத்தில் சிற்றிலக்கிய வளர்ச்சி சிறப்பாயிருந்தது என்பதனைப் புலப்படுத்துக. 8

10. இலக்கண உரையாசிரியர்களால் தமிழ் உரைநடை வளர்ந்த பாங்கினை விளக்குக. 8

11. தமிழ் வேந்தர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றி நின்ற வகையினை நிறுவுக. 8


12. தமிழ் மக்கள் விருந்தோம்பற் பண்பினைப் பெரிதும் வளர்த்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் தருக. 8

13. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகங்கள் வளர்ந்த நிலையினைப் புலப்படுத்துக. 8

14. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் பற்றி நீவிர் அறிவனவற்றைத் தொகுத்துரைக்க. 8

15. சிறந்த திறனாய்வாளர்க்குரிய தகுதிப் பாடுகளைப் புலப்படுத்துக. 8

16. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், சுவாமி விபுலானந்தர், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, கண்ணதாசன் ஆகியோருள் மூவரின் தமிழ்ப்பணி குறித்துக் குறிப்பு வரைக. 8



சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கறற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படைஉண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல்.. 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு!

—மா.செ.